# வளமான நாடு
# அழகான வாழ்க்கை



ජාතික ජන බලවේගය
தேசிய மக்கள் சக்தி
JATHIKA JANA BALAWEGAYA (NPP)

## வளமான நாடு

# அழகான வாழ்க்கை

**வளமான நாடு**
**அழகான வாழ்க்கை**

© தேசிய மக்கள் சக்தி

முதற் பதிப்பு - 2024 ஆகஸ்ட்

**விசாரணைகள்:**

தேசிய மக்கள் சக்தி
464/20,
பன்னிப்பிட்டிய வீதி,
பெலவத்த,
பத்தரமுல்ல.

தொலைபேசி - 011 2785612
வெப் - www.akd.lk
- www.npp.lk
மின்னஞ்சல் - contact@npp.lk

# வரிசைப்படுத்தல்


முன்னுரை 05

## 01. முழுநிறைவான வாழ்க்கை - வசதியான நாடு

01.1 நாகரிகமடைந்த பிரஜை - முன்னேற்றமடைந்த மனித வளம் 10

01.2 நோயற்ற வாழ்வு - ஆரேக்கியமான மக்கள் 20

01.3 வசதியான வீடு - சுகாதாரப் பாதுகாப்புமிக்க வாழ்க்கை 28

01.4 வலிமைமிக்க பிரஜை - வெற்றிகரமான மக்கள் 32

01.5 உன்னதமான கலாச்சார வாழ்க்கை - ஒத்துணர்வுடைய மக்கள 36

01.6 பேணப்பட்ட வரலாறு - உரித்தான புதுமைப்படுத்தல் 45

01.7 நிலைபேறான உயிர்சார் உலகம் - என்னும் பசுமையான வாழ்க்கை 48

01.8 சுதந்திரமான வெகுசன ஊடகத் தொழில் - சமநிலையான தகவல் சமூகமொன்று 57

## 02. கௌரவமான வாழ்க்கை - பாதுகாப்பான நாடு

02.1 பாதுகாப்பான சமூகமொன்று - செறிவுற்ற தேசம் 63

02.2 செயற்றிறன் மிக்க ஊழியர் படை - கௌரவமான தொழில்சார் வாழ்க்கை 69

02.3 சுதந்திரமான பால்நிலை சமத்துவம் - நியாயமான மனித அடையாளம் 73

02.4 பாதுகாப்பான சிறுவர் உலகம் - படைப்பாற்றல்மிக்க எதிர்கால சந்ததி 79

02.5 மனநிறைவு கொண்ட இளமை - கலாச்சார ரீதியாகவும் அடிமைதனமற்ற சிந்தனை 84

02.6 கௌரவமான மூத்த பிரஜை - அர்த்தமுள்ள ஓய்வுகால வாழ்க்கை 90

02.7 பாதிக்கப்படாத சமூக வாழ்க்கை - நியாயமான சம அணுகல் 93

## 03. நவீன வாழ்க்கை - செல்வம் கொழிக்கும் நாடு


03.1 சனநாயக ரீதியான பொருளாதாரம் - செல்வம் கொழிக்கும் நாடு 99

03.2 உயர்வான உற்பத்தித் திறன் - உணவு பாதுகாப்புமிக்க நாடு 110

03.3 தரமான கால்நடை உற்பத்தி - தொழில்வாண்மை அணுகல் 117

03.4 நிலைபெறுதகு முகாமைத்துவம் - தரமான மீன்வளம் 121

03.5 டிஜிட்டல் அரசாளுகை - சர்வதேச பங்காண்மை 130

03.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணுகல் - மதிநுட்பம் வாய்ந்த சமூகம் 134

03.7 நவீன சுற்றுலாக் கைத்தொழில் - கவர்ந்திழுக்கும் பயணமுடிவிடம் 142

03.8 தொழில் முயற்சியாண்மை மேம்பாடு - ஜீவதரணீ அணுகல் 148

03.9 நிலைபெறுதகு வளப்பாவனை - உச்ச அளவிலான நன்மை பிறப்பாக்கம் 156

03.10 பாதுகாப்பான வலுச்சக்தி கேந்திரம் - நிலைபெறுதகு செலாவணி தோற்றுவாய் 162

03.11 பொதுப்போக்குவரத்துச் சேவை - வினைத்திறன்மிக்க பயண முடிவிடம் 169

03.12 நிலைபெறுதகு கடல் வளம் - உலகலாவிய கடல் தொழிற்றுறையிலான பங்கு 175

03.13 பாதுகாப்பான தரவு முறைமை - தகவல் தொழில்நுட்ப புரட்சி 179

03.14 விளைதிறன்மிக்க முகாமைத்துவம் - ஒருங்கிணைந்த கணினித் திட்டம் 184

03.15 விஞ்ஞான ரீதியான நிர்மாணத்துறை - தரமான சேவை ஈடுபாடு 188


## 4.0 அபிமானமிக்க வாழ்க்கை - நிலைதளராத நாடு


04.1 புதிய அரசியலமைப்பு - இலங்கை தேசிய ஒருங்கிணைப்பு 193

04.2 வினைத்திறன் மிக்க அரச சேவை - திறமைகளை மையமாகக் கொண்ட தொழில்வாண்மை 195

04.3 சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி - சம அணுகல் நீதிமன்ற முறைமை 199

04.4 நட்புமிக்க பொலிஸ் சேவை - மனநிறைவு கொண்ட தொழில்வாண்மை 203

04.5 மனிதத்துவ அடிப்படையிலான சிறைச்சாலை - நீதியான தடுப்பு வாழ்க்கை 207

04.6 போதையற்ற நாடு - ஆரோக்கியமான பிரஜைகள் வாழ்க்கை 210

04.7 உன்னதமான ராஜதந்திர நிலை - தன்னாதிக்கமுள்ள நாடு 213

04.8 உயர்வான தேசிய பாதுகாப்பு - பாதுகாக்கப்பட்ட தேசம் 223

04.9 இலங்கை தேசம் - உலகளாவிய பிரஜை 228

# முன்னுரை

இன்று இலங்கைக்கு அவசியமாகியுள்ள சமூக மாற்றமானது வெறுமனே அரசாங்கத்தை மாற்றுவதோ ஆட்சிக்குழு வீட்டுக்கு செல்வதன் காரணமாக வெற்றிடமாகின்ற ஆட்சிக்குழுக்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் வெற்றிடத்தை மற்றுமொரு குழு மூலமாக நிரப்புவது மாத்திரமல்ல. அது பிரமாண்டமான சமூக நிலைமாற்றமாகும். சுதந்திரத்திற்கு 76 வருடங்களுக்கு பின்னர் ஒரு துறையின் மாற்றத்திற்கோ அல்லது ஒரு சிலவற்றின் மாற்றத்திற்கோ அப்பால் சென்ற ஒட்டுமொத்த சமூக நிலைமாற்றமாகும்: மறுமலர்ச்சியாகும். இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் பொறியியல், சுகாதாரம், கல்வி, கலை, இலக்கியம், மனித உரிமைகள் போன்ற பல்வேறு பரப்புக்களில் இருந்த தலைசிறந்தவர்களை உருவாக்க பிரார்த்தித்த, அதற்காக அந்தந்த துறைகளில் அடித்தளமிட முயற்சி செய்த எனினும் இதுவரை காலமும் இலங்கையை ஆட்சி செய்த ஊழல் மிக்க ஆளும் பிரபுக்கள் குழுவினால் கீழடக்கப்பட்ட முன்னேற்றமடைந்த இலங்கை பற்றிய கனவுக்கு யதார்த்த வடிவம் கொடுப்பதாகும். அது இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய எனினும் கீழடக்கப்பட்ட முன்னேற்றமான இலங்கை பற்றிய கனவை இருபத்தோராம் நூற்றாண்டில் உண்மையாக மாற்றுகின்ற காரணத்தினாலும் அது பிரமாண்டமான கூட்டான மக்களின் இடையீடு ஊடாக நாட்டை கட்டியெழுப்புகின்ற செயற்பாங்காக அமைவதாலுமே தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்ற ஆட்சி ஒரு மறுமலர்ச்சி யுகமாக அமைகின்றது.

உற்பத்திப் பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புவது எமது தீர்மானகரமானதும் முதன்மையானதுமான பணியாகும். அதனால் எமது கொள்கைத்துறைகள் பல இயற்கை வளங்களை நாட்டுக்குள்ளே தேடிக்கொள்ளக்கூடிய, இலகுவில் முன்னேற்றக்கூடிய, ஏற்கெனவே நாம் கொண்டுள்ள தொழில்சார் மற்றும் பயிற்றப்பட்ட உழைப்பு வளத்தை பாவிக்கக்கூடிய கனிம வளங்கள், தகவல் மற்றும் மென்பொருள் தொழில்நுட்பம், சுற்றுலாக் கைத்தொழில், விவசாயம், கடல் வளங்கள், ஆக்கமுறையான கைத்தொழில்கள் (உதாரணம்:- ஓவியக்கலை, சினிமா, இலக்கியம், இசை, அரங்காட்டுகை கலை...) போன்ற பரப்புகள் மீது கவனம் செலுத்தியுள்ளது. நாங்கள் முன்மொழிகின்ற உற்பத்தி பொருளாதாரத்தில் பிரதான பணியை ஆற்றுவது விஞ்ஞானமும் தொழில்நுட்பமுமாகும்.

கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்துத் துறையை அத்தியாவசியமான பொதுச் சேவைகளாக கருதுகின்ற தேசிய மக்கள் சக்தி இந்த துறைகளிலான அரச நிதியேற்பாடுகளை அதிகரித்து அந்தத்துறைகளை பலப்படுத்தும்: ஒழுங்கமைக்கும். கல்வியை அரசாங்கத்தின் அடிப்படைப் பொறுப்பாக கருகின்ற நாங்கள் பெற்றோர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கல்விச் சுமையை குறைக்க நடவடிக்கை எடுப்போம். வளங்கள் பகிர்ந்து செல்வதிலான ஏற்றத்தாழ்வு காரணமாக நாடுபூராவிலும் பரவியுள்ள கல்வியின் முரண்பாடுகளை படிப்படியாக ஒழித்துக்கட்டவும் நடவடிக்கைகள்

எடுக்கப்படும். கல்விக் கொள்கையில் புதிதாக அறிமுகம் செய்யவுள்ள தொழில்சார் கல்விப் பாடநெறி இன்றளவில் சீர்குலைந்துள்ள கல்வி மற்றும் தொழிற்சந்தைக்கு இடையிலான தொடர்பினை மீண்டும் கட்டியெழுப்புவதோடு உற்பத்தி பொருளாதாரமொன்றை உருவாக்குகின்ற வேலைத்திட்டத்திற்கு அவசியமான தொழில்வாண்மையாளர்களை கட்டியெழுப்புவதற்கான பிரதான பணி ஆற்றப்படும்.

அரச சுகாதாரத் துறையிலான நிதியேற்பாடுகளை அதிகரித்து அந்தத்துறையை பொதுமக்கள் சேவையாக வளர்த்தெடுத்தல் தொடர்பில் எமது சுகாதாரக் கொள்கை கவனம் செலுத்துவதோடு மேலைத்தேய மருந்துவ முறையைப் போன்றே நாட்டில் தற்போது பாவிக்கப்பட்டு வருகின்ற ஆயுர்வேத மருத்துவ முறையையும் முன்னேற்றி அவை அனைத்தும் இரண்டறக்கலந்த மருத்துவ சேவை ஒன்றை வழங்க முன்மொழியப்படுகிறது. பொதுப்போக்குவரத்தில் அரசாங்கத்தின் பங்கினை பலப்படுத்துதல் மற்றும் அதனூடாக நாடு பூராவிலும் பகல் மற்றும் இரவு வேளைகளில் அமுலாக்கப்படுகின்ற வினைத்திறன் கொண்ட போக்குவரத்து துறையில் தேசிய மக்கள் சக்தியின் பல்வகை நடவடிக்கையிலான மையப்படுத்தப்பட்ட இடையீடாகும். மனிதன் புவியின் உரிமையாளன் என்கின்ற கருத்தினைக் கொண்டவனாக ஒட்டுமொத்த இயற்கையுடன் முரண்பாட்டுக்குச் செல்கின்ற அணுகுமுறையிலிருந்து சுற்றாடல், மரஞ்செடிகொடிகள், விலங்குகளுடன் சக வாழ்வு கொண்டவனாக வசிக்கின்ற சுற்றாடல் தொகுதிகளின் சமநிலை பேணக்கூடிய அணுகுமுறைக்கு மாறுவது எமது ஆட்சிக்காலத்தில் இடம்பெறும். பொருளாதாரத்தை சுழற்சி முறை பொருளாதாரமாக மாற்றவும் வலுச்சக்தித்துறையை புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி தோற்றுவாய்களை அடிப்படையாகக் கொண்ட பரப்பாக மாற்றவும் விவசாயத்தை சுற்றாடல் தொகுதிகளை சிதைக்காத பாவனையாக மாற்றவும் நிர்மாணக் கைத்தொழிலை பசுமைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்துறையாக மாற்றவும் அவசியமான படிப்படியான பயணத்திற்கு நிலவுகின்ற யதார்த்தங்களையும் கவனத்தில் கொண்டு அத்திவாரம் இடப்படும்.

உலக மகளிர் இயக்கத்திற்கு ஓர் எடுத்துக்காட்டினை ஒன்றுசேர்த்து கட்டியெழுப்பிய “பெண்களாகிய நாங்கள் ஒரே மூச்சுடன்” செயற்பாடு இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற பிரமாண்டமான பெண்களை உயிர்ப்பூட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டமாக எடுத்துக்காட்டப்படலாம். தேசிய மக்கள் சக்தியின் இறுதி நோக்கம் நாட்டின் சனத்தொகையின் அரைவாசியை பிரதிநிதித்துவம் செய்கின்ற பெண்கள் உடல், வாய்மொழி ரீதியான மற்றும் உளரீதியான துன்புறுத்தல்கள் இன்றி சமமான உரிமைகளை அனுபவிக்கின்ற சுதந்திரமான சமூகமொன்றை உருவாக்குவதாகும். இதன் கீழ் மேற்கொள்ளப்படவேண்டிய உளப்பாங்கு ரீதியான மாற்றங்களுக்கும், தாபனஞ்சார் மாற்றங்களுக்கும் நாங்கள் ஏற்கெனவே கைச்சாத்திட்டுள்ள சர்வதேச சாசனங்களுக்கு அமைவாக உள்நாட்டு சட்டங்களை அறிமுகம் செய்யவும் பாதுகாப்பு பொறியமைப்பொன்றினை உருவாக்கவும் நாங்கள் முன்னுரிமையளிப்போம். பாராளுமன்றத்திலிருந்து பிரதேச சபைகள் வரை தீர்மானமெடுக்கின்ற அத்தனை நிறுவனங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை படிப்படியாக 50% வரை உயர்வான நிலைக்கு கொண்டுவருவது எமது இலக்காகும். இதற்கு மேலதிகமாக மற்றுமொரு முக்கியமான துறையாக அமைவது கலாச்சார மனிதன் ஒருவனை உருவாக்கின்ற தேசிய மக்கள் சக்தியின் முயற்சியாகும். மனசாட்சியற்ற, நெஞ்சில் ஈரமற்ற, பொறிமுறைசார்ந்த வாழ்க்கையை கழிக்கின்ற, பிறரைப் பற்றி சிந்திக்காத நாட்டு மக்களை பிறரைப் பற்றி சிந்திக்கின்ற கலை, கலாச்சார காட்சிகளை பயன்படுத்துகின்ற, மானுடத்தை நம்புகின்ற, வாழ்க்கையை அனுபவிக்கின்ற ஒருவராக மாற்றுகின்ற அடிப்படை எங்களுடைய ஆட்சியின் கீழ் உருவாகும். மக்களின் வாழ்க்கையை பேணிவருவதற்கான

ஒட்டுமொத்த சுமையையும் மக்கள் மீது சுமத்தியுள்ள நிகழ்கால ஆட்சியாளர்களுக்கு எதிராக செயற்பட்டு தேசிய மக்கள் சக்தி இந்த சுமையிலிருந்து கணிசமான பகுதியொன்றை அரசாங்கம் கையேற்றல், முன்னேற்றமடைந்த உற்பத்தி பொருளாதாரத்தில் மக்களுக்கு கிடைக்கின்ற வாழ்க்கைத் தரத்தின் உயர்ச்சியாலும் வாழ்வதற்கான வசதிகளாலும் இந்த கலாச்சார மனிதனை உருவாக்குவதற்கான அடிப்படை அத்திவாரம் இடப்படும்.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி என்பது 76 வருடகாலமாக படிப்படியாக உக்கிப்போய் சீழ்வடிகின்ற ஊழல் மிக்க அரசியல் கலாச்சாரத்தை முடிவுறுத்துகின்றதும் சாதகமான அரசியல் கலாச்சாரமொன்றை உருவாக்குவதுமாகும். எங்கள் ஆட்சியின் கீழ் ஊழல் மிக்க பிரபுக்கள் ஆட்சிக் கும்பல்களால் கோடிக்கணக்கான மக்கள் சொத்துக்களை கொள்ளையடித்த செல்வத்தை மீண்டும் மக்களுக்கு கையளிப்பதற்கான செயற்பாங்கு ஆரம்பிக்கப்படும். இதற்காக அவசியமான சட்டங்களை ஆக்கியும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவிற்கு, பொலீசுக்கு மற்றும் சட்டத்துறை தலைமை அதிபதித் திணைக்களத்திற்கு அவசியமான வழிகாட்டல்களை செய்து அவை சுயாதீனமான நிறுவனங்களாக அமுலாவதற்கான முழுமையான இடவசதி எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

நீண்ட காலமாக தீர்க்கப்பட்டிராத வெகுசன ஊடகவியலாளர்களின், விளையாட்டு வீரர்களின் போன்றே உயிர்த்த ஞாயிறு தாக்குதலை உள்ளிட்ட அரசியல் அதிகாரத்திற்காக மக்கட் குழுக்களை இலக்காகக் கொண்ட கொலைகாரர்கள் சம்பந்தமான அனைத்துத் தகவல்களையும் சந்திக்கு கொண்டுவந்து குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும். பிரமாண்டமான அபிவிருத்திக் கருத்திட்டங்களிலிருந்து பாடசாலைக்கு ஒரு பிள்ளையை சேர்த்துக் கொள்ளல்வரை இடம்பெறுகின்ற அதிகார பிரமிட்டில் மேலிருந்து கீழ்நோக்கி ஆரத்தழுவியுள்ள இலஞ்சம், கொமிஸ் பெறுதலை உள்ளிட்ட மோசடிகள் மற்றும் ஊழல்களை நிறுத்துவதற்கான உறுதியான திடசங்கற்பத்துடன் நாங்கள் செயலாற்றுவோம்.

சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை வரலாற்றில் முதலத்தடவையாக ஊழல் மிக்க சில குடும்பங்களின் கைகளில் இருந்த அரசாட்சி முழுமையாகவே மக்கள் ஆட்சியாக மாற்றப்படும். ஜனாதிபதி பதவியிலிருந்து அனைத்து விதமான பிரதிநிதிகள் நிறுவனங்களிலான பதவிகள்வரையும், நாட்டின் தொழில்பாட்டு பொறியமைப்பிலான பதவிகளும் ஆளுகின்ற பிரபுக்கள் குடும்பத்தின் தொடர்புகளற்று பொதுவாக இலவசக் கல்வியிலிருந்து உருவாக்கப்பட்ட சாதாரண பொது மக்களின் பிள்ளைகளுக்கு உரித்தாகும். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி பிரஜைகளின் செயற்பாட்டின், கூட்டு இடையீடுகளின் சமூக நீதியின் மற்றும் நல்லாட்சிக் கோட்பாடுகளின் பாவனையால் புதிய யுகமொன்று ஆரம்பிக்கப்படும். அரசியல்வாதிகளின் பின்னால் செல்லாமல் தமது அலுவல்களை மக்கள் ஈடேற்றிக் கொள்ளக்கூடிய அரச நிறுவன கட்டமைப்பொன்றினை அறிமுகம் செய்வது இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகும். ஒரு நாட்டை மீட்டெடுக்கக்கூடிய தியசென் குமாரன் ஒருவன், மன்னன் ஒருவன் அல்லது வீரன் ஒருவன் பற்றி தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை வைப்பதில்லை என்பதோடு அரச ஆளுகையையும் அபிவிருத்தியையும் ஒரு கூட்டு முயற்சியாகவே காண்கிறது. அதேவேளையில் குறைந்த தகைமைகளைக் கொண்ட அரசியல் அடிவருடிகளுக்குப் பதிலாக தகைமைகளைக் கொண்ட ஆட்கள் குறித்துரைத்த முறையியலின்படி நிறுவனங்களுக்காக நியமிக்கப்படுவதோடு அரசியல் இடையீடுகள் இன்றி அந்த

நிறுவனங்கள் இயங்குவதற்கான வாய்ப்பு வழங்கப்படும். நீதித்துறையின் சுயாதீனத்தன்மை முற்றாகவே உறுதிப்படுத்தப்படுவதோடு அநீதிக்கு இலக்காகின்ற பல்வேறு இனக்குழுக்களை பாதுகாப்பதற்கான சட்டங்களைப் போன்றே பாதுகாப்புக்கும் நலனோம்பலுக்கான பொறியமைப்பும் அறிமுகம் செய்யப்படும்.

வெளி உலகத்துடன் முறைப்படி பழகுவதற்கான வாய்ப்பு கிடைக்காமை இலங்கையின் விருத்தியடையாத நிலைமைக்கும் பிற்போக்கான நிலைமைக்கும் பிரதான காரணியென கருதுகின்ற தேசிய மக்கள் சக்தி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், ஆராய்ச்சி, கல்வி, கலாச்சாரம், கலை, சினிமா, இசை, காட்சிகள், விளையாட்டுத்துறை ஆகிய பல்வேறு பரப்புக்களில் உலகத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை அரசாங்க , நிறுவன மற்றும் பிரத்தியேக மட்டத்தில் ஊக்குவிக்கும். தேசிய மக்கள் சக்தியின் மற்றுமொரு தீர்மானகரமான இடையீடாக அமைவது இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சியாகும். சுதந்திரத்திற்கு முன்னர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் என்ற வகையில் பிரிந்திருந்த எம்மை சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை தேசத்தவராக ஒரே கொடியின் கீழ் கொண்டுவர இதுவரை நாட்டை ஆட்சி செய்த பிரபுக்கள் குழுவினருக்கு முடியாமல் போய்விட்டது. அதற்காக அவர்கள் செய்ததோ தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக அந்தந்த இனத்துவங்கள் பிளவுபட்ட குழுக்களாக அவர்களுக்கிடையில் முரண்பாடுகளை தீவிரப்படுத்தி பேணிவருவதாகும். எமது கொள்கைகள் இதற்காக மேற்கொள்ள வேண்டிய எண்ணக்கரு சார்ந்த, பொருண்மையான, கட்டமைப்புச் சார்ந்த மற்றும் முனைப்பான பல இடையீடுகளை இனங்கண்டுள்ளது. அனைத்து இனங்களுக்கும் இலங்கையர் என்ற பொதுவான எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கின்ற இடவசதி எம்மால் அமைத்துக் கொடுக்கப்படும். உற்பத்தி பொருளாதாரமொன்றை திட்டமிடுவதிலிருந்து நன்மைகள் பகிர்ந்து செல்லும் வரையான செயற்பாங்கில் அனைத்து இனத்தவர்களையும் அதன் பங்காளிகளாக மாற்றிக் கொள்வது எமது திடசங்கற்பமாகும்.

எம்மால் முன்மொழியப்படுகின்ற கொள்கைசார்ந்த வேலைத்திட்டத்தை கூட்டாக அமுலாக்குவதற்காக மக்கள் அரசாங்கமொன்றை கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தியுடன் முணைப்பாக ஒன்றுசேருமாறு வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் எதிர்பார்க்கின்ற இலங்கையர்கள் அனைவரையும் சகோதரத்துவத்துடன் அழைக்கிறோம்.

1

# முழுநிறைவான வாழ்க்கை

# வசதியான நாடு



## நாகரிகமடைந்த பிரஜை

# முன்னேற்றமடைந்த மனித வளம்

கல்வி என்பது நிலவிய மற்றும் நிலவுகின்ற அனைத்துச் சமூகக் கட்டங்களாலும் நிர்மாணிக்கப்பட்ட அறிவினை கையகப்படுத்திக்கொண்டும் பகிர்ந்தளித்தும் புதிய அறிவினை உற்பத்தி செய்கின்ற கலாச்சார செயற்பாங்காகும். நாகரிகமடைந்த மற்றும் பொறுப்புடைமைகொண்ட பிரஜைகள் சமூகமொன்றின் வழியுரிமையும் அபிவிருத்தியும் அந்த சமூகத்தின் தரமிக்க கல்விச் செயற்பாங்கிலேயே தங்கியிருக்ன்றது.

இலங்கையின் கல்விச் செயற்பாங்கு எண்ணற்ற நெருக்கடிகளைக் கொண்டதாகும். குறைந்தபட்சம் 13 வருடகால கல்வியை நிறைவுசெய்யாமல் இடைநடுவில் பாடசாலையைவிட்டு விலகுதல் அதில் முதன்மைத்தானம் வகிக்கின்றது. உதாரணமாக 2008 இல் முதலாம் ஆண்டுக்கு பிரவேசித்த பிள்ளைகளில் 11.3% 2018 இல் க.பொ.த (சா.த.) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னராகவே பாடசாலையைவிட்டு நீங்கியதோடு க.பொ.த (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்து 2020 இல் க.பொ.த. (உ.த.) வரை கல்வி கற்றவர்கள் 64.7% மாத்திரமே. அதாவது முதலாம் ஆண்டுக்கு பிரவேசிக்கின்ற பிள்ளைளகளில் 45.3% 2020 இல் க.பொ.த (உ.த.) பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னராகவே பாடசாலையில் இருந்து விடைபெற்றுள்ளனர். மொத்தமாக முதலாம் ஆண்டுக்கு பிரவேசிக்கின்ற பிள்ளைகளில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் சித்தியடைகின்ற சதவீதம் 35.4% அமைவதோடு பல்கலைக்கழகங்களில் 12.7% மாத்திரமே பிரவேசிக்கின்றனர்.

**நாகரிகமடைந்த மற்றும் பொறுப்புடைமைகொண்ட பிரஜைகள் சமூகமொன்றின் வழியுரிமையும் அபிவிருத்தியும் அந்த சமூகத்தின் தரமிக்க கல்விச் செயற்பாங்கிலேயே தங்கியிருக்ன்றது.**

பாடசாலை முறைமைக்குள் பௌதீக மற்றும் மனித வளங்கள் பகிர்ந்து செல்வதிலான ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அதனால் பாடசாலை முறைமைமீதான பெற்றோர்களின் நம்பிக்கை சிதைவடைகின்றமை மற்றுமொரு பாரதூரமான சிக்கலாகும். 2022 இல் பாடசாலை மதிப்பாய்வு அறிக்கைக்கு இணங்க 10,126 பாடசாலைகளில் 50 மாணவர்களை விடக் குறைந்த 1473 (14.5%) பாடசாலைகள் இருக்கின்றன. 5,204 பாடசாலைகளில் (51.4%) மாணவர்களின் எண்ணிக்கை 200 ஐ விடக் குறைவானதாகும். அதன்படி அரைவாசிக்கும் குறைவான பாடசாலைகள் குறைந்தபட்ச வசதிகளேனும் இல்லாத குறைப்பயன்பாட்டிலுள்ள பாடசாலைகளாகும். 396 பாடசாலைகள் மாத்திரமே தேசிய பாடசாலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதோடு ஏதேனுமொரு க.பொ.த. (உ.த.) பாடநெறிகள் 2959 (29%) பாடசாலைகளில் மாத்திரமே இருக்கின்றன.

முதலாம் ஆண்டிலிருந்து முதலாவது பட்டம்வரை இலவசமாக கல்வியை வழங்குகின்ற கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டபோதிலும் பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர்கள் தமது வருமானத்திலிருந்து ஏற்கநேரிட்டுள்ள உயர்வான செலவுச்சுமை எமது கல்வித்துறையில் நிலவுகின்ற மற்றுமொரு சிக்கலாகும்.

இலங்கையின கல்விச் செயற்பாங்கு தரமான பிரஜையொருவரை உருவாக்கத் தவறியுள்ளதாக எழுகின்ற சமூக விமர்சனமும் பாரதூரமானது. கல்வியின் எதிர்பார்ப்பு வெறுமனே தொழிற்சந்தைக்காக ஆட்களை நிர்மாணிப்பதல்லவெனினும் கல்விச் செயற்பாங்கினால் உருவாக்கப்படுகின்ற பிரஜை தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பினை நல்கி சமூகப் பொறுப்பிற்கான ஆக்கமுறையான பிரதிபலிப்பினைச் செய்யக்கூடிய ஒருவனாக அமைதல்வேண்டும். எனினும் இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான தூண்களான விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைகள் பிரிவுகளிலான தொழிற்சந்தை அவசியப்பாடுகளுக்கும் கல்விக்கும் இடையில் நிலவுகின்ற பொருத்தமின்மை இங்கு மிகுந்த கவனத்திற்கு இலக்காக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் கல்விக் கொள்கையின் நோக்கமாக அமைவது முன்னேற்றமடைந்த மனிதநேயமுள்ளதும் பொறுப்புவாய்ந்ததுமான பிரஜைகள் சமூகமொன்றுக்கான கல்வியை பெற்றுக்கொடுப்பதாகும். அந்த நோக்கத்தை அடைவதற்காக கல்வித்துறைக்கான அரச முதலீட்டினை அதிகரிப்பதோடு மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக தற்போது ஒதுக்கப்படுகின்ற அளவினை படிப்படியாக 6% வரை அதிகரிப்பது எமது எதிர்பார்ப்பாகும்.



# கோட்பாடுகள்

- இலவசக் கல்வியும் சமவாய்ப்பும்
- மானிட அபிவிருத்தி மற்றும் சேவையில் ஈடுபடுதலுக்கான ஏற்புடைமை
- ஏற்றுக்கொள்ளக்கூடிய தன்மை
- மூகத்திற்கு பொறுப்புக்கூறுகின்ற பிரஜைகளை உருவாக்கவல்ல கல்வி
- நிலைபெறுதகு தன்மையும் புத்தாக்கமும்
- ஆயுட்காலக் கல்வி

# செயற்பாடுகள்

### முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கல்வி

- 03 தொடக்கம் 05 வருடங்கள் வரையான அனைத்துப் பிள்ளைகளுக்காகவும் முறையான ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திக் கல்வி
- ஒவ்வொரு பிள்ளைக்கும் தனது வீட்டிலிருந்து அல்லது பெற்றோர்களின் சேவை நிலையத்திலிருந்து 02 கிலோ மீற்றருக்குள் கல்விக்கான ஆரம்ப பிள்ளபைப்பருவ அபிவிருத்தி நிலைலய முறைமையொன்று
- பிள்ளைகளின் உடல் மற்றும் உள நிலைமைக்கு ஒத்துவரத்தக்க வகையிலும் சமூக வாழ்க்கையில் பிரவேசிக்க அவசியமான நற்பழக்கவழக்கங்கள் , உளப்பாங்குகள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகளை வளர்த்தெடுப்பதற்கான செயற்பாடுகளைக்கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள்
- தாய் மொழிக்கு மேலதிகமாக பேச்சுத் தொடர்பாடல் மொழிகள் என்றவகையில் ஆங்கிலத்தை உள்ளிட்ட ஏனைய தேசிய மொழிகள் நிகழ்ச்சித்திட்டம்
- கலாச்சாரப் பன்வகைமையுடன் செயலாற்றப் பழக்குகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்
- பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசாக்குத் தரத்தை மேம்படுத்துதல்
- ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்காக தேசிய ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி ஒழுங்குறுத்தல் நிறுவனமொன்று
- ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலைய பொறுப்பாளர் மற்றும் ஆசிரியர்களுக்கான குறைந்தபட்ச கல்வித் தகைமைகள், கட்டாயமான தொழிற் பயிற்சி மற்றும் குறைந்தபட்ச சம்பளம்
- ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொழில்வாண்மையாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கான ஒழுங்கமைந்த தேசிய நிறுவனமொன்றும் கிளைகள் தொகுதியும்

### ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி

- எழுத்தறிவு, எண்கள்சார்ந்த அறிவு, படைக்கும் திறன் மற்றும் தொடர்பாடல் திறன்களை வளர்த்தெடுப்பது ஆரம்ப கல்வியின் அடைப்படை நோக்கமாகும்.
- பாடசாலை கல்வி
- முதலாம் ஆண்டிலிருந்து 5 ஆம் ஆண்டுவரையான ஆரம்ப கல்வி
- 6 ஆம் ஆண்டிலிருந்து 9 ஆம் ஆண்டுவரையான கனிஷ்ட இரண்டாம் நிலை கல்வி
- 10 ஆம் ஆண்டிலிருந்து 11 ஆம் ஆண்டுவரை சிரேஷ்ட இரண்டாம்நிலை (கீழ்நிலை) கல்வி
- 12 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆம் ஆண்டுவரை சிரேஷ்ட இரண்டாம்நிலை (உயர்நிலை) கல்வி

### ஆரம்பக் கல்வி

- தனது வீட்டிலிருந்து அல்லது பெற்றோர்களின் சேவை நிலையத்திலிருந்து 03 கிலோ மீற்றருக்குள் ஆரம்பக் கல்விக்கான அரசாங்க பாடசாலைத் தொகுதியொன்று
- பிள்ளைப்பருவத்திற்கு இடையூறு ஏற்படாதவகையில் புலமைசார் ஆர்வத் தூண்டுதல் மற்றும் அறிவு விருத்திக்கான தூண்டுதலை அளிக்கின்ற மாணவர்மையக் கல்லி
- குறைந்தபட்ச வசதிகளை பேணிவருவதற்காக அவசியமான பௌதீக மற்றும் மனித வளங்களை பாடசாலைக்கு வழங்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்
- அவசிப்பாடுகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கும் அமைவான பாடசாலை போக்குவரத்து முறைமையொன்று

### கனிஷ்ட இரண்டாம்நிலைக் கல்வி

- சனத்தொகை மற்றும் புவியியல் இடஅமைவினை கருத்திற்கொண்டு 02 அல்லது 03 ஆரம்பப் பாடசாலைகளை உள்ளடக்கத்தக்கவகையிலான கனிஷ்ட இரண்டாம்நிலை பாடசாலைகள் தொகுதியும் சிரேஷ்ட இரண்டாம்நிலை பாடசாலைகள் தொகுதியும்
- மாணவர்களின் ஆற்றல்கள் மற்றும் விசேட திறமைகளுக்கிணங்க உயர்கல்வி அல்லது தொழிற்கல்வியை தெரிவுசெய்துகொள்ளக்கூடிய வகையிலான பிரதான பாடங்கள்
- மாணவர்களின் வயதுப் பிரிவுகள் மற்றும் அதனோடு ஏற்புடைய மதிநுட்பத் தரங்களையும் திறமைகளையும் வளர்தெடுக்கின்ற மாணவர்மையக் கல்வி
- பிள்ளைகளின் சமூக நன்னெறிகளையும் பிரஜைகள் பொறுப்பினையும் அபிவிருத்தி செய்வதற்கான மேலதிக பாடங்களும் செயற்பாடுகளும்
- தனது மதம் பற்றிய கல்விக்கு மேலதிகமாக இலங்கையின் பிரதான மதங்கள் பற்றிய அடிப்படைக் கல்வி
- அந்தந்த வயதுப் பிரிவுகளுக்கு ஒத்துவரத்தக்கவாறான பாலியல் மற்றும்

**பிள்ளைகளின் உடல் மற்றும் உள நிலைமைக்கு ஒத்துவரத்தக்க வகையிலும் சமூக வாழ்க்கையில் பிரவேசிக்க அவசியமான நற்பழக்கவழக்கங்கள், உளப்பாங்குகள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகளை வளர்த்தெடுப்பதற்கான செயற்பாடுகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய கல்வி

-  கலாச்சாரம், சுற்றாடல் நேயமுள்ளதன்மை மற்றும் இயற்கையின் வழியுரிமையை ஏற்றுக்கொள்கின்ற உளப்பாங்கு அபிவிருத்தி
-  புத்தாக்கம் தொடர்பான அனுபவங்களைப் பெற்றுக்கொடுக்கின்ற நிகழ்ச்சித்திட்டங்கள்

## சிரேஷ்ட இரண்டாம்நிலைக் கல்வி

ஓன்பதாம் ஆண்டில் நடாத்தப்படுகின்ற தேசிய மட்டத்திலான பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் பாடசாலை அடிப்படையிலான தொடர் கணிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மாணவனின் இயல்திறன் மற்றும் இரசனைக்கு ஏற்றவகையிலான விஞ்ஞான, கலை, வணிக மற்றும் தொழில்நுட்பம் போன்ற சாதாரண விடயத்துறையை "Vocational Education Stream" (நேரடியாகவே ஏதேனும் தொழிலுடன் எற்புடையதான) தெரிவுசெய்துகொள்வதற்கான வாய்ப்பு

-  இரண்டாம்நிலை தேசிய கல்விக் (கீழ்நிலை) காலத்தில் தனது ஒரு பாடத்துறையிலிருந்து மற்றுமொரு பாடத்துறைக்கு மாறக்கூடியவகையிலான நெகிழ்ச்சித்தன்மைகொண்ட பாடவிதானங்கள்
-  கல்விப் பாடநெறிகளுக்கு தனித்துவமான பாடங்களைப்போன்றே பொதுவான திறன் விருத்திக்கான தொழில்நுட்ப எழுத்தறிவு, வாழ்க்கைத் திறன்கள், இலக்கிய இரசனை, அடிப்படைச் சட்டம் போன்ற பொதுவான பாடங்கள்
-  கலாச்சார பன்வகைமைகளுடன் அமைந்தொழுகி மேற்படி பன்வகைமைக்கு மதிப்பளித்து செயலாற்றுவதற்காக பிள்ளைகளை பழக்கப்படுத்துகின்ற கற்றல் சுற்றாடல்
-  புத்தாக்கம் வாழ்க்கைத்திறன்கள் மற்றும் சமூக ஒன்றிணைப்பிற்கு அவசியமான அறிவையும் செயன்முறை திறமைகளையும் அபிவிருத்திசெய்தல்
-  சிறுவர்களின் உடல் மற்றும் உளரீதியான சமநிலையை பேணிவருவதற்கு அவசியமான நிகழ்ச்சித்திட்டங்கள்
-  இளைஞர்களுக்கு ஏற்றவகையிலான பாலியல் மற்றும் இனப்பெருக்கச் சுகாதாரம் பற்றிய கல்வி
-  அவசியமானவிடத்து சமூக உதவி முறைமையை நோக்கிச் செல்வதற்கான புரிந்துணர்வு

## தேசிய மட்ட மதிப்பீடு

-  அனைத்துவிதமான தொழில்நுட்ப மற்றும் ஏனைய பௌதிக வசதிகளைக்கொண்ட தேசிய பரீட்சைகள் மதிப்பீட்டு நிலையம்
-  தேசிய பரீட்சைகள் மதிப்பீட்டு அலுவல்களை ஒரு மாதகாலத்திற்குள் நிறைவுசெய்யவும் இரண்டுமாதங்களுக்குள் பெறுபேறுகளை வழங்கக்கூடியவகையிலுமான வருடாந்த பாடசாலை நாட்காட்டி
-  பரீட்சைகள் மதிப்பீட்டு செயன்முறைக்கு பங்களிப்புச் செய்கின்ற பரிசோதகர்களின் புலமைசார் பங்களிப்பிற்கு ஏற்ற கொடுப்பனவுத் திட்டம்

- பாடவிதான அபிவிருத்தி மற்றும் ஆசிரியத்தொழில் அபிவிருத்தி, கல்வி ஆராய்ச்சி மற்றும் கொள்கைகள் வகுத்தலுக்காக தேசிய கல்வி நிறுவகத்தின் அலுவல்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்.
- தேசிய கல்வி நிறுவகத்தில் பாடவிதான அபிவிருத்திக்காக முழுமையாக வசதிகளைக்கொண்ட பாடவிதான அபிவிருத்திக் கூறு
- மனித வளத்தை மேம்படுத்துதலும் பேணிவருதலும்
- ஆசிரியர்களினதும் அதிபர்களினதும் சம்பள முரண்பாட்டினை துரிதமாக நீக்குதல்
- ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பும் ஆசிரியர் பேரவையொன்றும் துரிதமாக்குதல்
- ஆசிரியர் தொழிலை உயர்ந்த சம்பளம் பெறுகின்ற 10 தொழில்களுக்கு மத்தியில்
- ஆசிரியர் தொழிலுக்கு வரமுன்னர் கற்றல் - கற்பித்தல் செயற்பாங்கு பற்றிய ஒரு வருடகால தொழிற்பயிற்சி
- அனைத்து கல்விக் கல்லூரிகளையும் ஆசிரியர் கலாசாலைகளையும் ஒருங்கிணைத்து தேசிய கல்வி பல்கலைக்கழகமொன்று
- ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் ஒரு முறை பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று
- பாடவிதான அபிவிருத்தி, பாடநூலாக்கம் மற்றும் மதிப்பீட்டு செயற்பாங்கு என்பவற்றை ஒன்றுடன்னொன்று இணைத்து பேணிவரத்தக்க வகையில் நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாக்க கட்டமைப்பு
- பாடசாலை முறைமைக்குள் அனைத்து சமுதாயங்களும் எதிர்நோக்குகின்ற பாலியல் அல்லது வேறுவிதமான துன்புறுத்தல்களை ஒழித்துக் கட்டுவதற்கான பலம் பொருந்திய கட்டமைப்பு

## தொழிற்கல்வி

- அகல்விரிவான தொழில்சார்துறைகளின் பிரயோக அறிவினைப் பெற்றுக்கொண்டு ஏதேனுமொரு திட்டவட்டமான தொழிற்றுறையின்பால் மாணவர்களை ஆற்றுப்படுத்துகின்ற தொழிற்கல்விச் செயன்முறையொன்றை உருவாக்குதல்.
- பொதுக்கல்வித்துறைக்கு சமாந்திரமாக 9 ஆம் ஆண்டிலிருந்து 13 ஆம் ஆண்டுவரை தொழிற்கல்விப் பாடநெறி நிர்மாணிப்பும் உட்கட்டமைப்பு வசதிகளும், படைக்குந்திறன்மிக்க கைத்தொழில்கள், முதனிலைக் கைத்தொழில்கள், சேவைகள் தொழிற்றுறை, சமூக மற்றும் சமுதாய சேவைகள், உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளினூடாக தொழில்சார் பாடநெறிகளை தயாரித்தல்.
- தொழிற்சந்தை மற்றும் உலகநடப்புகளை கவனத்திற்கொண்டு அந்தந்த தொழிற்கல்வித்துறையிலும் இடம்பெறவேண்டிய பண்புரீதியான மற்றும் அளவுசார்ரீதியான மாற்றங்கள் பற்றி விதந்துரைப்பதற்கான கைத்தொழில் மற்றும் கல்விசார்துறையைச் சேர்ந்த தொழில்வாண்மையாளர்களை உள்ளடக்கிய தொழிற்கல்வி ஒழுங்குறுத்தல் பணியகமொன்றை உருவாக்குதல்.

### உயர்கல்வி

- தேசிய பல்கலைக்கழக முறைமையை உயர் கோட்பாடுசார்ந்த மற்றும் ஆராய்ச்சிசார்ந்த கல்வியை வழங்குகின்ற நிலையங்களாக மாற்றி சர்வதேச மட்டத்திலான உயர்தொழிற்கல்வியை வழங்குகின்ற சமாந்தரமான பல்கலைக்கழக முறைமையொன்றை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### அரச பல்கலைக்கழக முறைமை

- பல்கலைக்கழகங்களின் சுயாதீனத்தன்மைக்கு மதிப்பளித்து அந்த பல்கலைக்கழகங்களின் கல்விப் பாடநெறிகளை தேசிய கொள்கைகளுக்கு அமைவாக தயாரிப்பதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்
- அரசியல் மற்றும் ஏனைய தொடர்புகளின்பேரில் துணைவேந்தர்களை நியமிப்பதற்குப் பதிலாக புதிய வழிமுறையொன்று
- பல்கலைக்கழகங்களின் நன்மதிப்பு பாதுகாக்கப்படத்தக்கதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக சுயாதீனமாக ஆட்களை பல்கலைக்கழகங்களின் வெளிவாரி ஆளுகைப் பேரவைகளின் அங்கத்தவர்களாக நியமித்தல்
- ஒவ்வொரு ஆளுகைப் பேரவையிலும் பல்வேறு தொழிற்றுறைகளின் பிரதிநிதித்துவம் ஆண் - பெண் சமநிலை உறுதிசெய்யப்படுகின்றவாறான அங்கத்தவர்கள்
- ஆளுகைப் பேரவை அங்கத்தவர்களை நியமிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற பொது விதந்துரைக்கப்பட்ட பெயர்களை உள்ளடக்கிய ஒதுக்கமொன்று
- ஏதேனும் பல்கலைக்கழகமொன்றில் இருந்து இளைப்பாறிய ஒருவர் அந்த பல்கலைக்கழகத்தின் ஆளுகைப் பேரவைக்கு நியமிக்கப்படுகையில் குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு முன்னர் இளைப்பாறியவர்களை மாத்திரம் நியமித்தல்
- நலனோம்பல் மற்றும் பிற மாணவர் அலுவல்கள் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட பரப்பிற்குள் செயலாற்றுவதற்காக மாணவர் பிரதிநிதியொருவர் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் வாக்குகளால் ஆளுகைப் பேரவைக்கு நியமிக்கப்படல்
- ஆளுகைப் பேரவை அங்கத்தவரொருவரின் பதவிக்காலம் தொடர்ச்சியான இரண்டு தடவைகளுக்கு மட்டுப்படுத்தப்படல்
- கற்கைப் பிரிவொன்றின் பிரிவுத்தலைவர் அல்லது மூன்றாண்டுகால முதுநிலை விரிவுரையாளர் பதவியின் தகைமைகளைக்கொண்ட பீட அங்கத்தவர்கள் அனைவரும் பீடாதிபதி பதவிக்காக நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு
- பீடாதிபதியொருவரின் பதவிக்காலம் அதிகபட்சமாக இரண்டு தடவைகளுக்கு வரையறுக்கப்படல்
- ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் கல்விசார், கல்விசாரா மற்றும் மாணவர் சமுதாயத்தின் மனக்குறைகளை கண்டறிந்து அவற்றுக்கு

தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க பொருத்தமான விதப்புரைகளை சமர்ப்பிப்பதற்காக பீட மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலுமான பொறியமைப்புகள்

- பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்வதிலான தாமதங்களை நீக்குதல்
- அந்தந்த பாடநெறிக்கான குறைந்தபட்ச தகைமைகளை இனங்கண்டு அந்த தகைமைகளை பூர்த்திசெய்கின்ற அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கத்தக்கவகையில் மூன்றாம்நிலைக் கல்வி முறைமையை படிப்படியாக விரிவாக்குதல்
- மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களின் விரிவுரை மண்டபங்கள், ஆய்வுகூடங்கள், நூலகங்கள், சிற்றுண்டிச்சாலைகள், இணையத்தள வசதிகள் உரிய தரங்களுக்கு அமைவாக அமைக்க அவசியமான ஏற்பாடுகளை வழங்குதல்
- மாணவர் உதவித்தொகைகளையும் மஹபொலவையும் வாழ்க்கைச் செலவுக்கு எற்றவகையில் அதிகரித்தல்
- சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பினை மேற்கொள்வதற்கு அவசியமான ஆங்கில மொழியை உள்ளிட்ட ஏனைய அடிப்படை தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனத்திலும் விசேட கூறுகளை தாபிப்பதோடு மேற்படி கூறுகள் ஊடாக சர்வதேச பல்கலைக்கழகங்களில் பட்டப்பின்படிப்பு கல்வி வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள அவசியமான தொடர்புகளை உருவாக்குதல்
- உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு சர்வதேச ரீதியாக தரப்படுத்திய பல்கலைக்கழகங்களில் பட்டத்தைப் பயில்வதற்கான 200 ஒரு வருடகால புலமைப்பரிசில்
- மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனங்களில் இடம்பெறுகின்ற பகிடிவதை, பால்நிலையை அடிப்படையாகக்கொண்ட அல்லது வேறு துன்புறுத்தல்களை தடுப்பதற்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பு
- வலதுகுறைந்த மாணவர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு அமைவாக கல்வியைப் பெற்றுக்கொள்ள அவசியமான வசதிகள்

**ஆராய்ச்சி மற்றும் பட்டப்பின்படிப்புக் கல்வி**

- பட்டப்பின் படிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான பல்கலைக்கழகமொன்று
- பட்டப்பின்படிப்புக் கல்வியையும் ஆராய்ச்சிகளையும் பலப்படுத்துவதற்கு அவசியமான நிதி மற்றும் பௌதீக வளங்களை பெற்றுக்கொடுத்தல்
- கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை பலப்படுத்துவதற்கான தனியார்துறையின் பங்களிப்பு
- தொழிற்கல்விப் பல்கலைக்கழகங்கள்
- சிரேஷ்ட இரண்டாம்நிலைக் கல்வியின் பின்னர் முன்றாம்நிலைக் கல்வி புகமுகப் பரீட்சையில் சித்தியடைகின்றவர்களுக்கான தொழிற்கல்விப் பல்கலைக்கழக முறைமை

- தாதியர் கல்லூரிகளை ஒருங்கிணைத்து தேசிய தாதியர் பல்கலைக்கழகமொன்று

### பிரத்தியேகக் கல்வி

- அரச கல்வி நிலையங்களில் சேர்த்துக்கொள்ள இயலுமானவகையில் மேற்படி முறைமை விரிவாகாமை காரணமாக பிரத்தியேக கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய மூன்றாம்நிலை கல்வி நிறுவனங்களுக்கு பாரிய கேள்வி நிலவுகின்றது. எனினும் மேற்படி பிரத்தியேக கல்வி முறைமைகளின் தரம் பற்றியோ அந்தந்த பாடத்திட்டங்களுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்கள் பற்றியோ ஒழுங்குறுத்தல் மேற்கொள்ளப்படுவதில்லை. அதன்படி நிலவுகின்ற பிரத்தியேக கல்வி நிறுவனங்களின் பாடத்திட்டங்களை ஒழுங்குறுத்துவதற்காக அரசசார்பற்ற கல்வி நிறுவன ஒழுங்குறுத்தல் கூறு ஒன்று கல்வி அமைச்சின்கீழ் நிறுவப்படும்.

### முதியோர் கல்வி

- பிரதேசத்தின் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள், கலாச்சார நிலையங்களுடன் ஒருங்கிணைந்து முறைசாரா கல்வியை வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திலும் சமுதாய கல்விசார் நிலையங்கள்
- பிரஜைகளுக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம், அடிப்படைச் சட்டம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுடப் சாதனங்களின் பாவனை பற்றிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்

### திறந்த மற்றும் தொலைக் கல்வி

- திறந்த மற்றும் தொலைக் கல்வியானது மூன்றாம்நிலைக் கல்வியின் ஒருபகுதியென்பதை ஏற்றுக்கொண்டு பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மூன்றாம்நிலைக் கல்வியை நிறைவுசெய்ய முன்னராக கல்வியிலிருந்து விடுபட்டவர்களுக்கு மூன்றாம்நிலைக் கல்வியை வழங்க தனது சேவைநிலைமை அல்லது புவியியல் காரணிகளை அடிப்படையாகக்கொண்டு தடைகள் ஏற்படாதவண்ணம் உயர் கல்வியில் பிரவேசிப்பதற்கான வாய்ப்பினை திறந்த மற்றும் தொலைக் கல்வி விரிவாக்கும்.



## நோயற்ற வாழ்வு

# ஆரோக்கியமான மக்கள்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பற்றிய அனைத்துலக பிரகடனத்தின்படி சுகாதாரம் மனித உரிமைகளிலொன்றாக கருதப்படுகின்றது. நோயாளிகளுக்கு வலுவூட்டுதல் நோயாளியை மையமாகக்கொண்ட சுகாதார சேவையொன்றின் பிரதான அம்சமாகும். மீள்தன்மையுடைய சுகாதார அமைப்பினை (Universal Health Coverage) அடைவதற்காக நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை (SDG,lalh இலக்கு 3.8) கடைப்பிடிக்கையில் உலக நாடுகள் வைத்துக்கொண்டுள்ள ஓர் இலக்காகும். ஒவ்வோராளுக்கும் நிதிசார் சிரமங்களின்றி அவர்களுக்கு அவசியமான தரமான சுகாதார சேவைகளை அவசியமானவிடத்தும் அவசியமான எந்தவோர் இடத்திலும் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை நிலவவேண்டும். அது சுகாதார மேம்பாட்டிலிருந்து தடுத்தல், சிகிச்சையளித்தல், புனரமைத்தல், மற்றும் நிவாரண நற்பணி வரையான அத்தியாவசிய சுகாதார சேவைகளின் முழுமையான இடைறாநிலையை உள்ளடக்கவேண்டும். அதனால் அனைத்துப் பிரஜைகளுக்கும் தாமதமின்றி வினைத்திறன்மிக்க சான்றுகளின் அடிப்படையில் சுகாதார சிகிச்சை சேவைகளை வழங்குதல் பொறுப்புள்ள அரசாங்கமொன்றின் கடமையாகும். நோயாளியின் பாதுகாப்பு என்பது சுகாதாரப் பாதுகாப்பு

**ஒவ்வோராளுக்கும் நிதிசார் சிரமங்களின்றி அவர்களுக்கு அவசியமான தரமான சுகாதார சேவைகளை அவசியமானவிடத்தும் அவசியமான எந்தவோர் இடத்திலும் பெற்றுக்கொள்வதற்கான இயலுமை நிலவவேண்டும். அது சுகாதார மேம்பாட்டிலிருந்து தடுத்தல், சிகிச்சையளித்தல், புனரமைத்தல், மற்றும் நிவாரண நற்பணி வரையான அத்தியாவசிய சுகாதார சேவைகளின் முழுமையான இடைறாநிலையை உள்ளடக்கவேண்டும்.**

மற்றும் பக்க விளைவாகத் தோன்றக்கூடிய அநாவசியமான சேதத்தின் அபாயநேர்வினை ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த மட்டத்திற்கு கொண்டுவருவதாகும். நோயாளிகளுக்காக வழங்கப்படுகின்ற சுகாதார சேவையின் பாதுகாப்பினையும் தரத்தையும் முனைப்பானவகையில் முகாமைத்துவம் செய்யவும் முன்னேற்றவும் இயலுமானவகையில் நிர்வாக செயற்பாங்குகளுடன பாதுகாப்பு மற்றும் தர ஒழுங்குறுத்தல் முறைமைகளை ஒருங்கிணைக்க வேண்டும்.

உலக சுகாதார தாபனத்தின் உலக சுகாதார முறைமைகளை தரப்படுத்துதல் மூலமாக 2000 ஆண்டில் இலங்கையின் சுகாதார முறைமை 76 வது இடத்தை வகிப்பதாக சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் CEOWORLD சஞ்சிகையில் Health Care Index இல் 2024 தொகுப்பின்படி இன்றளவில் இலங்கை 105 வது இடத்திற்கு சென்றுள்ளது. உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சுகாதாரத்திற்கான அரசாங்கத்தின் செலவு குறைந்தபட்சம் 5% ஆக அமையவேண்டுமென உலக சுகாதார தாபனம் விதந்துரைக்கின்றது. எனினும் 2021 யுனிசெப் அறிக்கையின்படி இலங்கை சுகாதாரத்திற்காக செலவிடுவது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1.5% ஆகும். குடும்பமொன்று சராசரியாக அதன் சுகாதார வசதிகளுக்காக செலவாகின்ற தொகையில் 20% இற்கு குறைவானதாக அமையவெண்டுமென உலக சுகாதார தாபனம் விதந்துரைத்தபோதிலும் இலவச சுகாதார சேவை நிலவியபோதிலும் இலங்கையில் அது 50% இற்கு கிட்டியதாகும்.

ஆரோக்கியமும் சுகாதாரமும் மிக்க பிரஜையொருவரை உருவாக்குவதற்காக நோயை கண்டுபிடித்தலை போன்றே நோயை தடுப்பதையும் நோக்கமாகக் கொண்ட வினைத்திறன் மிக்க சுகாதார சேவையொன்றை உருவாக்குவதை தேசிய மக்கள் சக்தி எதிர்பார்த்துள்ளது.



## கோட்பாடுகள்

- மக்கள் கௌரவமாகவும் அபிமானத்துடனும் சுகாதார சேவைகள் கவனிப்பின் உன்னதமான நன்மைகளை அனுபவிப்பதற்கான உரிமை.
- எந்தவிதமான பேதமுமின்றி பிரஜைக்கு நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்க அரசாங்கம் பொறுப்புக்கூறுதல்.
- சுகாதார மேம்பாடும் நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளின் மேம்பாடும்.
- உலகளாவிய தரநியமங்களுக்கு அமைவான சுகாதார சேவைகளும் நோயாளிகளின் பாதுகாப்பும்
- நோயாளிகளின் உரிமைகளும் பாதுகாப்பும்

## செயற்பாடுகள்

### உன்னதமான சுகாதார சேவை முகாமைத்துவம்

சுகாதாரத்திற்கான அரசாங்கத்தின் செலவு குறைந்தபட்சம் மொத்த தேசிய உற்பத்தியில் 5% ஐ இலக்காகக்கொண்டு படிப்படியாக அதிகரித்தல்.

- பயனுறுதிமிக்கவகையிலும் வெளிப்படைத்தன்மையுடனும் நிதியங்களை பாவித்தலும் சுகாதார சேவையின் ஊழல்களை ஒழித்துக்கட்டுதலும்.

### தேசிய சுகாதார தகவல் முறைமையொன்று

- சுகாதார சேவைகள் தகவல் முறைமையை பயனுறுதியும் வினைத்திறனும் கொண்டதாக மாற்றுவதற்காக நோயாளிகளின் அறிக்கைளையும் தகவல்களையும் டிஜிட்டல்மயமாக்குதல்.
- சுகாதார சேவை நிறுவனங்களின் சேவைகளுக்கான காத்திருக்கைக் காலத்தைக் குறைப்பதற்காக மருத்துவர் சந்திப்பிற்கான நிகழ்நிலைப் பதிவுசெய்தல்.

### சுகாதார மேம்பாடும் நோய்த் தடுப்பும்

- தொற்றா நோய்களின் சிக்கல் நிலைமைகளை முன்கூட்டியே இனங்கண்டு கட்டுப்படுத்துவதற்கும் சிகிச்சையளிப்பதற்குமான சமூக அடிப்படையிலான பொறியமைப்பு.
- 40 வருடங்கள் வயதினை கடந்த முதியவர்களுக்கான வருடாந்த சுகாதார பரிசோதனைகள்
- தேகப்பியாசம், நடத்தல் மற்றும் சைக்கிள் ஓட்டுதல் போன்ற ஆரோக்கியமான வாழ்க்கைப் பாங்குகளை ஊக்குவித்தல்.
- சமூக விரோத செயற்பாடுகளையும் பாதிக்கப்படக்கூடிய நடத்தைப்போக்குகளைக்கொண்ட பாடசாலைப் பிள்ளைகளையும் இனங்காண்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.

**உணவு சம்பந்தமான வர்த்தக அறிவித்தல்களை ஒழுங்குறுத்துவதற்கான நிறுவனமொன்றும் பாவனையாளர்களுக்கு சரியான தகவல்களைக் கொண்ட வர்த்தக அறிவித்தல்களுக்கான ஒழுக்கநெறி கோவையொன்று**

- கடுமையான மற்றும் நாட்பட்ட போசாக்கின்மை அத்துடன் உடற்பருமனை கட்டுப்படுத்துவதற்கான சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்.

**உணவுப் பாதுகாப்பு**

- உணவு சம்பந்தமான வர்த்தக அறிவித்தல்களை ஒழுங்குறுத்துவதற்கான நிறுவனமொன்றும் பாவனையாளர்களுக்கு சரியான தகவல்களைக் கொண்ட வர்த்தக அறிவித்தல்களுக்கான ஒழுக்கநெறி கோவையொன்று
- தரநியமங்களுடன் அமைந்தொழுகாத உணவு உற்பத்தி, இறக்குமதி, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தலை கட்டுப்படுத்துதல்
- உள்ளடக்கத்தைக் குறிப்பிட்டு உணவை முறைப்படி லேபள் பண்ணுதலை கட்டாயமாக்குதல்
- தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பும் நல்வழியுரிமையும்
- இனங்காணப்பட்ட தொழில்சார் நிறுவனங்களுக்காக பணியின் தன்மைக்கிணங்க முழுமையான சுகாதார பரிசோதனையை மேற்கொண்டு சான்றிதழ் வழங்குதல்.
- சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் திடீர் விபத்தினை எதிர்நோக்குகின்ற ஊழியரின் மருத்துவ செலவுகளையும் மீண்டும் தொழிலுக்குத் திரும்பும்வரை பொருத்தமான கொடுப்பனவையும் தொழில்தருனர் செலுத்துதல்.

**முதியோருக்கான கவனிப்பு**

- முதிய சமுதாயத்திற்கான உடல் மற்றும் உள சுகாதார சமநிலையைக்கொண்ட ஆரோக்கியமான வாழ்க்கையை பேணிவருவதற்கான செயற்பாடுகள் பொதியொன்று.
- சேவைகளிலிருந்து இளைப்பாற முன்னர் முனைப்பான வாழ்க்கைப் பாங்கினை பேணிவர அவசியமான உடல் மற்றும் உளச் சுகாதார மேம்பாட்டு மதியுரை நிகழ்ச்சித்திட்டங்கள்.
- நோய்த் தடுப்பு நிறுவனங்களில் சிறப்பான முதியோர் கிளினிக்குகளை அறிமுகஞ்செய்தல்.

**ஆரம்பநிலை பராமரிப்பு**

- 5000 தொடக்கம் 10000 வரையான ஆட்களை உள்ளடக்கத்தக்கதாக குடும்ப மருத்துவரொருவரைக்கொண்ட சுகாதார பணியாட்டொகுதியொன்று.
- நோயாளிகளுக்கான இடையறாத பராமரிப்பினை வழங்குவதற்கன ஆரம்பநிலை பராமரிப்பு நிறுவனங்கள் என்றவகையில் ஆதார வைத்தியசாலைகள், இரண்டாம்நிலை பராமரிப்பு நிறுவனங்கள் என்றவகையில் பொது வைத்தியசாலைகள் மற்றும் மூன்றாம்நிலை பராமரிப்பு நிறுவனங்களாக போதனா வைத்தியசாலைகனை கொத்தணிமயமாக்குதல்.
- குடும்ப சுகாதாரக் கூறுகள் பிரதேசங்களின் நோயாளிகளுக்கு தனித்துவமான சுகாதார சேவைகளை வழங்குவதற்கான சுற்றயல் கிளினிக் சேவைகளை ( தனித்துவமான மதியுரையாளர்களின் வருகை )

நிறுவுதல். (Satellite Clinics)

-  உள, பேச்சு, செவிப்புல, தொழில்சார் மற்றும் சமுதாய இயன்மருத்துவ சிகிச்சைகளுக்கான வசதிகளை நிறுவுதல்.

**வைத்தியசாலை பராமரிப்பு**

-  வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு நோயாளிக்கும் கட்டிலொன்றை உறுதிப்படுத்துதல்.
-  ஒவ்வொரு களத்திற்கும் வார்ட்டு முகாமைத்துவ சேவையையும் தாதியர் பராமரிப்பு திட்டத்தையும் இற்றைப்படுத்துதலும் அனைத்து நோயாளிகளுக்குமான தாதியர் பராமரிப்பினை முன்னேற்றுதலும்.
-  நோயாளிகளின் வதிக்காக ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒருநாள் சிகிச்சை நிலையங்கள்.
-  அரசாங்க சுகாதார நிறுவனங்களில் மேற்கொள்ளப்படுகின்ற எல்லாவிதமான ஆய்வுகூட பரிசோதனைகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கான ஐளுழு தரநியமங்களை உறுதிசெய்தலும் பெறுபேறுகளுக்கு பொருள்கோடல் வழங்குவதற்காக மருத்துவரொருவரினதும் தாதி உத்தியோகத்தரொருவரினதும் சேவையை 24 மணித்தியாலங்கள் தொலைபேசி மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய புதிய முறையியலொன்று.
-  தொழிவாண்மையாளர்களை உள்ளிட்ட அனைத்துச் சமுதாயக் குழுக்களினதும் இடையீட்டுடன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களை மறுசீரமைத்தல்.

**தனித்துவமான பராமரிப்பு**

-  ஒவ்வொரு மாவட்டத்திலும் / மாகாணத்திலும் வசதிகள்நிறைந்த விரிவான இதயநோய்க் கூறு, விரிவான புற்றுநோய் பராமரிப்புக் கூறு, கண் பராமரிப்புக் கூறு மற்றும் சிறுநீரக பராமரிப்புக் கூறு.

**நோயாளிகளின் பாதுகாப்பு**

-  சேவைகளை வழங்குகையில் சுகாதார ஊழியர்களின் பொறுப்பினை உறுதிசெய்தல் மற்றும் நோயாளிகளின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நோயாளிகள் சாசனமொன்று.
-  "தடுக்கக்கூடிய இறப்புக்களை பூச்சியநிலைப்படுத்தல்" என்பதை தொனிப்பொருளாகக்கொண்டு தரமான சுகாதார சேவையை உறுதிசெய்தல்.
-  நோயாளிகளிடமிருந்தும் பொறுப்பாளர்களிடமிருந்தும் கிடைக்கின்ற முறைப்பாடுகளை சுயாதீனமாக விசாரணை செய்வதற்கான சேவைகள் பிரதிபலிப்புக் கூறுகள்.

**அவசர சிகிச்சை**

-  சுவசெரிய உள்ளிட்ட ஏனைய பிணியாளர் வண்டி சேவைகளுக்காக பயிற்றப்பட்ட அவசர சுகாதார சிகிச்சை அணிகளை இணைத்தல்.

**அத்தியாவசியமான ஔடதங்களை தட்டுப்பாடின்றி வழங்குதல்.**

- ஔடதங்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கான வினைத்திறன் மிக்க ஔடத ஆராய்ச்சி ஆய்வுக்கூடமொன்று
- உள்நாட்டுரீதியில் ஔடத உற்பத்தியை விரிவாக்குதல்.
- ஔடத இறக்குமதியின்போதும் விநியோகத்தின்போதும் இடம்பெறுகின்ற ஊழல்களையும் மோசடிகளையும் முற்றாகவே நீக்குதல்
- அரச சுகாதார சேவைகள் நிறுவனங்களுக்கு அவசியமான ஔடதங்களின் இடையறாத வழங்கலை உறுதிப்படுத்துதல்.
- ஔடதங்களின் தரத்தையும் நியாயமான விலையையும் உறுதிப்படுத்துதல்.
- உரிய கையிருப்பினைப் பேணிவந்து ஔடத தட்டுப்பாட்டினை தடுத்தல்.
- அரச ஔடதக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களை ஒவ்வொரு நகரத்திலும் நிறுவுதல்.

**உளச் சுகாதாரக் கவனிப்பு**

- உளச் சுகாதாரக் கோளாறுகளை முன்கூட்டியே இனங்காண்பதற்கும் விசேட பராமரிப்புக்காக ஆற்றுப்படுத்துவதற்குமான பொறியமைப்பு.
- ஆரம்ப உளச் சுகாதார சேவைகள் நிலையங்களை (Primary Mental Health Care Centres) ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரதேசத்திலும் (MOH) நிறுவுதல்.
- சிறுவர் மற்றும் புத்திளமைப்பருவ உளச் சுகாதார மேம்பாடு, போதைப்பொருள் பாவனை மற்றும் வன்முறையைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- உளரீதியான கோளாறுகள் கொண்ட நோயாளிகளுக்கான சிகிச்சைகளை பின்பற்றுதல், கண்காணித்தல் மற்றும் குடும்ப சிகிச்சைகளை ஊக்குவிப்பதற்கான சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

**புனர்வாழ்வு**

- ஒவ்வொரு மாவட்டத்திலும் விரிவான புனர்வாழ்வு நிலையங்கள்.
- அவர்களின் சூழலில் அல்லது விசேட நிலையத்தில் புனர்வாழ்வுக்கான சமுதாய அடிப்படையிலான பராமரிப்பு.

**நிவாரண பராமரிப்புச் சேவை**

- புற்றுநோய் மற்றும் பக்கவாதம் உள்ளிட்ட குணப்படுத்தமுடியாத நோயாளிகளுக்காக வீடுகளை அடிப்படையாகக்கொண்ட மற்றும் நிறுவனங்களை அடிப்படையாகக்கொண்ட நிவாரண பராமரிப்புச் சேவைகள்.

**வாய்ச் சுகாதார சேவைகள்**

- முன்பள்ளி பிள்ளைகளுக்கான ஆரம்ப பிள்ளைப்பருவ பற்சிதைவினை (ECC) குறைப்பதை நோக்கமாகக்கொண்ட விசேட வாய்ச்சுகாதார

மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்.

### பெருந்தோட்டப் பிரிவின் சுகாதார சேவைகள்

- போசாக்குத் தரம், வாய்ச் சுகாதாரம், காசநோய்க் கட்டுப்பாடு, நிதிசார் எழுத்தறிவு, மதுசாரம், புகையிலை மற்றும் ஏனைய போதைப்பொருட்களை தடுத்தல் இளைஞர் சமுதாயத்தின் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான விசேடநிகழ்ச்சிட்டங்கள்.

### உள்நாட்டு மருத்துவ சேவைகள்

- ஆயுர்வேத வைத்தியசாலைகளின் நிர்வாகத்தையும் முகாமைத்துவத்தையும் பலப்படுத்துவதன் மூலமாக ஆயுர்வேதம், சித்த வைத்தியம் மற்றும் யுனானி பிரிவுகளில் மருத்துவ சிக்கிச்சை வழங்குதலை விரிவாக்குதல்.
- தட்டுப்பாடின்றி ஔடதங்களை உற்பத்திசெய்ய ஆயுர்வேத ஃயுனானி ஃ சித்த மருத்துவ ஆய்வுகூடங்களை முன்னேற்றுதல்.
- ஆயுர்வேத வைத்தியசாலைகளின் கட்டில்களை உள்ளிட்ட சிகிச்சை வழங்குகின்ற கொள்திறனை அதிகரித்தல்.
- ஆயுர்வேத வைத்தியசாலைகளுடன் இணைந்த போதனா முறைமை விரிவாக்கப்படும்.
- உள்நாட்டு ஔடத உற்பத்திக்கான ஆராய்ச்சிகளையும் வளர்த்தலையும் ஊக்குவித்தல்.
- பாரம்பரிய சிகிச்சை முறைகள் மற்றும் ஔடதங்கள் பற்றிய புதிய ஆராய்ச்சிகளுக்கான அரச அனுசரணை.

### மருத்துவ சுற்றுலா செயற்றிட்டம்

- தெரிவுசெய்த வைத்தியசாலைகளில் அதி நவீன வசதிகளையும் நன்றாக பயிற்றப்பட்ட மருத்துவ நிபுணர்களையும்கொண்ட மேலைத்தேய மற்றும் ஆயுர்வேத சுற்றுலா சுகாதார சேவையை வழங்குதல்.

### பிரத்தியேக மருத்துவ சேவை

- நோயாளிகளுக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக பிரத்தியேக மருத்துவ சேவைகளை உள்ளிட்ட அனைத்து சுகாதார சேவைகளையும் ஒழுங்குறுத்துதல்.



## வசதியான வீடு

# சுகாதாரப் பாதுகாப்புமிக்க வாழ்க்கை

நகரமயமாக்கலுடன் இலங்கையின் ஒவ்வொரு பிரதான நகரத்திலும் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களின் வீடமைப்பு பற்றிய பிரச்சினை மிகவும் தீவிரமடைந்துள்ளது. கொழும்பு நகரத்தில் மாத்திரம் ஏறக்குறைய 65,000 குடிசை வீடுகளும் சேரிப்புற வீடுகளும் 1000 ஏக்கர் பரப்பளவிற்குள் இருக்கின்றன.

இந்த மக்கள் நிலவிய அரசாங்கங்களால் பொருட்படுத்தாமல் விடப்பட்டதோடு குறைந்த வருமானம் பெறுகின்ற சமுதாயத்தினர் நீர், மின்சாரம், துப்பரவேற்பாட்டு வசதிகள் மற்றும் சுத்தமான காற்றோட்டம் இன்மையால் அல்லற்படுகிறார்கள். நகரத்தில் குடியமர்ந்துள்ள ஏனைய குடியிருப்பாளர்கள் தமது வீடுகளை அமைத்துக்கொள்ளல், கொள்வனவு செய்தல், வாடகைக்கு குடியமர்ந்துள்ளமையைக் காணலாம். எனினும் மக்களின் வருமான நிலைக்கிணங்க வீடொன்றை நிர்மாணித்தல், கொள்வனவுசெய்தல் அல்லது வாடகைக்கு குடியமர்தல் ஒரு சிக்கலாக அமைகின்றது. குறிப்பாக ஒருசில அரசாங்க உத்தியோத்தர்கள் வாடகை அடிப்படையில் குடியமர்ந்திருந்தபோதிலும் அந்த வாடகையை செலுத்துமளவிற்கு வருமானமின்மை பாரிய சிக்கலாக நிலவுகின்றது.

**பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் சிறிய அளவிலான வசதிகள் குறைந்த வரிசை வீடுகளில் வசிக்கிறார்கள். இந்த குடும்பங்களில் உப குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் பாரிய சமூகப் பிரச்சினைகளும் தோன்றியுள்ளன. மேலும் காணி வழங்கப்பட்டாலும் வீடொன்றை அமைத்துக்கொள்வதற்கான வருமான மட்டம் அவர்களுக்கு இல்லையென்பதால் மிகவும் குறைந்த வசதிகளின்கீழ் அவர்கள் வாழ்க்கையைக் கழித்து வருகிறார்கள்.**

கிராமிய வீடுகள் பற்றி அரசாங்கம் அதிகளவிலான கவனம் செலுத்தாவிட்டாலும் கிராமிய பிரதேசங்களிலும் வீடமைப்பு பிரச்சினைகள் நிலவுகின்றன. ஒருசில குடும்பங்களிடம் காணிகள் இருந்தபோதிலும் அந்த காணிகளின் உரிமை பற்றிய பிரச்சினைகள், இடஅமைவு, வீதி வசதிகள் இன்மை, கட்டிடப் பொருட்களின் மிகையான விலை, நிரந்தர வருமானம் இன்மை மற்றும் வருமானம் போதுமானதாக இன்மை கிரமப்புற மக்கள் எதிர்நோக்குகின்ற பிரதான சிக்கல்களாகும்.

இலங்கையின் கிராமிய சனத்தொகையில் ஏறக்குறைய 2% தோட்டப்புற வீடுகளில் குடியமர்ந்துள்ளார்கள். இதனை மத்திய, ஊவா, சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் பரவலாக காணக்கூடியதாக அமைவதோடு பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் சிறிய அளவிலான வசதிகள் குறைந்த வரிசை வீடுகளில் வசிக்கிறார்கள். இந்த குடும்பங்களில் உப குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் பாரிய சமூகப் பிரச்சினைகளும் தோன்றியுள்ளன. மேலும் காணி வழங்கப்பட்டாலும் வீடொன்றை அமைத்துக்கொள்வதற்கான வருமான மட்டம் அவர்களுக்கு இல்லையென்பதால் மிகவும் குறைந்த வசதிகளின்கீழ் அவர்கள் வாழ்க்கையைக் கழித்து வருகிறார்கள்.

வரையறுக்கப்பட்ட காணியளவினை சிறப்பாக முகாமை செய்தும் மக்களின் தேவைகளை கனத்தில் கொண்டும் இயலுமான எல்லா வேளைகளிலும் தொடர்மாடி வீடமைப்பு திட்டங்களை நிர்மாணிப்பது எங்களுடைய நோக்கமாகும்.



## கோட்பாடுகள்

-  ஒவ்வோர் ஆளுக்கும் சுகாதாரப் பாதுகாப்புமிக்க வீடொன்று
-  உன்னதமான காணி முகாமைத்துவம்
-  முழுநிறைவான வீடமைப்புத் தொகுதி

## செயற்பாடுகள்

**நகர்சார் வீடமைப்பு**

-  நகர்சார் பிரதேசங்களில் மாடி வீடுகளை அமைப்பதற்காக தனியார்துறையை ஊக்குவித்தலும் அதற்கு அவசியமான காணிகளை அரசாங்கம் வழங்குதலும்
-  நகர்சார் மாடி வீடமைப்பு கருத்திட்டங்களுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் முதலீடுகளை ஊக்குவித்தல்.
-  அரச உத்தியோகத்தர்களுக்கான சேவை நிலையங்களுக்கருகில் உத்தியோகபூர்வ இல்லங்களை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்
-  கொழும்பு நகரத்தின் சேரிப்புற மற்றும் குடிசைவீடுகளில் வசிக்கின்ற மக்களுக்கு அரச இடையீட்டுடன் பொருத்தமான வீடுகள்
-  நகர்சார் மற்றும் பகுதியளவிலான நகர்சார் பிரதேசங்களில் சுகாதாரம், கல்வி, விளையாட்டு, போக்குவரத்து, பூங்கா வசதிகளைக்கொண்ட முழுநிறைவான வீடமைப்புக் கருத்திட்டங்கள்.

**கிராமிய வீடுகள்**

-  வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான காணி உரிமை பற்றிய சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்காக  காணிச் சட்டத்திற்கான திருத்தங்கள்.
-  குடியமர்ந்துள்ள பிரதேசங்களுக்கான புகுமுக வீதி வசதிகளை விரிவாக்குதல்.
-  வீடுகளை நிர்மாணிப்பதற்கான வீடமைப்புக் கடன் திட்டமொன்று.

**தோட்ட வீடுகள்**

-  மலையக சமுதாயத்தின் வீடமைப்பு மற்றும் துப்பரவேற்பாட்டு வசதிகளை முன்னேற்றுவதற்கான நிதி மற்றும்  உட்கட்டமைப்பு வசதிகள்.
-  மலையக சமுதாயத்திற்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொள்வதற்கான காணிகளை வழங்குதல்.
-  தோட்டங்களை சார்ந்த பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டங்கள்.



## வலிமைமிக்க பிரஜை

# வெற்றிகரமான மக்கள்

போட்டிகள் வெறுமனே பங்குபற்றுவதற்கும் வெற்றிபெறுவதற்கும் மட்டுமேயானவையல்ல. ஆரோக்கியமான, ஒழுக்கம் நிறைந்த மற்றும் அறிவுபூர்வமான மக்கள் சமூகத்தை உருவாக்கும் செயற்பாட்டில், விளையாட்டின் பணி மிகமிகமுக்கியமானது. வெற்றிகள் தேசத்திற்குப் புகழையும் அபிமானத்தையும் கொண்டுவருகின்றன. பங்கேற்பு ஆரோக்கியமான ஒரு தேசத்தை உருவாக்குவதுடன், ஒழுக்கம், வலிமை, ஆளுமை என்பவற்றுடன் உயர்வான மனப்பாங்குள்ள நபர்களையும் உருவாக்குகின்றது.

வினைத்திறனற்ற முகாமையும் அரசியற் தலையீடுகளும் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்குப் பெரும் தடையாகும். காணப்படுகின்ற ஒழுங்குபடுத்தப்படாத முறைமையின் மூலம் சில விளையாட்டுத் துறைகளும், விளையாட்டு வீரர்களும் தனிப்பட்ட உரிமையாளர்களின் பிடியில் சிக்கவைக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான வளங்களும் சேவைகளும் நகரத்தை நோக்கியே செறிந்துள்ளதுடன் கிராமிய மற்றும் தோட்டத்துறை விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

கனவுகள் கலைந்துபோன இலங்கையைப் போன்ற ஒருநாட்டில், விளையாட்டின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய பலவிடயங்கள் காணப்பட்டபோதும், சர்வதேச விளையாட்டுத் துறையில், இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. கடந்தகாலங்களில் எமது நாட்டின் கிரிக்கட் விளையாட்டு குறிப்பிடத்தக்க மட்டத்தில் காணப்பட்டாலும், அண்மைக் காலமாக அதுவும் பின்னடைவுக்குஉட்பட்டுள்ளது. தேசத்திற்குப் புகழையும், அபிமானத்தையும் கொண்டுவரக் கூடிய அவ்வாறே ஆரோக்கியமானதும் ஒழுக்கம் நிறைந்ததுமான பிரசைகளைக் கொண்ட சமூகத்தை உருவாக்கக் கூடிய, விளையாட்டு மற்றும் உடல் நலக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவது தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாகும்.



## கோட்பாடுகள்

- பங்கேற்பு, ஒழுக்கம், நம்பிக்கை மற்றும் போட்டித்தன்மை
- சர்வதேச மட்டத்திலான நிபுணத்துவமும் இயலளவும்
- போதுமான உட்கட்டமைப்பு வசதிகள்
- நியாயமான அணுகல்
- சர்வதேச ஒத்துழைப்பு
- அரச, தனியார் பிரிவுகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் பங்களிப்பு

## செயற்பாடுகள்

- விளையாட்டுகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளல்
- விளையாட்டில் தரத்தையும் நியாயத்தையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு அதிகாரங்களுடன் கூடிய தேசியவிளையாட்டு நீதிகள் ஆணைக்குழு
- உத்தேச இலங்கைகிரிக்கட் சட்டத்தைதுரிதமாகஅமுல்படுத்தல்
- இலங்கைகிரிக்கட் உள்ளிட்ட ஏனைய விளையாட்டு நிர்வாக நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளமோசடிகளையும் ஊழலையும் விசாரணைசெய்தல்
- விளையாட்டையும் உடற்பயிற்சியையும் பொதுச் சுகாதாரநிகழ்ச்சிநிரலுடன் ஒன்றிணைத்தல்
- பாடசாலை செல்லும் வயதிலுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் குறைந்தபட்சம் ஒருவிளையாட்டிலேனும் ஈடுபடுவதற்கான வசதிகள்
- ஒவ்வொருப ாடசாலைக்கும் விளையாட்டுஆசிரியர்களும் பயிற்சியாளர்களும்
- பாடசாலை மட்டத்திலேயே திறமையுள்ள பிள்ளைகளை இனங்கண்டுஅவர்களைதேசிய மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கானவேலைத்திட்டம்.
- முரண்பாடுகளின்றி ஒவ்வொரு பாடசாலைக்கும் தேவையான உபகரணங்களும் வசதிகளும் அரச இடையீட்டில் வழங்கப்படும்.
- விளையாட்டில் விசேட திறமையுள்ள வீரர்களை இனங்காண்பதற்கும் அவர்களின் பொருளாதாரமட்டம், போசணை, மற்றும் பயிற்சியுடன் தொடர்புடைய உபகரணங்களை வழங்குவதற்காக பாடசாலைமற்றும் மாவட்ட மட்டத்திலான விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்.
- தேசியவிளையாட்டுப் பயிற்சிப் பாடசாலையொன்றைமையமாகக் கொண்டு 09 மாகாணங்களுக்குமானநவீனவிளையாட்டுப் பாடசாலைவலையமைப்பு

-  சர்வதேசமட்டத்தில் அறிவும் திறனும் நிறைந்த உடற்கல்வி வல்லுனர்களை உருவாக்குவதற்கான பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்கான சந்தர்ப்பங்களை விரிவாக்குதல்
-  விளையாட்டு ஆராய்ச்சி தொடர்பான சிறப்பு சர்வதேச மத்தியநிலையம்.
-  பயிற்சி மற்றும் முகாமைப் பணிக்குழுவிற்கு குறிப்பிட்ட சம்பளங்களை இனங்காணவும் வசதிகளையும் வழங்குவதற்கும் முகாமைத்துவச் சான்றுகள் மற்றும் அனுமதிப் பத்திர நிகழ்ச்சித் திட்டம்.
-  விளையாட்டில்  திறமையுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு பயிற்சியளித்து சர்வதேச போட்டிகளில் ஈடுபடுத்தல்.
-  விளையாட்டுமற்றும் உடற்கல்வித் துறையில் முதலீட்டாளர்களுக்கும் உள்ர் விளையாட்டு உபகரண உற்பத்தியாளர்களுக்கு விசேட வரிச் சலுகை
-  விளையாட்டு சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்தல்
-  விளையாட்டு ஊடகவியலாளர்களை பயிற்றுவிப்பதற்கான முறையான கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்.
-  சட்டவிரோத ஊக்கமருந்துகளைப் பாவித்தல், போட்டிகளைக் காட்டிக் கொடுத்தல் மற்றும் ஏனைய மோசடிகள் உள்ளிட்ட அனைத்து ஊழல் மோசடிகளையும் ஒழிப்பதற்கான பொறிமுறை
-  நாடு முழுவதும் காணப்படும் உடற்பயிற்சி மத்திய நிலையங்களுக்கு உரிய ஒழுங்குவிதிகளுடன் உதவியளித்து நாடு முழுவதும் புதிய விளையாட்டு பொழுதுபோக்கு வசதிகளை வளர்ப்பதற்கான மூலோபாய ரீதியிலான முதலீட்டுத் திட்டம்.
-  விளையாட்டு வசதிகள் தொடர்பிலான தேசிய தரவுக் களஞ்சியம்
-  அரசியல்மயமான அனைத்து விளையாட்டு நிறுவனங்களையும் விளையாட்டுகளையும் அதிலிருந்து மீட்டு விளையாட்டின் நோக்கங்களுக்காக செயற்படும் சுயாதீனமானதும் வளர்ச்சியடைந்ததுமான நிறுவனங்களாக மாற்றப்படும்.
-  கிராமிய மட்டத்திலிருந்து தேசியமட்டம் வரை செல்கின்ற ஒன்றிணைந்த விளையாட்டுப் பயிற்சித் திட்டம்
-  ஒவ்வொரு மாகாணத்திற்கும் தங்குமிடவசதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சமூகத்தினர் அணுகக் கூடிய நவீனவிளையாட்டுத் தொகுதி
-  ஒவ்வொரு பிரதேசசெயலகப் பிரிவிற்கும் முற்றிலும் பரிபூரணமான ஒரு விளையாட்டரங்கு
-  1000 சமூக உடலாரோக்கிய நிலையங்கள்
-  தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை
-  விளையாட்டு ஒழுக்கவிதிக் கோவை மற்றும் காணப்படும் விளையாட்டுச் சட்டங்களை இற்றைப்படுத்தல்
-  தேசிய விளையாட்டு அணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் காப்புறுதி முறையொன்று
-  விளையாட்டுத் துறையை ஒரு கைத்தொழிலாக அபிவிருத்தி செய்வதற்கான அரச மற்றும் தனியாரத்துறைகள் ஒருங்கிணைந்த பொறியமைப்பொன்று.



# உன்னதமான கலாச்சார வாழ்வு

# உணர்திறனுள்ள மக்கள்

கலை கலாசார இடைவெளி எனப்படுவது ஒரு சமூகத்தின் மிகவும் உணர்வுபூர்வமான பகுதியாகம். இப்பகுதி , மனித சமூதாயத்தின் மீது விடுக்கும் தாக்கம் காலங்கடந்து உணரப்பட்டாலும், நிகழ்கால இலங்கையின் சமூகசீர்குலைவில் பாரிய இடைவெளியொன்று தோன்றுமாயின் அதற்கு இப் பகுதியிலுள்ள குறைபாடே காரணம். கடந்த அரசாங்கங்கள் பலவற்றின் மூலம், கலாசாரத் துறை பகிரங்கமாகவே புறக்கணிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. பிள்ளையொன்றின் ஆரம்பப் பிள்ளைப் பருவத்திலிருந்தே உன்னிப்பான கவனத்துடன் கட்டியெழுப்பப்படவேண்டிய முழுமையான கல்வியின் வரைபடமானது, காலத்திற்குக் காலம் இடம்பெற்ற அரசியல் அதிகார மாற்றங்களுக்கு இரையாகியுள்ளது. முன்பள்ளி, பாடசாலை, தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் ஆகிய கட்டங்களைக் கடந்துவரும் நபர் ஒரு முழுமையான பிரசையாக இல்லாதிருப்பதற்கு வளர்ச்சியடைந்த கலாசாரரீதியான வாழ்வொன்றுக்கான உரிமையைக் கோருவதற்கு நெருக்கடிகளுக்கு உள்ளான சமூகம் தவறியதே காரணம். அதனாலேயே, கலாசாரம் எனப்படும் பகுதி மனிதவாழ்வில் ஆணிவேர் என்பதற்கான நம்பிக்கையும் பழுதடைந்துள்ளது.

**தேசிய மறுமலர்ச்சியொன்றை இலக்காகக் கொண்ட,கலை கலாசாரத் துறையில் மேற்கொள்ளும் வலிமையான மாற்றத்தின் மூலமே இதனைச் செய்யமுடியும். பல்வகைக் கலாசாரங்களை ஏற்றுக் கொள்ளும் விடுதலையான, விவேகம் மிக்க மனிதாபிமானத்துடன் கூடியபுதிய கலாசாரரீதியான மனிதனை உருவாக்குதல் தேசியமக்கள் சக்தியின் நோக்கமாகும்.**

இத் துறை, கல்வி, கலை, வெகுசன ஊடகம் மற்றும் மத நம்பிக்கைகள் போன்ற ஒன்றுடனொன்று இணைந்த பலபகுதிகளின் கலப்பின் பெறுபேறாகும். இன்று, இந்த ஒட்டுமொத்த பகுதியின் நீண்டகாலவீழ்ச்சி, அதிகபேராசையுடனான போட்டி, ஓய்வின்மை, மனஅழுத்தம், தற்கொலைகள், திருப்தியின்மை, வன்முறை, சூழலைக் கருத்திற் கொள்ளாமை மற்றும் சீர்குலைந்த மனிதத்துக்கான மதிப்பு,போன்ற அதிர்ச்சிதரக்கூடிய பல சமூக விபரீதங்களை உருவாக்கியுள்ளன. இதிலிருந்து மீண்டு,சமூகத்தைஉடனடியாக சுகப்படுத்தவேண்டிய மாற்றங்களைச் செய்யக் கூடிய புதிய கற்பனையை ஒட்டுமொத்த சமூகமும் கோருகின்றது. தேசிய மறுமலர்ச்சியொன்றை இலக்காகக் கொண்ட,கலை கலாசாரத் துறையில் மேற்கொள்ளும் வலிமையான மாற்றத்தின் மூலமே இதனைச் செய்யமுடியும். பல்வகைக் கலாசாரங்களை ஏற்றுக் கொள்ளும் விடுதலையான, விவேகம் மிக்க மனிதாபிமானத்துடன் கூடியபுதிய கலாசாரரீதியான மனிதனை உருவாக்குதல் தேசியமக்கள் சக்தியின் நோக்கமாகும்.



## கோட்பாடுகள்

- ஒவ்வொரு சமூகத்தினதும் கலாசார அடையாளத்தின் பேணுகைக்கும் வளர்ச்சிக்குமான உரிமை
- கலாசாரத்தின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு சமூகமும் தனிநபரும் இடையீடு செய்வதற்கான உரிமை
- கலாசாரங்களுக்கு இடையிலான வளர்ச்சியும் பரிணாமமும்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கலாசார அறிவைக் கைப்பற்றவும் அறிவுபூர்மான, தார்மீக இயலளவுகளில், ரசனை நிறையுணர்வுடன் கூடிய உணர்திறனுள்ள மனிதன்
- கலாசார பன்மைத்துவத்தையும் கலாசார ரீதியான மதிப்பாய்வுகளையும் அங்கீகரித்தல்
- அரசியல் தலையீடுகளிலிருந்துவிடுபட்டகலாசாரப் படைப்புகள்
- கலாசாரரீதியானபிரசையைஉருவாக்குவதற்காகஅரசின் விழிப்புணர்வுடன் கூடிய இடையீடு

**கலாசாரம் எனப்படுவது பரந்துபட்ட வாழ்க்கைப் பரப்பை சித்தரிக்கின்ற அலங்காரமான ஒருபகுதி என்பதைச் சுட்டிக் காட்டும் கல்விக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தல்.**

## செயற்பாடுகள்

- கலாசாரம் எனப்படுவது பரந்துபட்ட வாழ்க்கைப் பரப்பை சித்தரிக்கின்ற அலங்காரமான ஒருபகுதிஎ ன்பதைச் சுட்டிக் காட்டும் கல்விக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்தல்.
- தேசிய, மற்றும் பிரபஞ்ச இலக்கியம், செவிப்புலவிழிப்புல ஊடகம், நாடகம், நடனம், கட்புலக் கலைகள், சிற்பம் மற்றும் புகைப்படக் கலை என்பவற்றுடன் பாடல் இலக்கியம், போன்றவற்றின், பாடசாலைப் பாடப் பரிந்துரைகளை நவீனத்துக்குப் பொருந்துகின்றவாறு இற்றைப்படுத்தல்.
- கல்வித் துறையை, கலாசாரரீதியான பிரசையைக் கட்டியெழுப்பும் அடிப்படையாகக் கருதி, முறையான கல்விக் கட்டமைப்பில் கலை-கலாசார பாடங்களைக் கற்பித்தல். கவர்ச்சிகரமான முற்றிலும் அறிவுப் புத்துணர்ச்சிக்குத் துணையாகக் கூடியவகையில் கற்பித்தல் தொடர்பில் முறையான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்குவதற்காக கல்வித் துறையுடன் ஒன்றிணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- அரச மற்றும் தனியார் துறையின் இடைவிடாத பங்களிப்புடன் இலக்கியம்,சினிமாஅல்லதுநாடகம் போன்ற கலைப் பிரிவுகளுடன் தொடர்புடைய 'தேசியநிதியம்' ஒன்றைக் கட்டியெழுப்புதல்

- வெகுசன ஊடகம் மற்றும் சமூக ஊடக வலைத்தளங்களைப் பாவித்து புத்தகங்களை வாசித்தல், கலை ரசனை பற்றி, பொது இடைவெளியில் பேசுபொருளைத் தீவிரமாக்கி, இருபத்தோராம் நூற்றாண்டின் கலாசாரப் பண்புள்ள பிரசையை உருவாக்குவதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- கலாச்சாரத்தை இளைஞர்களுக்கு நெருக்கமானதாக படைப்பாற்றல்மிக்க செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமுலாக்குதல்
- ஒவ்வொரு கலைத்துறையிலும் புதிய அறிவு மற்றும் பயிற்சியை வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட தகைமையுள்ளோரை சர்வதேச நிறுவனங்களில் ஈடுபடுத்துவதற்காக புலமைப் பரிசில்களை வழங்குதல்
- ஒவ்வொரு பிரதான நகரத்திலும் கலை-கலாசார அலுவல்களுக்கான நிறுவனங்கள் அமைந்துள்ள பிராந்தியங்களைக் கட்டியெழுப்பி அப்பிராந்தியங்களை நோக்கி எப்போதும் பிரசைகளை ஈர்க்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்.
- வலுவான புலமைச் சொத்துச் சட்டமொன்றை உருவாக்கி, கலைஞர்களின் படைப்புகளுக்கான உரிமையைச் சான்றுப்படுத்தும் மற்றும் உலக புலமைச் சொத்து உரித்துடைமைஅ மைப்பின் உறுப்பாண்மையைப் பெற்று அத்தரநிலைகளை நடைமுறைப்படுத்துதல்.
- உலக இலக்கியம், நாடகப் பிரதிகள் போன்றவற்றை தேசியமொழிகளுக்கு மொழிபெயர்ப்புச் செய்வதை ஊக்குவித்தல் மற்றும் சர்வதேச மொழிபெயர்ப்பு உரிமைகளைப் பெற்றுக் கொள்வதை ஒழுங்குபடுத்துதல்.
- இப்போது நடைமுறையிலுள்ள அரச விருது வழங்கும் விழாக்களின் குறைபாடுகளை மீளாய்வுசெய்து, அனைத்துக் கலைத் துறைகளையும் உள்ளடக்கிய வளர்ச்சிபெற்ற தேசிய விருதுவிழாவொன்றை ஏற்பாடுசெய்தல்
- பல்வேறு கலைத் துறைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் காகிதம் உட்பட தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள்மீதான வரிச் சலுகை வழங்குதல்.
- கலைத் துறைகளில் ஓய்வுபெற்றோரின் நலனுக்கான சமூக பாதுகாப்புமுறையொன்று.
- கலை கலாசாரதுறையுடன் தொடர்புடைய மாநாட்டு மண்டபங்கள், அரங்குகள், திறந்தவெளியரங்குகள் போன்ற பௌதீக வளங்களைக் கணக்கெடுப்புச் செய்து, தரவுத் தொகுதியொன்றையும் அவற்றைத் துறைகளுக்கு வழங்கும் கூட்டுவேலைத்திட்டமொன்றையும் தயாரித்தல்.
- பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் கலாசார மத்தியநிலையங்களைப் பலநோக்கு கலாசாரக் கேந்திரங்களாக மாற்றி, மேடைகள், பயிற்சிகள், ஒலி, ஒளியமைப்பு போன்ற வசதிகளுடன் கூடிய, புத்தகவெளியீடுகள், செயலமர்வுகள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள் போன்ற கலாசாரரீதியான அனுபவங்கள் போன்றவற்றை இம்மத்தியநிலையங்களை மையமாகக் கொண்டுபேணிச் செல்லுதல்.

**இலக்கியத் துறை**

- வருடாந்தம் வெளிவருகின்ற இலக்கியப் படைப்புகளிலிருந்து கலைத்துவம் வாய்ந்த உயர் படைப்புகளையும் தேசியமட்டத்தில் பாராட்டுக்குட்படுத்தப்படும் புதிய வெளியீடுகள் என்பவற்றையும் பாடசாலை நூலகங்களுக்கும் பொது நூலகங்களுக்கு ம்பகிர்ந்தளித்தல்.
- ஒவ்வொரு நகரத்திலும் உப நகரங்களிலும் வளர்ச்சியடைந்த நூலகங்களை உருவாக்கி செயற்படும் வாசகர் கழகங்களை நிறுவுதல்
- இலக்கிய விமர்சனங்கள் மற்றும் ரசனைக்கென்றே தனியான சஞ்சிகைக் கலாசாரமொன்றை மீண்டும் உருவாக்குதல்
- தேசிய மற்றும் பிரதேசமட்டத்தில் புத்தகக் கண்காட்சிகள் மற்றும் பிரபல வெளிநாட்டுப் புத்தகக் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்வதில் எழுத்தாளர்களையும் வெளியீட்டாளர்களையும் ஊக்குவித்தல்.
- பாடசாலை ஆசிரியர்களையும் மாணவர்களையும் இலக்குவைத்து இலக்கிய ரசனை நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடுசெய்வதன் மூலம் புதிய ரசிகர்களை உருவாக்குதல்.
- மிகச்சிறந்த பல்கலைக்கழக இலக்கியப் படைப்புகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மொழிபெயர்த்துப் பிரசுரிக்கும் நிகழ்ச்சிகளை உருவாக்குதலும் அவ்வாறான மொழிபெயர்ப்புகளில் ஈடுபடுவோரை ஊக்குவித்தலும்.
- அரச சுவடிக் கூடத்தை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் மறுசீரமைத்தல்.
- இலத்திரனியல் வெளியீடுகள், கல்வி மற்றும் ஆராய்ச்சி மத்தியநிலையங்களுடன் இணைக்கப்பட்டு டிஜிட்டல் அறிவுக் களஞ்சியங்களைப் பேணிச் செல்வதை ஊக்குவித்தல்
- இலக்கிய கலைத்துறை ஆராய்ச்சி நிதியத்தை அமைத்து முறையான ஆராய்ச்சிக்கான நிதிவழங்கலும் சர்வதேசஆராய்ச்சி அமர்வுகளை வருடாந்தம் ஏற்பாடுசெய்தலும்.

**சினிமா மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள்**

- தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைத்து தேசிய திரைப்பட நிறுவனத்தை உருவாக்குதல்.
- திரையரங்குகளை ஒழுங்கமைக்கப்பட் டவேலைத்திட்டத்துடன் நவீனமயப்படுத்தி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 3 திரையரங்குகள் வீதம் உருவாக்குதல்.
- திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகத் தயாரிப்பிற்கென கடன் மற்றும் ஏனைய சலுகைகள் போன்றவற்றைப் பெற்றுத் தருவதை தரநிலைப்படுத்தல்.
- ஒவ்வொரு சினிமாப் படைப்பையும் விநியோகிக்கும் போது, நியாயமான வரிசைக்கிரமம் பின்பற்றப்படுதலும் ஒழுங்கமைக்கப்பட்டமுறையில் முன்னுரிமைப்படுத்தலும்.
- தொலைக்காட்சி மற்றும் சினிமாப் படைப்புகளின் வகைப்படுத்தலை சபையொன்றின் வாயிலாக தரநிலைப்படுத்தல்.

- வருடாந்த சர்வதேச சினிமா விழாக்களை நடத்துதல் மற்றும் சர்வதேச சினிமா விழாக்களுக்கான ஆக்கங்களை சமர்ப்பிப்பதற்கான அனுசரணையை வழங்குதல்.
- பல்துறை கலாசார மத்திய நிலையங்களை பயன்படுத்தி சிறந்த சினிமா படைப்புகளைக் காட்சிப்படுத்தலும் அவற்றைத் தழுவிய சினிமா-கலை உரையாடல்களை ஏற்பாடுசெய்தலும்
- புதுமுக சினிமாக் கலைஞர்களுக்காக தேசிய தொலைக்காட்சி மற்றும் சினிமாக் கல்வி நிறுவனமொன்றைத் தாபிப்பதுடன், தேசிய சினிமா காப்பக வசதிகளை வழங்குதல்,
- தற்போது பிரத்திழயேக மட்டத்தில்பேணிவரப்படுகின்ற சினிமா காப்பகங்களுக்காக வசதிகளை வழங்குதல்,
- தற்போது பிரத்தியகெ மட்டத்தில் பேணிவரப்படுகின்ற சினிமா காப்பகங்களக்கான வசதிகளை வழங்குதல், மறுசீரமைப்பைப் போன்றே, தேசியகாப்பக வலையமைப்பொன்றுடன் இணைத்தல்.
- தொலைக்காட்சி-சினிமா கழகங்களை பாடசாலை மட்டத்தில் ஆரம்பித்தல்
- தொலைக்காட்சி-சினிமா படைப்புகளில் புலமைச் சொத்து தொடர்பான சட்டங்களை சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்றவாறு இற்றைப்படுத்தல்.
- குறுந்திரைப்படம் மற்றும் கையடக்கத் தொலைபேசி சினிமா விழாக்களை முறையாக வருடாந்தம் நடத்துதல் மற்றும் சர்வதேச விழாக்களின் அனுபவங்களையும் அறிவையும் பெற்றுக் கொள்கின்ற நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்.

**மேடை நாடகங்கள்**

- சமகால நாடகக் கலை பற்றிய தேசிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமொன்றை ஆரம்பித்தல்.
- பழைய மற்றும் புதிய நாடக தயாரிப்புடன் தொடர்புடைய பிரதிகள், நடிப்புப் பொருட்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் ஒலிப்பதிவுகளை இயன்றளவு சேகரித்து முறையாகப் பாதுகாக்கப்படும் தேசிய நாடகக் காப்பகம் ஒன்றைபேணிச் செல்லுதல்.
- நாடகத் தயாரிப்பிற்கும் காட்சிப்படுத்தலுக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட நிதியுதவிகளை வழங்குதல். இத்துறைதொடர்பில் வரிச் சலுகைஅளித்தல்.
- கிராமிய மட்டத்திலிருந்து நாடகக் கலையை மேம்படுத்துவதற்கு பல்துறை கலாசார மத்தியநிலைய வலையமைப்பின் ஊடாக தேசியதளம் வரை முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.
- ஒவ்வொரு பிரதான நகரத்திலும் முழுமையான வசதிகளுடன்கூடிய நவீன நாடக அரங்குத் தொகுதியொன்றை உருவாக்கி, காணப்படும் அரங்குகளை மேம்படுத்தி, அவ்வயைமைப்பிற்குள் உள்வாங்குதல்.
- நாடகத் துறை தொடர்பில் சர்வதேச புலமைப் பரிசில் மேம்பாடும் பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் அவை வழங்கப்படுவதை ஒழுங்கமைத்தலும்.
- நாடகக்கலை ரசனையை விருத்திசெய்யும் நிகழ்ச்சிகளும் திறந்தவெளி அரங்கு எண்ணக்கருவை மேம்படுத்தலும்

மாற்று நடிப்புக் கலை வாய்ப்புகளுக்கான வசதிகளை வழங்குதல்.

**நடனம்**

- கல்வி மறுசீரமைப்புச் சந்தர்ப்பங்களில், நடனக் கல்வி தொடர்பான நிறுவனங்கள், குருகுலங்கள் மற்றும் தேர்ச்சிபெற்றவர்களை இணைத்துக் கொள்ளுதல்.
- நடனம் பாதுகாக்கப்படுவதையும் மேம்படுத்தப்படுவதையும் அடிப்படையாகக் கொண்ட தேசிய நிறுவனமொன்றை உருவாக்கி பல்துறை கலாசார மத்திய நிலையங்களில் இணைத்து தொடர்புகளை அதனோடு இணைத்தல்.
- இலங்கைக்கான நாட்டுப்புற நடனங்களின் ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடம் ஆராய்ச்சிகளை சமர்ப்பித்தல்.
- தேசிய அடையாளத்துடன் கூடிய நடன மரபுகளை மேம்படுத்தல்.
- அரசின் பதிவுசெய்யப்பட்ட நடன கலைசார் நிறுவன வலையமைப்பைக் கட்டியெழுப்புதல்.
- நடனம் தொடர்பான சர்வதேச கல்வி வாய்ப்புகளை வழங்குதலும் புலமைப்பரிசில் வழங்கப்படுவதை ஒழுங்குபடுத்தலும்.
- நடனத் திறமையுள்ள பிள்ளைகளை கிராமிய மட்டத்தில் அடையாளங்கண்டு சர்வதேச தளம்வரை மேம்படுத்தல்.
- நடனப் பாடம் தொடர்பான மும்மொழிக் கல்வி நூல்களை அச்சிட்டும் சர்வதேச அறிவு சிங்கள தமிழ் மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதையும் ஊக்குவித்தல்.
- சமகால மற்றும் மரபுரீதியான நடனக் கலைக் கல்வியின் ஆராய்ச்சிக்கும் பேணிக் காக்கப்படுவதற்குமான வசதிகளை வழங்குதல்.

**கட்புலக் கலைகள், சிற்பம் மற்றும் புகைப்படக் கலை**

- ஓவியம், கட்புலக் கலைகளுடன் புகைப்படக் கலையின் கடந்தகால மற்றும் தற்கால ஆக்கங்களைப் பேணிக்காத்தல், ஆய்வுசெய்தல் மற்றும் சர்வதேச ஆராய்ச்சிகளை நடத்துவதற்கான தேசிய நிறுவனமொன்றை தாபித்தல்.
- சர்வதேச மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளில் படைப்பாளிகளை ஈடுபடுத்தல்.
- மாகாணங்களை மையமாகக் கொண்ட பயிற்சி நிறுவனங்களை அமைத்தலும் அதன் வாயிலாக தொழில் வாய்ப்புகளில் ஈடுபடுதலும்.
- கட்புலக் கலைப் படைப்புகளை சந்தைப்படுத்துவதற்காக தேசிய மற்றும் சர்வதேச படைப்புகளின் சந்தையை மேம்படுத்தி சுற்றுலாத் தொழிலுடன் இணைத்தல். இப்படைப்புகளுடன் தொடர்புடைய “ஆக்கத் திறன் கழகங்களை“ பாடசாலைமட்டத்திலிருந்து நடத்திச் செல்லுதல், போட்டிகளை ஏற்பாடுசெய்தல்.

**இசை மற்றும் பாடல் உருவாக்கத் துறை**


- இசை மரபுகளைக் பாதுகாத்து மேம்படுத்துவதற்காக தேசிய நிறுவனமொன்றைத் தாபித்தல்.
- இலங்கையின் நாட்டுப்புற இசைஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் பேணிக்காத்தல்.
- பேணிக் காக்கப்பட்ட பண்டைய அறிவு உரியமுறையில் ஆராய்ச்சி

செய்யப்பட சந்தர்ப்பம் அளித்தல்.

- பதிவுசெய்யப்பட்ட இசைக்கலை நிலையங்களின் வலையமைப்பைக் கட்டியெழுப்புதல்.
- பாடல் மற்றும் இசை பற்றிய புலமைச் சொத்து சட்டவிதிகளை மீண்டும் கவனத்திற் கொள்ளலும் திருத்தியமைத்தலும்.
- சர்வதேச இசைஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளுக்கான வாய்ப்பை வழங்குதல், புலமைப்பரிசில் வழங்கப்படுவதை ஒழுங்குபடுத்துதல்.
- ஒலிப்பதிவுசெய்யப்படும் ஒவ்வொரு பாடல் மற்றும் இசைப் படைப்பினதும் மூலப் பிரதி பேணிக் காக்கப்படும் டிஜிட்டல் தொழில்நுட்பப் பிரிவொன்றை நடத்திச் செல்லுதல்.
- பாடலாசிரியர்கள் மற்றும் தொகுப்பாளர் சங்கங்களின் கூட்டமைப்புகளின் (The International Confederation of Societies of Authors and Composers) உறுப்பாண்மையைப் பெற்றுக் கொண்டு இசைத் துறையின் புலமை உரித்துடைமையைப் பாதுகாத்தல்.

### அருவமயமான கலாசார மரபுரிமையும் பாரம்பரியக் கலைகளும்

- அருவமயமான மரபுரிமை மற்றும் பாரம்பரியக் கலைகள் தொடர்பில் தேசிய ஆராய்ச்சி நிறுவனமொன்றைத் தாபித்தல். இப்போதுள்ள மரபுரிமைகளை இனங்கண்டு பேணிக் காத்தல்
- பிரதேச மட்டத்தில் இத் துறைசார் அறிவு, கருவிகள், குருகுலங்கள் மற்றும் பாரம்பரியங்களைப் போன்றே மனிதவளத்தை இனங்காணுதலும் தேசிய-சர்வதேச தளம் ரையில் இடைவிடாது மேம்படுத்தலும்.
- இந்த இடைவெளியுடன் சுற்றுலாத் துறையை இணைப்பதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்.
- அருவமயமான மரபுரிமையுடன் இணைந்த மருத்துவம், சூழலுக்குச் சாதகமான பொருட்களின் உற்பத்தி, பொழுதுபோக்குக் கைத்தொழில், உள ஆரோக்கிய மேம்பாடுே பான்ற உப துறைகளை ஊக்குவித்தல்.
- இவ்விடயப்பரப்பு, பிராந்தியத்துடன் தொடர்புடைய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிநிறுவனங்களுடனான தொடர்புகளை வளர்த்தல் மற்றும் பட்டப் பின்படிப்பு மட்டத்திலான கல்விக்கு வழிகோலுதல்.
- மரபுவழிக் கலைஞர்கள், குருகுலங்கள், கல்விநிலையங்கள் போன்றவற்றை இனங்கண்டு வலையமைப்பாக்குதலும் இற்றைப்படுத்தலும்.



## பேணிக்காக்கப்பட்ட வரலாறு

# மரபுரிமையை நவீனமயமாக்கல்

வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமை ஆகிய விடயங்கள் சமூகஅறிவு, சமூகத்தின் நலன் மற்றும் சமூக ஒருமைப்பாட்டின் அடிப்படை அம்சங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குத் துணையாக அமைகின்ற அதேவேளை பொருளாதார நடவடிக்கைகளுக்கும் தொழில் உருவாக்கத்திற்கும் கூட அவை அடிப்படை வளங்களாகப் பயன்படுகின்றன.

இலங்கையின் வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமை தொடர்பில் தற்போதிருக்கும் மனப்பாங்கு காலனித்துவத்திற்குப் பிந்திய கருத்தாக உள்ள அதேவேளை, மனப்பாங்கில் காணப்படுகின்ற மட்டுப்பட்டதன்மை காரணமாக வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமையானது இந்நாட்டு தேசிய அபிவிருத்திக்கு பேண்தகுமுறையில் பயன்படுத்தப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே அத்துறைகளைச் சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு, மக்கள் சார்ந்த நோக்குடன் கூடிய புதிய கொள்கைக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல், அத்தியாவசிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தியின் மீதமைந்த புத்தம்புதிய கொள்கையொன்றுக்கான ஆரம்பம் எனப்படுவது, வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமையை பயனுள்ளவாறு நாட்டின் தேசிய அபிவிருத்தி மூலோபாயங்களுடன் இணைப்பதுதொடர்பில் அளிக்கப்படும் அதிக முன்னுரிமையாகும். இலங்கைக்கான நிலைபேறானதும் அனைத்தும் உள்ளடங்கியதுமான அபிவிருத்திக்கும் அதன் வளம்பொருந்திய மரபுரிமையை சாதகமானமுறையில் பயன்படுத்திக் கொள்வது இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.



# கோட்பாடுகள்

- கலாச்சார வளங்களின் பாதுகாப்பு
- கலாச்சார மரபுரிமைகளும் வரலாற்று விழுமியங்களும்
- சமூகப் புத்தாக்கங்கள்

# செயற்பாடுகள்

## ஆராய்ச்சிகளும் பகுப்பாய்வுகளும்

- சமூக மற்றும் பொருளாதார மூலக்கூறுகளின் அடிப்படையில் வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமை மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கம் தொடர்பான ஆராய்ச்சிகள்
- வரலாறு, கலாசாரம் மற்றும் மரபுரிமை என்பவற்றை, தேசியஅபிவிருத்தித் திட்டங்களுடன் இணைத்துள்ள மேலும் வெற்றிகரமான சர்வதேசப் பயன்பாடுகளின் பகுப்பாய்வு.
- சமூக புத்தாக்கம், தொழில்முயற்சி,தொழில் உருவாக்கம், கல்வி மற்றும் சர்வதேசத் தொடர்புகளை வளர்ப்பதற்கு தமது நாட்டின் மரபுரிமைப் பெறுமதிகளை முதலீடுசெய்யும் பெறுமதி மதிப்பீடு

## பங்குதாரர்களின் பங்கேற்பு

- வரலாறு, கலாச்சாரம் மற்றும் மரபுரிமைத் துறைகளுடன் ஏற்புடைய அரச நிறுவனங்கள், தனியார் துறை, கல்விசார் சமூகம், மற்றும் பிரதேச மக்களிடையே பங்காண்மையை வளர்ப்பதற்கான செயலமர்வுகளையும் கருத்தரங்குகளையும் ஏற்பாடுசெய்தல்.
- நாட்டின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் மரபுரிமையுடன் தொடர்புடைய பங்குதாரர்கள் இப்போது ஈடுபட்டுள்ள கலாச்சார வளங்களைப் பாதுகாக்கும் அதேவேளை முகாமையுடன் தொடர்புடைய பணிகளுக்கு அப்பால் சென்று கலாச்சார மரபுரிமையையும் வரலாற்றின் பெறுமதியையும் பற்றிய அவர்களின் புரிதலை மேம்படுத்தல்.

## கல்வியும் விழிப்புணர்வும்

- வரலாறு, கலாச்சாரம் மற்றும் மரபுரிமையின் பெறுமதி தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கல்விசார் நிகழ்ச்சிகளையும் கற்றல் பொருட்களையும் ஏற்பாடுசெய்தல்
- பாடசாலைப் பாடத்திட்டத்திலும் சமூகக் கல்விநிகழ்ச்சித் திட்டங்களிலும் வரலாறு, கலாச்சாரம் மற்றும் மரபுரிமை பற்றிய தலைப்புகளை உள்ளடக்குதல்.

**வரலாறு, கலாச்சாரம் மற்றும் மரபுரிமை என்பவற்றை, தேசியஅபிவிருத்தித் திட்டங்களுடன் இணைத்துள்ள மேலும் வெற்றிகரமான சர்வதேசப் பயன்பாடுகளின் பகுப்பாய்வு.**



## நிலைபேறான உயிர்சார் உலகம்

# என்றும் பசுமையான வாழ்க்கை

இலங்கையின் ஒட்டுமொத்த நிலப்பரப்பு 65,610 சதுர கிலோ மீற்றராகும். அதற்கு மேலதிகமாக 18,060 சதுர கிலோ மீற்றர் கடல்வலயமும் 19,620 சதுர கிலோ மீற்றர் அண்மித்த கடல் வலயத்தையும் 517,000 சதுர கிலோ மீற்றர் புறநீங்கலான பொருளாதார கடல் வலயத்தையும் பிரதிநிதித்துவம் செய்கிறது.

தரைத்தோற்ற வேறுபாடுகளுக்கிணங்க 300 அடி வரையான பிரதேசம் கரையோரப் பிரதேசம் எனவும் 300- 1000 அடி மற்றும் 1000 அடிக்கு மேற்பட்ட பிரதேசம் மலைநாட்டுப் பிரதேசமாகவும் கருதப்படுகின்றது. வருடாந்த மழைவீழ்ச்சி 900 மில்லிமீற்றரிலிருந்து 5000 மில்லிமீற்றருக்கு மேற்பட்ட பெறுமானம்வரை வேறுபடுகின்றது. 103 பிரதான ஆற்றுவடிநிலங்களையும் 94 சிறிய ஆற்றுவடிநிலங்களையும் கொண்டுள்ளது. சூழற்றொகுதிகளுக்கிடையிலான இடைத்தொடர்பு காரணமாக இலங்கைக்கு சொந்தமான மொத்த நிலப்பரப்பும் தனியான சூழற்றொகுதியாக கருதப்பட முடியும். தரமான மண் படலம், இனங்காணப்பட்ட பூக்கும் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மத்தியில் 25% - 30% அளவு ஓரிடஞ்சாரந்த இனங்களாக அமைகின்றன.

**சரியான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை அமுலாக்காமையால் மேற்பரப்பு மணபடை அரிப்பிற்கும் நிலச்சரிவுக்கும் இலக்காவதால் வளமற்ற நிலமாக மாறிவருகின்றது.**

ஆயினும் இற்றைவரை பொருளாதார அபிவிருத்தியைக்கொண்ட சுற்றாடல்நேயமுள்ள மானிட சமூகமொன்றை உருவாக்கத் தவறியுள்ளது. சுற்றாடல்ரீதியாக தாக்கமேற்படுத்துகின்ற கண்டமேடையில் மொத்தமாக இலங்கையைப்போல் 20 மடங்கினைவிட அதிகமான கடல்சார் நில அளவினை நிர்ணயித்துக்கொள்ள 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இயலாமல் போயுள்ளது. கணிசமான சர்வதேச சமவாயங்களில் நாங்கள் உடன்பாட்டினை தெரிவித்துள்ளதோடு 100 இற்கு மேற்பட்ட சுற்றாடலுடன் தொடர்புடைய சட்டங்கள் இருக்கையிலும்கூட சுற்றாடல் நேயமுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதில் தோல்விகண்டுள்ளோம். சரியான காணிப் பயன்பாட்டுத் திட்டங்களை அமுலாக்காமையால் மேற்பரப்பு மண்படை அரிப்பிற்கும் நிலச்சரிவுக்கும் இலக்காவதால் வளமற்ற நிலமாக மாறிவருகின்றது. முறையான நீர் முகாமைத்துவம் இல்லாதவிடத்து கடுமையான நீர்ப் பற்றாக்குறைக்கும் இன்னும்சில வேளைகளில் மிகையான நீர் காரணமாகவும் பாதிக்கப்படுகின்ற நிலையேற்படுகின்றது. 30 வருட குறுங்காலத்தில் ஆவியாக்கம் இருமடங்காகியமையும் நீரேந்து பரப்புகள் அழிவடைந்தமை மற்றும் அதன் வழியுரிமைமீது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற வேறு சுற்றாடல் காரணிகள் அழிவடைந்தமையும் சிக்கல்களாக விளங்குகின்றன.

அனைத்து உயிரினங்களினதும் வழியுரிமையை உறுதிசெய்கின்ற நிலைபெறுதகு சுற்றாடலை தூரநோக்காகக்கொண்ட தேசிய மக்கள் சக்தியின் சுற்றாடல் கொள்கையானது சமூக பொருளாதார அபிவிருத்திக்கும் சுற்றாடலுக்கும் இடையிலான சமநிலையைப் பாதுகாக்கின்றவகையில் இயற்கை வளங்களின் பாவனை, நிலைபெறுதகு முகாமைத்துவத்தில் பங்கேற்பு அணுகல், காலநிலை வேறுபாடுகளால் தோன்றுகின்ற துன்பங்களைக் குறைத்தல், அறிவு, திறன், உளப்பாங்குகள் மூலமாக கட்டியெழுப்பப்படுகின்ற ஆரோக்கியமான மக்கட் சமூகம் மற்றும் சமநிலைகொண்ட சுற்றாடலுக்கு முதன்மைத்தானம் வழங்கப்படும்.



## கோட்பாடுகள்

- சுற்றாடல்சார நீதியும் நியாயமும்
- சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கிடையிலான சமநிலை
- நிலைபெறுதகு வளப்பாவனையும் முன்கூட்டிய பாதுகாப்பு முறையியலும்
- சூழற்றொகுதிசார் அணுகுமுறை
- நிறுவனஞ்சார் இணைப்பாக்கமும் மக்கட் பங்கேற்பும்
- மாசுபாட்டாளர் செலவுமீளளிப்புக் கொள்கை (Polluter Pays Principle)
- சுற்றாடல்சார் நல்லாட்சி
- சமுதாய வலுவூட்டல்
- சுற்றாடல்சார் பாதுகாப்பு
- தூய உற்பத்தி (Cleaner Production)

## செயற்பாடுகள்

### சரியான காணிப்பயன்பாடு

- கூருணர்வுமிக்க சுற்றாடல் வலயங்களை பிரகடனஞ்செய்து பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்
- இயற்கை அனர்த்த அபாயநேர்வு நிலப்பகுதிகளை இனங்காணல், முகாமைசெய்தல் மற்றும் அனர்த்தங்களை குறைத்தல்.
- நிலைபெறுதகு நிலப் (காணி) பயன்பாட்டுத் திட்டமொன்றை விஞ்ஞானரீதியாக தயாரித்து அமுலாக்குதல்.
- கனிய வளங்கள் நிலவுகின்ற பிரதேசங்களை நிலைபெறுதகு பொருளாதார தொழிற்பாடுகளுக்காக பேணுதல்.
- மண் பேணல் தொடர்பில் நிலவுகின்ற விதப்புரைகளை அமுலாக்குதலும் அவசியப்பாடுகளுக்கிணங்க புதிய விதப்புரைகளும்.

### பாதுகாக்கப்பட்ட நீர்ப் பாவனை

- இலங்கையின் நீர் மூலங்கள் அனைத்தையும் கற்றாராயந்து கூருணர்வுமிக்க மூலங்களின் நிலஅளவைப் பணிகளை மேற்கொள்ளலும் வர்த்தமானியில் பிரசுரித்து பேணுதலும்.
- நீர் மூலங்கள் மாசடைவதற்கான காரணங்களைக் கண்டறிந்து நீர்மாசுபாட்டினைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- அனைத்து நீர் மூலங்களிலும் இரசாயன மற்றும் பௌதீக அளவுருக்களின் தரவுகளை அடிப்படையாகக்கொண்ட பூர்வாங்க நீர்த் தேசப்படமொன்று.

**இலங்கையின் நீர் மூலங்கள் அனைத்தையும் கற்றாராயந்து கூருணர்வுமிக்க மூலங்களின் நிலஅளவைப் பணிகளை மேற்கொள்ளலும் வர்த்தமானியில் பிரசுரித்து பேணுதலும்.**

- தொடர்படு அருவி முறைமைக்கு மீண்டும் உயிர்கொடுக்கக்கூடிய ஆற்று வடிநிலங்களை முனைப்பானதாக்குதல் மற்றும் புராதன நீர்ப்பாசன நாகரிகத்தை வெளிக்காட்டுகின்ற நீர்ப்பாசன அரும்பொருட்காட்சியமொன்றை நிறுவுதல்.
- ஆற்றுவடிநிலங்கள் மற்றும் மத்திய மலைநாட்டில் மழைநீரை களஞ்சியப்படுத்திக் கொள்ளக்கூடிய குறைந்தபட்ச நீரேந்து பரப்புகளின் அளவினைக் கணிப்பிட்டு மேற்பரப்பில் உள்ள நீரேந்து பரப்புகளையும் கற்பாறைகளுக்கடியில் உள்ள நீரேந்து பரப்புகளையும் மீளளிப்புச் செய்வதற்கான முறையியலொன்றை தயாரித்தல்.
- மனைசார், நீர்ப்பாசன மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக நீரை விடுவிக்கையில் ஆறுகளில் சுற்றாடல்ரீதியாக நிலவவேண்டிய குறைந்தபட்ச பாய்ச்சலை (Environmental Flow) பேணிவருதல்.
- விவசாய, கைத்தொழில், மனைசார் மற்றும் சேவை நிலையங்களில் கழிவுநீரை விஞ்ஞானரீதியாக சுற்றாடலில் விடுவிக்க பொருத்தமான வழிமுறைகளை அறிமுகஞ்செய்தலும் ஒழுங்குறுத்தலை முறைமைப்படுத்துதலும்.

**கடல் மற்றும் கரையோர வலயத்தின் நிலைபெறுதகு வழியுரிமை**

- கரையோரத்திலும் கடலிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக கழிவுப்பொருட்களை கையுதிர்த்தலை முற்றாகவே நிறுத்துதல்.
- கரையோர வலயத்தில் கூருணர்வுமிக்க சூழற்றொகுதிகளை இனங்கண்டு மேற்படி சூழற்றொகுதிகளை பாதுகாத்தல்.
- கரையோரங்களினதம் கடநீரேரிகளினதும் பேணுகை எல்லையை விஞ்ஞானரீதியாக தீர்மானித்து பேணுதல்.
- கடலில் இடம்பெறுகின்ற சுற்றாடல் சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைமையிலும் சமுதாய பங்கேற்படனும் அவசர தயார்நிலைத் திட்டமொன்று (Emergency preparedness plan).
- கடலக மாசுபாடு காரணமாக தோன்றுகின்ற சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக அவசியமானவசதிகளை வழங்குதலும் இடம்பெறுகின்ற சேதங்களை மீள்நிரப்ப அவசியமான இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான சரியான சட்டங்களையும் முறையியல்களையும் அறிமுகஞ்செய்தல்.
- கடல் தொடர்பான மீன் மற்றும் ஏனைய இயற்கை வளங்களை பாவனைக்கு எடுத்தல் மற்றும் மேற்படி வளங்களை பாதுகாப்பாக பாவனைக்கு எடுக்கவும் சுற்றாடல் மாசுபாடு குறையத்தக்கவகையில் சர்வதேச சட்டங்களுக்கும் சமவாயங்களுக்கும் அமைவாக சுற்றாடல்சார் சட்ட முறைமையைத் தயாரித்தல்
- மக்கள் கலாச்சாரரீதியாக ஈடுபாடு கொண்டுள்ள கடற்கரையோர வலயங்களையும் சுற்றுலாக் கவர்ச்சிக்கு இலக்காகியுள்ள வலயங்களையும் இனங்கண்டு அனைத்து வசதிகளையும் கொண்டதாக அழகான சுற்றாடல்சார் நிலப்பட்டிகளாக மாற்றுதல்.
- கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கம் பரவலாக இடம்பெறுகின்ற

பிரதேசங்களை குறித்துரைத்து பேணி அவற்றின் நீர் அளவுருக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

### பரிசுத்தமான வளிமண்டலமொன்றின் வழியுரிமை

- வளிமண்டலத்தின் சமநிலையைப் பேணிவருவதற்காக துரித வளர்ச்சியைக்கொண்ட மற்றும் செய்கைக்குப் பொருத்தமான வெட்டுமர வகைகளை அறிமுகஞ் செய்தல்.
- காபன் நிலைப்படுத்தலுக்கு பங்களிப்புச் செய்வதற்காக வெட்டுமர வளர்ப்பினை மேற்கொள்ளலும் நுகர்தலும் மீள்நடுகை செய்தலும்.
- நிலையான மற்றும் நடமாடுகின்ற மூலங்களால் இடம்பெறுகின்ற வளி மாசுபாட்டினைக் குறைப்பதற்காக கைத்தொழில் மற்றும் போக்குவரத்துத் துறையில் மாற்று வலுச்சக்திப் பாவனையை மேம்படுத்துதலும் ஒழுங்கமைந்த ஒழுங்குறுத்தலும்.
- அயல்நாடுகளின் வளிமண்டல மாசுபாடு காரணமாக நாட்டுக்கு விளைகின்ற வளிமாசுபாட்டினை குறைப்பதற்கான இராஜதந்திர இடையீடுகள்.
- வளி மாசுபாட்டினைக் குறைப்பதற்கான சமூகப் புரிந்துணர்வினை அதிகரிக்கவும் உளப்பாங்கு அபிவிருத்திக்குமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.

### சுற்றாடல் பாதுகாப்பிற்கான சட்டமும் சமூக உடன்பாடுகளும்

- சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக தற்போது விதிக்கப்பட்டுள்ள சட்டங்களின் பலவீனங்கள், குறைபாடுகள், பற்றாக்குறைகளை நீக்குதல், சர்வதேசத்துடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள், சாசனங்கள் மற்றும் உள்நாட்டு சுற்றாடல் சட்டங்களை மீளாய்வுசெய்தல், பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளுக்கான பங்கேற்பு அணுகல் வழிமுறைகளை மேற்கொள்ளல் மற்றும் அவசியப்பாடுகளின்பேரில் புதிய சட்டங்களை ஆக்குவதற்காக அந்தந்த துறைசார்ந்த தேர்ச்சிபெற்றவர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுவொன்றை நிறுவுதல்.
- அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான சாத்திய வள கற்கையின்போது மக்கள் கருத்துக்களை வினவுதலை கட்டாயமானதாக்குதல்.
- கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் மதிப்பீடுகளை உள்ளிட்ட வேறு அறிக்கைகளை தயாரிப்பதற்கான அளவுகோல்களை இற்றைப்படுத்துதலும் அந்த அறிக்கைகளின் சுயாதீனத்தன்மைக்கும் வெளிப்படைத்தன்மைக்கும் உத்தரவாதமளித்தலும்.
- மூலோபாய சுற்றாடல்சார் மதிப்பீட்டினை (Strategic Environmental Assessment) அமுலாக்குதல்.
- அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்களை பாவித்து சுற்றாடல் கொள்கைகள் மற்றும் சுற்றாடல் சட்டங்கள் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டுதல்.

**மலைப்பிரதேச நிலங்கள்**

- பொருளாதார மற்றும் சமூக அலுவல்களுக்காக மலைப்பிரதேசக் காடுகளை பாவனைக்கு எடுத்தலை ஒழுங்குறுத்துதல்.
- மலைப்பிரதேச சூழற்றொகுதிகளை மீளாய்வுசெய்து தரவு முறைமையொன்றினை தயாரித்தலும் சுற்றாடல் மற்றும் பொருளாதார முக்கியத்துவத்தை இனங்காணலும் வலியுறுத்துதலும்.
- பல்வேறு காரணங்களால் நட்டமடைகின்ற மலைப்பிரதேச தோட்டச் செய்கைகளின் செலவுகள் மற்றும் கிரயங்கள் பற்றிய பகுப்பாய்வு (Cost Benefit Analysis) அத்துடன் சுற்றாடல்சார் கணக்காய்வு மூலமாக செய்கையைத் தொடரந்தும் பேணிவருவதா இன்றேல் இயற்கைக் காடுகளை விருத்திசெய்வதா என்பதை தீர்மானித்தல்.

**தாழ்நிலங்கள்**

- காணிப் பயன்பாட்டுக் கொள்கை மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவாக அனைத்துக் காணிகளையம் முகாமைசெய்தலையும் பேணுதலையும் மேற்கொள்ளல்.
- இயற்கை அனர்ந்தங்கள் தொடர்பிலான முன்கூட்டிய அபாய அறிவிப்பு முறையியல்களை அறிமுகஞ்செய்தல், மானிட செயற்பாடுகளை கட்டுப்படுத்துதல், இழப்பீடு மற்றும் காப்புறுதித் திட்டங்களை அறிமுகஞ்செய்தல்
- சமுதாய வன வளர்ப்பு, பெருந்தோட்ட வன வளர்ப்பு மற்றும் விவசாய வன வளர்ப்பினை மேம்படுத்துதல்.

**ஈரநிலங்கள்**

- இலங்கையில் உள்ள ஈரநிலங்களை இனங்கண்டு, ஆவணப்படுத்தி அவற்றைப் பாதுகாக்க அவசியமான நடவடிக்கைகள்
- றம்சா ஈரநிலங்களை பேணுவதற்கதான நடவடிக்கைளை மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலமாக சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுத்தல்.
- பல்தரப்பு பங்காளிகளையும் சமுதாய பங்கேற்பினையும் கொண்டதாக தரங்குன்றுதலுக்கு இலக்காகிய ஈரநிலங்களை மீள்நிறுவுதல்.
- ஒருங்கிணைந்த ஈரநில முகாமைத்துவ பணிகளுக்காக நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாக்கத்தை பலப்படுத்ததல்.
- கண்டல் தாவரங்கள் பற்றிய தேசிய கொள்கையை மீளாய்வுசெய்து நடைமுறைப்படுத்துதல்.
- கண்டல் சூற்றொகுதிகளில் சுற்றாடல்ரீதியாக நிலவுகின்ற முக்கியத்திற்கிணங்க அவற்றின் பாதுகாப்பிற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**வனாந்தரங்களும் வன சீவராசிகளும்**

- ஒருங்கிணைக்ககூடிய வனசீவராசிகள் மற்றும் காடுபேணல் வலயங்களை இனங்கண்டு வனசீவராசிகள் வலயத்திற்குள் புதிய கடவைகளை நிறுவுதல்.
- யானைகளின தந்தங்கள், யானை முத்துக்கள், உரோமம் மற்றும் பிற விலங்குப் பாகங்கள் சம்பந்தமான மூடநம்பிக்கைகளையும் அநாவசியமான நிதிசார் பெறுமானங்களையும் இல்லாதொழிப்பதற்கான மக்கள் புரிந்துணர்வினை

பெற்றுக்கொடுத்தல்.

-  அனைத்து வனவிலங்குகளின் நீர் மற்றும் உணவுத் தேவைகளை நிவர்த்திசெய்தல் தொடர்பான சூழற்தொகுதிகளை செறிவூட்டல்.
-  மக்கள் பங்கேற்பு அணுகுமுறை செயற்பாடுகளை கடைப்பிடிப்பதன் மூலமாக குளங்களின் நீரேந்து பிரதேசங்களை வனாந்தரங்களாக பேணிவருதலும் ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்த தாவரங்களை அகற்றுதலும்.
-  யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதல்களை கட்டுப்படுத்துவதற்காக யானைகளின் எண்ணிக்கை, நடமாடும் பாங்குகள் மற்றும் வாழிடங்கள் பற்றிய முறையான கற்கையை மேற்கொண்டு பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
-  மயில்கள், குரங்குகள், மர அணில் போன்ற பயிர்களுக்கு சேதம் விளைவிக்கின்ற வனவிலங்குகளின் வளர்ச்சி பற்றிய சரியான கற்கையை மேற்கொண்டு உயிரியல்சார்ந்த முறையியல்கள் ஊடாக எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
-  உயிர்ப்பன்வகைமையின் வெளி வாழிடச் சூழல் (Ex-situ Conservation) வசதிகளை விருத்திசெய்வதன் மூலமாக மக்களுக்கு பொழுதுபோக்கிற்கும் சுற்றுலா நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்கும் கல்வி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் அவசியமான வசதிகளை வழங்குதல்.
-  தாவர, விலங்கின நிலையம்சார் பேணுகை உள்வாழிடச் சூழல் (In-situ Conservation) வசதிகளை விருத்திசெய்தல்.
-  இயற்கை வனங்களை உள்ளடக்கிய சுற்றாடல் சேவைகளை பேணிவரத்தக்கவகையில் முகாமைசெய்தலும் பேணுதலும்.
-  ஆக்கிரமிப்புத்தன்மைகொண்ட புதிய உயிரினங்கள் நாட்டுக்குள் புகுவதைக் கட்டுப்படுத்துவதற்காகவும் தற்போது விரிவாகியுள்ள ஆக்கிரமிப்புதன்மைவாய்ந்த அந்நிய உயிரினங்கள் மேலும் விரிவடைவதை தடுப்பதற்காகவும் நடவடிக்கை எடுத்தல்.

### நிலைபெறுதகு கழிவுப்பொருள் முகாமை

-  மனைசார், சேவை வழங்கல், விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்ற அனைத்துப் பிரிவுகளிலும் பிறப்பிக்கப்படுகின்ற குப்பைகூளங்களை உசிதமானவகையில் பூச்சிய கழிவுப்பொருள் எண்ணக்கரு, 3R ( பிறப்பித்தலைக் குறைத்தல், மீள்பாவனை, மீள்சுழற்சி) மற்றும் சுழற்சிப்பொருளாதார எண்ணுக்கருவினை அடிப்படையாகக்கொண்ட சமுதாய மற்றும் தரப்பினர்களின் பங்கேற்பு அணுகுமுறை மூலமாக முகாமைசெய்ய அவசியமான சட்டக் கட்டமைப்பினை இற்றைப்படுத்துதலும் உட்கட்டமைப்பு வசதிகை முன்னேற்றுதலும்.
-  நிலவுகின்ற திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் அதனோடு நேரடியாக ஏற்புடையதாகின்ற ஏனைய கொள்கைகள் அத்துடன் செயற்பாட்டுத் திட்டங்களை மீளாய்வுசெய்து தேசிய திண்மக் கழிவுப்பொருள் செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்து அமுலாக்குதல்.
-  வீடமைப்பு வலயங்கள், மாடி வீடுகள், சேவைகள், கைத்தொழில்சார் நிர்மாணிப்புகள் சார்ந்த குப்பைகூள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள்.
-  புதிய சட்டங்கள், பிரதியீடுகளை அறிமுகஞ் செய்தல், நிதிசார் மற்றும் பிற

ஊக்குவிப்புகள் அத்துடன் விரிவான உற்பத்தியாளர் பொறுப்புகள் (Extended Producer Responsibilities) முறையியல்கள் ஊடாக பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் குறைத்தல்.

- கிளினிக்சார்ந்த மற்றும் ஊறுவிளைவிக்ககூடிய கழிவுப்பொருட்களின் முறையான முகாமை , பாதுகாப்பான இறுதிக் கையுதிர்த்தல், மின்னணுவியல் கழிவுப்பொருட்கள் மூலமாக வளங்களை பிரித்தெடுத்தல் மற்றும் ஏற்றுமதியை திட்டமிட்டவகையில் மேற்கொள்ளல்.
- நவீனதொழில்நுட்ப முறைகளைக்கொண்ட இறுதிக் குப்பைகூள கையுதிர்த்தல், குப்பைகூளங்களிலிருந்து வலுச்சக்தியை பிறப்பித்தல் மற்றும் குப்பைகூளங்கள் ஊடாக வளங்களை பிரித்தெடுத்தலை மேற்கொள்வதற்கான உட்கட்டமைப்படபு வசதிகளை உருவாக்குதல்
- பூச்சிய கழிவுப்பொருள் முறையியலின்கீழ் கைத்தொழில் நிர்மாணிப்பிற்கு அனுசரணை வழங்குதல் மற்றும் ஒவ்வொரு கைத்தொழிலிலும் இயலுமான எல்லாவேளைகளிலும் கைத்தொழில் வலயத்திற்குள்ளே இடஅமைவு செய்வித்தல்.

**வீட்டுத்தோட்டங்களை சார்ந்த வள முகாமைத்துவம்**

- வீட்டுத்தோட்டங்களை சார்ந்துள்ள மண், வீடொன்றை அமைப்பதற்காக நிலத்தைப் பண்படுத்தும்போது மேலதிக மண்ணை அகற்றுதல், வீடொன்றின் அத்திவாரத்தை நிரப்புவதற்கான மண்ணைப் பெற்றுக்கொள்ளல் போன்ற வணிகரீதியற்ற செயற்பாடுகளுக்காக தளர்வான சட்டத்தின்கீழ் அனுமதி வழங்குதல்.
- வீட்டுத்தோட்டத்தில் வெட்டுமரத்தையே எதிர்பார்த்து வளர்த்த மரத்தை பேணுகை செயற்பாட்டுக்கு கட்டுப்பட்டதாக வெட்டிக்கொள்ளலும் கொண்டுசெல்லலுக்காக தளர்வான சட்டத்தின்கீழ் அனுமதி வழங்குதலும்.
- மனைசார் விலங்கு வேளாண்மைக்காக சுற்றாடல் அலங்கரிப்பு அளவுகோல்களை அறிமுகஞ்செய்தல்.

**சூழற்றொகுதிகளுக்கிடையிலான தொடர்புகளும் பெறுமதிகளும்**

- சூழற்றொகுதிகளுக்கிடையில் ஏறுவரிசை மற்றும் இறங்குவரிசை தொடர்புகளைப்போன்றே மானிட தொடர்புகளையும் வெளிக்கொணர அவசியமான ஆராய்ச்சிகளையும் கற்கைகளையும் மேற்கொள்ளல்.
- முறைசார்ந்த மற்றும் முறைசாராத சுற்றாடல் கல்வி முறையியல்களை அமுலாக்குதல்.
- சூழற்றொகுதிகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், ஆராய்ச்சிப் பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் பேட்டன்ற் உரிமையை பெற்றுக்கொள்ளலும் சூழற்றொகுதிகளின் மரபணுத் தரவு முறைமையொன்றை பேணிவருதல் அத்துடன் மரபணுக்கள் கொள்ளையடித்தலை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சுற்றுலா கைத்தொழிலுக்கான கவர்ச்சித்தன்மைமிக்க சூழற்றொகுதிகளை பாதுகாத்தல்.



# சுதந்திரமான
# வெகுசன ஊடகத் தொழில்

## சமநிலையான தகவல் சமூகமொன்று

தொடர்பாடலுக்கும் மனிதனுக்கு மிடையிலான தொடர்பு புலன்சார்ந்ததாகும். பரிணாம வளர்ச்சியின் மிக நீண்ட காலகட்டத்திற்குப் பிறகு இது ஒரு நவீன தொழில்நுட்பத்துடன் மிகநெருக்கமான முன்னணிச் சமூக செயன்முறையாக மாறியுள்ளது. வெகுசன ஊடகம் என்பது எளிமையாக வரையறுக்கப்படுவது அதன் தொடர் செயற்பாட்டின் நவீன சந்தர்ப்பமாகும். "ஊடகம்" என்பது பொதுமக்களுக்கு பல்வேறான செய்திகளை பரிமாற்றம் செய்கின்ற தொழில்நுட்ப முறைகள், உபகரணங்கள், நிறுவனங்கள், நுட்பங்கள், நிறுவனக் கட்டமைப்புகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றைக் குறிக்கிறது. தகவல் தொகுப்பு, கல்வி, ஊக்குவிப்பு, பொழுதுபோக்கு உருவாக்கம், சமூகத் தழுவல், கலாச்சார மேம்பாடு, பரஸ்பர நல்லிணக்கம் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு போன்ற பரந்த நோக்கங்களை அடைந்து கொள்வதவதற்காக பயன்படுத்தப்படும் முறை என்று பொருள்படும். இவை அனைத்தினதும் நன்மையானது வெற்றிகரமான ஒரு ஊடக செயற்பாட்டின் செயலாற்றுகைக்கு பெரிதும் உதவும்.



யாதேனுமொரு நாட்டில், சமூகத்தில் அல்லது சமூகப் பிரிவினுள் ஊடகச் செயற்பாட்டிற்கென குறிப்பிட்டதொரு பொருத்தப்பாடு இருக்க வேண்டும். எனவே, அதற்கான அடித்தளத்தை அமைக்கும் கொள்கைகளும் வேலைத்திட்டமும் இருப்பது அவசியமானதாகும். வெகுசன ஊடகம் மக்களின் கருத்தைக் கையாளும் மிகமுக்கிய கருவியாக இருப்பதால் மேற்கத்தேய ஆட்சியாளர்களும் 1948 இற்கு பிறகு இலங்கையை ஆட்சிசெய்த உள்நாட்டு ஆட்சியாளர்களும் இந்நாட்டில் வலுவாக இருந்த சகல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை தமது ஆட்சி அதிகார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழிமுறையாக மாற்றிக்கொண்டுள்ளனர். எனவே உண்மையான மற்றும் சரியான, தெளிவான, குழப்பமில்லாத செய்திகளுக்குப் பதிலாக அரசபற்றுடைய, தனிநபர் விருப்பங்கள் மற்றும் துதிபாடுதலை மேற்கொள்கின்ற ஊடக பயன்பாட்டினைத் தழுவியுள்ளனர். இங்குள்ள மிகப்பெரிய சவாலாக காணப்படுவது யாதெனில், பொய்யான, மாயையான மற்றும் இனங்களுக்கிடையே சந்தேகத்தையும் நம்பிக்கையின்மையையும் மோதலையும் ஏற்படுத்தக்கூடியதான மனப்பாங்கு ரீதியலான தீயபண்புகள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆக்கபூர்வமான நிகழ்ச்சிகளாக மாற்றியமைப்பதாகும். ஊடகவியலாளர் அரசியல்வாதிகளுக்குச் துதிபாடுகின்ற, வெறும் இலாபத்தையும் விளம்பரத்தையும் மட்டுமே தேடுகின்ற நபராக மாறியதால் ஊடகங்கள் மீது காணப்பட்ட மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடையத் தொடங்கியது.

வரலாற்று ரீதியாக வேண்டுமென்று திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மேற்படி முறைகேடான பயன்பாட்டினைத் தடுத்து நன்மையான ஊடக வாயிலாகசமூக, அரசியல், பொருளாதார, கலாசார மறுமலர்ச்சிக்கான உந்து சக்தியாக வெகுசன ஊடகங்களையும், அதில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களையும் அதனால் அழுத்தத்திற்கு ஆளாகும் தரப்பினரையும் வழிநடாத்தி, மிகச் சிறந்த ஊடக பயன்பாட்டிற்கு அவசியமான தொழில்நுட்ப வசதிகள்,பயிற்சி அத்துடன் தொழிற்றுறை கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக தேசிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.

## கோட்பாடுகள்

- மக்களுக்கு உண்மையான மற்றும் சரியான தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை
- மனிதாபிமான பொறுப்புகளையுடைய ஊடகக் கைத்தொழில்
- ஊடக சுதந்திரம் மற்றும் நடுநிலைமை
- ஊடக வெளி பொது மக்களது சொத்து

## செயற்பாடுகள்

- வெகுசன ஊடக நிறுவனங்கள், அவற்றின் செய்திகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பிரபல்யத்திறங்கிணங்க தரப்படுத்தல் (Rating) என்பவற்றை முறைப்படுத்த பல்கலைக்கழக வெகுசனஊடக பிரிவுகள் மற்றும் ஏனைய தரப்படுத்தல் நிறுவனங்களக்க வசதிகளை வழங்குதல்
- கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்திற்கு தடையாக இருக்கும் வாசகங்களை அகற்றி 2024ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தை திருத்துதல்.
- தரப்படுத்தலுக்கான மொழிப் பயன்பாடு, கலாசாரங்கள், இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மற்றும் நல்லிணக்க மேம்பாடு, கல்வி மற்றும் அறிவியல் மேம்பாடு போன்ற புதிய அளவுகோல்களை அறிமுகம் செய்தல் மற்றும் மேற்படி தரப்படுத்தலை பிரசித்தப்படுத்தல்.
- ஊடக சுதந்திரத்தை ஏற்று, தற்பொழுது நிலவும் ஊடக சட்டங்கள், கட்டளைகள், சமவாயங்கள், ஒழுக்கநெறிகளை மீளாய்வு செய்து மிகச் சிறந்த ஊடகக் கொள்கையொன்றினை தயாரிப்பதற்கான திருத்தங்கள்.
- சர்வதேச தரங்களுக்கமைவாக மற்றும் இலங்கைச் சமூகத்திற்கு பொருந்தும் அளவுகோல்களின் அடிப்படையில் ஊடக நிறுவனங்களுக்கு மற்றும் ஊடகவியலாளர்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை.
- ஊடகங்களுக்கிடையில் சுதந்திரமான போட்டித்தன்மையை மேம்படுத்தி பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள், ஊடகவியலாளர்கள், நிகழ்ச்சிகள், ஆவணங்கள், புகைப்படங்கள் போன்ற விடயங்களை மதிப்பீடு செய்யும் நிகழ்ச்சிகள்.
- சகல துறைகளிலுமுள்ள ஊடகவியலாளர்களை மதிப்பீடு செய்வதற்கு மற்றும் மக்களது பாராட்டுதலுக்கு உட்படுத்துவதற்கான முறையான விருது விழா.
- ஊடகவியலாளர்களுக்கு அவசியமான கமெரா போன்ற உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக குறைந்த வட்டியில்

கடன் வசதிகள்.

- அரச ஊடக நிறுவனங்களை உயர்தரமான ஊடக ஒழுக்கநெறிகள் மற்றும் தரங்களுக்கான மாதிரியாக வழிநடாத்துதல்.
- ஊடக அபிவிருத்தி தொடர்பாடல் மற்றும் கல்விசார் நிகழ்ச்சிகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக ஊக்குவித்தல்.
- சினிமா, தொலைக்காட்சி, இசை போன்ற துறைகளுக்கு சர்வதேச மதிப்பீடு மற்றும் சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்காக கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்களை ஊக்குவித்தல்.
- உயர் தரத்திலான விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் மற்றும் அத்துறைகளை சர்வதேச சந்தைக்கு செல்லக்கூடியதாக உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் தயாரிப்பாளர்களை ஊக்குவித்தல்.
- ஊடகத் தயாரிப்பாளர்களை மற்றும் தயாரிப்புக்களை பாதுகாப்பதற்கான முறையான பாதுகாப்பு வேலைத்திட்டம்
- மிகச் சிறந்த பெறுநர் சமூகமொன்றினை உருவாக்கும் பொருட்டு ஊடகக் கல்வி மேம்பாட்டு நிகழ்ச்சிகள்.
- ஒட்டுமொத்த ஊடகச் செயற்பாட்டினை மிகச் சிறந்த முறையில் நடாத்திச் செல்வதற்காக சுயாதீன ஊடக ஆணைக்குழுவைத் தாபித்தல்.

# 2

# கௌரவமான வாழ்க்கை பாதுகாப்பான நாடு



## பாதுகாப்பான சமூகம்

# செழிப்பான தேசத்தவர்கள்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களின்படி இலங்கையில் சுமார் 5.7 மில்லியன் மக்கள் தேசிய வறுமைக் கோட்டின் (2024 மே மாதம் மாதாந்தம் ரூ.16,326) கீழ் வருமானம் பெறுபவர்களாக உள்ளனர். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தினூடாக வெளியிடப்பட்ட இலங்கையின் பல்பரிமான ஆபத்துக்கள் பற்றிய அறிக்கையின் படி இந்நாட்டு சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட தரப்பினர்கள் (55.7%) அதாவது 12.34 மில்லியன் மக்கள் பல்பரிமான ஆபத்திற்கு உள்ளாகியுள்ளனர். அதன்படி நமக்கு தெளிவாகின்ற விடயம் யாதெனில், சுதந்திரத்திற்குப் பின்னர் இந்நாட்டை ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் மக்களுக்கு உரித்தாக்கியிருக்கின்ற பரிசாக இருப்பது சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் வறுமையிலும் பல்பரிமான ஆபத்துடன் வாழ்கின்ற நிலைக்கு இட்டுச் சென்றமையே ஆகும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் வரலாற்றில் ஆட்சிக்கு வந்த சகல அரசுகளும் ஏழை மக்களுக்காக பல்வேறான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன. இந்த சமூக நலனோம்புகை நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படுகின்ற நிதி மற்றும் / அல்லது ஜீவனோபாய உதவிகள் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வகையில் உதவியாக அமைந்த போதிலும் அவற்றுள் பொதுவான பல குறைபாடுகள் நிலவுகின்றன. செயற்றிறனின்மை, மிக அதிகமான முகாமைத்துவ செலவுகள், வெளிப்படைத்தன்மையின்றி பயனாளிகள் தெரிவு செய்யப்படும் முறைமை, உதவிகள் கிடைக்க வேண்டிய நபர்களுக்கு அவை கிடைக்காமை, அரசியல் அழுத்தங்கள், கொடுப்பனவுகள் தாமதமடைதல் போன்ற நிர்வாக ரீதியான செயற்றிறனின்மை, தொடர்ச்சியான இற்றைப்படுத்தலுக்கான பொறிமுறை இன்மை, மக்களை வறுமையில் இருந்து மீட்பதற்கான முறையான மற்றும் பயன்மிக்கதான வேலைத்திட்டமொன்று காணப்படாமை போன்ற குறைபாடுகள் அவற்றுள் அடங்கும். அதன் பிரதிபலனாக, அவசியமான நபர்களுக்கு மற்றும் குடும்பங்களுக்கு போதுமானளவு சமூக பாதுகாப்பினை வழங்குவதில் இதுவரையில் ஆட்சிக்கு வந்த அரசுகள் தோல்வி கண்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தியானது சமூக பாதுகாப்பினை மற்றும் நலனோம்புகையை அரசின் முன்னணிக் கடமையாக கருதுகின்றது. விசேடமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் சனத்தொகையில் பெருமளவான தரப்பினர் தொழில், வியாபார மற்றும் பொருளாதார சந்தர்ப்பங்களை இழந்துள்ள காரணத்தினால் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் மீள கட்டியெழுப்புவதற்கான விரிவான சமூக பாதுகாப்பு நிகழ்ச்சியின் தேவைப்பாடு அதிகமாகவே நிலவுகின்றது. தேசிய மக்கள் சக்தியின் சமூக பாதுகாப்பு மற்றும் சமூக நலனோம்புகை வேலைத்திட்டத்தின் நோக்கமாக அமைவது, சமூக நலனோம்புகை பயன்கள் கிடைக்கப்பெற வேண்டிய தரப்பினரின் வாழ்க்கை மட்டத்தை உயர்த்துதலும், அவர்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டல் செய்து முடிந்தளவு துரிதமாக வறுமையிலிருந்து மீட்டெடுத்து பொருளாதாரத்தின் செயற்பாட்டுமிக்க பங்காளர்களாக மாற்றியமைப்பதாகும். அதன்படி “சகல இலங்கையர்களுக்கும்” “வாழ்க்கை வட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய சமூக பாதுகாப்பினை” பெற்றுக் கொடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

## கோட்பாடுகள்

- சமூக ஒத்துழைப்பு
- சமூக வலுவூட்டல்
- வேைவப்பாடுடைய சகல நபர்களுக்கும் மானியங்கள்
- சகலருக்கும் வாழக்கை வட்டத்தை அடிப்படையாகக்கொண்ட சமூக பாதுகாப்பு
- சமூக நீதியை உறுதிப்படுத்துதல் மற்றும் எவரையும் விட்டுவிடாமை (அனைவரையும் உள்ளீர்த்தல்

**சமூக உயிர்ப்பீட்டினூடாக குடும்பங்கள் மற்றும் சிறு குழுக்கள் மட்டத்தில் பிரச்சினைகளை அடையாளம் காணல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தீர்வுகளுக்கான கருத்திட்டங்களை அடையாளம் காணல்.**

## செயற்பாடுகள்

**பிரஜாசக்தி : வறுமையை ஒழித்தல்**
**மானியங்கள்**

- தேசிய சமூக பாதுகாப்பு நிதியம்
- தற்பொழுது அஸ்வெசும பயன்களைப் பெறுகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு மாதாந்தம் ஆகக் குறைந்த பெறுமதியாக ரூ. 10,000ஐக் கொண்ட மானிய நிதியுதவி
- டிஜிட்டல் தளத்தினூடாக நன்மைகளைப் பெற வேண்டிய சகல பயனாளிகளையும் புதிய அளவுகோல்களைப் பயன்படுத்தி ஒரு வருட காலப்பகுதிக்குள் அடையாளம் காணல் மற்றும் தகைமை பெறுகின்ற சகலருக்கும் நிதியுதவி.

**வலுவூட்டல்**

- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வறுமைக்கான காரணங்கள், குடும்ப உறுப்பினர்களின் இயலுமைகள் போன்றவை தொடர்பில் முழுமையான பங்கேற்பு ஆய்வு.
- சமூக உயிர்ப்பீட்டினூடாக குடும்பங்கள் மற்றும் சிறு குழுக்கள் மட்டத்தில் பிரச்சினைகளை அடையாளம் காணல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் தீர்வுகளுக்கான கருத்திட்டங்களை அடையாளம் காணல்.
- கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அரச தனியார் மற்றும் கூட்டுறவுப் பிரிவின் பங்கேற்புடன் வசதிகளை வழங்குதல்.
- வாழ்வாதார மற்றும் வருமானமீட்டல் வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான பயிற்சி, தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் நிதியுதவி.
- வறுமையான குடும்பங்களை வலுவூட்டும் பொருட்டு சமுர்த்தி வங்கிக் கட்டமைப்பு மற்றும் பணியாட்டொகுதியினரை உச்ச அளவில்

பயன்படுத்துதல்.

- 100 குடும்பங்களுக்கொரு கள உத்தியோகத்தர் என்ற வகையில் ஈடுபடுத்தி தொடர்ச்சியான பின்னாய்வு மற்றும் பின்னூட்டல் செய்தல்.

**பாராட்டு (பிரணாம) : மூத்த பிரஜைகளுக்கு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியானதொரு வாழ்க்கை**

- மானிய உதவிகள் தேவைப்படும் மூத்த பிரஜைகளுக்கு ரூ. 5,000 மாதாந்த கொடுப்பனவு
- பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் புதிய முதியோர் பராமரிப்பு நிலையங்கள்.
- தனியார் பராமரிப்பு நிலையங்களை ஊக்குவித்தல் மற்றும் அரசாங்க ஒழுங்குபடுத்தல்.
- முதியோர்களை பராமரிப்பதற்கான தொழிற்பயிற்சி, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைகளை அரசினூடாக ஊக்குவித்தல்.
- ஊழயர் சேமலாப நிதியம் போன்ற நிதியங்களுக்கு அதிக பயன்கள் மிக்கதான மற்றும் பாதுகாப்பான முதலீடுகள்
- ஓய்வூதிய நிதியத்தை பாதுகாப்பான முதலீடுகளில் ஈடுபடுத்தி தொடர்ச்சியான பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதி மற்றும் காப்புறுதிச் சேவை
- சிரேக்ஷ்ட பிரஜைகளின் நிலையான வைப்புகளுக்கு சாதாரண வங்கி வட்டி வீதத்தை விட 5% அதிக வட்டி விகிதம்

**பாதுகாப்பு : ஊனமுற்ற நபர்களுக்கு அர்த்தபுஸ்டியான மற்றும் திருப்தியான வாழ்க்கை**

- விடயம் சார்ந்த விசேட நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட நாட்டிலுள்ள ஊனமுற்ற நபர்களது முழுமையான தகவல்கள் அடங்கிய தரவுக் கட்டமைப்பு
- குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள ஊனமுற்ற நபர்களுக்கு மாதாந்தம் ரூபா 10,000 நிதியுதவி.
- ஊனமுற்ற நபர்களுக்கான கல்வி, பயிற்சி, தொழில்வாய்ப்பு மற்றும் ஜீவனோபாய சந்தர்ப்பங்களுக்கான வசதிகள்.

**பெண் தலைமைத்துவ குடும்பங்கள், ஒற்றைப் பெற்றோர் குடும்பங்கள் மற்றும் வீட்டு வன்முறைகளுக்கு ஆளாகிய பெண்களுக்கான சமூக பாதுகாப்பு**

- தேவைப்பாடுடைய நபர்களுக்கு அவர்களது வருமான மட்டத்தின் அடிப்படையிலமைந்த நிதியுதவி.
- தேவைப்பாடு மற்றும் கோரிக்கையின் அடிப்படையிலமைந்த சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் மாற்று வாழ்விட வசதிகள், தொழில்வாய்ப்பு மற்றும் வேறு உதவிகள்
- விதவைநிலை, வீட்டு வன்முறை போன்றவை காரணமாக பாதிக்கப்படும் பெண்களுக்கு சமூக மற்றும் மனவழுத்த ஒத்துழைப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறிமுறை

**சுகப்படுத்தல்: காலம்கடந்த நோய் நிலைமைகளையுடைய பிரஜைகளுக்கான சமூக பாதுகாப்பு**

-  புற்றுநோய், சிறுநீரக பாதிப்பு போன்ற நோய் நிலைமைகளையுடைய சகல நபர்களதும் தகவல்களை உள்ளடக்கிய டிஜிட்டல் தரவுக் களஞ்சியம்
-  தேவைப்பாடுடைய காலம்கடந்த நோய் நிலைமைகளையுடைய நபர்களுக்கு ஆகக் குறைந்தது மாதாந்தம் ரூபா 10,000 நிதியுதவி
-  தொழிற்றுறை ஒத்துழைப்பு மற்றும் சமூக வலுவூட்டலுக்கான வசதிகள்.

**போசாக்கு நிறைந்த சிறுவர் சந்ததி**

-  போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட பிள்கைளையுடைய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளம் காணல்.
-  போசாக்கின்மையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி பெற்றோர்களை தெளிவூட்டுதல்.
-  உடனடித் தேவைப்பாடுடைய குடும்பங்களுக்காக கள மட்டத்திலான உத்தியோகத்தர்கள் ஊடாக போக்ஷாக்கான உணவுக் கூப்பன்களைப் பெறுவதற்கான நிதியுதவி

**கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போக்ஷாக்கு நிகழ்ச்சித் திட்டம்**

-  குடும்ப சுகாதாரச் சேவை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சமூக சுகாதாரச் சேவையூடாக மேலதிக போக்ஷாக்கு தேவைப்பாடுடைய கர்ப்பிணித் தாய்மார்களை அயையாளம் காணல்.
-  குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு தமது கர்ப்ப காலத்திலும் பிள்ளைப் பேறின் பின்னரான ஒரு வருட காலப்பகுதிக்கு உணவுப் பொதிக்கான நிதியுதவி
-  குடும்ப சுகாதாரச் சேவை உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான தெளிவூட்டல்கள் மற்றும் அடிக்கடி மேற்பார்வை செய்தல்.
- 

**சுரக்சா: தேசத்தின் பிள்ளைகளுக்கு போதுமான பாதுகாப்பு**

-  அரசாங்க மற்றும் தனியார் ஆகிய இரு பிரிவுகளினதும் பங்களிப்புடன் தேவைப்பாடு மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் கிராம அலுவலர் மட்டத்தில் சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள்.
-  சிறுவர் பாதுகாப்பிற்காக தற்பொழுது காணப்படுகின்ற தகைமையுடைய நிறுவனங்களை பதிவு செய்து வசதிகளை அளித்தல்.
-  நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மிக்க முகாமைத்துவத்தின் பொருட்டு பணியாட்டொகுதியினருக்கான பயிற்சிகளை அளித்தல் மற்றும் அவற்றின் கண்காணிப்பு.
-  இந்நிறுவனங்களுக்கான தொழிற்றுறைசார்ந்த சேவைகளை வழங்கும் பொருட்டு சமூக சேவை ஃ அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்தல் அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களாக அவ்வாறான சேவை வழங்கும் தனியார் நிறுவனங்களை ஊக்குவித்தல்.

**சகல பிரஜைகளுக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு**

- நாட்டின் சகல பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களுக்கும் பொருந்தும் வகையிலான ஓய்வூதியக் கொடுப்பனவு பற்றிய விரிவான கொள்கையொன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- ஓய்வூதியத் திணைக்களத்தின் மற்றும் மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு நிதியம்
- தற்பொழுது அரச துறையில் அல்லது முறையான நிறுவனப் பிரிவில் தொழிலில் ஈடுபடாத விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட சகல பிரஜைகளையும் ஓய்வூதியக் கொடுப்பனவு முறையில் இணைவதற்காக ஊக்குவித்தல்.
- அவசர அனர்த்த / உபாதை நிலைமைகளின் போது அல்லது ஓய்வின் பின்னர் இவ் ஓய்வூதிய நிதியத்தை காப்புறுதி நிதியமாக செயற்படுத்துதல்.



## செயற்றிறன்மிக்க ஊழியர்படை

# கௌரவமான
# தொழில்சார் வாழ்க்கை

மனித உழைப்பானது சமூக வளர்ச்சியின் உந்து சக்தியாகவும் உற்பத்தியின் முக்கிய காரணியாகவும் விளங்குகின்றது. எனினும் தற்போதைய சமூகத்தில் தொழிலாளிக்கு கிடைக்க வேண்டிய நிலையும் முக்கியத்துவமும் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளது. பயிற்றப்பட்ட மற்றும் பயிற்றப்படாத தொழிலாளர்கள் உற்பத்திச் செயன்முறையில் மிக முக்கியமாக தீர்மானமிக்க பணியினை மேற்கொண்ட போதிலும் பல தொழிலாளர்களுக்கு ஆகக் குறைந்தது வாழ்வதற்கான ஊதியத்தைக் கூட உரிமைகோர முடியாத நிலைமையே காணப்படுகின்றது. எனவே, பெரும்பாலான உழைக்கும் மக்கள் தங்களது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார வாழ்க்கை தொடர்பில் கசப்பான அனுபவத்தையே கொண்டுள்ளனர். உழைப்பிற்கான கௌரவம் மற்றும் அங்கீகாரம் கிடைப்பதற்கும் அனைத்து வகையான தொழிலாளர்களும் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் நடாத்தப்படக்கூடிய வகையில் முதலாளி - தொழிலாளி உறவுமுறை வலையமைப்பினை மனிதாபிமானமயப்படுத்தி உழைப்பிற்குரிய கௌரவமும் பெறுமதியும் கிடைக்கக் கூடிய முறைமையொன்றினைத் தாபித்தல் இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.



## கோட்பாடுகள்

- உழைப்பின் கௌரவத்தையும் பெறுமதியையும் பாதுகாத்தல்.
- உழைப்பின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு சமமாக மதித்தல்.
- வேறுபாடுகளுக்கு உட்படாத சமமான வாய்ப்புக்கள்

## செயற்பாடுகள்


- தொழிலாளர் சாசனமொன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- சேவைப் பிரமாணத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து அவற்றில் திருத்தங்களைச் செய்தல்.
- செயற்றிறன்மிக்க ஊழியப் படையின் பொருட்டு உரிய சட்டதிட்டங்களை மற்றும் கட்டளைகளை இற்றைப்படுத்துதல் மற்றும் புதிய சட்டங்கள்.
- பட்டப்படிப்பு மட்டம் வரையிலான தொழிற்றுறை சார்ந்த கல்விமுறை பாடசாலை பாடத்திட்டத்தில்.
- சம்பள முரண்பாடுகளைக் குறைக்கின்ற மற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கின்ற தேசிய சம்பளக் கட்டமைப்பு
- தொழில் வாய்ப்புக்களுக்கான தெரிவின் போது பாகுபாடு காட்டாமை மற்றும் சகலருக்கும் சமமான சந்தர்ப்பங்கள்.
- தனியார் துறையில் சகல நிலைகளிலும் உள்ள ஊழியர்களை உள்ளடக்கும் வகையிலான சுகாதார / ஆயுள் காப்புறுதி முறைமை.
- தற்பொழுதுள்ள ஓய்வூதியத் திட்டங்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை நீக்குதல்.
- சகல ஊழியர்களையும் உள்ளடக்கும் வகையிலான சமூக பாதுகாப்பு நிதியம்.
- பெண்களுக்கு நிறைவேற்று மற்றும் முகாமைத்துவத் துறைகளில் செயற்றிறன் மிக்கதாக பணிகளில் ஈடுபடுவதற்குள்ள தடைகளை அகற்றுதல்.
- தொழில் சந்தையை அணுகுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்ற அல்லது அதில் ஆர்வமில்லாத பெண்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் உற்பத்திச் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பதற்கான வாய்ப்புகள்.
- நவீன தொழில்நுட்ப பயன்பாட்டினூடாக வேலை செய்யும் நேரத்தினை படிப்படியாக குறைத்தல் மற்றும் வீட்டிலிருந்து பணியாற்றக்கூடிய

சந்தர்ப்பங்கள்.

- அரச சேவையில் இணைத்துக் கொள்ளல், பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்கள் அரசியல் தலையீடுகளின்றி தகைமை மற்றும் திறமையின் அடிப்படையில் இடம்பெறுதல்.
- பயிற்றப்படாத ஊழியர்களுக்கு பதிலாக திறமையான பயிற்றப்பட்ட ஊழியர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அனுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- விசேட காரணங்களால் தொழிற் படையில் சேர முடியாதவர்களுக்கு அடிப்படைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக இடைக்கால கொடுப்பனவொன்று.
- 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகள் அல்லது 80 வயதுக்கு மேற்பட்ட நோய்வாய்ப்பட்ட பெற்றோரைப் பராமரிப்பதற்காக அடிப்படைச் சம்பளத்தில் 25% உடன்அதிகபட்சமாக ஒருவருட விடுமுறை
- வாழ்க்கைத்துணை மரணமடைந்தால் இரண்டு வாரங்களுக்கு விசேட விடுமுறை.
- அக்ரஹார காப்புறுதி நலன்களை வலுப்படுத்துதல்.
- உழைக்கும் போதான வரியை தொழிற்றுறையினருக்கு அநீதி ஏற்படாத வகையில் திருத்தம் செய்தல்.
- Man Power ஊழியர்களின் தொழில் பாதுகாப்பையும் நியாயமான சம்பளத்தையும் உறுதிசெய்தல்

### வேலையில்லா பட்டதாரிகள்

- 20,000 பேரை ஆசிரியர் தொழிலுக்கு உள்ளீர்த்தல்.
- 3,000 STEM பட்டதரிகள் மற்றும் 9,000 STEM அல்லாத பட்டதாரிகள் தகவல் தொழில்நுட்ப துறையில்
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு, சுங்கத் திணைக்களத்திற்கு,வெளிநாட்டுச் சேவைக்கு, சுற்றுலா கைத்தொழிற்றுறைக்கு 3000 பேர்



## சுதந்திரமான பால்நிலை சமத்துவம்

# நியாயமான மனித அடையாளம்

பெண்கள் எனப்படுவோர் முழுச்சமூக கட்டமைப்பினதும் பிரிக்க முடியாத தரப்பினராக உள்ள போதிலும் பிரதான சமூக-பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் செயல்பாட்டில் அவர்கள் ஓரங்கட்டப்பட்டதன் காரணமாக, சமூகத்தில் அவர்களுக்கு எப்போதும் சமமற்ற நிலையே கொடுக்கப்படுகிறது. வீடு, சமூகம், தொழிலிடம், அரசியல் போன்ற அனைத்துத் துறைகளிலும் இது இடம்பெறுகிறது. குறிப்பாக கடந்த சில தசாப்தங்களில் தோன்றிய நவதாராளவாத பொருளாதார செயல்முறையில் இந்த நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. பிரதானமாக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருபவர்களாக பெண்களின் உழைப்பு அமையப்பெற்று பெண்களின் பாத்திரங்கள் விரிவடைந்திருப்பது மேலோட்டமாகத் தோன்றினாலும், சமத்துவம் மற்றும் நீதிக்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் கருத்தியல் ரீதியான மாற்றங்கள் இன்னும் இடம்பெறவில்லை. மாறாக, பெண் அடையாளத்தினை சந்தைப்படுத்தல் மற்றும் உழைப்புச் சந்தையில் பாகுபாடு காட்டுதல் என்பனவே அதிகரித்துள்ளது.



ஒட்டுமொத்தமாக பெண்களும் ஆண்களும் பாதிக்கப்படக்கூடிய ஊழியர்களாக இருப்பது, கல்வி, சுகாதாரம் போன்ற சமூக பாதுகாப்பு சேவைகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக பெண்கள் நேரடியாக அழுத்தநிலைக்கு ஆளாதல், இராணுவமயமாக்கல் மற்றும் இன-மத (ethno-religious) தீவிரவாதத்தால் பெண்களின் உடல் மற்றும் நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் சட்ட உருவாக்கம் போன்ற காரணிகளால் பெண்களின் பிரச்சினைகள் பொதுவான சமூக நெருக்கடியைப் புரிந்துகொள்வதற்கான மைய கட்டமைப்பை காட்டுகின்றது. எனவே தற்போது இலங்கையில் பெண்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதற்கு குறுக்குவெட்டுப் பார்வையின் (inter sectional) கோணத்தில் அது இடம்பெற வேண்டும்.

அனைத்து உரிமைகளையும் வென்றெடுக்கும் நீதியான சமுதாயம், சுதந்திர நாடு மற்றும் சுதந்திரப் பெண் என்ற அபிலாஷை யை நனவாக்க, சமூகத்தின் அனைத்து விளிம்புநிலைப் பிரிவினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கோட்பாடு-நடைமுறையை தேசிய மக்கள் சக்தி முன்மொழிகிறது. எனவே, பெண்கள் மீதான அதன் கொள்கையானது ஏனைய கொள்கைகளுடன் பிரிக்கமுடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது.

பால்நிலை சமத்துவ அடையாளங்கள் மற்றும் பாலியல் நோக்குநிலைகள் என்பது பல்வேறு உயிரியல் மற்றும் சமூகவியல் காரணங்களால் ஏற்படும் வேறுபாடுகள் ஆகும். எனினும் இலங்கையில் அக்குழுக்கள் சமூகத்தின் பல இடங்களில் வன்முறை, பாகுபாடு மற்றும் ஓரங்கட்டலுக்கு உள்ளாகின்றன. அத்துடன் சில காலனித்துவ சட்டங்கள், சில நிறுவன கட்டமைப்புகள், சில சமூக நிறுவனங்களின் பிற்போக்குவாத சிந்தனைகள் மற்றும் பிற்போக்கு கலாச்சார கருத்துக்கள் காரணமாக, ஓரின பால் ஈர்ப்பு மற்றும் பால்நிலை மாற்றம்கொண்ட சமூகக் குழுக்களின் நீதிக்கான அணுகல் மறுக்கப்பட்டுள்ளது. அனைவரும் ஒரே சமமாக நடாத்தப்படும் ஒரு நீதியான சமூகத்தில், எந்த ஒரு குழுவும் அவர்களின் அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை காரணமாக ஓரங்கட்டப்படலாகாது.

# கோட்பாடுகள்

- பால்நிலை சமத்துவத்திற்கான பொருளாதார நீதி
- ஊதியம் பெறாது பொருளாதாரத்திற்கு பெண்கள் செய்யும் பங்களிப்பினை மதிப்பிட்டு பாராட்டும் அரச கொள்கைகள்
- ஒடுக்கப்பட்ட சமூகக் குழுக்களுக்கு நியாயமான மற்றும் சமமாக நடாத்தும் சட்டங்கள்
- பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம், பங்கேற்பு மற்றும் பங்கு ஆகியவற்றின் பிரதான நீரோட்டம். (Mainstreaming)
- நிறுவனமயப்படுத்தப்பட்ட வன்முறைகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் இடம்பெறுகின்ற சகல விதமான வன்முறைகளையும் எதிர்த்தல்.
- பெண்கள் முகம்கொடுக்கும் அழுத்தங்களைக் குறைப்பதற்காக அரச கொள்கை தயாரிப்பின் போது உலகளாவிய பொதுச் சேவைகளுக்கு முன்னுரிமையளித்தல்.
- நிலைபேறான சுற்றாடல் பாதுகாப்புக் கொள்கை அபிவிருத்தியில் பெண்களின் பங்கேற்பு
- சமூக நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகளால் மீளுருவாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்ற பிற்போக்குவாத மாறுபாடற்ற தன்மை இல்லாத ஓர் சமூகம்
- பெண்கள் உள்ளிட்ட சகல அடையாளக் குழுக்களுக்கும் அரச சேவை, உரிமைகள் மற்றும் நீதிக்கான அணுகல் உரிமைகள்.
- பெண்களுக்கெதிரான சகல வகையிலுமான வன்முறைகளையும் நீக்குவதற்கான சர்வதேச சமவாயத்தில் (CEDAW) மற்றும் சர்வதேச சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் (CRC) குறிப்பிடப்பட்டுள்ள சமவாயங்களுக்கு அமைவாக உள்ளூர் சட்டங்கள்

# செயற்பாடுகள்

- பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையில் உழைப்புகளுக்கிடையில் இடைவெளி (gender wage gap) ஏற்படும் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பெண்களின் காணி உரிமை தொடர்பில் பாதகமான நிலைமையை ஏற்படுத்தம் சட்டரீதியான மற்றும் நடைமுறை ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- பணிபுரியும் பெண்கள் முகம்கொடுக்கும் விசேட காரணிகள் தொடர்பில் அடையாளம் கண்டு அவர்களது தொழில் பாதுகாப்பினை

உறுதிப்படுத்தும் வகையில் நிலவும் தொழிலாளர் சட்டங்கள் மற்றும் கொள்கைத் திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் அவசியமான சட்டங்களை அறிமுகம் செய்தல்.

- பெண்களை பாதிப்பிற்குள்ளாக்கி அதிக வட்டியை அறவிடுகின்ற அநீதியான நுண்நிதிக் கடன் சுமையிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள்
- பெண்களுக்கான தொழில்முயற்சி சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்காக அவர்களுக்கான வங்கி மற்றும் கடன் வசதிகள்.
- தேசிய தொழிற்படை ஆய்வினை முறையாக மேற்கொண்டு பிள்ளைகள், முதியோர்கள், ஊனமுற்றோர் ஆகியோரை பராமரித்தல் உள்ளிட்ட பெண்களின் ஊதியமற்ற பராமரிப்பு உழைப்பினை (unpaid care work) தேசிய பொருளாதாரத்தின் ஒரு அங்கமாக அங்கீகரித்தல்.
- பெண்களின் ஊதியமற்ற பராமரிப்பு உழைப்பின் சுமையைக் குறைத்தல், அரசியலில் பெண்களின் பங்கேற்பினை அதிகரித்தல் ஆகியவற்றுக்காக பெண்களுக்கான அரசியல் கல்வியைப் புகட்டுதல் மற்றும் அவர்களை ஒழுங்கமைத்தல்.
- அரசியல் கட்டமைப்பினுள் பெண்களின் பங்களிப்பினை ஆகக் குறைந்தது ஐம்பது வீதமளவில் கொண்டு வருவதற்கு அவசியமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை கட்டம் கட்டமாக அறிமுகம் செய்தல்.
- பால்நிலை சமத்துவ தேவைப்பாடுகளில் கவனம் செலுத்தி கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற பொதுச் சேவைகளை வலுப்படுத்துவதனூடாக பெண்கள் முகம் கொடுக்கும் கஸ்டங்களைக் குறைத்தல்.
- கர்ப்பிணிக் காலத்தை பாதுகாப்பாக நிறைவு செய்வதற்கு 2012ஆம் ஆண்டில் சட்ட ஆணைக்குழு விதப்புரை செய்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துதல்.
- அந்தந்த வயதுப் பிரிவினருக்கு பொருந்தும் வகையில் சகலருக்கும் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் பற்றிய அறிவினையும் அதனுடன் தொடர்புடைய சேவைகளையும் பெற்றுக்கொடுத்தல்.
- மாதவிடாய் கால வறுமையை (period poverty) ஒழிப்பதற்கு அவசியமான வரிச் சலுகைகள், நிதி மற்றும் ஏனைய வசதிகளை பெற்றுக் கொடுத்தல்.
- பணியிடத்தில், பொதுப் போக்குவரத்தில் உள்ளிட்ட சகல இடங்களிலும் பால்நிலை சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்ற வன்முறைகள் மற்றும் அடக்குமுறைகள் இன்றி வாழ்வதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துகின்ற வகையிலான சட்டங்கள் மற்றும் நடைமுறைகளை திருத்தம் செய்தல்.
- பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு பாகுபாடு காட்டுகின்ற மற்றும் அவர்களை அழுத்தத்திற்கு ஆளாக்குகின்ற விசேட சட்டங்களை திருத்துதல்.
- அரசியலமைப்பில் சமத்துவம் தொடர்பிலான உரிமைகளை விரிவாக்கஞ் செய்துபால்நிலை மற்றும் பாலியல் நோக்குநிலையின் அடிப்படையில் ஓரங்கட்டப்படாதிருப்பதனை உறுதி செய்தல்.
- ஓரின பால் ஈர்ப்பு மற்றும் பால்நிலை மாற்றம்கொண்ட சமூகக்

குழுக்களுக்கான விசேடமான சுகாதார சேவைகள், சட்டச் சேவைகள், சமூக பாதுகாப்பு போன்ற அரச சேவைகளையும் நீதிக்கான அணுகலையும் அதிகரித்தல்.

- மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்ட உதவி ஆணைக்குழு உள்ளிட்ட உரிய நிறுவனங்களில், பல்வேறான அடையாளப்படுத்தலுடனான குழுக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் நிறுவன மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்தல்.
- சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் உள்ளிட்ட அரச சேவையின் சகல உத்தியோகத்தர்களும் பால்நிலை சமத்துவ அடையாளத்தைக் கொண்ட குழுக்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது பற்றிய தரநியமங்கள் மற்றும் ஒழுக்கநெறிக் கட்டமைப்பினை அறிமுகம் செய்தல்.
- ஒடுக்கப்பட்ட குழுக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு சிறப்பச் செயலகம் ஒன்றினைத் தாபித்தல்.



## பாதுகாப்பான சிறுவர் உலகம்

# படைப்பாற்றல்மிக்க எதிர்கால சந்ததி

2023 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சனத்தொகை 22,037,000 ஆக இருந்ததுடன், அவ்வொட்டுமொத்தச் சனத்தொகையில் 6,642,331 ஆகிய 30.14% ஆனது ஐக்கியநாடுகள் அமைப்பின் வரைவிலக்கணத்திற்கு அமைவாக 18 வயதிற்கும் குறைந்த சிறுவர் சனத்தொகைக்குரியதாகும். பலவீனமான சிறுவர் நீதிநிருவாகச் செயன்முறை, பலவீனமான பாதுகாப்புச் சேவை, கல்விசார்ந்த சிரமங்கள் மற்றும் ஊட்டச் சத்துக் குறைபாடு போன்ற பாரதூரமான சிக்கல்களுக்கு இக்காலச் சிறுவர்கள் முகங் கொடுத்துவருகின்றனர். குற்றச் செயல்களுக்கு இரையாகிய சிறுவர்கள் தொடர்பாக, தற்போதுநிலவும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு நீண்டகாலம் எடுப்பதுடன், பெரும்பாலும் அது 06 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்கள் வரைநீண்டு செல்கிறது.

தற்போது சிறைச்சாலைகள் திணைக்களம் சிறுவர்களையும் வயதுவந்த குற்றவாளிகளுடனேயே நீதிமன்றத்திற்கு மற்றும் வெளியில் அழைத்துச் செல்கிறது. இது அவர்களின் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கத் தன்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும். காலனித்துவ ஆட்சியிலிருந்து அமுல்படுத்தப்பட்டுவரும் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் போன்ற பலதசாப்தங்கள் பழமையான சட்டங்கள்



ஆட்களின் நடமாட்டம் மற்றும் சுதந்திரத்தை மீறுவதுடன் அவற்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவது சிறுவர்களின் மற்றும் அவர்களுடைய குடும்பங்களின் உரிமைகளை மீறுவதாக அமையும். கடந்த பலதசாப்தங்களாக சிறுதிருத்தங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் தொடர்பாகவும் விரிவான மீளாய்வொன்றுஅவசியமாகும்.

துரிதமாற்றங்களுக்கு உட்பட்டுவரும் நவீன உலகில் வெற்றிக்குத் தேவையானதிறன் மிக்க, சிறந்த மனநலத்தைக்கொண்ட சிறுவர்களை உருவாக்குவதற்கு கல்வி மிகமுக்கியமானது. எனினும் இலங்கையின் தற்போதைய கல்விமுறை அதில் தோல்வியடைந்துள்ளது. நாட்டில் பல் துறைகளில் ஊடுருவியுள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் காரணமாக ஏற்பட்டுள்ள விரக்தி மற்றும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையின்மை என்பன இளைஞர், யுவதிகளை வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்புக்களை தேடிச்செல்வதற்கு தூண்டியுள்ளது.

இலங்கையில் சிறந்த ஒழுங்கமைப்புடனான மற்றும் போதியளவான மனித மற்றும் பௌதீக வளங்களைக் கொண்ட சமூகசேவைக் கட்டமைப்பொன்று இல்லாததன் காரணமாக சிறுவர்கள் தொடர்பான நலனோம்புகையானது பாரிய சிக்கலுக்குரியதாக உள்ளது. சமூகப் பாதுகாப்பு மற்றும் அதுசார்ந்த கடமைகளுக்காக பணிக்கமர்த்தப்பட்டுள்ள கள உத்தியோகத்தர்கள் உள்ளபோதும் அபாயநேர்வுக்குட்படக்கூடிய சிறுவர்கள் மற்றும் குடும்பங்களை இனங்காண்பதிலும், அவர்களுக்கு உதவிபுரிவதிலும் நிலவும் குறைபாடுகள் காரணமாக அச்சேவைகள் பலவீனமடைந்துள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் சிறுவர் பாதுகாப்பு மற்றும் நலனோம்புகை தொடர்பான கொள்கையின் கீழ் பாதீட்டு ஒதுக்கீடுகளை அதிகரித்தல், சுகாதாரம், பாதுகாப்பினை மேம்படுத்தல், சட்ட மறுசீரமைப்பு மற்றும் கல்விசார்ந்தமுன்னேற்றம் ஊடாக இலங்கைசிறுவர்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும், பராமரிப்பினை உறுதிப்படுத்துவதற்கும் விரிவான அணுகுமுறையொன்று கடைபிடிக்கப்படும்.

## கோட்பாடுகள்

- சிறுவர்களுக்கு சுதந்திரம் மற்றும் பாதுகாப்பினை வழங்கும் ரு�Nஊசுஊ போன்ற சர்வதேசச் சமவாயங்களுக்கு இயைபான சட்டக் கட்டமைப்பொன்று
- சிறுவர்களை பராமரித்தல் மற்றும் ஊட்டச்சத்து
- சகல சிறுவர்களினதும் நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தி
- சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் மற்றும் சகலவிதமான சித்திரவதைகளிலுமிருந்தும் பாதுகாத்தல்

## செயற்பாடுகள்

- சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம், மகவேற்பு கட்டளைச் சட்டம், அலைந்துதிரிவோர் கட்டளைச் சட்டம், அனாதைகள் இல்லம் கட்டளைச் சட்டம் போன்ற காலங்கடந்த சட்டங்களை மீளாய்வுசெய்தல் அல்லது இரத்துச் செய்தல்.
- நீதி நிருவாகத்தை துரிதப்படுத்துவதற்காக சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு மாத்திரம் விசேட மேல் நீதிமன்றங்களை அமைத்தல்.
- பலியாக்கப்பட்ட சிறுவர்களின் சாட்சிகளை விசாரிப்பதற்காக ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றினை ஏற்படுத்தல் மற்றும் தற்போது நிலவும் விசாரணைமுறையை மேம்படுத்துவதன் ஊடாகஅவர்கள் மீண்டும் பலியாக்கப்படுவதைக் குறைத்தல்.
- சிறு குற்றங்களுக்கு சந்தேகநபர்களான சிறுவர்களை நீதிமன்றக் கட்டமைப்புக்குள் அனுப்புவதற்குப் பதிலாக தலையிட்டுடனான மற்றும் சமூகஞ் சார் புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்தல்.
- அபாயநேர்வுடைய சிறுவர்களை இனங்காணல் மற்றும் குடும்பங்களிலிருந்து தேவையற்றவகையில் பிரிந்துசெல்வதை தடுப்பதற்காக குடும்பங்களை மையமாகக்கொண்ட பராமரிப்பு மற்றும் ஒத்துழைப்பினை வழங்கல்.
- சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக சிறுவர்களை அழைத்துச் செல்லும்போது பாதுகாப்பான மற்றும் கௌரவமான போக்குவரத்துச் சேவையை உறுதிப்படுத்துவதற்காக சிறுவர் நேயமிக்க போக்குவரத்துக் கட்டமைப்பொன்றினை அமுல்படுத்தல்.
- தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை முறைப்படுத்தல் மற்றும் அந்நிறுவனங்களின் செயல் திறனை அதிகரித்தல்.

- சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை அறிக்கையிடல் மற்றும் உரிய பின்னாய்வினை உறுதிப்படுத்துவதற்காக வினைத்திறனான பதிலளிக்கத்தக்க சேவையொன்றினை ஸ்தாபித்தல்.
- விளிம்புநிலை மற்றும் அபாயநேர்வுக்குட்படக்கூடிய குழுக்கள் தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி கல்வி, சுகாதாரம், சமூகச் சேவைகள் மற்றும் சிறுவர் நலனோம்புகையின் ஏனைய அத்தியாவசியமான துறைகள் உட்பட தீர்மானகரமான துறைகளுக்கான பாதீட்டு ஒதுக்கீடுகளை அதிகரித்தல்.
- ஊட்டச்சத்துமிக்க உணவு வழங்கல் உட்பட ஒட்டுமொத்த சிறுவர் சுகாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சமூகம், குடும்பங்கள் மற்றும் பாடசாலைகளை மையமாகக் கொண்டஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் அலுவல்களுடன் தொடர்புடைய கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கி, அபாயநேர்வுக்குட்பட்டுள்ள சிறுவர்கள் வாழும் குடும்பங்களுக்கு நேரடியான சேவைகளை வழங்குவதற்கு அவர்களை ஈடுபடுத்தல்.
- அங்கவீனமுற்ற சிறுவர்கள், வீதிகளில் உள்ள சிறுவர்கள் மற்றும் பாடசலைக்கு செல்லாத சிறுவர்கள் உட்பட அபாயநேர்வுக்கு உட்படக்கூடிய சிறுவர்களை முன்கூட்டியே இனங்காண்பதற்கு மற்றும் அவர்களுக்காக உரிய தலையீட்டினை மேற்கொண்டு செயற்படுவதற்கு வலுவான பொறிமுறையொன்றினை ஸ்தாபித்தல்.
- சிறுவர் நேயமிக்க கல்விசார் சூழமைக்குள் வாழ்க்கைத் திறன்கள் மற்றும் அறிவினை ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டசர்வதேச நியமங்களுக்கு இயைபான கல்விச் சீர்த்திருத்தங்களை அறிமுகஞ் செய்தல்.
- மாற்றுப்பராமரிப்பு அவசியமான சகல குழந்தைகளுக்கும் குடும்பத்தை மையமாகக் கொண்ட சூழலுக்குள் நிலையான பராமரிப்புகிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக வளர்ப்புப் பெற்றோர் முறையில் விரிவான சீர்த்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- சிறுவர்களின் உளச்சமூக பிரச்சினைகளை முன்கூட்டியே இனங்காணல் மற்றும் அவற்றைத் தடுப்பதற்காக பாடசாலை மற்றும் சமூகத்தை மையமாகக்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.



## மனநிறைவு கொண்ட இளைமை

# கலாச்சார ரீதியாகவும் அடிமைத்தனமற்ற சிந்தனை

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 38% ஆனோர் அதாவது 85 இலட்சம் பேர் இளைஞர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். சுதந்திரத்திற்குப் பின்னரான முழுக் காலப்பகுதியிலும் இலங்கையின் இளைஞர் சமூகத்துக்கு திருப்தியற்றதொரு வாழ்க்கைமுறையே உரித்தாகி இருந்தது. குறிப்பாக ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக நிலவிய அரசியல் முறைமையும் அதன் அரசியல் கலாச்சாரமும் இலங்கையின் இளைஞர் சமூகத்தை அரசியலிலிருந்து ஒதுக்கியே வைத்திருந்தது. கடந்த சிலதசாப்தங்களில் வடக்கிலும் தெற்கிலும் மூன்று மக்கள் எழுச்சிகள் ஏற்படவும் அவற்றினால் இலட்சக் கணக்கான இளைஞர், யுவதிகள் உயிரிழக்கவும் இதுவரை காணப்பட்ட அதிகார வர்க்கத்தினரால் நிறைவேற்றத் தவறிய நிறைவேறாத இளைஞர்களின் கனவுகளே காரணமாக அமைந்துள்ளன. கல்வியில் குறைந்தளவிலான வாய்ப்புகள், பொருளாதாரத்தில் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் குறைவாக காணப்படுகின்றமை, தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் வளர்ச்சியில் பங்காளராவதற்கு இளைஞர்களுக்கு போதியவாய்ப்பு இல்லாமை, பாகுபாடு மற்றும் ஓரங்கட்டப்படாமல் சமமாக வாழும் வாய்ப்பை இழத்தல் மற்றும் கண்ணியத்துடன் வாழ இயலாமையும் இதற்கு காரணங்களாக அமைந்துள்ளன. அந்த நிலைமைக்கு எதிராக இளைஞர், யுவதிகளின் தலைமையில் 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டமானது பொருளாதார அழுத்தங்களுக்கு எதிரான கோரிக்கைகளை தாண்டி நாட்டின் ஆட்சிமுறையில் மாற்றத்தை கோரிநின்றது. ஆனாலும் போராட்டத்தின் அடிப்படை நோக்கத்தை அடையமுடியாமல் போனது. இந்த அனைத்து நிலைமைகளும் வரலாற்றில் நடந்ததைபோலவே தொடர்ந்தும் நாட்டின் வருங்கால அபிவிருத்திக்கு இணைத்துக்கொள்ளக்கூடிய மிகவும் வளர்ச்சிகண்டதும் வலுவானதுமான சக்தியாகத் திகழும் இளைஞர் சமூகம் குறைசலுகைகொண்ட புறக்கணிக்கப்பட்ட குழுவாக மாறிவுள்ளமையையே பிரதிபலிக்கின்றது.

**இளைஞர், யுவதிகளின் தலைமையில் 2022ஆம் ஆண்டு ஏற்பட்ட மக்கள் போராட்டமானது பொருளாதார அழுத்தங்களுக்கு எதிரான கோரிக்கைகளை தாண்டி நாட்டின் ஆட்சிமுறையில் மாற்றத்தை கோரிநின்றது. ஆனாலும் போராட்டத்தின் அடிப்படை நோக்கத்தை அடையமுடியாமல் போனது.**

## கோட்பாடுகள்

- பொருளாதாரச் செயற்பாட்டில் இளைஞர் சமூகத்தை செயலூக்கப் பங்குதாரர்களாக்குதல்
- அனைத்துவகையான ஒடுக்குமுறை, சுரண்டல்கள் மற்றும் பாகுபாடு ஆகியவற்றிலிருந்து விடுதலை.
- சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் இளைஞர் சமூகம்
- சமூக சவால்களை வெல்வதற்கு விஞ்ஞானம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை பயன்படுத்தும் இளைஞர் சமூகம்.
- அரசியல், சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகளுக்கு தலைமைத்துவம் வழங்கக்கூடிய இளைஞர் சமூகம்
- கலாச்சார வாழ்வியலுடன்கூடிய சுதந்திரமான சிந்தனையுடைய இளைஞர் சமூகம்.
- தேசிய மற்றும் சர்வதேச தலைமைத்துவத்தை ஏற்பதற்கு தகுதியுடைய திறன் படைத்த இளைஞர் சமூகம்.
- சமூக அநீதியை புறக்கணிக்கும் இளைஞர் சமூகம்.

## செயற்பாடுகள்

**பணக்கார மற்றும் திருப்திகரமானதொரு இளம் சந்ததி**

- இளைஞர், யுவதிகளுக்கு பொருத்தமான தொழில் புரிவதற்குள்ள அடிப்படைஉரிமை அரசாங்கத்தால் உறுதிசெய்யப்படல்.
- வேலையற்ற இளைஞர் யுவதிகளின் தகவல்களை பெறுவதற்கு தகவல் பணியகமொன்றை நிறுவுதல், அவர்களை தொழில் வெற்றிடங்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு வேலைவாய்ப்பு வங்கியொன்றை நிறுவுதல் மற்றும் இணைத்தளமொன்றின் மூலம் அதனை நிருவகித்து வேலையின்மையை படிப்படியாக இல்லாதொழித்தல்.
- அரச வேலைவாய்ப்புகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தற்போதுள்ள போட்டிப் பரீட்சைமுறையை புதுப்பித்து தெரிவுசெய்யும் நடவடிக்கைமுறையை இற்றைப்படுத்தல்.
- உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தபோதிலும் அரசாங்கப் பல்கலைக்கழகங்களுக்கு சேரமுடியாத இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்டுதொழில்சார் திறன்களுடன்கூடிய தொழில்நுட்பக் கல்வியை வழங்குதல்.
- உத்தேச அபிவிருத்தி வங்கிகள் (Development Banks) மூலம் தொழில்முனைவோர் வளர்ச்சியை இலக்காகக் கொண்டு இளைஞர், யுவதிகளுக்கு நிதிவசதிகளை அளித்தல்.
- ஆற்றல்மிக்க வேலையற்ற மற்றும் மாற்றுத்திறன்களைகொண்ட இளைஞர்களை தொழில் முனைவோர்களாக்குவதற்கு தேவையான பயிற்சி மற்றும் அடிப்படை மூலதனத்தைவழங்கி அவர்களுக்கு தேவையான சந்தையை அடைவதற்கு வசதிஅளித்தல்.
- இளம் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் பொருட்டு புதிய எண்ணக்கரு சந்தையை அடையக்கூடியவகையிலான உற்பத்தியாக அதனை மாற்றுவது வரையான

செயற்பாட்டுக்கு வசதிஅளிப்பதற்கு (V4R digital platform) பயன்படுத்தல்.

-  உலக இணையத்தொழில் சந்தையில் கணிசமான ஒரு பகுதியை அடைவதற்கு இளைஞர், யுவதிகளுக்கு தேவையான தொழில்நுட்ப மற்றும் இதரவசதிகளை அளித்தல்.
-  ஏற்கனவே இணையவழிமுறையில் அந்நியசெலாவணியை ஈட்டும் சுதந்திரமாக தொழில்புரியும் (Freelance) இளைஞர், யுவதிகளுக்கு அதில் காணப்படக்கூடிய தடைகளை நீக்குதல்.
-  வெளிநாடுவாழ் இளைஞர், யுவதிகளுக்கு இலங்கையில் பணத்தை முதலீடுசெய்து தொழில்முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்தல்.

**எதிர்காலத்துக்கான திறன்கள் (கல்வி,விஞ்ஞானமும் தொழில்நுட்பபணிகள் மற்றும் புத்தாக்கங்கள்)**

-  வீழ்ச்சிஅடைந்துள்ள அரச கைத்தொழில் தொழில்நுட்ப மற்றும் உயர் தொழில்நுட்ப பாடநெறிகளை புதுப்பித்து அவற்றை பட்டப்படிப்பு மற்றும் பட்டபின்படிப்பு பாடநெறிகள் வரை படிப்படியாக உயர்த்துதல்.
-  இளைஞர், யுவதிகள் தானாகவே சுயாதீனமாக ஆரம்பிக்கும் புதிய கல்வி மற்றும் அபிவிருத்தி கருத்திட்ட யோசனைகளை மறுமலர்ச்சிக்காக நாம் (We for the Renaisance - V4R Digital platform) டிஜிட்டல் தளத்தின் ஊடாக நேரடியாகவே அரசாங்கத்துக்கு சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளித்தல்.
-  கணினி எழுத்தறிவை குறுகிய காலப்பகுதியில் அதிகரிப்பதற்கும் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்ப சர்வதேச சந்தையில் ஒருபகுதியை அடைவதற்குமான இலக்குக்காக IT English and Soft Skills for Youth தொனிப்பொருளில் மாலைநேர ITES வேலைத்திட்டத்தை நாடளாவியரீதியில் விரிவுபடுத்தல்.
-  பிரதேசமட்டத்தில் சமுதாயபங்கேற்பு Multi Model Centres நிறுவுவதன் மூலம் அப் பகுதி இளைஞர், யுவதிகளுக்கும் வயதுவந்தோர்களுக்கும் சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
-  பல்வேறு இன, மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இளம் சந்ததியினரிடையே ஒருவரைஒருவர் புரிந்துகொள்ளும் வகையில் இளைஞர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை Youth Exchange Programe ஏற்பாடுசெய்தல்.

**அடுத்தவரை உணரும் ஒருவர் (கலை, கலாசார மற்றும் சுவை இன்பம் மற்றும் பொழுதுபோக்கு)**

-  நாட்டில் பல்வேறு இனக் குழுமங்களுக்கிடையே காணப்படும் கலாசார நடைமுறைகளையும் பழக்கவழக்கங்களையும் அடையாளங் காணுதல், ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல்
-  பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை முறையாக இளம் படைப்பாளிகளின் கலை, கலாசார ஆற்றல்களை மதிப்பீடுசெய்யும் முறையானசெயன்முறை
-  திறன்களுடன் கூடிய இளம் படைப்பாளிகளின் படைப்புகளை தயாரிப்பதற்கும் பிரச்சாரப்படுத்துவதற்கும் தேவையான நிதி வசதியினை அளித்தல்.

இளம் படைப்பாளிகளை பாராட்டி கௌரவிப்பதற்கும் ஊக்குவிப்பதற்கும் வருடாந்தம் இளைஞர் விருதுவிழாவை நடாத்துதல்.

**ஆரோக்கியமானஇளம் சந்ததி (உடல், உள நல்லிருப்பு, நச்சுபோதைப்பொருள்,பாலியல் கல்வி)**

- நச்சுபோதைப்பொருளின் பாகமான தாக்கம் தொடர்பான பரந்துபட்ட புரிதலை பாடசாலைக் காலத்திலிருந்தே இளைஞர்களுக்கு வழங்குதல்.
- புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தற்பொழுது செயற்படுத்தப்படுகின்ற இராணுவத்தை அடிப்படையாககொண்ட நடவடிக்கைமுறையை மாற்றி மீள மருத்துவரீதியான அடிப்படையின் கீழான செயன்முறையொன்றை உருவாக்குதல்.
- இளைஞர் சமூகத்தில் காணப்படுகின்ற தற்கொலை செய்வதற்கான போக்குகளை இல்லாதொழிப்பதற்கு 24 மணித்தியாலம் முழுவதுமாக செயற்படும் இரகசியத்தன்மையை பேணும் ஆலோசனைச் சேவையொன்றை ஆரம்பித்தல் மற்றும் அதற்கு பிரவேசிப்பதற்கு hot line இலக்கம் மற்றும் Youth App.

**உலகத்துடன் ஒன்றிணைந்த தற்கால இளம் சந்ததி (இணையவெளி, தகவல் தொழில்நுட்பம்)**

- Data freedom மற்றும் Data privacy ஐ உறுதிப்படுத்தல்
- சகல அரச பல்கலைக்கழகங்கள், உயர் கல்விநிறுவனங்கள், தொழில்நுட்பகல்லூரிகள், பாடசாலைகள் மற்றும் நூலகங்களுக்கு இலவச இணையவசதிகளை வழங்குதல்.
- பிரதேசமட்டத்தில் காணப்படும் சகல நூகலங்களுக்கும் நூலக முறைமையை அறிமுகப்படுத்தல் மற்றும் அதன் மூலம் நூலகங்களுக்கு பிரவேசிப்பதற்கு வாய்ப்பளித்தல்.
- நாட்டின் பொருளாதாரத்துக்கும், கல்வி மற்றும் மக்கள் வாழ்வுக்கும் முக்கியமான மென்பொருள் மற்றும் தொலைபேசி உள்ளீடுகளை உற்பத்திசெய்வதற்கு இளைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றை வருடந்தோறும் பாராட்டி கௌரவிப்பதோடு பொருளாதார வளர்ச்சிக்கு அவர்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளுதல்.

**நாட்டின் தலைமைத்துவத்தின் எதிர்காலம்**

- அரசியல் மற்றும் நியதிச் சட்டநிறுவனங்களின் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு இட ஒதுக்கீட்டுமுறை
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் அதன் கிளைகள், தேசிய இளைஞர் படையணி, இளைஞர் கழக இயக்கம் போன்ற அரசநிறுவனங்களை அறிவு, திறன், ஒழுக்கத்துடன் கூடிய செயலாற்றல்மிக்க நவீன இளம் தலைவர், தலைவிகளை கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்டு மறுசீரமைப்புசெய்தல்.
- பிரதேசமட்டத்தில் Youth Circles கட்டியெழுப்புதல்.
- அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களில் இளம் பிரதிநிதித்துவம்.
- இளைஞர், யுவதிகளுக்கு தேசிய மற்றும் சர்வதேச அரசியல் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்துவதற்கு தேசிய அரசியல் கற்கை அக்கடமி
- 2022 போராட்டத்துடன் தொடர்புடையதான அரசியல் எதிரிகளை அடக்குவதற்காக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை விசாரணை நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்படாத மற்றும் குற்றச்சாட்டுகள் தாக்கல் செய்யப்படாத வழக்கு நடவடிக்கைகளை

உரியநடவடிக்கை முறைகளை பின்பற்றி துரிதமாக நிறைவுசெய்தல்.

**இயற்கையுடன் இணைந்து சிந்திப்போம்**

- சுற்றாடல் அமைப்புகள், சுற்றாடல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சூழலியலாளர்களை இணைத்து இளம் சூழலியலாளர்களின் தேசிய சுற்றாடல் செயற்பாட்டு நிலையம்.
- அழிந்துபோயுள்ள சூழல் கட்டமைப்புகளை அறிவியல்பூர்வமாக மீளமறுசீரமைப்பதற்கு பயிற்சிபெற்ற தொண்டர் இளைஞர் படையணி.
- தெரிவுசெய்யப்பட்ட நிர்வாக அலகுகள் மட்டத்தில் இளைஞர் செயற்பாட்டு சுற்றாடல் குழுக்கள்.
- சுற்றாடல் தொடர்பான அறிவு மற்றும் அனுபவங்களை பரிமாற்றிக் கொள்வதற்கு சர்வதேச சுற்றாடல் அமைப்புகளுடன் இணைந்த வேலைத்திட்டங்கள்.
- யானை - மனிதன் மோதலை முகாமைத்துவம் செய்வதற்கு ஆர்வங்கொண்டுள்ள இளம் சுற்றாடல் செயற்பாட்டாளர்களை முனைப்புடன் இணைத்துக் கொள்ளுதல்.
- வித்தியாசம் நிலவினாலும் சமமானவர்களே (ஆண் பெண் சமூகநிலை மற்றும் பாலியல் நோக்குநிலை)
- ஆண் - பெண் சமூகநிலை பாலியல் நோக்குநிலை சம்பந்தமாக நிலவுகின்ற பாதகமான மற்றும் தவறான மனப்பாங்குகளை ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்தல்.



## கௌரவமான மூத்த பிரஜை

# அர்த்தமுள்ள ஓய்வுகால வாழ்க்கை

எங்கள் மக்கட் சமூகத்தின் கலாச்சாரப் பெறுமதி என்ற வகையில் முதியோர்களை பேணிப்பாதுகாத்தல் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளினதும் உறவினர்களினதும் பணியாக அமைந்தபோதிலும் தனது வாழ்க்கையில் நீண்டகாலமாக தமது குடும்பத்தை உள்ளிட்ட சமூக பொருளாதார அபிவிருத்திக்காக பங்பளிப்புச்செய்த முதியவர்களை அவர்களின் அந்திமப்பொழுதில் பேணிப்பாதுகாக்க வேண்டியது சமூகப்பொறுப்பாகும். 2023 இல் இலங்கையின் முதியோர் சனத்தொகை (60 வயதிற்கு மேற்பட்ட) 3.7 மில்லியன்களாகும். அது ஒட்டுமொத்த சனத்தொகையில் 17.2% ஆகும். 2045 இல் இந்த சதவீதம் 21% ஆக அமையுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஒருசில கொள்கை வகுப்போர் ஒட்டுமொத்த சனத்தொகையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை ஒரு சிக்கலாகுமென இனங்கண்டாலும் பொறுப்புடையவர்களாக அந்த நிலைமையை விளங்கிக்கொள்வதன் மூலமாக முதியோர் தொடர்பில் விசேட கவனத்துடன் செயலாற்றவேண்டுமென்பது தேசிய மக்கள் சக்தியின் அபிலாஷையாகும்.



## செயற்பாடுகள்

- வீடுகளில் முதியோர்களை பேணிப்பாதுகாக்கின்ற வேளைகளில் அதற்கு அவசியமான அடிப்படை வசதிகளை வழங்குதல்.
- முதியோர்களின் சுகாதார நடவடிக்கைகள் பற்றி கண்டறிவதற்காக சுகாதார அணிகளை ஈடுபடுத்துதல்.
- சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக முதியோர் பராமரிப்பு நிலைய முறைமையொன்றை ஏற்படுத்துதல்.
- சாதகமான உளநிலைமையை பேணிவருவதற்காகவும் சமூக உரையாடலை ஏற்படுத்துவதற்காகவும் முதியோர்களை படைக்குந்திறன்மிக்க பொருளாதார நடவடிக்கைகளில் இணைத்துக்கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை தயாரித்தல்.
- தனியார் பிரிவிலும் முறைசாராத தொழில்கள் பிரிவிலும் ஈடுபட்டுள்ளவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை அமுலாக்குதல்.
- அனைத்து முதியோர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கின்ற காப்புறுதிக் காப்பீட்டினை அமுலாக்குவதற்கான நிதியமொன்றை நிறுவுதல்.
- முதியவர்களின் அன்றாட வாழ்க்கையை சுதந்திரமான சுற்றுச்சூழலொன்றில் மகிழ்ச்சியாக கழிப்பதற்காக நடைபாதை நிரல்கள், மத வழிப்பாட்டு நிலையங்களுக்கு அருகில் விடுமுறை விடுதிகளை உருவாக்க தூண்டுதல் அளித்தலும் அரசாங்க இடையீடு மூலமாக நிர்மாணித்தலும்.
- பொதுச் சேவைகள் வழங்கப்படும் இடங்களில் முதியவர்களுக்காக முன்னுரிமை நிகழ்ச்சித் திட்டமொன்று.
- நிதிசார் சிரமங்களை எதிர்நோக்குகின்ற முதியவர்களுக்காக நிதிரீதியான கொடுப்பனவொன்றினை வழங்குதல். வயதுமுதிர்ந்த மற்றும் வலதுகுறைந்த ஆட்களை பேணிப் பாதுகாத்தல் பற்றிய தொழில்சார் பாடநெறிகள்

## பாதிக்கப்படாத சமூக வாழ்க்கை

# நியாயமான சம அணுகல்

ஒவ்வோராளும் தனது வாழ்க்கையில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பாக வயோதிப பருவத்தில் வழமைபோல் செயலாற்றுவதிலான சிரமங்களை எதிர்நோக்க இடமுண்டு. குடும்ப அங்கத்தவர் ஒருவர் இயலாமை நிலையுடன் பிறக்கையில் இன்றேல் பிள்ளைப் பருவத்தில், புத்திளமைப்பருவத்தில் அல்லது வயதுவந்தவர்களாகும்போது இயலாமை நிலையை அடைகையில் வேதனை மிக்க தருணங்களை அனுபவிக்க நேரிடும். எனவே இயலாமை நிலையுற்ற ஆட்களின் வாழ்க்கையை வலுப்படுத்தல் மற்றும் அவர்கள் சமூகத்தில் முழுமையாக பங்கேற்கக்கூடிய சுற்றுச்சூழலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அத்தியாவசியமானதாகும். குறிப்பாக வறிய சமூக பொருளாதார அடுக்குகளுக்கிடையிலும் கிராமிய பிரதேசங்களில் இயலாமை நிலையுற்ற ஆட்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு அவர்களுக்கு முறையான வசதிகளும் கிடைப்பதில்லை. இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 8.7% வலது குறைந்த ஆட்களாக (மாற்றுத்திறனாளிகள்) இருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி வலது குறைந்த ஆட்களும் நாட்டின் ஏனைய பிரஜைகளுடன் சமமானவர்களாக வாழ்வதற்கான உரிமை, கல்விக்கும் தொழிற் கல்விக்குமான உரிமை, தொழில் ஒன்றில் ஈடுபடுவதற்கான உரிமை, போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான உரிமை, அரச சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான உரிமை என்ற வகையிலான அனைத்து உரிமைகளையும் ஏற்றுக்கொள்வதோடு மேற்படி உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறை சாத்தியமான வழிமுறைகள் இந்த கொள்கைகள் மூலமாக முன்வைக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க வலது குறைந்த ஆட்களை பொருளாதார மற்றும் சமூக ரீதியாக மனநிறைவினைக் கொண்ட அத்துடன் அவர்களை சமமாக கவனிக்கின்ற உள்ளீர்க்கப்பட்ட சமூகமொன்றை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.



## கோட்பாடுகள்

- உன்னதமான சேவை வழங்கல்.
- உள்ளடக்கிய கல்வி.
- பொருளாதார சுயாதீனத்தன்மை.
- பாதுகாப்பும் உரிமைகளும்.
- சுகாதாரமும் நல்வழியுரிமையும்
- உள்ளடக்கிய பொதுச் சேவைகளும் சம அணுகலும்.

## செயற்பாடுகள்

**உன்னதமான சேவைகள் முகாமைத்துவமும் கட்டுப்பாடும்**

- வலது குறைந்த ஆட்கள் சம்பந்தமான சட்டங்களை அவசியமான வகையில் திருத்தியமைத்தல், அவசியமான புதிய சட்டங்களை ஆக்குதல் மற்றும் வலது குறைந்த ஆட்களின் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம் (CRPD) உள்ளிட்ட சமவாயங்களை வலுப்படுத்துதல்.
- வலது குறைந்த ஆட்களுக்கான தேசியத் திட்டம்.
- வலது குறைந்த ஆட்களுக்கான சேவைகளின் பயனுறுதியை அளவிடுவதற்கான மதிப்பீட்டுச் சட்டகம்.
- வலது குறைந்த அங்கத்தவர்கள் இருக்கின்ற குடும்பங்களுக்கு அரச கொள்கைகள் பற்றிய வளங்களையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கான நிகழ்நிலை (Online) தகவல் நிலையம்.
- வலது குறைந்த ஆட்களுக்கு நவீன தொழில்நுட்பத்தை பாவிப்பதற்கான மிகவும் பயனுறுதிமிக்க விழிப்புணர்வூட்டல், பயிற்றுவித்தல் மற்றும் ஒத்துழைப்பினை உறுதி செய்தல்.

**கல்வி**

- தரம்மிக்க, கட்டுப்படியான, உள்ளடக்கிய மற்றும் இலகுவான அணுகலைக்கொண்ட ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி.
- வலது குறைந்த பாடசாலை சிறார்களுக்கான உள்ளடக்கிய கல்வி.
- பாடசாலை ஆசிரியர்கள், அரசார்பற்ற அமைப்புக்களின் ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் தொகுக்கப்பட்ட அறிவையும் புரிந்துணர்வையும் விரிவாக்குதல்.
- சைகை மொழிப்பயிற்சி பெற்ற ஆசிரியர்களை பாடசாலை கல்வியில் சேர்ந்துக் கொள்வதற்கான வசதிகள்.
- சைகை மொழிபெயர்ப்பாளர்களை அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக ஆற்றுப்படுத்துகின்ற வசதிகள்.

- ஒவ்வொரு கல்விக்கோட்டத்திலும் விசேட கல்வி சிறுவர் அபிவிருத்தி வளங்கள் மையமொன்று.
- வலது குறைந்த சிறுவர்களுக்கான ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை உள்ளிட்ட ஏனைய வசதிகள்.
- வலது குறைந்த மாணவர்களுக்கான மாகாண மற்றும் தேசிய மட்ட விளையாட்டுக்களும் விசேட புறப்பாடவிதான செயற்பாடுகளும்
- இலாபம் ஈட்டாத வலது குறைந்த ஆட்களுக்காக நற்பணி நிறுவனங்களுக்கான வரிச் சலுகைகள்.
- வலது குறைந்த ஆட்களுக்கான தொழில்சார் மதியுரைகளும் வழிகாட்டல் சேவைகளும்.

## பொருளாதார சுயாதீனத்தன்மை

- அரச மற்றும் அரசதுறையல்லாத பிரிவுகளின் தொழில்களில் வலது குறைந்த சமூதாயத்திற்கு 3% வீதத்தை வழங்குதலை அமுலாக்கி அந்த கோட்டாவினை படிப்படியாக 5% வரை அதிகரித்தல்.
- வலது குறைந்த ஆட்களுக்கான தொழில்வாய்ப்புகள், தொழில் முயற்சி உரித்துவமும் அபிவிருத்தியும், சுயதொழில்கள் மற்றும் தொழில் முயற்சியாண்மையை ஊக்குவித்தல்.
- வலது குறைந்தவர்களுக்கே தனித்துவமான சிக்கல்கள் பற்றி தொடர்பாடலை மேற்கொள்வதற்காக, தம்மைப் பற்றிய உள்ளுணர்வினை மாற்றியமைத்துக் கொள்வதற்காகவும் உள்ளடக்கப்படுதலை ஊக்குவிப்பதற்காகவும் கடமை நிலையங்களில் வலது குறைந்தவர்களின் வலையமைப்பினை பலப்படுத்துதல்.
- குறைந்த வருமானம் பெறுகின்ற வலது குறைந்த குடும்பங்களுக்காக சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கான நிதியுதவிகளை விரிவாக்குதல்.

## சுகாதாரமும் நல்வழியுரிமையும்

- வலது குறைந்த ஆட்களின் சுகாதார சேவைகளை நிவர்த்தி செய்வதற்காக சம்பந்தப்பட்ட சுகாதார சேவை வழங்குநர்களின் தொழில்சார் திறன்களையும் உளப்பாங்குகளையும் மேம்படுத்துதல்.
- வலது குறைந்த ஆட்களுக்காக பொது இடங்களிலும் சேவைகளிலும் அணுகல் வசதிகளை விரிவாக்குதல்.
- ஓட்டிசம் மற்றும் பிற வலது குறைவுகளை முன்கூட்டியே இணங்காணலும் வளர்ச்சியை குறைப்பதற்கு இடையீடு செய்வதற்கான சுகாதார சேவை வசதிகள்.
- வலது குறைந்த ஆட்களை இனங்காணவும் சேவை நிலையங்களில் பிரவேசிப்பதற்கான வசதிகளை வழங்குகின்ற முன்னுரிமை அட்டை.
- சுகாதார வைத்திய அதிகாரி (MOH) பிரதேச மட்டத்திலும் புனர்வாழ்வு வைத்தியசாலைலூடாக சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வு சேவைகளை மேம்படுத்துதல்.

### பாதுகாப்பு உரிமைகள் மற்றும் நீதி

-  அரசாங்க நியமங்களுக்காக வலது குறைந்தவர்கள் விண்ணப்பிப்பதை ஊக்குவித்தல்
-  பொது போக்குவரத்தில் வலது குறைந்த ஆட்கள் பற்றி போக்குவரத்து பணியாட்தொகுயினரை உள்ளிட்ட பொதுமக்களின் சாதகமான மனோபாவங்களை மேம்படுத்துதல்.
-  வலது குறைந்த ஆட்களுக்கு அவசியமான சட்டத்தகவல்களை வழங்குதல் மூலமாக நீதிமன்றத்தினதும் சட்டத்தினதும் உதவிக்கான அணுகல்.

### பொதுச் சேவைகளும் சமுதாய ஒத்துழைப்பும்

-  பொதுக்கட்டிடங்களை திட்டமிடுகையில் வலது குறைந்தவர்களின் பாதுகாப்பையும் அணுகலையும் உறுதி செய்தல்.
-  வலது குறைந்த ஆட்கள் சமூக, பொழுதுபோக்கு, விளையாட்டு, சமையல் மற்றும் கலாச்சார வாழ்க்கையில் பங்கேற்றலை உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக உள்ள வாய்ப்புகளை விரிவாக்குதல்.
-  வலது குறைந்த ஆட்கள் பொது மற்றும் தனியார் போக்குவரத்தினை பாவிப்பதை வசதிப்படுத்துவதற்காக அவசியமான அளவுக்கோல்களை அறிமுகம் செய்தலும் தனித்துவமான பாக்குவரத்துச் சேவைகளை வழங்குதலும்.
-  இயலாமை நிலைக்கு ஏற்ற வீதிகள் மற்றும் வாகன தரிப்பிடங்களில் வலது குறைந்த ஆட்களை உள்ளடக்குவதற்கான வசதிகள்.
-  நிகழ்நிலை பொது சேவைகளின் அணுகலை விரித்தச் செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்.
-  வலது குறைந்த ஆட்களுக்கான புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
-  வலது குறைந்த ஆட்கள் பாவிக்கின்ற உதவிச்சாதனங்களை இறக்குமதி செய்கின்றபோது வரிச் சலுகைகள்
-  செவிப்புலனற்றவர்களுக்கான சைகை மொழியை தொடர்பாடல் மொழியாக ஏற்றுக்கொள்ளல். வலது குறைந்த ஆட்களின் கலை மற்றும் கலாச்சார பங்கேற்பினை விரிவாக்குவதற்கான உள்ளடக்க நாடக அரங்குகளும் விளையாட்டு மைதானங்களும்.

3

## நவீன வாழ்க்கை

# செல்வம் கொழிக்கும் நாடு



## சனநாயக ரீதியான பொருளாதாரம்

# செல்வம் கொழிக்கும் நாடு

ஒரு நாட்டு மக்களின் உயர்வான வாழ்க்கைத் தரமும் சமூக கலாச்சார முன்னேற்றமும் அந்நாடு கடைப்பிடிக்கின்ற சரியான பொருளாதாரக் கொள்கையின் மற்றும் செயற்பாடுகளின் பேரிலேயே தீர்மானிக்கப்படகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் இந்நாட்டின் ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த அழிவுமிக்க பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் ஊழல்மிக்க அரசியல் கலாச்சாரத்தின் பெறுபேறாக இன்றளவில் எமக்கு எஞ்சவைத்திருப்பது வீழ்த்தப்பட்ட மற்றும் சுருங்கிய பொருளாதாரம் அத்துடன் எல்லாவிதத்திலும் சிதைக்கப்பட்ட மனித வாழ்க்கையைக்கொண்ட சமூகத்தையாகும். ஒட்டுமொத்த தேசத்தையும் கடன் பொறிக்குள் சிக்கவைத்து 1990 இல் 310,779 மில்லியன் ரூபாவாக அமைந்த அரசாங்கத்தின் மொத்தக் கடன் அளவினை 2023 இல் 28,695,950 மில்லியன் ரூபா வரை வளர்த்தெடுத்துள்ளார்கள். 2015 இல் இருந்து 2019 வரையான காலத்தில் மாத்திரம் ஒட்டுமொத்த கடன் அதிகரிப்பு 13,031,543 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு அது சதவீத அடிப்படையில் 74% சீரழிவாகும். மேலும் 2021 உடன் சார்புரீதியாக 2022 இல் 51.43 வழமைக்குமாறான கடன் அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. 2024.03.31 இல் ஒட்டுமெர்த அரச படுகடன் 28,013,560 மில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளதோடு அது 100,000 மில்லியன் அமெரிக்க டொலர்களைவிட அதிகமானதாகும்.

எவ்வாறாயினும் பெறப்பட்ட கடன் பொருளாதாரரீதியாக பொருளாதார நன்மைகளை கொண்டுவருகின்ற விளைபயன்மிக்க கருத்திட்டங்களில் முதலீடு செய்யப்படாமையாலும் முறைதகாத பாவனை காரணமாகவும் கடன் வளர்சியடைந்த வேகத்துடன் சார்புரீதியாக பொருளாதாரம் வளரச்சியடையவில்லை. 2015 இல் இருந்து 2019 வரையான காலப்பகுதிக்குள் வருடாந்த பொருளாதார வளர்ச்சிவேகம் 5% இல் இருந்து -0.2 வரை வீழ்ச்சியடைந்தது. 2023 இல் அது -2.3% ஆக அமைந்தது.

பலவீனமான வரி நிர்வாகம், வினைத்திறமையீனம், ஊழல், வரி மோசடிகள், அன்பர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்குதல், வரி செலுத்தத் தவறுதல் காரணமாக மொத்த உள்நாட்ட உற்பத்தியின் சதவீதமென்றவகையில் அரசாங்கத்தின் வரி வருவாய் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. 2023 திசெம்பர் அளவில் தவறவிடப்பட்ட மொத்த வரி அளவு மாத்திரம் 1,100,000 மில்லியன் ரூபாவைவிட அதிகமானதாகும்.

அரசாங்கத்தின நிலைப்பாடாக அமைவது பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான நாட்டின் ஒட்டுமொத்த கேள்வியும் மக்களின் செலவுசெய்யக்கூடிய வருவாயும் வீழச்சியடைந்தமையால் தோன்றக்கூடிய பாதகமான பிரதிவிளைவுகளை பொருட்படுத்தாமல்விட்டு



சதாரண பொதுமக்கள்மீது மென்மேலும் அநீதியான வரி விதித்தல், அத்தியாவசியமான பொதுச்செலவுகளை வெட்டிவிடுதல் மற்றும் மக்களின் சொத்துக்ளை விற்பதேயாகும்.

பணவீக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளதாக பல்வேறு வாதங்களை முன்வைத்தாலும் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகள் மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத மட்டத்திற்கு அதிகரித்திருப்பதே யதார்த்தமாகும். அடிப்படைத் தேவைகளை அளவுசார்ரீதியான நிவர்த்திசெய்துகொள்ள முடியாத அளவிற்கு மக்களின் மெய் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. அழிவுமிக்க அரசியலின் விளைவாக இன்றளவில் நாட்டின் ஒட்டுமொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 26% வறுமைக் கோட்டுக்குக் கீழே இழுத்துப் போடப்பட்டுள்ளார்கள்.

தான்தோன்றித்தனமான அந்நிய செலாவணி பாவனை, பலவீனமான அந்நிய செலாவணி வீத முகாமைத்துவம், நாட்டின் கடன்தரப்படுத்தலில் தொடர்ச்சியான வீழச்சிநிலை காரணமாக உருவாகிய வெளிநாட்டுக் கடன் மீள்நிதியிடலின் ஆற்றாமை, வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்க முடியாமை, தொடர்ச்சியாக உயர்வடைகின்ற இறக்குமதிச் செலவுகளும் அதிகரிக்காத எற்றுமதி வருமானமும் காரணமாக பொருளாதாரத்தின் வெளிவாரிப்பிரிவு நாளுக்குநாள் பலவீனமடைந்து வருகின்றது. பாவிப்பதற்கான நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு சீன மக்கள் வங்கியிடமிருந்து வழங்கப்பட்டிருந்த 1.5 பில்லியன் டொலராக அமைந்த பரிமாற்றக்கடன் வசதிகளை உள்ளிட்டதாக 2024 மே மாதமளவில் வெளிநாட்டு ஒதுக்கங்கள் 5.4 பில்லியன் டொலர்கள் இருந்தபோதிலும் அது பிரதானமாக செலுத்தாத கடன் வட்டி மற்றும் கடன் தவணைகள், இறக்குமதி மட்டுப்பாடுகள் மற்றும் வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களால் மேற்கொள்ளப்பட்ட பணமனுப்பல்களின் பெறுபேறுகள் காரணமாகவேயொழிய அரசாங்கம் கடைப்பிடித்த சாதகமான செயல்களின் பெறுபெறுகளால் அல்ல.

மறுபுறத்தில் வருமானப் பகிர்ந்துசெல்லல் ஏற்றத்தாழ்வுகளை எடுத்துக்காட்ட இயலும். இலங்கையின் குடும்ப எண்ணிக்கையில் கீழ்மட்டத்தில் இருக்கின்ற 20% இற்கு தேசிய வருமானத்தில் 4.6% மாத்திரமே உரித்தாவதோடு 20% அதியுயர்மட்டக் குடும்பங்கள் வருமானத்தில் 51.4% ஐ அனுபவித்து வருகின்றன. மக்களால் சுதந்திரமாக பொருளாதார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நியாயமான வாய்ப்புகள், சமமான இடையீட்டின்கீழ் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்கின்ற செயற்பாட்டில் தொடர்புடதல் மற்றும் அனைவருக்கும் பொருளாதார நன்மைகளின் நியாயமான பங்கு கிடைப்பதை உறுதிப்படுத்துகின்ற பொருளாதார சனநாயகத்தை முதன்மையாகக்கொண்ட மனிதவள அபிவிருத்தி திட்டமும் தொழில்நுட்ப அபிவிருத்தியும்கொண்ட பயணப்பாதையுடன் ஒன்றுடனொன்று இணைந்த நிலைதளராத உற்பத்திப் பொருளாதாரம் மூலமாக 2030 இல் 120 பில்லியன் டொலர் மெய்த் தேசிய உள்நாட்டு உற்பத்தியை (Real GDP) இலக்காகக்கொண்ட நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் அடைவதற்கான பத்து பிரதான கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டதாக தேசிய மக்கள் சகதியின் பொருளாதார கொள்கைச் சட்டகம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இந்த கொள்கையைத் திட்டமிடுகையில் நாடடின் வளங்களின் தாராளமாகக் கிடைக்கின்ற தன்மை மற்றும் பெறக்கூடிய நிலைமை, ஆராய்ச்சி அபிவிருத்திப் பணிகளின் பெறுபேறுகள், சமூகரீதியாக பொதிந்துள்ள அறிவு, மக்களின்நாகரிகம், உயிர்ப்பன்வகைமை, பாவிக்கவேண்டிய தொழில்நுட்பம், உலகளாவிய பெறுமான சங்கிலித்தொடரின் பாங்குகள், நாட்டின் மூலொபாயரீதியான இடஅமைவு மற்றும் பேணிவரப்படவேண்டிய இராஜதந்திரஉறவுகளின் தன்மை ஆகிய விடயங்கள் ஆரம்பத்திலேயே கருத்திற்கொள்ளப்பட்டன.

## கோட்பாடுகள்

**மனிதத்துவத்திற்கு முன்னுரிமை**

- பொருளாதார சனநாயகம்.
- பொதுமக்கள் பங்கேற்பும் இடைத்தொடர்புடைய சமூகமும்.
- உணவுப் பாதுகாப்பு.
- நியாயமான பொருளாதார நன்மைகள்.
- நிலைபெறுதகு வளப்பாவனை.
- வணிகமயமாக்கப்படாத பொதுமக்கள் சேவைகளும் சமூகப் பாதுகாப்பும்.
- சர்வதேச ஒத்துழைப்பும் கூட்டுணர்வும்.
- கொடுப்பனவு கிடைக்காத உழைப்புப் பங்களிப்பினை பிணையங்களாக பொருளாதாரத்தில் எற்றுக்கொள்ளல்.
- முற்போக்கானதும் நியாயமானதுமான வரிவிதிப்பு.

## செயற்பாடுகள்

**பேரண்டப் பொருளாதார உறுதிநிலைப்படுத்தல்**
**அரச நிதிக்கொள்கை**

- சர்வதேச கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக செயலாற்றவதற்கான விசெட பிரிவொன்றுடனான வரிக்கொள்கையை திட்டமிடுதலும் அமுலாக்குவதற்கான சிறப்புப் பிரிவும்.
- வரி நிர்வாகத்தை வினைத்திற்னகொண்டதாக மாற்றுவதற்காக அவசியமான சட்ட மறுசீரமைப்புகளைச் செய்தல்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கான பயிற்சியும் கொள்திறன் அபிவிருத்தியும்.
- நிலுவை வரிகளை துரிதமாக அறவிட அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வரிஅறவிடுதலின் வினைத்திறன் மற்றும் நியாயமானதன்மையை உறுதிசெய்வதற்காக மதுவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மோட்டார் வாகன திணைக்களம், காணிப் பதிவகம், உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் தொழிற்பாடுகளை உள்நாட்டு இறைவரத் திணைக்களத்துடன் வலையமைப்பாக்குதல்.
- அரச சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் ரெசாங்க்துடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட ஒவ்வொரு பிரஜைக்கும் திட்டவட்டமான டிஜிட்டல் அடையாளக் குறியட்டினை (Unique Digital Identification code) வழங்கதல்

- ஆட்களுக்காக வருடாந்த வரி விடுப்பு எல்லையை 12 இலட்சம் ரூபாவில் இருந்து 24 இலட்சம் ரூபா வரை அதிகரித்தலும் வரித் தொகுதிகளுக்கான (Tax Brackets) வரிவீதங்களை (Tax Rates) நியாயமானவகையில் திருத்தியமைத்தலும்.
- வரிக் கோட்பாடுகளுக்கு அமைவாக வரிஅடிப்படையை (Tax Base) வலையை விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மூலதனச் செலவுகளில் கம்பெனிகளின் வருமான வரிக்காக கழிக்கக்கூடிய தேய்மானக் கொடுப்பனவினை 120% வரை அதிகரித்தல்.
- வற் (VAT) வரி சேகரிப்பினை ஒழுங்குறுத்தவதற்காகவும் வினைத்திறனுடையதாக்கவும் பொயின்ற ஓஃப் சேல்ஸ் (POS) கருவிகளையும் டிஜிட்டல் இன்வொயிஸ் முறைகளையும் அறிமுகஞ்செய்தல்.
- உள்நாட்டில் உற்பத்தி செய்கின்ற பால், முட்டைகளை உள்ளிட்ட அத்தியாவசிய உணவு, பாலகர் பால், ஔடதங்கள், பாடசாலை நூல்கள் மற்றும் உபகரணங்கள், சஞ்சிகைகள், நூலக சேவைகள், விவசாய உபகரணங்கள், பசளை, சூரியக் கலங்களும் துணைச்சாதனங்குளம், புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி பிறப்பாக்க கருவிகள், வலதுகுறைந்த ஆட்கள் பாவிக்கின்ற வாகனங்களும் உபகரணங்ளும், கணிணிகள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றள மென்பொருள்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவைகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சேவைகள் என்பவற்றுக்கான வற் வரியை 0% வரை கொண்டுவருதல்.
- வற் வரிக்கு ஏற்புடையதாகின்ற பண்டங்களை வகைப்படுத்தி அந்தந்த தொகுதிக்கான வரி வீதங்களை அறிமுகஞ்செய்தல்.
- உள்ளீட்டு வற் (Input VAT) மீதான ஏற்றுமதி அபிவிருத்தி வரியை ஏற்றுமதியாளர்களுக்கு துரிதமாக மீளளிப்புச்செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- தற்போது அமுலாக்கப்பட்டு வருகின்ற அபாயநேர்வு வரிக் கணக்காய்விற்குப் பதிலாக அபாயநேவின் அடிப்படையிலான கணக்காய்விற்கு மாறுதல்.
- வரி மதிப்பீடுசெய்தல், வரி அறிக்கைகளை தொகுத்தல், வரி செலுத்துதல் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் மூலமாக செலுத்துதல் வசதிகளையும்கொண்ட நிகழ்நிலை முறையியலை அறிமுகஞ் செய்தல்.
- இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை வசதிகளை வழங்க ஏனைய அரச நிறுவனங்களம் இலங்கைச் சுங்கமும் இணைக்கப்பட்டு தனியான சேவைகள் கருமபீடமொன்றை நிறுவுதல்.
- நியாயமானவகையில் சுங்க வரி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக நிலவுகின்ற சிக்கலான சுங்கவரி வீதங்களை எளிமையாக்குதல்.
- ஏற்றுமதி ஈட்டல்களுக்கு சார்புரீதியாக வெளிநாட்டு ஆராய்ச்சிகளை வரவழைப்பதற்காகவும் தொழிற்பாடுகளை வினைத்திறன் கொண்டதாக்குவதற்கும் இலங்கைச் சுங்கத்திற்க அதிகாரம் கையளிக்கப்படுகின்ற வகையிலான அந்நிய செலாவணி சட்டத்தை திருத்துல்.
- இறக்குமதி - ஏற்றுமதியாளர்களுக்கு மிகுந்த வினைத்திறனும் குறைந்த கிரயமும்கொண்ட சேவைகளை வழங்குவதற்காக இலங்கைச் சுங்கத்தின் பணிகளை பன்முகப்படுத்துதல்.
- நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவோருக்கானள ஏற்றுமதி தயாரிப்புகளுக்காக தற்காலிக இறக்குமதித் திட்டத்தின்கீழ் (TIEP) மூலப்பொருட்களையும் இயந்திரசாதனங்களையும் இறக்குமதி செய்வதற்கான வசதிகளை வழங்குதல்.

- சர்வதேச கொடுக்கல் வாங்கல் மற்றும் பரிமாற்ற விலைகளின் (Transfer Pricing) அடிப்படையில் இடம்பெறுகின்ற வரிக் கசிவு, வரி செலுத்துதலை தவறவிடுதல், குறை இன்வொயிஸ் மற்றும் மிகை இன்வொயிஸ் என்பவற்றைத் தடுப்பதற்காக நாடுகளுக்கிடையில் தன்னியக்க தகவல் பரிமாற்றம் (AEoI) போன்ற வழிமுறைகளை அறிமுகஞ்செய்தல்.
- சர்வதேச உடன்படிக்கைகளுக்கு அமைவாகவும் சம்பந்தப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாகவும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் குறைந்தபட்ச உலகளாவிய வரியை (Minimal global taxation) விதித்தல்.
- இலத்திரனியல் பெறுகையை (கொள்முதல்) உள்ளிட்ட டிஜிட்டல் அடிப்படையிலான அரசாளுகை மற்றும் பலம்பொருந்திய அரச மேற்பார்வைப் பொறியமைப்பு மூலமாக அரச நிதி வினைத்திறன் மற்றும், வெளிப்படைத்தன்மை, கட்டுப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலை அதிகரித்தல் மற்றும் அநாவசியமான அரச செலவினங்களை வெட்டிவிடுதல்.

## நிதிசார் கொள்கைகள்

- நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முனைவொரது பொருளாதார அலுவல்களை இயல்புநிலைக்கு கொண்டுவருதலும் நிலுவைக் கடன்களுக்காக நிவாரணங்களை வழங்க பதிய நிவாரண வங்கியொன்றை தாபித்தலும்.
- தொழில்முனைவோருக்கான நீண்டகால நிதியிடல், புதிய தொழில்முயற்சிகளைத் தொடங்குதல் மற்றும் தொழில்முயற்சிகளை விரிவாக்குவதற்கான புதிய தேசிய அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுதல்.
- சிறிய அளவிலான கமக்காரர்கள், உற்பத்தியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களுக்காக நிதி வசதிகளை வழங்க கூட்டுறவு, சமுர்த்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை வினைத்திறன் கொண்டதாக நெறிப்படுத்துதல்.
- சட்டமுறையான ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களை மீறி வழங்கப்பட்டுள்ள நுண் நிதிக்கடன்கள பற்றி மீளாய்வுசெய்து பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல்.
- நுண்நிதிசார் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்படுவதை ஊக்குவித்தலும் மேற்பார்வையை முறைப்படுத்துதலும்.
- அந்நிய செலாவணிச் சந்தையை உள்ளிட்ட நிதிச் சந்தைகளிலன் உறுதிநிலைக்காக கொள்கை வட்டி வீத உறுதிநிலைப்படுத்தல்.
- வங்கிப்பணத்தையும் சேமிப்புகளையும் உற்பத்திப் பொருளாதார செயற்பாடுகளில் முறைப்படி முதலீடு செய்வதற்கான புதிய நிதச் செயற்றிட்டங்களை அறிமுகஞ்செய்தல்.
- அரச நிறுவனங்களுக்கிடையிலான இணைப்பாக்கத்தை முறைப்படுத்துதல் மூலமாக இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவுக் கூறினை (FIU) பலப்படுத்துதல்.

## வெளிவாரிப் பிரிவினை உறுதிநிலைப்படுத்தல்

- வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்காக புலம்பெயர் முறிகளை (Expatriate Bond) உள்ளிட்ட சேமிப்புகளையும் முதலீட்டுத் திட்டங்களையும் அறிமுகஞ்செய்தல்.
- பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக பணத்தை ஈடுபடுத்த புதிய அபிவிருத்தி முறிகளை வழங்குதல்.

- நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளைக்கொண்ட அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக உலகளாவிய பசுமை மற்றும் நீல நிதியங்களில் பிரவேசிப்பதற்கான முறிகளை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்பத் தொழிற்றுறை மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலை முன்னேற்றுவதன் ஊடாக அந்நிய செலாவணி ஒதுக்கத்தை வளர்த்தெடுத்தல்.
- தேசிய முன்னுரிமைகள் மற்றும் அபிவிருத்தி மூலோபாயங்களுடன் ஒத்துவரக்கூடிய உ தத்தேச மற்றும் தற்போது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகளை (FDIs) துரிதப்படுத்துதல்.
- ஏற்றுமதி பன்வகைமைப்படுத்தல் மூலமாக வெளிநாட்டுச் சந்தைகளின் பங்கினை அதிகரிப்பதற்காக நிலவுகின்ற வர்த்தக உடன்படிக்கைகளை மீள்பரிசீலனை செய்வதற்கான உடன்படிக்கைகளை செய்துகொள்ளல்.
- சுற்றுலாத் தொழிற்றுறையில் மற்றும் தகவல்தொழில்நுட்ப கைத்தொழிலில் அந்நிய செலாவணியை ஈட்டுவதை விருத்திசெய்வதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அமுலாக்குதல்.

**சர்வதேச நாணய நிதியத்துடனான நிகழ்ச்சித்திட்டம்**

- வறிய மற்றும் நிர்க்கதிநிலைக்கு உள்ளாக்கியுள்ள மக்களை அந்த நிலைமையிலிருந்து மீட்டெடுப்பதற்காகவும் மிகவும் பலம்பொருந்திய மற்றும் சரியான வேலைத்திட்டமொன்றின் உள்ளடக்கமும் அது அமுலாக்கப்படவேண்டிய விதத்தையும் பற்றிய சர்வதேச நாணய நிதியத்துடனான மீள் பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்ளல்.
- சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள வருமானத்தை அடிப்படையாகக்கொண்ட செலவு முகாமைத்துவ (Revenue based fiscal consolidation) முன்மொழிவுகளை மீள்ளாய்வுசெய்வதற்கான வினைத்திறன்மிக்க வரி நிர்வாகத்தையும் அரசாங்கத்தின் செலவு முகாமைத்துவத்தையும் பற்றிய புதிய முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்.
- கடன் நிலைபெறுதகுநிலையை பேணிவருதல் மற்றும் தாக்குப்பிடிக்கக்கூடியமட்டத்தில் கடன் வட்டியை வைத்துக்கொள்வதை இலக்காகக்கொண்டு அவசியப்பாட்டுக்கிணங்க மீளாய்வு நடவடிக்கைகளில் பாவிப்பதற்கான மாற்றுக்கடன் நிலைபெறுதன்மை பற்றிய பகுப்பாய்வினை தயாரித்தல் (DSA).
- அரச நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காகவும் கடன் முறைகேடான பாவனையை மேற்கொண்ட ஆட்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக அரசாங்கம் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன் பற்றிய விபரமான கணக்காய்வினை (Debt Audit) துரிதமாக மேற்கொள்ளல்.
- நாட்டினதும் வங்கி முறைமையினதும் கடன் தரப்படுத்தலை உயர்ந்த இடத்திற்கு கொண்டுவருவதற்காக அரச நிதி மற்றும் நிதி ஒழுகலாறினை முன்னேற்றுதல்.
- முதலீடுகளின் மேம்பாடு
- முதலீடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையையும் உள்ளிட்டதாக தற்போது அமுலில் உள்ள அரச நிறுவனங்களை இணைப்பாக்கம்செய்து வலுவளிக்கப்பட்ட தனி நிறுவனமென்றை நிறுவுதல்.
- முதலீடுகளை அழைப்பிப்பதற்காகவும் பேணிவருதல் சம்பந்தமாகவும் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கும் முறையியல்களக்கும் அமைவாக வெளிப்படைத்தன்மையையும் நியாயமானதன்மையையும்

உறுதிசெய்கின்ற சட்டமுறைமையொன்றை தாபித்தல்.

-  முதலீடுகள் மற்றும் தொழில்முயற்சிப் பணிகளுக்கான சமகளத்தில் வசதிப்படுத்துவதன் மூலமாக புதிய தெரில்முயற்சிகளில் பிரவேசிப்பதற்கான மற்றும் இடங்களை தேடிக்கொள்வதற்கான வசதி, நீர் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட பயன்பாடுகளை எளிதாக பெற்றக்கொள்ளல், உயர்திரன்களை கொண்ட உழைப்பின் தாராளமாக கிடைக்ககூடிய தன்மையை உருவாக்குதல், வினைத்திறன்மிக்க நிதிச்சேவைகள், சர்வதேச வர்த்தகத்தில் பிரவேசித்தல், நியாயமானதும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட வரி அறவீடு, வித்திறன்மிக்க பிணக்குகளுக்கான நடுத்தீர்பு மற்றும் சந்தைப்போட்டி நிலைமையை உறுதி செய்கின்ற பொருளாதார சர்வதேசவாதத்தைக் கொண்ட சுற்றாடலொன்றை உருவாக்குதல்.
-  ஒருங்கிணைந்த பொறியமைப்பொன்றின் கீழ் தொழில்முயற்சிகளை பதிவுசெய்தல், உரிமங்களை வழங்குதல், சான்றுப்படுத்துதல், காணிப் பாவனைக்கான அனுமதி வழங்குதல், மின்சாரம், நிர், தொடர்பாடல் சேவைகளை உள்ளிட்ட ஏனைய வசதிகளை வழங்குவதற்கான தனியான கருமபீடமொன்றை நிறுவுதல்.
-  முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்காக உலகளாவிய போட்டிநிலைக் குறிகாட்டிகளில் (Global Competitive Index) இலங்கையை உயர்த்தி வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
-  புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்காக மூலதன நிதியங்களை (Venture Capital Funds) ஊக்குவித்தல்.
-  மூலதனச் சந்தைகளை வினைத்திறனுடனும் விளைதிறன்கொண்டதாகவும் பேணிவருதல், முதலீட்டாளர்களின் நம்பிக்கையை உறுதிசெய்தல் மற்றும் சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலஞ்சத்தை நிறுத்துவதற்காக அரச நிறுவன முறைமையை மறுசீரமைத்தல்.
-  மூலோபாயரீதியாக முக்கியமான துறைகளின் சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி அரச, தனியார் மற்றும் பொதுமக்களின் பங்காண்மைத் தொழில்முயற்சிகளுக்காக (PPPP) நீண்டகால வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்.
-  வெளிநாடு சென்றுள்ள உழைப்பாளிகள் அவர்களின் ஈட்டல்களை முதலீடு செய்வதற்காக விசேட நன்மைகளைக்கொண்ட முதலீட்டு வழிமுறைகளை அறிமுகஞ்செய்தல்.
-  மூலதனத்தை திரட்டுவதற்கான அடிப்படை பங்குகளை விநியோகிப்பதற்காக (VPO) உசிதமான வரி கொடுப்பனவுகள், பட்டிலிடுவதை வசதிப்படுத்துதல், வசதியான தகவல் அறிக்கையிடல், வெளிப்படைதன்மை மற்றும் முறையான நிர்வாகம் இடம்பெறுகின்ற வினைத்திறன்மிக்கதும் முன்னேற்றகரமானதுமான பிணையங்கள் பரிவர்த்தனை நிலையமொன்றாக மூலதன சந்தையை விரிவாக்குதலும் விருத்தி செய்தலும்.

### அரச சொத்தாண்மையுடனான தொழில்முயற்சிகள் (SOEs)

-  மூலோபாயரீதியான முக்கியத்துவம், பொருளாதார விருத்திக்கான சாத்தியவளம், உற்பத்தியின் பொருளாதார ஊக்குவிப்பிற்கான இயலுமை, நிதிசார் உறுநிலைக்கு நிலவுகின்ற தாக்கம் மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு உள்ள ஏற்புடையதன்மை என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு நிறுவனம் தொடர்பிலும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை தீர்மானித்தல்.
-  வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதற்காக SOEs களின் தொழிற்பாடுகள் பற்றிய

முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக பொதுமக்களுக்கு வசதிகளை வழங்குதல்.

-  தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இடம்பெறுகின்ற பொருளாதாரப் பாங்குகள், சாத்தியவளங்கள் மற்றும் அபிவிருத்திகளில் புதிய வாய்ப்புகளை முற்றாய்வு செய்வதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துல்.

## உள்நாட்டு வர்த்தகமும் சேவைகளும்

-  சந்தைப் போட்டிநிலையை உருவாக்குதல், ஒழுங்குறுத்தல் நிறுவனங்களை வினைத்திறன்கொண்டதாக நெறிப்படுத்துதல், சந்தை அலுவல்களை ஒழுங்கு செய்தல் மற்றும் இரசாங்க்தின் பங்கினை பிரதிநிதித்துவம் செய்வதன் ஊடாக மக்களுக்கு தரமான பண்டங்களையும் சேவைகளையும் நியாயமான விலையிலும் தொடர்ச்சியாக வழங்குதலையும் உறுதிசெய்தல்.
-  பாரியளவிலான பொருளாதார மற்றும் பரிமாற்ற நிலையங்களை மாவட்ட மட்டத்தில் நிறுவுதல்.
-  பண்டங்கள் சேவைகள் வர்த்தகத்தை தொடர்ச்சியாகவும் நியாயமாகவும் உயர்ந்த தரத்திலும் பேணிவருதல், பாவனையாளர் உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் வர்த்தகத்துடன் எற்படைய தகவல்களின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கான மேற்பார்வைப் பொறியமைப்பு மற்றும் நிகழ்நிலை தகவல் முறைமையை நிறுவுதல்.
-  வர்த்தகம் மற்றும் விநியோகத்தின் சுமுகமாக செயற்பாங்கிற்காக நிதிசார:. வங்கிகள், போக்குவரத்து, காப்புறுதி, தொடர்பாடல், பொதியிடல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் பொன்ற துணைச்சேவைகளை வினைத்திறன் கொண்டதாக பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் முகாமைத்துவ இணைப்பாக்க பொறியமைப்பொன்றினை அமுலாக்குதல்.
-  உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான செயற்பாடுகளில் பெறுமதிகள் உருவாகாத அநாவசியமான இடையீடுகளை நீக்குதலும் இடையீட்டாளர்கள் முனைப்பாக பெறுமதியை உருவாக்குபவர்களாக மாற்றப்படுவதற்கான வசதிகளை வழங்குதல்
-  சந்தையில் நிலவுகின்ற தகவல் சமமின்மையை நீக்குவதற்காக அவசியமான சட்டங்களை மாற்றியமைத்தல் மற்றும் புதிய சட்டங்களை அறிமுகஞ்செய்தல்.
-  இரத்தினக்கல், தங்க ஆபரணங்கள், பெறுமதியான கல் வகைகள், ஆடைகள், கைப்பணிகள் உள்ளிட்ட சாத்திய வளங்கள் உள்ள வேறு உற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கொள்வனவாளர்களை இலக்காகக்கொண்டு சந்தை நிலையங்களை நிறுவுதலும் முன்னேற்றுதலும் நவீனமயமாக்குதலும்.
-  நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி சமுதாயங்கள எதிர்நோக்குகின்ற சந்தையில் பிரவேசித்தல் உள்ளிட்ட வர்த்தகத்துடன் தொடர்புடைய சிக்கல்களை புலனாய்வுசெய்து தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான பொறியமைப்பினை அமுலாக்குதல்.
-  தான்தோன்றித்தனமாக விலை அதிகரிப்பினைச் செய்தலை ( Price Gouging) நிறுத்துதல் மற்றும் சந்தையில் பண்டத்தட்டுப்பாட்டினை தடுத்தல் மற்றும் சந்தை ஏகபோக உரிமை, சிலருரிமை மற்றும் ஏகபோக வணிகக்கூட்டுகள் (Cartel') உருவாவதை தடுத்தல்.
-  ஒருமுகப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்று மூலமாக அரச சேவை வழங்கலின்


தரத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குறுத்துல் மற்றும் நிருவகிப்பதற்கான ஒருங்கிணைந்த ஸ்மார்ட் முறைமையை நிறுவுதல்.

## வெளிநாட்டு வர்த்தகம்

-  ஏற்றுமதிப் பண்டங்கள மற்றும் சேவைகளின் பன்முகப்படுத்தலை விருத்திசெய்தல்.
-  ஏற்றுமதிக்கான நிதிசார் வசதிகள், சான்றுப்படுத்தல் சேவைகள், காப்புறுதி, சந்தை மற்றும் பண்டக் கேள்வி பற்றிய போக்குகள், புதிய சந்தைகளை கண்டுபிடித்தல், உற்பத்திகள் மற்றும் உலகளாவிய பெறுமதித் தொடர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொடுத்து உற்பத்தியாளர்களக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் அவசியமான வசதிகளை வழங்குதல்.
-  இந்தியா, சீனா, உப சஹாரா, மத்தியகிழக்கு மற்றும் ஐரோப்பாவை இலக்காகக்கொண்டும் குறிப்பாக உலகளாவிய வழங்கல் தொடர்கள் மற்றும் பெறுமதித் தொடர்களுக்காக பண்டங்கள் மற்றும் சேவைகள் வர்த்தகத்தை மேம்படுத்துல்.
-  கடல்சார் பாதுகாப்பு, எரிபொருள், உண்வு உள்ளிட்ட ஏனைய கப்பற்றுறை சேவைகளை வழங்குகின்ற பிராந்திய லொஜிஸ்ரிக் சேவைகளை வழங்குகின்ற கேந்திரநிலையமாக இலங்கையை மாற்றுதல்.
-  கலம் மாற்றிச் சரக்கேற்றல் (Transshipment), சரக்குகளை இடமாற்றல் ( Transload), கலத்திலிருந்து கலத்திற்கு சரக்குகளை இடமாற்றுதல் (Ship to Ship Cargo Transfer) இமற்றும் கப்பற்றுறையை மாற்றுதல் (Cross Docking) வசதிகளைக்கொண்ட தொழிற்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதற்கான சேவைகளை வழங்குகின்ற பிராந்திய சர்வதேச முகாமைத்துவ கேந்திர நிலையமொன்றை உருவாக்குதல். மசகெண்ணை, எரிபொருள், கேஸ், கனிம உற்பத்தி மற்றும் மலிகைச் சாமான்களை உள்ளிட்ட னேைய வர்த்தகப் பண்டங்களை விற்பனை செய்வதிலான கிரயத்தைக் குறைக்கின்ற அத்துடன் வினைத்திறனை அதிகரிக்கின்ற மற்றும் அவசியமான லொஜிஸ்ரிக் வசதிகளை வழங்குகின்ற பண்டங்களின் சர்வதேச வர்த்தக கேந்திரநிலையமொன்றை உருவாக்குதல். மாக மாற்றுதல்,
-  இலங்கை ஊடாக பயணத்தில் ஈடுபடுகின்ற கப்பல்களில் பணிபுரிகின்ற சிப்பந்திகள் இடம்மாறுகின்ற நிலைமொன்றை நிறுவுதல்.
-  கப்பல் மற்றும் மீன்பிடிக்கலங்களை உற்பத்திசெய்கின்ற மற்றும் திருத்தவேலைகளுக்கான தொழில்நுட்பத்தையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் விருத்திசெய்தல்.
-  மரபுரீதியற்ற மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட பண்டங்களின் உற்பத்திகளையும் ஏற்றுமதியையும் மேம்படுத்துதல்.
-  உள்நாட்டு உற்பத்திகளை பாதுகாத்தல், உணவுப் பாதுகாப்பினை உறுதிசெய்தல், உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதிலான வசதிகள், அத்தியாவசியமான பண்டங்கள் மற்றும் முதலீட்டுப் பண்டங்களுக்கு முன்னுரிமை அளித்தலும் இறக்குமதிக்கான போட்டியடிப்படையிலான பிரவேசம் ஆகிய விடயங்களை முதன்மையாகக்கொண்ட இறக்குதிக் கொள்கையை திருத்தியமைத்தல்.
-  மிகைப்பொருள் திணிப்பு எதிர்ப்பு (Anti-Dumping) சட்டதிட்டங்களை பலப்படுத்துதல் மற்றும் நியாய வியாபாரம் (fair trading) பற்றிய புதிய சட்டதிட்டங்களை அறிமுகஞ்செய்தலும் நிலவுகின்ற சட்டங்களை இற்றைப்படுத்துதலும்.
-  இலங்கையின் வர்த்தகப்பெயர் தனித்தன்மைக்கும் பிம்பத்திற்கும்

பங்கமேற்படாதவகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட மீன் ஏற்றுமதிளையும் பண்டகசாலை வர்த்தகத்தையும் (entrepot) மேம்படுத்துதலும் அவசியமான வசதிகளை வழங்குதலும்.

- தர உத்தரவாதம் வழங்குதல் மற்றும் தரப் பரிசோதனைகள் மூலமாக இறக்குமதி பண்டங்களின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.



## உயர்வான உற்பத்தித் திறன்

# உணவு பாதுகாப்புமிக்க நாடு

இப்போது இலங்கையின் மொத்தத்தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு 8.4%மாகக் காணப்படுவதுடன் விவசாயத்துறையிலுள்ள தொழில் வாய்ப்புகள் சுமார் 27% ஆகும். அவ்வாறே விவசாயப் பயிர்களின் மூலம்தான் ஏற்றுமதி வருமானத்தில் சுமார் 15.3% பங்களிக்கப்படுகின்றது. இதற்கேற்ப விவசாயம் இலங்கைமக்களின் வாழ்வியலில் முக்கியபணியாற்றுகின்றது.

துரித சனத்தொகை வளர்ச்சியுடன், மரபுரீதியான தொழில்நுட்பங்களின் வாயிலாக மட்டுமே மக்களுக்குத் தேவையான உணவைப் போதுமான அளவில் உற்பத்திசெய்வது சிரமம் என்பதால் நவீனதொழில்நுட்ப விதிமுறைகள் மற்றும் கண்டுபிடிப்புகளில் இலங்கையும் ஈடுபட்டதுடன் அதனூடாக எமது மக்களுக்குத் தேவையான 24 இலட்சம் மெட்ரிக் தொன் அரிசிக்கான இலக்கை உற்பத்தி செய்ய முடிந்தாலும், கடந்த ஆட்சிக் காலங்களில் செயற்பட்ட சில தொலைநோக்கற்ற கொள்கைகள் காரணமாக இந்நாட்டு அரிசி உற்பத்தி சவாலுக்கு உட்பட்டது. அவ்வாறே நுகர்வோர் தேவைகளுக்குப் போதுமான இந்நாட்டில் உற்பத்தியாகும் அரிசிவகைகளைக் கூட தேவையான அளவில் உற்பத்தி செய்வதற்கு முடியாமல் போயுள்ளது. நெல்லைப் பயிரிடும் விவசாயிக்கு தனது அறுவடைக்குரிய நியாயமான விலை கிடைக்காததுடன், அரிசியை நுகர்வோர், வாங்கமுடிந்த விலையில் தனது விருப்பத்திற்குப் பொருத்தமான அரிசிவகையொன்றைக் கொள்வனவுசெய்ய இயலமால் போயுள்ளது.



தரமுயர்ந்த மரக்கறிகள் மற்றும் பழவகைகளின் உற்பத்தியை அதிகரிப்பது ஒரு சவாலாக உள்ளதுடன் நாட்டின் ஒட்டுமொத்த மரக்கறிகள் மற்றும் பழவகை உற்பத்தியில் சுமார் 30% அறுவடைக்குப் பிந்திய சேதங்களுக்கு உள்ளாகின்றன. ஏனைய களநிலைப் பயிர்களைக் கருத்திற் கொள்ளும் போது, அவற்றின் இறக்குமதிக்காக மட்டுமே 2022ல் சுமார் 459 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளன. அவ்வாறே இப்போது செலாவணியை ஈட்டும் தேயிலை, தெங்கு, இறப்பர் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் என்பவற்றுடன் அலங்காரப் பயிர்களினதும் உற்பத்தி விளைதிறன் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்தகால அரசாங்கங்களால் பின்பற்றப்பட்ட தவறுகள் விவசாயக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளைப் போன்றே சரியான தொழில்நுட்பத்தைப் பாவிக்காதிருப்பதும் இதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கேற்ப நிகழ்கால இலங்கையின் விவசாயம் பல பிரதான சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது. சார்ந்திருக்கும் விவசாயம், குறைந்தபட்ச இயந்திரமயமாக்கம், அதிக உற்பத்திச் செலவு, உற்பத்திக்கான உரியவிலை கிடைக்காமை, விவசாய உற்பத்திகளின் அதிகரித்த விலையைப் போன்றே ஏற்றஇறக்கமுள்ள விலைகள், பலவீனமான விரிவாக்கல் சேவை, போதியஅளவில் இல்லாத பெறுமதிசேர்க்கப்படாமை மற்றும் குறைந்த இளைஞர்கள் பங்களிப்பு போன்றன அவற்றிடையே பிரதானமானவை. மேற்குறிப்பிட்ட நிலைமைகளை ஆழமாகக் கருத்திற் கொண்டு இவ்விவசாயக் கொள்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் ஒரு ஏக்கர் விவசாயக் காணியில் வருடமொன்றுக்கு சுமார் 30 லட்சம் ரூபாவரையான வருமானத்தைப் பெற எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய தேயிலை உற்பத்தியை 400 மில்லியன் மெட்ரிக் தொன்னை மிஞ்சி செல்லவும், தெங்கு மரத்திலிருந்து கிடைக்கின்ற வருடாந்த விளைச்சலை 80 காய்கள் வரை அதிகரிக்கவும், இரப்பர் விளைச்சலை ஒரு ஹெக்டாயருக்கு வருடம் ஒன்றுக்கு 1300 கிலோகிராம் வரை அதிகரிக்கவும் எதிர்பார்ப்பதோடு ஹெக்டாயருக்கு கிட்டத்தட்ட 06 மெ.தொ. நெல்லை அறுவடை செய்வதும் எமது இலக்காகும்.

**அதற்கேற்ப நிகழ்கால இலங்கையின் விவசாயம் பல பிரதான சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளது. சார்ந்திருக்கும் விவசாயம், குறைந்தபட்ச இயந்திரமயமாக்கம், அதிக உற்பத்திச் செலவு, உற்பத்திக்கான உரியவிலை கிடைக்காமை, விவசாய உற்பத்திகளின் அதிகரித்த விலையைப் போன்றே ஏற்ற இறக்கமுள்ள விலைகள், பலவீனமான விரிவாக்கல் சேவை, போதியஅளவில் இல்லாத பெறுமதிசேர்க்கப்படாமை மற்றும் குறைந்த இளைஞர்கள் பங்களிப்பு போன்றன அவற்றிடையே பிரதானமானவை.**

## கோட்பாடுகள்

- தேசிய உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பு
- விவசாயக் கட்டமைப்புகளின் உயர் உற்பத்தியும் விளைதிறனும்
- திடமான விவசாய தொழில்முயற்சியும் நிலையான சந்தையும்
- உகந்த காணிமுகாமை
- சரியான விவசாய உள்ளீடுகளின் முகாமை
- சூழலுக்குச் சாதகமான செயற்பாடுகள்
- விவசாய உற்பத்தியாளரை வலுப்படுத்தல்
- காலநிலை இடர் முகாமை
- கமத்தொழில் ஆராய்ச்சி,பரவலாக்கம் மற்றும் விழிப்புணர்வுமுகாமை
- சிறந்த கமத்தொழில் செயற்பாட்டு முகாமையும் நிர்வாகமும்

## செயற்பாடுகள்

### தேசிய உணவுப் பாதுகாப்பு

- நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு பொருட்கள் அனைத்தையும் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான அரச அனுசரணை.
- குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு போதுமான அத்தியாவசியமான உணவுகளின் சுய பாதுகாப்பு கையிருப்பினை பேணிவருதல்.
- நாட்டில் நிலவுகின்ற உணவு கையிருப்பு பற்றிய தரவு முறைமையை பேணிவருதல்.
- விவசாய உற்பத்திகள் மற்றும் உணவு விநியோக தேவைக்கிணங்க குளிர் சங்கிலித்தொடர் முகாமைத்துவ தொழில்நுட்பத்தை ஈடுபடுத்தக்கூடிய போக்குவரத்து முறைமையொன்று
- இறக்குமதி செய்யப்பட்ட பயிர்களுக்கு பொருத்தமான பதிலீட்டுப் பயிர்களை உள்ளூரில் பயிர் செய்வதை ஊக்குவித்தல்.
- அரச-தனியார்-மக்கள் பங்கேற்கும் கருத்திட்டங்களாக விவசாய உற்பத்திகளுக்கான களஞ்சியங்கள், குளிர்க் களஞ்சியங்கள், பொதியிடற் பிரிவுகள் மற்றும் குளிரூட்டல் செயற்பாட்டுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மற்றும் நிதிவசதிகள்

### விவசாய முறைமைகளின் உயர்வான உற்பத்தியும் விளைதிறனும்

- சரியான தகவல்களுடன் கூடிய நிகழ்நேர தேசிய விவசாய தரவுகள் தொகுதி.
- விவசாயிகளுக்கான முறையான விவசாயக் காப்புறுதியும் போதுமான ஓய்வூதியமும்.
- வனவிலங்குகளால் பயிர்ச் செய்கைகளில் ஏற்படுத்தப்படும் சேதங்களைக் குறைப்பதற்கானதீர்வுகள் (உதா: நவீனதொழில் நுட்பமுறைகள், மின்சாரவேலிகளின் மறுசீரமைப்பும் பராமரிப்பும், வன ஒதுக்கத்தில் விலங்குகளுக்கான உணவையும் நீரையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக்குதல், யானைக்கடவை, யானை முகாமைத்துவப் பிரிவுகள், தொகை அடர்த்திக் கட்டுப்பாடு)

- புனரமைப்பும் பராமரிப்பும், ஒதுக்குப் பிரதேசங்களில் விலங்குகளுக்கான உணவையையும் நீரையும் தாராளமாக கிடைக்கச் செய்வித்தல், யானை கடவைகள், யானை முகாமைத்துவக் கூறுகள், சாகிய அடர்த்திக் கட்டுப்பாடு.
- குளங்கள், கால்வாய்கள் மற்றும் கல்லோயா, இராஜாங்கன, மின்னேறியா போன்ற நீர்பாசன முறைமைகளை கால இடைவெளிகளில் புனரமைத்தல்.
- மழைநீர்ப் பாதுகாப்பு மற்றும் நுண்ணீர் பாசனம் போன்ற தொழில்நுட்பப் பாவனையை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப மற்றும் நிதிவசதிகள்
- மூன்று வருடங்களுக்குள் தேயிலைச் செய்கையின் விளைச்சலை இரட்டிப்பாக்குவதற்கான தொழில்நுட்ப, நிதிசார் மற்றும் ஏனைய வசதிகள்.

## வலிமையான விவசாய தொழில் முயற்சியாண்மையும் உறுதியான சந்தையும்

- உற்பத்தி சக்திகளை ஒழுங்கமைத்தலும் சந்தைச் சக்திகளை ஒழுங்குறுத்துதலூடாக விவசாய உற்பத்திக்கான நியாயமான விலை.
- ஐந்து வருடங்களுக்குள் 50,000 விவசாய தொழில் முனைவோரை உருவாக்குவதற்கான வசதிகளும் வழிகாட்டலும்.
- ஒழுங்கமைந்த விவசாய அமைப்புக்களினதும் தனியார் துறையினரதும் பங்களிப்புடனான விவசாய - கைத்தொழில் வலயங்கள். (Agro Industrial Zones).
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகளை விரிவாக்குதல்.
- காணி சொத்துவத்தை அவ்விதமாகவே பேணிவந்து சிறிய அளவிலான பயிர்ச் செய்கை கூறுகளை கமக்கார கம்பெனிகள் / கூட்டுறவின் கீழ் சிறந்த விவசாய முகாமைத்துவ நடைமுறைகளை கடைப்பிடிக்கின்ற நடுத்தர மற்றும் பாரியளவிலான பயிர்ச்செய்கை கூறுகளாக மாற்றுவது ஊக்குவிக்கப்படும்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாய ஏற்றுமதி உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக தொழில்நுட்ப மற்றும் நிதி வசதிகளை வழங்குதலும் தூதரக சேவையின் இடையீட்டுடன் சந்தை வாய்ப்புகளை விரிவாக்குதலும்.
- விவசாயத்துடன் பிணைந்த சுற்றுலா கைத்தொழிலை ஊக்குவிக்க அவசியமான வசதிகள்.
- இலங்கை தேயிலையின் வர்த்தகப் பெயரை மீண்டும் ஒளிரச் செய்வித்து உயர்வான விலை கிடைக்கின்ற சந்தைகளை தேடிக் கொடுக்க அரச இடையீட்டினை மேற்கொள்ளல்.
- 1000 ஏற்றுமதி விவசாயக் கிராமங்களை நிறுவுதல்.
- நலிவடைந்துள்ள கமக்காரர் ஓய்வூதியத்திட்டத்திற்கு பதிலாக பலம்பொருந்திய கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்று.

## உன்னதமான காணி முகாமைத்துவம்

- நவீன தொழில்நுட்பத்தை பாவித்து சரியான காணிப் பாவனைக்கான விவசாயத் தரவுமுறையைக் கொண்ட டிஜிட்டல் நில வரைப்படம்.
- காணிகளின் விளைதிறனை அதிகரிப்பதற்காக பயிர்கள் - விலங்கு பயிர்ச் செய்கை தொகுதிகளாக ஒருங்கிணைந்த கமத்தொழில் மேம்பாடு.
- எல்லைப்படுத்தப்பட்ட மற்றும் குறைப்பாவனையிலுள்ள காணிகளை நவீன தொழில்நுட்பத்தை பாவித்து விவசாய உற்பத்திக்காக பயன்படுத்துதல்.

- தென்னஞ் செய்கையை உள்ளிட்ட ஏனைய வணிகப் பயிர்களுக்காக பாவிக்கப்படுகின்ற செழிப்பான காணிகளை ஏனைய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதை வரையறுத்தல்.

### சரியான விவசாய உள்ளீடுகளின் முகாமைத்துவம்

- கமக்காரர்களுக்கு விவசாய இயந்திர சாதனங்களை சலுகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக கமநல சேவைகள் ஆளுகை பிரதேச மட்டத்தில் விவசாய இயந்திர சாதன வழங்கல் நிலையங்கள்.
- நியாயமான விலைக்கு பசளையை உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளை வழங்குதல்.
- சாதகமான விவசாய நடைமுறைகளுக்கு இணங்க இராசயன, சேதனப் பசளைகளை உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளுக்கான மானியங்கள்.
- உள்நாட்டு இயற்கை மூலப்பொருட்களையும் உற்பத்தி செய்த மூலப்பொருட்களையும் பாவித்து சுற்றாடலுக்கு சேதம் ஏற்படாத வகையில் செயற்கை பசளை, சேதனப் பசளை மற்றும் ஏனைய விவசாய இராசயனங்களின் உற்பத்தி.
- வணிக மட்டத்தில் விதைகளையும் நடுகைப் பொருட்களையும் விருத்தி செய்தல், உற்பத்தி செய்தல், பண்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார் துறைகளை ஊக்குவித்தல்.
- விவசாய உற்பத்திகளை பதப்படுத்தவும் போக்குவரத்துச் செய்யவும் அவசியமான தொழில்நுட்ப மற்றும் நிதிவசதிகள்.

### சுற்றாடல் நேயமுள்ள தொழிற்பாடுகள்

- நிலையம்சார் பசளை விதப்புரைகளை (Site Specific Recommendations) அடிப்படையாகக் கொண்ட பசளையை இடுவதற்காக பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவித்தல்.
- உத்தரவாதம் அளிக்கப்பட்ட சேதனப் பயிர்ச்செய்கை நிலங்களின் அளவினை அதிகரித்தல்.
- படிப்படியாக உணவு பயிர்ச்செய்கை உற்பத்தி கூறுகளை “சாதகமான விவசாய நடைமுறைகள்” (Good Agricultural Practices) கடைப்பிடிக்கப்படுகின்ற விவசாயப் பண்ணைகளாக மாற்றுதல்.

### விவசாய உற்பத்தியாளரை வலுவூட்டுதல்

- கமக்காரர்களால் முகாமை செய்யப்படுகின்ற கூட்டுறவுகள் / விவசாய கம்பெனிகளின் மேம்பாடு.
- தேயிலை, இரப்பர், தெங்கு போன்ற பல்லாண்டுக்கால பயிர்களில் ஊடுப்பயிர்ச் செய்கை மற்றும் பயிர் பன்வகைப்படுத்தலுக்கான தொழில்நுட்ப, நிதி மற்றும் பிற வசதிகள்.
- முடிவுப் பொருட்களாக ஏற்றுமதி செய்வதை நோக்கமாகக் கொண்டு ஏற்றுமதி விவசாய பயிர்கள் சார்ந்ததாக வருமானம் சேர்க்கப்பட்ட உற்பத்திக் கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
- இரப்பர், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக தற்போது பால் வெட்டுவதற்காக ஈடுபடுத்தாத இரப்பர் காணிகளை பால் வெட்டுவதற்காக விரிவாக்குதல் மற்றும்

இரப்பர் செய்கைகளுக்காக பாவிக்கப்படுகின்ற மழைநீர் காப்பின் பாவனையை ஊக்குவிப்பதற்கான நிதி வசதிகள்.

- இன விருத்தி செய்யப்பட்ட இனங்களை பயன்படுத்தியும் நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழும் கரும்புச் செய்கையை மேற்கொள்வதற்காக ஹெக்டெயார் ஒன்றுக்கு பத்து இலட்சம் ரூபா வரையான இலகு கடன் திட்டமொன்று.

## காலநிலை அபாய நேர்வு முகாமைத்துவம்


- காலநிலை மாற்றங்களுடன் அமைந்தொழுகுகின்ற பயிர் இனங்கள், வளர்ப்புகள் மற்றும் நீர்ப்பாசன தொழில்நுட்ப முறைகளை திட்டமிடுதல், பிறப்பித்தல் மற்றும் ஈடுபடுத்துதல்.

## விவசாய ஆராய்ச்சிகள், விரிவாக்கம் மற்றும் அறிவு முகாமைத்துவம்

- விரிவாக்குனர்களை அறிவாலும் அவசியமான வளங்களாலும் பலப்படுத்துவதன் மூலமாக அவர்களுக்கு விளைபயன்மிக்க விரிவாக்க சேவையில் ஈடுபடுவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.
- ஏறக்குறைய 350 விவசாய குடும்பங்களுக்கு ஒரு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் வீதமாக அமையக்கூடிய வினைத்திறன்மிக்க விவசாய விரிவாக்க சேவை.
- சேவைகள் மற்றும் உற்பத்திப் பிரிவுகளில் தொழில்சார் பயிற்சியை அளித்தல் மூலமாக சமூர்த்தி / அஸ்வெசும பெறுநர்களை உள்ளிட்ட கிராமிய சமுதாயத்தினரின் வறுமையைக் குறைத்தல்.
- விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தியை இலக்காகக் கொண்ட ஊக்குவிப்பு படிகள்
- விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலுவல்களின் மேம்பாட்டுக்கான நிதியேற்பாடுகளை அதிகரித்தல்.
- விவசாயத்தை சமூக அங்கீகாரம் கொண்ட கவர்ச்சியான தொழிலாக மாற்றுவதற்கான விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு முறையான தொழில்சார் கல்வி வாய்ப்புகள்.

## சிறந்த விவசாய தொழிற்பாடுகளின் முகாமைத்துவமும் நிர்வாகமும்

- விவசாயத்துடன் தொடர்புடைய அனைத்து அரச நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தி தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தேசிய விவசாய அபிவிருத்தி பேரவை.
- விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து கருத்திட்டங்களையும் கமத்தொழில் அமைச்சு மூலமாக ஒழுங்குறுத்துதலும் மேற்பார்வை செய்தலும்.
- மரபு ரீதியானதல்லாத பிரதேசங்களில் பயிர்ச் செய்யக்கூடிய தெங்கு, இரப்பர், கறுவா போன்ற வணிகப் பயிர்களை ஒழுங்காக பயிர் செய்வதற்கேதுவாக பயிர்ச் செய்கையாளரை வழிப்படுத்துதல்.
- கந்தளாய் கரும்புத் தொழிற்சாலையை மீள ஆரம்பித்தலும் கரும்பு பயிரிடப்படுகின்ற பயிர் நிலத்தின் அளவினை அதிகரித்தல்.



## தரமான கால்நடை உற்பத்தி

# தொழில்வாண்மை அணுகல்

மக்களுக்குத் தேவையான புரதங்களைப் போன்றே ஏனைய போசணைப் பதார்த்தங்களை வழங்குவதில் கால்நடை வளத்துறை மிகச்சிறந்த பணியை நிறைவேற்றுகின்றது. பல்வேறு இறக்குமதிகளுக்கான மாற்றுவழியாக பதிலீட்டு உற்பத்தியுடன் ஏற்றுமதி வருமானத்தின் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதிலும் அவ்வாறே வாழ்வாதார அபிவிருத்தியிலும் இத் தொழிலானது முதன்மையான பணியைச் செய்கின்றது. உற்பத்திக் கொள்திறன், கால்நடைப் பண்ணைகளின் எண்ணிக்கை, உற்பத்திமதிப்புச் சங்கிலிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றோடு கால்நடைவளப் பிரிவின் ஊழியர் படையணியும் கொள்கைவகுப்பாளர்களும், நிர்வாகிகளும் ஆய்வாளர்களும் உள்ளிட்ட தொழில் வல்லுனர்களும் ஏனைய தொழில்நுட்பமல்லாத தரப்பினருமே கால்நடைக் கைத்தொழிலின் நிலைப்பாட்டுக்கு உரித்தான காரணிகளாகக் காணப்படுகின்றனர்.

எவ்வாறாயினும், இலங்கையில் கால்நடைவள உற்பத்தியும் விளைதிறனும் எதிர்பார்த்த மட்டத்தை அண்மிக்காததுடன், அத்துறையானது பல சிக்கல்களைக் கொண்டதாகவுள்ளது. தரமான விலங்குணவு மற்றும் இனப்பெருக்கப் பொருட்களின் பெருந்தட்டுப்பாடு, விலங்கு நோய்கள் அதிகரித்தல், உற்பத்தியுடன் இணைந்த வழங்கல் சங்கிலியினதும் சேவைகளினதும் பலவீனமான சுழற்சி, ஒழுக்கவிதிகளுக்கு எதிரானதும் சமநிலையற்றதுமான சந்தை, முறையான மதிப்புச் சங்கிலி அபிவிருத்திகள் மற்றும் உரிய கால்நடைவள விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன இல்லாமை, போதுமான கால்நடை வைத்தியசேவையின்மை, விலங்கு இனப்பெருக்க செயற்பாடுகளில் உரிய முகாமையின்மை, ஆய்வுரீதியான இடையீடுகள் குறைவடைதல், கடன் மற்றும் காப்புறுதி வசதிகளிலுள்ள குறைபாடுகள், பங்குதாரர்களின் முன்னேற்றத்திற்கான ஊக்குவிப்பு மற்றும் வழிகாட்டல் குறைவடைதலைப் போன்றே உற்பத்தி விளைதிறன்களில் குறைபாடுகள் போன்றவை இலங்கையில் கால்நடைவளத் துறையிலுள்ள பிரதான பிரச்சனைகளாகும்.

சாதகமான காலநிலைகளின் கீழ் காணப்படுகின்ற சாத்தியப்பாடுகளை வினைத்திறனுடன் முகாமைப்படுத்தி, மூலோபாயரீதியான அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகளின் வாயிலாக கால்நடைவளத் துறையில் நிலைத்த அபிவிருத்தியைக் கைப்பற்றிக் கொள்வது தேசியமக்கள் சக்தியின் அபிலாசையாகும்.

**சாதகமான காலநிலைகளின் கீழ் காணப்படுகின்ற சாத்தியப்பாடுகளை வினைத்திறனுடன் முகாமைப்படுத்தி, மூலோபாயரீதியான அணுகுமுறைகள் மற்றும் செயற்பாடுகளின் வாயிலாக கால்நடைவளத் துறையில் நிலைத்த அபிவிருத்தியைக் கைப்பற்றிக் கொள்வது தேசியமக்கள் சக்தியின் அபிலாசையாகும்.**

## கோட்பாடுகள்

- தரம் வாய்ந்ததும் சுகாதாரமுறையில் அமைந்ததுமான விலங்குற்பத்தி
- நியாயமானவிலையும் நிலைத்த சந்தையும்
- முதலீடுகளை ஊக்குவித்தல்
- கால்நடைவள தொழில்முயற்சிகளில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்கேற்பு
- கால்நடைவள அபிவிருத்திக்காக அரச, மக்கள் மற்றும் தனியாரின் பங்குடைமை
- பங்குதாரர்களின் உயர் வாழ்க்கைத் தரம்

## செயற்பாடுகள்

### பொதுவானநடவடிக்கைகள்

- நவீனமயப்படுத்தப்பட்ட பண்ணைகள் ஊடான அதிகபட்ச உற்பத்திக் கொள்ளளவு
- களநிலைத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பண்ணை உரிமையாளர்கள் நேரடியாகத் தொடர்புறும் கால்நடைவள அபிவிருத்திச் சங்கங்கள்
- விலங்குப் போசணை, இனப்பெருக்கம் மற்றும் சுகாதாரப் பிரிவுகளில் விசேட செயற்பாட்டுப் பிரிவுகள்
- பரவலாகக் காணப்படுகின்ற விலங்குநோய்களை கட்டுப்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம்.
- மனிதனுக்கு விலங்குகளிலிருந்து பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவதைப் போன்றே விலங்குணவு உற்பத்திகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான கால்நடைபொதுச் சுகாதாரப் பிரிவு
- கால்நடைவளத் துறையின் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரிவாக்கப்படும்.
- கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் மாவட்ட கால்நடை விசாரணைகள் மத்தியநிலைய வலையமைப்பை நவீனமயமாக்கல்.

### பாற்பசுக்கள் துறை

- பண்ணைகள் இயந்திரமயமாக்கப்பட்டு சிறிய அளவிலான பண்ணையாளர் பிரிவுகள், அதிகபட்ச நன்மையடைகின்ற நடுத்தர வர்த்தக பிரிவுகளாக மாற்றப்படுதல்.
- பாலுற்பத்தி மேம்பாட்டுக்கான பாரிய அளவிலான சந்தைத் தொகுதி
- குறைந்த வருமானம்பெறும் பெண்களை வலுப்படுத்துவதற்காக 7500 பாலுற்பத்திப் பண்ணைகள்
- இளம் தொழில்முயற்சிகளை வலுப்படுத்துவதற்காக 7500 பாலுற்பத்திப் பண்ணைகள்

- இப்போது மேற்கொள்ளப்படுகின்ற செயற்கைமுறை சினைப்படுத்தல் எண்ணிக்கையை இருமடங்காக்குதல், உயர்தர இளம் பசுக்கள் மற்றும் எருது விந்துகளின் இறக்குமதி உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களைப் போன்றே முகாமைத்துவ செயற்பாட்டின் மூலம் பால் உற்பத்திக்குத் தேவையான பசுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- பிரதேசரீதியான கால்நடை மருத்துவ தொகுதிகளின் தலைமையில் பண்ணைக் கட்டமைப்புகளின் வினைத்திறன் உயர்த்தப்படும்.
- முக்கியமான தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான உகந்ததடுப்பு மருந்துகள் வேலைத்திட்டம்
- பதிவுசெய்யப்பட்ட பாற்பண்ணை விலங்குகளுக்கு சுகாதாரக் காப்புறுதி

**பால் மற்றும் உள்ளீடுகளின் சந்தைப்படுத்தல்**

- பதப்படுத்தப்பட்ட மற்றும் பசுமையான திரவப் பாலை விநியோகிப்பதற்கான விரிவான பிரதேசரீதியான மத்திய சந்தைப்படுத்தல் வலையமைப்பொன்று
- தரநிலைமற்றும் தரத்திற்கு ஏற்ப பாற்பண்ணையாளருக்கு கொடுப்பனவளிக்கும் விதிமுறை
- திரவப் பால் நுகர்வை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

**கோழியிறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி**

- நியாயமான விலையில் முட்டை மற்றும் கோழியிறைச்சியை பெற்றுக் கொள்வதற்கான விலங்குணவு உள்ளிட்ட ஏனைய உற்பத்தி மூலப்பொருட்களுக்கான வரிச் சலுகை
- முட்டை மற்றும் கோழியிறைச்சி உற்பத்திகள் ஏற்றுமதி செயற்பாட்டை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்
- குறைந்தவருமானம் பெறும் பெண்களைவலுப்படுத்தும் நோக்கில் 5000 சிறிய அளவிலான கோழிப் பண்ணைகள்.



## நிலைபெறுதகு முகாமைத்துவம்

# தரமான மீன்வளம்

மானிட போஷாக்கின் பிரதான அம்சமாக புரதச்சத்து தேவையினை இனங்காண முடியுமென்பதோடு மீன் மற்றும் அதனைச் சார்ந்த உற்பத்திகள் மிகவும் தரமானவையாகவும் உயர் சுகாதாரப் பாதுகாப்பு மிக்கவையாகவும் விளங்குகின்ற புரதச் சத்து தோற்றுவாயாக இனங்காணப்பட்டுள்ளது. அதனால் நாட்டுக்கு அவசியமான மீன் தேவையை நிவர்த்தி செய்வதற்காக மீன்பிடிக் கைத்தொழிலையும் நீரினச் செய்கை வளர்ப்பையும் வலுவூட்டவேண்டியது ஒரு தேசிய அவசியப்பாடாகும். மொத்த தேசிய உற்பத்தி, உணவு பாதுகாப்பு, தொழில்களின் பிறப்பாக்கம், மக்களின் சமூக பொருளாதார தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அந்நிய செலாவணியை ஈட்டுதல் போன்ற பிரிவுகளுக்காகவும் மீன் பிடிக்கைத்தொழில், நீரினச் செய்கை வளர்ப்பு மற்றும் அதனைச் சார்ந்த கைத்தொழில்களை நேரடியாக பங்களிப்புச் செய்விக்க முடியும்.

இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழில் உவர் நீர் மீன்பிடி மற்றும் நன்னீர் மீன்பிடி அத்துடன் நீர் வாழ் உயிரின தொழிற்துறை என்ற வகையில் பிரதானமாக இரண்டு பகுதிகளை உள்ளடக்கியதாகும். இலங்கையின் கடல் வலயம் 517,000 சதுர கிலோ மீற்றர் புறநீங்கலான பொருளாதார வலயமான அமைகின்றது. அதைபோலவே 21,500 சதுர கிலோ மீற்றர் உள்நாட்டு நீர் பரப்பையும் 1,580 சதுர கிலோ மீற்றர் கடல் நீர் ஏரிகளையும் ஆற்றுமுகத்துவாரங்களையும் 5,200 சதுர கிலோ மீற்றர் நீர்தேக்கங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது. இலங்கையில் இன்றளவில் உவர்நீர் மீன்பிடிக் கைத்தொழிலில் ஏறக்குறைய 225,000 பேரும் நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலில் 90,650 பேரும் முனைப்பாக ஈடுபட்டுள்ளார்கள். இந்நாட்டின் மீன் மற்றும்

**முறையான விஞ்ஞானரீதியான முறையியல்கள் மற்றும் நடைமுறை உபாயமுறைகள் ஊடாக மீன்பிடிக்கைத்தொழிலை நிலைபெறுதகு வகையிலும் சுற்றாடல்நேயமுள்ளவகையிலும் அபிவிருத்தி மற்றும் முகாமைசெய்வதும், அதனூடாக மீன் உற்பத்தியை தாராளமாக்குவதும் அத்துடன் பாவனையாளருக்கு நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதும், தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் இந்த கொள்கைச்சட்டகத்தின் பிரதான நோக்கங்களாகும்.**

அதனைச் சார்ந்த உற்பத்திகள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு காட்டுகின்ற பங்களிப்பு 2000 ஆம் ஆண்டில் 2.7 வீதமாக அமைந்ததோடு இன்றளவில் படிப்படியாக வீழ்ச்சியடைந்து 1.2 எனும் மட்டத்தை அடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டளவில் எமது தனிநபர் மீன் நுகர்வு ஆண்டொன்றுக்கு 17.2 கிலோ கிராமாக அமைந்ததோடு இன்றளவில் அது படிப்படியாக 11.07 கிலோகிராம் வரை தாழ்ந்த மட்டத்தை அடைந்துள்ளது. இந்த போக்கு மக்களின் குறிப்பாக சிறார்களினதும் கர்ப்பிணித்தாய்மார்களினதும் சுகாதார நிலைமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்காலத்தில் மீன்பிடிக்கைத்தொழிலும் நீர்வாழ் உயிரின வளர்ப்பும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளது. அந்த சிக்கல்கள் மத்தியில் எரிபொருள் உள்ளிட்ட உள்ளீடுகள் தொடர்பில் அதிக கிரயத்தை ஏற்கநேரிடுகின்றமை, முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் மற்றும் வினைத்திறன்மிக்க முறையியல்களை அறிமுகஞ்செய்வதற்கான அரச இடையீடு தாழ்ந்த நிலையில் இருக்கின்றமை, வெளிநாட்டுக் கலங்களால் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோதமான மீன்பிடிச் செயற்பாடுகள், காலங்கடந்த சட்டமுறைமையும் முறையியல்களும், நிலைபெறுதகு மற்றும் சுற்றாடல்நேயமுள்ள முறையில்களுக்கான ஊக்குவிப்பு தாழ்ந்தமட்டத்தில் நிலவுதல் என்பவை பிரதான இடம் வகிக்கின்றன. முறையான விஞ்ஞானரீதியான முறையியல்கள் மற்றும் நடைமுறை உபாயமுறைகள் ஊடாக மீன்பிடிக்கைத்தொழிலை நிலைபெறுதகு வகையிலும் சுற்றாடல்நேயமுள்ளவகையிலும் அபிவிருத்தி மற்றும் முகாமைசெய்வதும், அதனூடாக மீன் உற்பத்தியை தாராளமாக்குவதும் அத்துடன் பாவனையாளருக்கு நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதும், தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் இந்த கொள்கைச்சட்டகத்தின் பிரதான நோக்கங்களாகும்.



## கோட்பாடுகள்

- மீன் உணவுப் பாதுகாப்பு
- பங்கேற்பு அணுகலும் நிலைபெறுதகு முகாமைத்துவமும்
- சர்வதேச உடன்படிக்கைகளும் உடன்பாடுகளுக்கு அமைவான வலிமையான சட்டக் கட்டமைப்பும்
- தரப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு மூலமாக பாதுகாப்பான மற்றும் நிலைபெறுதகு நடைமுறைகள்
- சுற்றாடல் மாசுபாட்டினை தடுத்தலும் கடல்சார் பாதுகாப்பும்
- மீன் மற்றும் மீன் உற்பத்திக்கான நியாயமான சந்தை அணுகல்.
- மீன்பிடி சமுதாயத்தின் உயர்வான வாழ்க்கைத் தரமும்
- தொழில்சார் மீனவர் சமுதாயமொன்று

## செயற்பாடுகள்

### நிலைபெறுதகு அபிவிருத்தியும் முகாமைத்துவமும்

- மீன்பிடித்துறையுடன் தொடர்புடைய அனைத்து தகவல்களையும் சேகரித்தல், களஞ்சியப்படுத்துதல், பகுப்பாய்தல் மற்றும் பகிர்ந்தளிப்பதற்கான அசல் நேர (real time) தரவு முறைமை.
- துறையுடன் தொடர்புடைய அனுமதியை பெற்றுக்கொள்ளல், பதிவுசெய்தல் மற்றும் உரிமங்களை பெற்றுக்கொள்வதற்கான வினைத்திறன்மிக்க நிகழ்நிலை முறையியல்.
- மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின அலுவல்களை முகாமை செய்வதற்கான ஆலோசனைப் பேரவை
- கைத்தொழிலை தையரியமிழக்கச் செய்விக்கின்ற சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் சர்வதேச சமவாயங்கள், உடன்படிக்கைகள் மற்றும் தரநியமங்களுக்கு அமைவான திருத்தங்கள்.
- கடல்சார் மீன் வளத்தின் இருப்பினை மதிப்பீடுசெய்தல், உவர்நீர் மற்றும் நன்னீர்த் தொகுதிகளில் உச்ச கொள்திறன்களை மதிப்பீடுசெய்தல் மற்றும் மேற்படி மதிப்பீடுகளின் அடிப்படையிலான கைத்தொழில் அபிவிருத்தி.
- மீன் இனப்பெருக்கப் பிரதேசங்களை இனங்காணல், அவற்றின் சாகியத்தை வளர்த்தெடுக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள நீர்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க நிலையங்களை இனங்காணலும் பேணுகையும்
- தரத்தில் உயர்ந்த சுற்றாடல் நேயமுள்ள மற்றும் பாதுகாப்பான உற்பத்திகளின்பால் மீனவ சமுதாயத்தை ஊக்குவித்தல்
- மீளப்புதுப்பிக்கத்தக்க மற்றும் கலப்பின வலுச்சக்திப் பாவனை மற்றும் உற்பத்தி

சந்தைப்படுத்தலுக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிககள்.

- சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைளை தைரியமிழக்கச் செய்வித்தல் கடலக விபத்துகள் மற்றும் ஊழல்களை குறைத்தல் மற்றும் அவசர பிரதிபலிப்புச் செய்தல் அத்துடன் கடல்சார் விபத்துகளைக் குறைப்பதற்கான பொறியமைப்புகள்.
- மீன்பிடி ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் சந்தை செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான நிதியமொன்று.

**உவர்நீர் மீன்பிடித் தொழில்**

- பல்வேறு வெப்பநிலை மட்டங்கள் மற்றும் ஆழமான பரப்புகளில் உள்ள மீன் வளங்களை அறுவடை செய்வதற்காக மீனவர்களுக்கு தொழில்நுட்ப ஒத்துழைப்பு.
- மீன் பிடித்தலையும் பல்கிப் பெருகுதலை வசதிப்படுத்துவதற்காகவும் மீன்கள் ஓரித்தில் குவிதலை ஈர்க்கச் செய்விக்கின்ற பொறிகள் (FAD) மற்றும் செயற்கை வாழிடங்கள் போன்ற முறையியல்களை பரவலாக்குதல்.
- மீன்பிடி இறங்குதுறைகள் மற்றும் கரைவலைத் துறைமுகங்கள் உள்ளிட்ட மரபுரீதியான மீன்பிடிக் களங்களுக்கான உரிமையையும் அணுகலையும் உறுதிசெய்தலும் அவற்றின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும்.
- தற்போது கடுமையான பின்னடைவிற்கு இலக்காகியுள்ள கடலக மீன்பிடி அலுவல்களை இற்றைப்படுத்துவதற்காக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
- நலிவடைந்துள்ள மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்தி உற்பத்திக் கிரயத்தை கறைப்பதற்காக மீனவர் சமுதாயத்திற்கு எரிபொருள் மானியம்.
- கலங்களை கண்காணித்தல் மற்றும் அடையாளம் காண்பதற்கான முறைமை, எலெக்ரொனிக் குறிப்புப் புத்தகங்கள், ட்ரோன மற்றும் செயற்கைக்கோள் தொழில்நுட்பம மூலமாக மீன்கள் குவிந்துள்ள இடங்களை இனங்காணல், தாய்க் கலங்களையும் கலப்பினக் கலங்களையும் அறிமுகஞ்செய்தல், ஸ்மார்ட் சந்தைப்படுத்தல் போன்ற சுற்றாடல்நேயமுள்ள, புத்தம்புதிய மற்றும் விளைதிறன்கொண்ட மீன்பிடித் தொழில்நுட்பங்களை அறிமுகஞ் செய்தல்.
- வெளிநாட்டு மீன்பிடிக் கலங்கள் மூலமாக இடம்பெறுகின்ற அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைளை தடுப்பதற்கும் வேறு நாடுகளின் கடல் வலயங்களில் மீன்பிடிக் கலங்கள் பிரவேசிப்பதை தடுப்பதற்காக GPS அடிப்படையிலான அபாய அறிவிப்பு முறைமையொன்று.
- திடீர் அனர்த்த வேளைகளில் மீன்பிடி பணியாட்டொகுதியினரும் கலங்களும வேறு வெளிநாட்டு கடல் எல்லைகளில் எதிர்நோக்குகின்ற சிக்கல்களின்போது வினைத்திறன்மிக்கதும் முறைசார்ந்தததுமான இராஜதந்திர இடையீடுகள்.

**உவர்நீர் மற்றும் சவர்நீர் மீன் உற்பத்தி அபிவிருத்தி**

- உயர் சந்தைப் பெறுமதிகொண்ட கடலட்டைகள், நண்டு, கொடுவா, சிப்பிகள், இறால், சிங்கிறால் மற்றும் நீர்ப்பூண்டுகள் போன்ற அங்கிகளை வளர்ப்பதற்கும் பல்கிப்பெருகச் செய்யவும் அவசியமான புதிய தொழில்நுட்பம்.

- உவர் நீர் / சவர் நீர் நீரின வளர்ப்பிற்கு பொருத்தமான புதிய வளர்ப்புக் களங்களையும் பொருத்தமான அங்கியினங்களையும் இனங்கண்டு சுற்றாடல்நேயமுள்ள நீரின வளர்ப்பு,
- இறால் பண்ணைகளுக்கான தரப்படுத்தல் செயற்பாங்குகள் ஊடாக வெளிநாட்டுச் சந்தையில் அதிக விலைகளும் அதிக பங்கும்.
- தொழில்நுட்பத்தை உள்ளிட்ட அரச வசதிகளை வழங்குவதன் மூலமாக வருடாந்த இறால் உற்பத்தியை 25000 தொன்கள் வரை அதிகரித்தல்.
- ஈறால் தொழிற்றுறையில் நோய்களை இனங்காண்பதற்காக, தடுப்பதற்காக அத்துடன் கட்டுப்படுத்துவதற்காக அவசியமான முறைசார்ந்த வேலைத்திட்டம்.
- உயர் கேள்வியைக்கொண்ட மற்றும் குறைப்பாவனையிலுள்ள கடல்பூண்டு வளர்ப்பினை விரிவாக்க, உற்பத்தி பன்வகைப்படுத்தலுக்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் சந்தைகளை அறிமுகஞ்செய்யவும் அவசியமான இடையீடுகள்.
- கடல் பூண்டுகள் மற்றும் நீர்வாழ் மூலப்பொருட்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற மனைசார் உற்பத்திகளை ஊக்குவித்து பெண்களின் பங்கேற்பினை மேம்படுத்துதல்.

**நன்னீர் மீன்பிடியும் நீரின வளர்ப்பும்**

- முன்னேற்றமடைந்த முகாமைத்துவ திட்டதின்படி நன்னீர் பரப்புகளைச் சார்ந்ததாக நீரின வளர்ப்பு, மீன் குஞ்சுகள் வளர்த்தல் மற்றும் இனப்பெருக்க நிலையங்களை முறைப்படி தொடர்புபடுத்தி நன்னீர் மீன் உற்பத்தியை அதிகரித்தல்.
- நிலையான நீர்நிலைகள், பருவகால நீர்நிலைகள்ஈ தோட்டப்புற நீர்நிலைகள் மற்றும் தடாகங்களில் பலவிதமான நீரின வளர்ப்பு முறைகளுக்கு அவசியமான மீன்குஞ்சுகளை இடுவதற்கான முறையான வேலைத்திட்டம்.
- உள்நாட்டு அல்லது பொருத்தமான புதிய இனங்கள் மற்றும் இனப்பெருக்க வழிமுறைகளை அறிமுகஞ்செய்தலும் இனப்பெருக்க நிலையங்களில் மனித வளங்கள், தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்.
- உகந்த நிலையான நீர்நிலைகள், பருவகால மற்றும் தோட்டப்புற நீர்நிலைகளில் அவசியத்திற்கேற்ப முறையன கொள்திறனில் மீன்குஞ்சுகள் இடப்படும்.
- தெரிவுசெய்த நிலையான நீர்நிலைகளை சார்ந்ததாக தூளாக்கிய உணவுக்கான மீன் வளர்ப்பு.
- வணிகரீதியாக நன்னீர் மீன்களை வளர்ப்பதற்கான நவீன தொழில்நுட்பத்துடனான பாரியளவிலான பண்ணைகளை உருவாக்குவதற்கேதுவாக தொழில் முயற்சியாளர்களை ஊக்கவிப்பதற்கான நிதிசார் ஒத்துழைப்பு.

## அலங்கார மீன் மற்றும் அலங்கார நீரின பூண்டுகள் கைத்தொழில்

- 2028 அளவில் செல்லப்பிராணிகளான மீன்கள் மற்றும் நீரின பூண்டுகள் ஏற்றுமதி வருமானத்தை 25% ஆல் உயர்த்துவதை இலக்காகக்கொண்ட இலங்கை வர்த்தகப்பெயர்.
- அலங்கார மீன் வளர்ப்பினை ஊக்குவிப்பதற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பு.
- சஅலங்கார மீன் உற்பத்தி ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையை தீர்மானிப்பதற்கான வெளிப்படைத்தன்மைகொண்ட பொறியமைப்பு.
- சமீன்களக்கு எற்படகின்ற நொய்கள், பெருந்தொற்றுகளை இணங்காணலும் அவற்றைத் தடுப்பதற்கான நிலையம்சார் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக பிரதேச கால்நடை வளங்கள் மற்றும் “விதாத“ நிலையங்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் போன்ற நிறுவனங்களை ஒருங்கிணைத்த நிகழ்ச்சிதிட்டங்கள்.
- ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கான பிரதேச சேகரித்தல் நிலையங்கள்.
- சஇழைய வளரப்பு, பசுமைக் குடில்கள், செங்குத்தான செய்கை, மண்ணற்ற வளர்ப்பு போன்ற அலங்கால நீரின பூண்டுகள் உற்பத்தி வழிமுறைகளுக்கான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் வசதிகள்.
- வருடந்தோறும் சர்வதேச மட்டத்தில் அலங்கார மீன் மற்றும் பூண்டுகள் கண்காட்சி.
- சுற்றாடலை பாதுகாக்கத்தக்கதாக மடிந்த தாவரங்கள், வேர்கள், கற்பாகங்கள் போன்ற உயிரற்ற அலங்கார அங்சங்களின் உற்பத்திக்கும் உள்நாட்டு அலங்கார மீன்களை புதிய தொழில்நுட்ப முறைகள் ஊடாக இனப்பெருக்கம் செய்யவும் அவசியமான வசதிகள்.
- சுழியோடுகின்ற முறைகள் ஊடாக அலங்கார மின்களை சேகரிக்கின்ற தொழில்வல்லுனர்களுக்கான சுழியோடிக் கருவிகளின் பாவனை, நிலைபெறுதகு விளைச்சல் அறுவடை செய்கின்ற வழிமுறைகள், அறுவடைக்குப் பிந்திய செதத்தைக் கறைத்தல் மற்றும் முதலுதவிகள் போன்ற அறிவு முறைமைகள் மற்றும் மாற்று வாழ்வாதாரங்கள் என்றவகையில் மீன் இனப்பெருக்க நிலையங்களை உருவாக்கவும் சுற்றுலா சுழியோடல் வழிகாட்டல் போன்ற தருணங்களில் பிரவேசிக்கவும் அவசியமான வசதிகள்.

## மீனவர் சமூக நலனோம்பல்

- மீனவர் சமுதாயம், அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் கைத்தொழிலுக்காக பாவிக்கின்ற உபகரணங்கள் மற்றும் உள்ளீடுகளுக்காக பலம்பொருந்திய காப்புறுதி முறையியல்.
- சுழியோடிகள் எதிர்நோக்குகின்ற குருதியில் நைதரசன் குமிழ்கள் (பென்டிஸ் நோய்) தோன்றுதலுக்கான சிகிச்சை நிலையங்கள்.
- தற்போது செயலிழந்துள்ள கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமுலாக்குதல்.
- இளம் மீனவர் சமுதாயத்திற்கு தொழில்சார் மீன்பிடி மற்றும் கப்பற்றுறையை இலக்காகக்கொண்ட பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டல்.
- துறைக்கான தொழில்வாண்மையாளர்களை உருவாக்கவதற்காக கடல்சார்

பல்கலைக்கழகத்தில்ஃ பீடங்களில் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பரவலான பங்களிப்பு.

- மீனவர் சமுதாயத்தின் சுகாதாரம், வீடமைப்பு, சிறுவர் மற்றும் முதிய பிரஜைகளுக்கான பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களையும் கலாச்சார அம்சங்கள் போன்ற அவசியப்பாடுகளை நிவர்த்திசெய்வதற்கான விரிவான வசதிகள்.
- மீன்படிக் கிராமங்கள் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களை சார்ந்ததாக சமுதாய அடிப்படையிலான அமைப்புகள் என்றவகையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மீனவர் வங்கிகள்.
- மீன்பிடித் தொழில்வல்லுனர்கள் / நீரின வளர்ப்பாளர்களை தொழில்சார் மட்டத்திற்கு கொண்டுவருதலும் நிதிசார் எழுத்தறிவினை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும்.
- வெளிக்கள உத்தியோகத்தர்களுக்காக தாழில்நுட்ப மதியுரை சேவைகள், வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முறைசார்ந்த முறையியலொன்று.
- மீனவப் பெண்கள் மற்றும் ஏனைய அபாயநேர்வுக்கு இலக்காகக்கூடிய குடும்ப அங்கத்தவர்களுக்காக வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் அபிவிருத்திளை முன்னேற்றுவதற்கான நிகழச்சித்திட்டங்கள்.

## உள்ளீடுகளின் உற்பத்தி மேம்பாடு

- மீன்பிடித்துறையின் பாவனை உள்ளீடுகளான உயிருள்ள - உயிரற்ற உணவுகள், கலங்கள் மற்றும் வலைகள், நீரின வளர்ப்புகளுக்கு அவசியமான தூள் உபகரணங்கள் மற்றும் இயந்திரசாதனங்களின் உற்பத்திக்கான வசதிகள்.
- கைத்தொழிலுடன் தொடர்புடைய உள்ளீடுகளை போதியளவில் நாட்டுக்குள்ளே உற்பத்தி செய்யும்வரை இறக்குமதி செய்யப்படுகின்ற உள்ளீடுகளுக்கான வரிச்சலுகைகள்.

## அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவம் மற்றும் பெறுமதி சேர்க்கின்ற உற்பத்திகள்

- அறுவடைக்குப் பிந்திய சேதம் குறைவடையத்தக்கதாக மீன்பிடித்தல், பொதியிடல், களஞ்சியப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலுக்க அவசியமான தொழில்நுட்ப வசதிகளை வழங்குதல், உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியும் விழிப்புணர்வூட்டுதலும்.
- அகற்றுகின்ற மீன் பாகங்களை பாவித்து மீன் தூள், மீன் உணவு, திரவப் பசளை மற்றும் பிற உற்பத்திகளின் மேம்பாடு.
- தரமிக்க மீன் உற்பத்திகளை முறைசார்ந்தவகையில் விநியொகிப்பதன் மூலமாக பாவனையாளருக்கு மேற்படி உற்பத்திகளை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு.
- மீன்பிடிக் கலங்களின் நவீனமயமாக்கம், தரமிக்க பனிக்கட்டி உற்பத்திகள், மூடப்பட்ட கொள்கலன் பாவனை, ஒன்லயின் சந்தைப்படுத்தல் முறையியலை ஏற்படுத்துதல் போன்ற மாதிரிகள் ஊடாக அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்துக்கொள்ளல்.

**ஏற்றுமதி சாத்தியவளங்களை மேம்படுத்துதலும் அந்நிய செலாவணியை ஈட்டுதலும்**

- வருங்காலத்தில் திறக்கப்படுகின்ற புதிய வெளிநாட்டுச் சந்தைகளை இனங்காண்பதன் மூலமாக உற்பத்திகளை எற்றுமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தூதுவர் அலுவலகங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கூட்டாக ஏற்றுமதியை ஊக்குவித்தலும் வர்த்தக மேம்பாடும்.
- உள்நாட்டுரீதியாக தரத்தில் உயர்ந்த உற்பத்திகளை ஊக்குவித்து இறக்குமதியைக் குறைத்து அந்நிய செலாவணியை சேமித்தல்.
- உயர்வான ஏற்றுமதி சாத்தியவளங்கள் நிலவுகின்ற உற்பத்திப் பிரிவுகளில் முதலீடு செய்வதற்கேதுவாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவித்தல்.
- மீன் உற்பத்தி ஏற்றுமிதியில் நிலவுகின்ற தடைகளை நீக்குவதற்காக வினைத்திறன்கொண்ட துரிதமான முறையிலொன்று.

**மீன்பிடித் துறைமுகங்களை சார்ந்ததாக நிதிசார் ஈட்டல்களை மேம்படுத்துதலும் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தியும்**

- மீன்பிடித் துறைமுகங்களை சார்ந்ததாக கலங்களை நிறுத்திவைப்பதற்கான சேவைகளை அடிப்படையாகக்கொண்ட வலயங்களை ஒதுக்குதல்.
- மீன்பிடித் துறைமுகங்களை சார்ந்ததாக எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் எரிபொருள் விநியோக சிக்கல்களை தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகள்.
- அனைத்து பிரதான மீன்பிடித் துறைமுகங்களையம் சர்வதேச சமவாயங்களுக்கு அமைவாக முன்னுரிமை அடிப்படையில் நவீனமயமாக்குதல்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை சார்ந்ததாக அங்குள்ள மக்களை இலக்காகக்கொண்ட பன்னாள் மீன்பிடி கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக துறைமுகங்களை விரிவாக்குதலும் வசதிகளை முன்னேற்றுதலும்.
- பசுமைத் துறைமுக எண்ணக்கருவினை அடிப்படையாகக்கொண்ட மீன்பிடித்துறைமுக அபிவிருத்தியும் முகாமைத்துவ முறையியல்களும்.

**நீலப் பொருளாதாரம்**

- நீலப் பொருளாதார அணுகுமுறை ஊடாக உயிருள்ள மற்றும் உயிரற்ற கடல் வளங்களின் நிலைபெறுதகு பாவனை மற்றும் பிரித்தெடுத்தலுக்காக புதிய கடலக கைத்தொழில்களை நிறுவுதலை மேம்படுத்துதல்.
- நீலக் காபன் நிதிசார் துறையில் பிரவேசிப்பதற்காக மீன்பிடிக் கைத்தொழில், நீரின வளர்ப்பு மற்றும் நீரக வளங்களை உயர்வான மட்டத்தில் பயன்படுத்துதல்.

## டிஜிட்டல் அரசாளுகை

# சர்வதேச பங்காண்மை

இலங்கையில் கல்வியறிவு படைத்த, பயிற்றுவிக்கக்கூடிய தொழில்வாண்மையாளர்களை உள்ளடக்கிய மனித வளம் நிலவுகின்றது. ஆசியா, ஐரோப்பா, மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சேவைகளை வழங்குகின்ற நிலையமாக நாட்டின் மூலோபாய இடஅமைவினைக் கருதலாம்.

உலகளாவிய தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலில் விரிவடைந்து வருகின்ற தேவைகளுடன் இலங்கையின் கல்வித்துறையை சீராக்குதல் மந்தகதியில் இடம்பெற்று வருவதோடு அது திறமைகளிலான இடைவெளிக்கு வழிசமைத்துள்ளது. அதுமாத்திரமன்றி ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (R&D) மற்றும் புதிய தொழில்நுட்பக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்காக நிலவுகின்ற முதலீட்டு வாய்ப்புகள் மிகவும் குறைவானதாகும். மிகையான வலுச்சக்திக் கிரயம் மற்றும் வலுச்சக்தி வழங்கலிலான நிச்சயமற்றதன்மை, போதாக்குறையான இணையத்தள தொடர்பு மற்றும் பொதுப் போக்குவரத்து சிக்கல்களை உள்ளிட்ட பலவீனமான உட்கட்டமைப்பு வசதிகள், உறுதியற்ற அரச கொள்கைகள் மற்றும் பொருளாதார நிலைமை கைத்தொழிலின் முன்னேற்றத்தை மென்மேலும் நலிவடையச் செய்விக்கின்றன.

2024 இல் 9,039 பில்லியன் டொலர்களாக அமைகின்றதும் 2028 அளவில் 11.0% வருடாந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை எதிர்பார்க்கின்ற உலகளாவிய தகவல் தொழில்நுட்ப சந்தையின் வேகமான விரிவாக்கம் இலங்கையின் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில்மீது கணிசமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. செயற்கை நுண்ணறிவு (AI), தரவுப் பகுப்பாய்வு, இணையத்தளத்தில் உள்ளவை (IoT) சயிபர் பாதுகாப்பு (cyber security) போன்ற வளர்ந்துவருகின்ற தொழில்நுட்ப வளர்ச்சிகள் புத்தாக்கங்களுக்கு வழிசமைக்கின்றன. கட்டுப்பாடற்ற சேவைகள் (freelancer) சேய்மைப் பணிகளை புரிதல் (remote working) இலங்கையின் தகவல் தொழில்நுட்ப தொழில்வாண்மையாளர்களுக்கு உலக வாடிக்கையாளர்களுடன் ஒத்துழைத்து செயலாற்றுவதற்கான புதிய வாய்ப்புகளை வழங்கி வருகின்றன.

நிகழ்கால இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏறக்குறைய 85,000 பேர் பணியாற்றி வருகின்ற வருடாந்தம் ஏறக்குறைய 1.2 பில்லியன் டொலர் வரையான அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற நிலைமைக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையை உயர் பெறுமதிகொண்ட தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள் மற்றும் தீர்வுகளின் முதன்மையாளராக மாற்றுவதும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (FDIs) மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பினை கவர்ந்திழுக்கவல்ல நிலையமாக மாற்றுவதும் எமது நோக்கமாகும். 2030 அளவில் தகவல் தொழில்நுட்பக் கைத்தொழிலின் வருடாந்த வருமானத்தை 5 பில்லியன் டொலர் வரை அதிகரித்துக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் புத்தாக்கங்களையும் உயர் டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை அடைவதும் டிஜிட்டல்மயமாக்கல் மூலமாக வினைத்திறன்கொண்ட மக்கள் சேவைகளை வழங்கி அனைத்துப் பிரஜைகளினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதலும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக தொழில்நுட்பம் மூலமாக நெறிப்படுத்தப்படுகின்ற அறிவினை அடிப்படையாகக்கொண்ட சமூகமொன்றை கட்டியெழுப்பலாம்.



## கோட்பாடுகள்


- புத்தாக்கங்களை அடிப்படையாகக்கொண்ட இடையறாத வளர்ச்சி
- டிஜிட்டல் அரசாளுகை
- இலங்கையின் வியாபாரப் பெயரை மீளவும் வணிகப்பெயராக்குதல்
- டிஜிட்டல் பொருளாதாரத்தின் நன்மைகள்
- உயர் தொழில்நுட்பங்கள், மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் புதிய சந்தைகளில் பிரவேசித்தலுக்கான சர்வதேச பங்காண்மைகள்
- சர்வதேச தரநியமங்களுக்கு அமைவான உட்கட்டமைப்பு வசதிகள்

## செயற்பாடுகள்

- இலங்கை உயர் பெறுமதிகொண்ட தகவல் தொழில்நுட்ப உற்பத்திகள் மற்றும் தீர்வுகளுக்கான கேந்திரநிலையமாக விருத்திசெய்வதற்கான உலகளாவிய சந்தைப்படுத்தல் தொழிற்றுறையயை அமுலாக்குதல்.
- கணனியை உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மென்பொருள்கள் மற்றும் சேவைகளை பூச்சிய வற் வரி வீதத்திற்கு கொண்டுவருவதல்.
- வெளிநாட்டு சேவைபெறுனர்களுக்கு தகவல் தொழில்நுட்ப கைத்தொழிலை முனைப்பானதாக மேம்படுத்துவதற்காக இலங்கையின் வெளிநாட்டுத் தூ துச்சேவையை ஈடுபடுத்துதல் மற்றும் ஒவ்வொரு தூதுச்சேவைக்குமான திட்டவட்டமான இலக்குகளை பெற்றுக்கொடுத்தல்.
- தகவல் தொழில்நுட்பத்துறையில் உள்நாட்டு புதுமைப்படுத்தலையும் தொழில்முயற்சியாண்மையையும் ஊக்குவிப்பதற்காக புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிதியமொன்றினை நிறுவுதல்.
- பிரஜைகளுக்கு வெளிப்படைத்தன்மையும் வினைத்திறனும்கொண்ட சேவையை வழங்குவதற்கான பதிலிறுப்புச்செய்கின்ற அரச பிரிவொன்றை உருவாக்குவதற்காக பிரதான அரச நிறுவனங்களை டிஜிட்டல்மயமாக்கல்
- தகவல் தொழில்நுட்பத்துறையில் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை (FDIs) கவர்ந்திழுத்தல், புலமைச்சொத்து உரிமைகள், தரவுகளின் பிரத்தியேகத்தன்மை, தொழிற்சட்டங்கள் மற்றும் வங்குரோத்துநிலையை பிரகடனஞ்செய்தல் என்பவற்றுக்கான புதிய சட்ட முறைமை யொன்றை அறிமுகஞ்செய்தல்.
- நெறிமுறைசார்ந்த AI பாவனை, தரவுகளின் அந்தரங்கத்தன்மை

மற்றும் பல்வேறு அரச பிரிவுகளின் AI தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதற்காகவும் எந்தவொரு மொழியிலும் அரச சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவகையிலான புதிய தேசிய கொள்கையொன்றைத் தயாரித்து அமுலாக்குதல்.

- 2030 அளவில் தகவல் தொழில்நுட்ப உழைப்புப் படையை 150,000 வரை அதிகரிப்பதற்கான பயிற்சி மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
- வெளிநாட்டு சிறப்பறிஞர்களின் ஒத்துழைப்பினைப்பெற்று துறைசார்ந்த பொறியியலாளர்களைப் பயிற்றுவித்தல்.
- இலங்கையை தகவல் தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் தொழில்வாய்ப்புக்கான கவர்ச்சிகரமான பயணமுடிவிடமாக மாற்றிக்கொள்வதற்காக மேற்படி கம்பெனிகளின் ஒத்துழைப்புக் கருத்திட்டங்களுக்கான வரிச்சலுகைகள், கொடையளிப்புகள் மற்றும் பிற ஊக்குவிப்புகளை வழங்குதல்.
- உலகளாவியரீதியல் எற்றுக்கொள்ளப்பட்ட கம்பெனிகளை உருவாக்கி புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மையின் நிலைபெறுதகு முதலீடுகள் ஊடாக தகவல் தொழில்நுட்ப யுனிகோன்களை அபிவிருத்தி செய்தல்.
- இலங்கைக்கு உயர் தொழில்நுட்பங்களையம் மிகச்சிறந்த நடைமுறைகளையும் கொண்டுவருவதற்காக உலகளாவிய தகவல் தொழில்நுட்ப கம்பெனிகளுடனும் ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் பங்காண்மையைக் கட்டியெழுப்புதல்.
- பிராந்திய வளர்ச்சி மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதற்காக மேல், வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் ஆராய்ச்சி அபிவிருத்தி (R&D) நிலையங்களையும் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களையும் நிறுவுதல்.
- மேல், வடக்கு, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் 04 பிரதான பல்கலைக்கழகங்களில் நவீன தொழில்நுட்பத்தையும் திறமையான பணியாட்டொகுதியையும்கொண்ட 04 தகவல் தொழில்நுட்ப நிலையங்களைக் கட்டியெழுப்புதல்.
- அதிவேக இணையத்தளம், தரவுகள் நிலையம், நியாயமான விலையில் இடையறாத வலுச்சக்தி வழங்கல், பொதுப் போக்குவரத்து, ஸ்மார்ற் (மிடுக்கான) நகரங்களை ஆரம்பித்தலை உள்ளிட்டதாக இடையறாத கைத்தொழில் வளர்ச்சிக்கும் போட்டித்தன்மைக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை இடையறாமல் விருத்திசெய்தல்.
- உயர் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தன்னியக்கமயமாக்கலுடனான கைத்தொழில்கள் வரை 5.0 / 4.0 நிலைமாற்றத்திற்கான தகவல் தொழில்நுட்ப பாவனையை ஊக்குவித்தல்.



## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அணுகல்

# மதிநுட்பம் வாய்ந்த சமூகம்

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் ஒன்றாகப் பின்னிப்பிணைந்த ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் (Research and Development - R&D) செயற்பாங்கு, பெறுமதி சேர்க்கப்பட்ட (value added) பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்திசெய்து நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதுடன் ஒட்டுமொத்த மானிட மற்றும் சமூக மேம்பாட்டுக்கும் தோள் கொடுக்கின்றது. இலங்கை R&D இற்காக வருடாந்தம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 0.12% எனும் மிகவும் குறைந்த அளவினையே ஒதுக்கிவருவதோடு, இலங்கைக்கு இணையான புவிஅரசியல் சாத்தியவளங்களைக்கொண்ட நாடுகளான மலேசியா 1%, தாய்லாந்து 1.2% மற்றும் வியட்நாம் 0.42% செலவிட்டு வருவதோடு தென்கொரியா 4.6% , ஜப்பான் 3.6%, அமெரிக்கா 3.5 மற்றும் சீனா 3% ஐ ஒதுக்கி துரிதமாக முன்னேற்றமடைந்த நாடுகளாக மாறியுள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்ற வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சிகள்கூட பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு முறைப்படி பங்களிப்புச் செய்யவில்லை.

இலங்கை ஔடதப் பெறுமதிநிறைந்த உயர்வாள உயிர்பன்வகைமை கொண்டதாகவும் (biodiversity) நாட்டுக்கே ஓரிடஞ்சார்ந்ததான (endemic) தாவரங்களையும் (flora) விலங்கினங்களையும் (fauna) , புவி வளங்களையும், நாட்டைச்சூழ கடல் மற்றும் நாட்டுக்குள்ளே பாரிய நன்னீர் வளங்களையும் சமநிலைகொண்ட மண்வளத்தையும் அயனமண்டல காலநிலையையும், வருடம் பூராவும் கிடைக்கின்ற சூரிய சக்தி, காற்று விசை, பல்வேறு தோற்றுவாய்களைக்கொண்ட ஆறுகள் மற்றும் குளங்கள், அணைக்கட்டுகள் முதலிய பலதரப்பட்ட இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவையனைத்தும் R&D ஊடாக குறைவான கிரயத்தைக்கொண்ட, அதிக இலாபம் பெறக்கூடிய, பெறுமதி சேர்க்கப்பட்ட பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்யக்கூடிய துறைகளாக அமைந்துள்ளதோடு அவற்றுக்கு சர்வதேச சந்தையில் பாரிய சந்தை வாய்ப்புவளமும் (market potential) நிலவுகின்றது.

நாட்டில் புத்தாக்குனர் கிரமமட்டத்தில்கூட தோன்றினாலும் அவர்களின் கருத்துக்களையும் ஆக்கங்களையும் முறைப்படி உறிஞ்சிக்கொள்வதற்கான பொறியமைப்போ அவர்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலோ மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. இந்த மனித வளத்திற்கு சுதந்திரமாக சிந்திக்க அவசியமான சுற்றுச்சூழலை அமைத்துக்கொடுத்தல், அவர்களின் புதிய கருத்துக்களை ஆராய்ச்சிகள் மற்றும் முற்றாய்வுகள் ஊடாக மேலோங்கச் செய்விப்பதற்காக அரச மற்றும் தனியார் பிரிவுகளின் முறையான பங்களிப்பினை முறையான தூரநோக்குடன் வினைத்திறன் கொண்டதாக தயாரித்த ஒரு பொறியமைப்பின் மூலமாக பெற்றுக்கொடுப்பதன் ஊடாக இலங்கையை புதிது புனைதல் மையமாக (Innovation center) எதிர்காலத்தில் மாற்றிக்கொள்ள முடியும்



## கோட்பாடுகள்

- உற்பத்திப் பொருளாதாரத்திற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் நேரடியான பங்களிப்பு.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் நன்மைகளை நியாயமனவகையில் பொதுமக்களுக்கு பகிர்ந்தளித்தல்
- ஆராய்ச்சிப் பிரிவுகளின் சுயாதீனத்தன்மை பற்றிய மேற்பார்வையும் ஒழுங்குறுத்தலும்.
- வெளிப்படைத்தன்மை, வினைத்திறன், சமபங்கு, பன்வகைமை மற்றும் உள்ளடக்குதல் (equity-diversity-inclusion)
- வெளிப்படைத்தன்மை, பாரபட்சமற்ற தெரிவு மற்றும் நியாயமான வாய்ப்புகள்.
- தேசிய மற்றும் சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகள், நடைமுறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளுக்கு அமைவான ஆராய்ச்சிகள்
- புத்தம்புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகளை பாதுகாத்தலும் புத்தாக்குனர்களுக்கான முறையான மதிப்பீடும்
- ஆராய்ச்சிகளுக்கான அரச, தனியார் மற்றும் பொதுமக்கள் பங்காண்மை.

## செயற்பாடுகள்

### விவசாயம், மீன்பிடி, கால்நடைவளம் மற்றும் உணவுப் பாதுகாப்பு

- வளங்களை இனங்காணலும் உயரிய பயன்பாடும், விவசாய உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல் மற்றும் நிலைபெறுதகு சந்தைப்படுத்தல் மூலோபாய தீர்வுகளை இனங்காண்பதற்கான சமூக - பொருளாதார ஆராய்ச்சிகள்.
- காலநிலை மாற்றங்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய பயிர்களை உருவாக்குதல், பிரதான பயிர்களின் நிலைபெறுதகுதன்மை மற்றும் பொருளாதார சாத்தியவளங்களை முன்னேற்றுதல், பொருளாதார அநுகூலங்களை உச்சப்படுத்துவதற்காக உணவை நீண்டகாலம் பாதுகாத்து வைத்துக்கொள்ளலும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை அபிவிருத்தி செய்தலும்.
- அலங்கார நீரகவளங்களும் அலங்கார பூங்காப் பயிர்களும், அத்துடன் விடுமுறை பங்களா சந்தை என்றவகையில் சேதன விவசாயம் ஊடாக நிலையான வருமானப் பிறப்பாக்கம் மற்றும் சர்வதேச சந்தைகளில் போட்டித்தன்மையையும் நிலைபெறுதகுதன்மையையும் உறுதிசெய்வதற்கான பரிகாரங்களை காண்பதற்கான ஆராய்ச்சிகள்.
- உயர்வான விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்காக மனைசார் பயிர்கள், ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் கால்நடை வளங்கள் போன்ற பிரிவுகளில் புதிய ஆராய்ச்சிகள்.

- பயிர்ப் பன்வகைப்படுத்தல், உயர்வான முகாமைத்துவ நடைமுறைகள், உள்நாட்டு நவீன தொழில்நுட்ப ஒருங்கிணைந்த உபாயமுறைகள் (நீர், சேதன மற்றும் அசேதன உரங்கள் மற்றும் பிற விவசாய இரசாயனங்கள் போன்றவை) மற்றும் பொருத்தமான இடங்களில் பசுமைக்குடில்களையும் செங்குத்துப் பயிர்ச்செய்கை முறைகளையும் பற்றிய ஆராய்ச்சிகள்.
- உயர் உற்பத்தித்திறன்கொண்ட விலங்குகளின் இனவிருத்தி, தரமிக்கஉணவு உற்பத்தி, குறைந்த செலவிலான மாற்று வீடுகள் மற்றும் அவற்றின் முகாமைத்துவத்தை புலனாய்வுசெய்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயப் பண்ணைகளுக்கு பொருத்தமான காணிப் பயன்பாட்டின் மூலமாக கால்நடைவள உற்பத்திகளை (பால், கோழியிறைச்சி மற்றும் பன்றியிறைச்சி) சூழலுக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்து விருத்திசெய்வதற்கான ஆராய்ச்சிகள்.
- உயர்வான விளைச்சலைக்கொண்ட அழுத்தத்திற்கு தாக்குப்பிடிக்கக்கூடிய பயிர்களையும் உணவு வகைகளையும் இனங்காணல் (climate smart agriculture), உள்நாட்டுப் பயிர் முகாமைத்துவ நடைமுறைகளின் விருத்திசெய்தல்கள், வசதியான விதையினங்கள் மற்றும் நடுகைப்பொருட்கள் உற்பத்தியும் பலவிதமான விவசாய சூழல் தொகுதிகளுக்குப் பொருத்தமான பயிர்களை ஒருங்கிணைப்பதன் மூலமாக உற்பத்தி வினைத்திறனையும் காணிகளின் உற்பத்தித்திறனையும் உயர்த்துவதற்கான ஆராய்ச்சிகள்
- சந்தைப்படுத்தல், புதிய சந்தைகள் மற்றும் அவை பற்றிய எதிர்வுகூறல்கள், சமூக நலனோம்பல், விரிவாக்க சேவைகள் மற்றும் அவசியப்பாடுகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிகள்.
- மீன்கள் பரவலாக காணப்படுகின்ற இடங்களை இனங்காண்பதற்காக நிலவுகின்ற வழிமுறைகளிலான திட்பநுட்பத்தன்மையை அதிகரித்தல், சூரிய சக்தி, டுபேு முதலியவற்றைக்கொண்ட கலங்கள், பாரிய கப்பல்களை வழங்குதலும் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதலும், கலங்கள் மற்றும் மீன்பிடி முறைகளை நவினமயமாக்குதல்.
- கடல் மீன்வளத்தின் சாகியம் பற்றிய மதிப்பிடு, எதிர்வுகூறல் மாதிரியை நிர்மாணித்தலை இடையறாமல் மேற்கொள்ளலும் நன்னீர் மற்றும் சவர்நீர் நீரகத் தொகுதிகளின் கொள்ளளவுகளை சரிவர கணிப்பிடுவதற்கான ஆராய்ச்சிகள்.

### சுகாதாரம், கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகள்

- டெங்கு, சிறுநீரக (CKD), தொற்று நோய்கள் மற்றும் இலங்கைக்கு ஏற்புடைத்தான பிற தனித்துவமான சுகாதார சிக்கல்களைத் தீர்ப்பதற்கான மரபணுவியல், உயிர் இரசாயனம், நெனோ தொழில்நுட்பம், வளர்சிதைமாற்றம், புரதக்கல்வி (புறோட்டியோமிக்ஸ்) மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) போன்ற புதிய விஞ்ஞான வழிமுறைகள்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலமாக நாட்டுக்கு அவசியமான ஔடதங்களை உள்நாட்டில் உற்பத்திசெய்தல்
- பிள்ளைகளின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்காக உள்நாட்டில் பெறக்கூடிய மேலதிக உணவுகளை உற்பத்திசெய்தல்.

- புற்றுநோய், நீரிழிவு, இதயநோய் போன்றவற்றை முன்கூட்டியே இனங்காண்பதற்கான நவீன தொழில்நுட்ப பரிசோதனைகள்.
- நாடளாவிய ஆராய்ச்சிகள் மற்றும் மதிப்பாய்வுகள் மூலமாக இலங்கை கல்வித்திட்டத்தின் தரத்தையும் வளங்களின் முரண்பாடுகளையும் இனங்கண்டு அந்த தரவுகளை அடிப்படையாகக்கொண்ட தீர்வுகளை வழங்குதல்.
- பாடசாலைக் கல்வியை புலனாய்வினை அடிப்படையாகக்கொண்ட கல்வியாக மாற்றுவதற்கான ஆராய்ச்சிகளையும் அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ளல்.
- ஆசிரியர் பயிற்சி மற்றும் தொழில் அபிவிருத்திக்கான புத்தம்புதிய, செயற்கை நுண்ணறிவினை (AI) உள்ளடக்கிய உள்ளீடுகளும் மெய்நிகர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டஙகளும்.
- அரச மற்றும் தனியார் பங்காண்மையுடன் உயர் கல்வி நிலையங்களில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கூறுகளை விரிவாக்குதல்.
- சுதேச மருத்துவம்சார்ந்த R&D ஐ முறைப்படி நடாத்துவதற்காக தேசிய ஆணைக்குழுவொன்றினை தாபித்தல்.
- மூலிகைச் செடி வளர்ப்பினை ஊக்குவித்தல், இழையச்செய்கை மற்றும் மரபணுப் பொறியியல் நிலையங்களையும் ஆய்வுகூடங்களையும் நிறுவுவதன் மூலமாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தை தேவைகளை நிவர்த்திசெய்கின்ற தரமிக்க சுதேச ஔடதங்கள், ஊட்டச்சத்து ஔடதங்கள் (nutraceuticals), உணவுக் குறைநிரப்பிகள் (food supplements), அழகுசாதனப் பொருட்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட பண்டங்களை உற்பத்திசெய்தல்.
- நெனோ தொழில்நுட்பத்தை அடிப்படையாகக்கொண்ட ஆராய்ச்சிகள் ஊடாக சூரியக்கலத் தொழில்நுட்பம், மின்னணுவியல் சாதனங்கள், ஔடதங்கள், வலுச்சக்தி வினைத்திறன்கொண்ட புத்தாக்கங்கள், சுற்றாடல்சார் பரிகரிப்பு ஆக்கக்கூறுகள், எதிர்கால மோட்டார் வாகனங்கள், ஏனைய இயந்திரசாதன உற்பத்திக்கான உதிரிப்பாகங்கள் போன்ற உற்பத்திகளின் மேம்பாடு.

### தகவல் தொழில்நுட்பம், தொடர்பாடல், பொறியியல், வலுச்சக்தி, கடல்சார்ந்த, போக்குவரத்து, சுற்றுலா மற்றும் பிற கைத்தொழில்கள்

- பல்வேறு இலங்கைவாழ் இனக்குழுக்களுக்கிடையில் மொழித்தடைகளை தவிர்த்துக்கொள்வதற்காக அரசாங்க நிறுவனங்களிலும் பொது இடங்களிலும் செயற்கை நுண்ணறிவு (AI) மூலமாக நெறிப்படுத்தப்படுகின்ற தொடர்பாடலையும் மொழி முறைமைகளையும் நிறுவுவதற்கான ஆராய்ச்சிகள்.
- வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ மற்றும் நிலச்சரிவுக்கான முன்னுணர்ந்தும் முனைப்பாகவும் செயலாற்றுகின்ற (Proactive and real-time alerts systems) அபாய அறிவிப்பினை செய்வதற்கான செயலூக்கமுள்ள அனர்த்த முகாமைத்துவ முறைமைகளை அபிவிருத்திசெய்தல்.
- மோட்டார் வாகன தாமதங்களைக் குறைப்பதையும் பாதுகாப்பான பயணிகள் சேவைகளை முன்னேற்றுவதையும் நோக்கமாகக்கொண்ட வினைத்திறன்மிக்கதும் பயனுறுதிமிக்கதுமான முகாமைத்துவ முறைமையைக் கட்டியெழுப்புவதற்கான ஆராய்ச்சிகள்.


- வளி மாசுபாட்டினைக் குறைத்தல், வாகன உமிழ்வினை கட்டுப்படுத்துதல் மற்றும் பிரதான நகரங்களில் வளிமாசுபாட்டு கண்காணிப்பு கருவிகளைப் பொருத்துதல்.
- வளப்பாவனையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக, விரயத்தைக் குறைப்பதற்காக ஸ்மார்ட் மானி தொகுதிகளை (Smart Meters) பாவித்தல். உதாரணம்: மின்சார மானி, வாகன நிறுத்துமிடத் தொகுதி மானி, நீர் மானி தொகுதிகளை பொருத்துதல் பற்றிய ஆராய்ச்சிகளை நடாத்துலும் அபிவிருத்தி செய்தலும்.
- சரியான வானிலை எதிர்வுகூறலை வெளிப்படுத்தவும் வலுச்சக்தி தேவைகளை கணிப்பீடு செய்யவும் கூடியதாக பொறிமுறை வாசித்தல் மற்றும் செய்மதி தரவுகளை பாவித்தல் ஊடாக நீர்மின்சாரம், காற்றுவிசை மற்றும் சூரிய சக்திவளங்களின் பாவனையை உச்சமட்டத்திற்கு கொண்டுவருதல்.
- மின்னணுவியல் கழிவுப்பொருட்கள் கையுதிர்க்கப்படுவதை குறைப்பதற்காகவும் மீள்சுழற்சியாக்கத்திற்காகவும் அவசியமான தீர்வாக கழிவுப்பொருட்களை கையுதிர்ப்பதற்காக துப்பரவேற்பாட்டு குப்பைகூள தொட்டிகளை நிறுவுதல்.
- நவீன செலவுகுறைந்த தொழில்நுட்பங்கள் மற்றும் கூரையின்மீது சூரியக் கலங்களையும் வலையமைப்புகளை ஒருங்கிணைக்கின்ற சாதனங்களுக்கான உள்நாட்டு உற்பத்தி இயலுமைகளுக்காக சுரூனு தொடர்பான முதலீடுகளை செய்தல்.
- மண், மணல், கல், செங்கல், தார் மற்றும் பிற உள்நாட்டு நிர்மாணப் பொருட்களுக்காக இலங்கை நிலைமையுடன் தொடர்புடைய உள்நாட்டுத் தரநியமங்களை அபிவிருத்தி செய்வதற்காக சுரூனு ஐ பிரயோகித்து நிர்மாணக் கிரயத்தை குறைத்தலும் நிலைபேறான பொறியியல் நடைமுறைகளை மேம்படுத்தலும்.
- கட்டிடக் கைத்தொழிலுக்காக கடல் மணலை வினைத்திறன்கொண்டதாக பாவித்தல் பற்றிய ஆராய்ச்சிகள்.
- உயிச்சுவட்டு எரிபொருளில் தங்கியிருப்பதை குறைத்துக்கொள்ளவும் புதுப்பிக்கத்தக்க வலுச்சக்தி இலக்குகளை அடைவதற்காகவும் கரையிலிருந்து சற்று விலகிய காற்றாலைக் கருத்திட்டங்கள், சூரிய மற்றும் ஹைட்ரஜன் வலுச்சக்தியை அபிவிருத்தி செய்தல்.
- தெரிவுசெய்த பிரதான மாவட்டங்களில் முன்னோடித் தொழில்நுட்ப அபிவிருத்தி நிலையங்களை தாபித்தல்.
- கைத்தொழில், அலுவலக, மருத்துவ உபகரணங்கள் (வைத்தியசாலை கட்டில்கள், சேலயின் போத்தல், சிரின்ஞ் போன்ற) மற்றும் நுகர்வுப் பொருட்களின் அபிவிருத்திக்காக உள்நாட்டுத் தொழில்நுட்ப நிபணத்துவத்தையும் புத்தாக்கங்களையும் பாவித்தல்.
- தேயிலை, இரப்பர், தெங்கு, நெல் போன்ற விவசாய உற்பத்திகளின் விளைதிறனை அதிகரிக்கவும் உழைப்பாளியின் பாதுகாப்பினை உறுதிசெய்யவும் அவசியமான உள்நாட்டு தொழில்நுட்பத் தீர்வுகளின் அபிவிருத்தி.
- முதியோர் சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையையும் வலதுகுறைந்த

சமுதாயத்தினரை உழைப்புப் படையணியில் பங்களிப்புச் செய்துகொள்ளவும் அவசியமான உள்நாட்டு சாதனங்களின் அபிவிருத்தி.

- இடைநிலை தொழில்நுட்ப தீர்வுகளை முன்வைத்து சிறுகைத்தொழில் வரை முன்னேற்ற அவசியமான திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள கிராமிய தொழில்முயற்சியாளர்களை இனங்காண்பதற்காக பயனுறுதிமிக்க அணுகுமுறைகளை புலனாய்வு செய்வதற்கான பாரிய தரவுகள், பொறிமுறை வாசிப்பு, AI, சமுதாய வலையமைப்பாக்கல் மற்றும் சமூக ஊடகங்கள் பற்றிய நிபுணத்துவ அறிவுபடைத்த செயலணியொன்றை தாபித்தல்.
- திடீர் அனர்த்தங்களுக்கான பிரதிபலிப்புச் செய்தல் மற்றும் தயார் நிலைக்கு முதன்மைத்தானம் கொடுத்தலை உள்ளிட்ட சமுத்திர இடப்பரப்பின் கொள்திறன் இடைவெளிகளை கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகளை நடாத்துதல்.
- R&D ஊடாக பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்திக்கொண்டும் நிலைபெறுதகு சுற்றுலாத்துறை
- சுற்றாடல், காணி, நீர், வளி மற்றும் கனிய வளங்கள்
- நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகின்ற மனிதனுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான மோதல்களை குறைப்பதற்காக மிகவும் உசிதமான முறையியல்களை முன்னோடிக் கருத்திட்டமொன்றின் பின்னர் அமுலாக்குதல்.
- காணிப் பயன்பாட்டுக்கான தேசிய கொள்கைக்கு அமைவாக நீரேந்துபரப்புகள், தாவரங்கள், உயிர்ப்பன்வகைமை, வெப்பமான இடங்கள் முதலியவற்றை தேசப்படமாக்கல்.
- விவசாய, கடலக மற்றும் நன்னீர் வளங்களை சிறப்பாக முகாமைத்துவம்செய்து அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைப்பதற்கும், உற்பத்தி பன்வகைமைப் படுத்தலுக்கு அவசியமான தொழில்நுட்பத்தை அறிமுகஞ்செய்தல்.
- கடலக மற்றும் நீரக வளங்களைப் பயன்படுத்தி ஔடதங்கள், மேனிவனப்பு, உணவுக் குறைநிரப்பி போன்ற புதிய உயர் சந்தை பெறுமானங்களைக்கொண்ட உற்பத்திகளுக்கான ஆராய்ச்சிகள்.
- இலங்கையில் கனிய வளங்களை முறைப்படி முகாமைசெய்து, இல்மனைற் மூலமாக டைட்டேனியம் டயொக்சைட், பேருவளை மொனசயிட்டிலிருந்து அரிய கனிய உற்பத்தி மற்றும் சேருவில இரும்புத்தாது படிவு மூலமாக செம்பு மற்றும் தங்க உற்பத்தி போன்ற புதிய சாத்தியவளங்களை கற்றாராய்ந்து அமுலாக்குதல்.
- கடற்கரையோர அரிப்பினை குறைத்து கண்டல் மற்றும் கரையோர சுற்றாடல் தொகுதிகளை பாதுகாப்பதற்காக புதிய பொறியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மானிட அபிவிருத்தி, கலை, வரலாறு, கலாச்சாரம் மற்றும் இறந்தகால மரபுரிமைகள் பற்றிய கற்கை
- சுருனு மற்றும் தரவுகளை அடிப்படையாகக்கொண்ட தலைமைத்துவ, ஒத்துழைப்பு மற்றும் தொடர்பாடல் திறமைகளை அபிவிருத்தி செய்வதற்காக பட்டப்படிப்பு பாடத்திட்டங்களில் மாற்றங்களை மேற்கொள்ளல்.
- சமூக நல்வழியுரிமையை மேம்படுத்துவதற்காக சமூகரீதியான புதிதுபுனைதல், சமூகரீதியான பயனுறுதிமிக்க புதிய அறிவு, கலைப் படைப்புகள் மற்றும்

தத்துவரீதியான கருத்துக்களை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை R&D ஐ அடிப்படையாகக்கொண்டு அபிவிருத்தி செய்தல்.

- மனைசார் ரொபோ நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய R&D ஐ நடாத்துதலும் மானிட உருவம்கொண்ட ரொபோ உற்பத்திக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் முன்னேற்றுதலும்.
- புதிய மின்னணுவியல் உதவிச் சாதனங்கள், ஔடதங்களை ஞாபகப்படுத்துகின்ற முறைமைகள், வினைத்திறன்மிக்கதாக குளிசைகளை பகிர்ந்தளிப்பவர்கள் மற்றும் ரெலிஹெல்த் முறைமையை அபிவிருத்தி செய்வதன் மூலமாக இளைப்பாறிய அல்லது முதிய தலைமுறையினருக்கு உதவுதல் அத்துடன் கட்புல தொடர்பாடல் உதவிச் சாதனங்களை விருத்திசெய்தல்.
- சர்வதேச சந்தையை இலக்காகக்கொண்டு பல்வேறு காலநிலைத் தன்மைகளுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய இசைக்கருவிகள், நடன உடைகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதற்காக முறையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஈடுபடுத்துதல்.
- இசை, பாடல், நாடகம், ஒபெறா மற்றும் சினிமா போன்ற அரங்காற்றுகை கலைகளுக்கு சுரூனு ஊடாக புதிய தொழில்நுட்பத்தை சேர்த்தல், அவற்றின் மூலாரம்பத்தை பாதுகாத்துக்கொண்டு இந்த அனைத்துப் பிரிவுகளையும் இலங்கையில் இலாபகரமான கைத்தொழில்களாக நிறுவுதல்.
- வினைத்திறன்மிக்க ஆவணக் காப்பக முறைமையொன்றினையும் பொது அறிக்கைகள் முகாமைத்துவத்தையும் நிறுவுவதற்காக AI உள்ளிட்ட புதிய தொழில்நுட்பத்தின் பாவனையை பலப்படுத்துதல் மூலமாக தேசிய ஆவணக் காப்பகத்தின் கொள்தினை அதிகரித்தல்.
- இறந்தகால மரபுரிமைகள், சடங்குகள், நம்பிக்கைகள் , கலாச்சாரங்கள் மற்றும் வாழ்க்கைப் பாங்குகள் விபரிக்கப்பட்டுள்ள சுவடிகள் முதலியவற்றை விஞ்ஞானரீதியாக கற்றாராய்தலும் இறந்தகால தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் நடைமுறைகளையும் இனங்காண்பதற்காக தேசிய மட்டத்திலான ஆராய்ச்சிகளை நடாத்துதலும்.
- அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களை உள்ளிட்ட தொடர்பாடல் மூலங்களுக்காக பொருத்தமாக உள்ளடக்கப்பட்ட பகுப்பாய்வுகள், மதிப்பாய்வுகள், கவனக் குழுக்களை பரீட்சித்துப் பார்த்தல், பங்குபற்றுனர்களின் அவதானிப்புகளை மேற்கொள்ளல் மற்றும் தொடர்பாடல் வினைத்திறனின் தரநியமங்களை முன்னேற்றுதல்.



## நவீன சுற்றுலாக் கைத்தொழில்

# கவர்ந்திழுக்கும் பயணமுடிவிடம்

சுற்றுலாக் கைத்தொழில் என்பது உலகளாவிய தேவைகளை பூர்த்திசெய்கின்ற ஒரு மேடையாக அமைவதோடு அதன் மூலமாக உபசரணை நாடுகளுக்கு பொருளாதார, சமூக- கலாச்சார மற்றும் சுற்றாடல் நன்மைகளைக் கொண்டுவர முடியும். சுற்றுலாக் கைத்தொழிலின் வளங்கள் பிரதானமாக நான்கு பகுதிகளாக இனங்காணப்படலாம். அதாவது இயற்கை, கலாச்சார, மனித மற்றும் மூலதன வளங்கள் என்பனவாகும். இந்த வளங்களை விளைபயன்மிக்கவகையில் ஒருங்கிணைத்து திட்டமிடுவதன் ஊடாக முன்னேற்றமடைந்த சுற்றுலாக் கைத்தொழிலைக் கட்டியெழுப்பமுடியும்.

சுற்றுலாப்பணிகளின் வருகை 2.3 மில்லியன், 4.3 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பு 4.9% ஐ பெற்றுக்கொண்டு இலங்கையின் சுற்றுலாத் தொழிற்றுறை 2018 ஆம் ஆண்டில் இதுவரையான மிகச்சிறந்த செயலாற்றுகையை பிரதிபலித்துள்ளது. அதற்கிணங்க சுற்றுலாத் தொழிற்றுறையின் அடிப்படை ஆண்டாக 2018 எனக் கருதி தேசிய மக்கள் சக்தி தனது எதிர்கால சுற்றுலாத்துறை இலக்கினை இனங்கண்டுள்ளது. அதற்கிணங்க சுற்றுலாக் கைத்தொழில் இலங்கையின் தீர்மானகரமான பொருளாதார துறையென்ற வகையிலும் நாட்டின் அந்நிய செலாவணியை ஈட்டுகின்ற பிரதான தொழிற்றுறையாகவும் கருதப்பட்டு அதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கிணங்க சுற்றாடல் கைத்தொழிலின் நிலைபெறுதகுதன்மையும் தரப்பினர்களின் உயர்வான வாழக்கைத்தரத்தையும் பொருளாதார விருத்திக்கான உயர் பங்களிப்பினையும் உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் சுற்றுலாப்பயணிகளின் உச்சமட்ட மனநிறைவையும் போலித்தனமற்ற அனுபவத்தையும் பெற்றுக்கொடுப்பதற்காக முதன்மை கைத்தொழில் என்ற வகையில் அந்தஸ்த்தினைப் பெற்றுக்கொடுத்து உலகளாவிய சூழமைவில் இலங்கையை உயர்வான கேள்வி நிலவுகின்ற பயணமுடிவிடமாக மாற்றுவதே எமது தூரநோக்காக அமைகின்றது.



# கோட்பாடுகள்

- தூரநோக்குடைய தலைமைத்துவம், மூலாபாய நிர்வாகம் மற்றும் முழுநிறைவான பொருளாதார வளர்ச்சி
- இயற்கை மற்றும் கலாச்சார வளங்களை நிலைபெறுதகு தன்மையுடன் பாவித்தல்
- சுற்றுலாக் கைத்தொழிலுக்கான மனிதவள அபிவிருத்தி
- புத்தம்புதிய சுற்றுலா உற்பத்திகளின் அபிவிருத்தி மற்றும் தரப்படுத்தல்.
- மூலோபாயரீதியான பயணமுடிவிட சந்தைப்படுத்தல்

# செயற்பாடுகள்

**தூரநோக்குடைய தலைமைத்துவம், மூலோபாயரீதியான ஆட்சி மற்றும் முழுநிறைவான பொருளாதார வளர்ச்சி**

- சுற்றுலாப் பணிகளின் இணைப்பாக்கம் மற்றும் முகாமைத்துவத்திற்காக பொறுப்புக்கூறவேண்டிய பிரதான நிறுவனமாக தேசிய சுற்றுலாத்துறை ஆணைக்குழுவை (NTC) நிறுவுதல்.
- கொள்கை வகுத்தல் பணிகளுக்காக சுற்றுலாத்துறை கொள்கை வுகத்தல் பேரவையை நிறுவுதல். (TPFC )
- சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டுக்கான இலங்கை சுற்றுலா அதிகார சபையை நிறுவுதல்.
- பொருளாதார விருத்தியின் பிரதான கைத்தொழிலாக சுற்றுலாத்துறையின் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் மேம்பமுத்துவதற்கான புதிய சுற்றுலாத்துறை சட்டமொன்று.
- சாத்தியவள ஆய்வினை அடிப்படையாகக்கொண்டு புதிய சுற்றுலாப் பயணமுடிவிடங்களை நிறுவி சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வசதியளித்தல்.
- சுற்றுலாக் கைத்தொழிலில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்கள் மற்றும் சட்டவிரோத செயல்களை தடுப்பதற்காக தகவல் தொழில்நுட்ப தொடர்பாடலை முறைமை.
- இலங்கைக்கு சுற்றுலாப்பயணிகள் வருகின்ற பிரதான நாடுகளுடன் வினைத்திறனும் நேரடியானதுமான வான் தொடர்புகள்.
- இலங்கையின் பிரதான சுற்றுலா பயணமுடிவிடங்களுக்கான உள்ளக விமான சேவைகள் வசதிகள்.
- சுற்றுலாக் கைத்தொழிலுக்கு அதிக பங்களிப்பினை வழங்குகின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுற்றுலாத்துறை தொழில் முயற்சியாளர்களின் (MSME) சேவைத் தரங்களை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புகளும் வசதிகளும்.

- சுற்றுலா சேவைகளின் அனைத்துப் பிரிவுகளினதும் தரத்தை மேம்படுத்துவதற்காக சர்வதேச மட்டத்திலான தரப்படுத்தல் வேலைத்திட்டம்.
- சுற்றுலாக் கைத்தொழிலின் முறைசாராத சேவைகளை வழங்குபவர்களை முறைப்படுத்தவதற்காக அவசியமான வசதிகள்.
- உள்நாட்டு சுற்றுலாத் தொழிற்றுறையை நாட்டின் முதன்மையான மற்றும் மாற்று சுற்றுலாப் பிரவாகமாக அபிவிருத்தி செய்வதற்காக அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் தனியார் துறையின் பங்கேற்பினை ஊக்குவித்தல்.
- சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக முறைசார்ந்த சர்வதேச பங்காண்மைகள், தியாகசிந்தையுள்ள முகவராண்மைகள் மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் தொழில்நுட்ப மற்றும் நிதியுதவிகளை முதன்மைநிலை மற்றும் தேவையின் அடிப்படையில் விளைபயனமிக்கதாக பாவித்தல்.
- புத்தாக்கங்கள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக வருடாந்த தேசிய சுற்றுலாத்துறை விருதுவழங்கல் வைபவம்.

### வளங்களின் நிலைபெறுதகு பாவனை

- இயற்கை வளங்கள் சார்ந்ததாக சுற்றுலாத் தொழிற்றுறையை முன்னேற்றுவதற்காக சுற்றுலா வளங்கள் பயப்பாட்டுத் திட்டமொன்று.
- டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன் எதிர்கால சுற்றுலாசார்ந்த முதலீட்டுக்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களினதும் அரச இடையீட்டனும் சுற்றுலாத்துறையின் காணிப் பயன்பாட்டு முறையியலைக்கொண்ட காணி வங்கியொன்று.
- சுற்றுலா அலுவல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள இனங்காணப்பட்ட சுற்றுலாக் கவர்ச்சி நிலையங்களில் தேக்கிவைப்பதற்கான கொள்திறன்களை (Carrying Capacity) விஞ்ஞானரீதியாக இனங்கண்டு அந்த இடங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை வகுத்தல்.

### சுற்றுலா அலுவல்களுக்கான மனித வள அபிவிருத்தி

- சுற்றுலா மற்றும் உபசரணை பிரிவுக்காகன தேசிய மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்று.
- சுற்றுலா தொழிற்துறையின் அரச மற்றும் தனியார் பிரிவின் பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான சுற்றுலாத்துறை பயிற்சி தேவைகள் பற்றிய பகுப்பாய்வு
- உள்நாட்டு சுற்றுலா கைத்தொழிலைப்போன்றே சர்வதேச சந்தையில் நிலவுகின்ற கேள்வியை நிவர்த்தி செய்ய இலங்கையர்களுக்கு துரிதமான பயிற்சி.
- சுற்றுலாத் தொழிற்துறை சார்ந்ததாக பட்டங்களை வழங்குகின்ற அனைத்து பல்கலைக்கழகங்களையும் நாட்டின் சுற்றுலாக் கைத்தொழிலின் பல்வேறு செயற்பாடுகளுடன் இணைப்பதற்கான வசதிகளை வழங்குதல்.
- பட்டதாரிகளுக்கு சுற்றுலாத்தொழிற்துறையில் வாய்ப்புகளை வழங்குவதற்கான செயன்முறை பயிற்சி.
- சுற்றுலாத்துறையின் கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களின்

பாடவிதானங்களை இற்றைப்படுத்துதல்.

-  நுண் தொழில் முயற்சியாளர்களை இலக்காகக் கொண்ட பயிற்றுவித்தல், கல்வி, மற்றும் வசதிகளை வழங்குவதற்கான தனித்துவமான சுற்றுலாத்துறை பயிற்சி.
-  தனியார் பிரிவின், அரச பிரிவின் மற்றும் அரச ஆதிக்கமுடைய பிரிவின் அனைத்து ஆட்களுக்கும் சுற்றுலாத்துறை சேவைகளை வழங்குபவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தொழில் முயற்சியாளர்கள் மற்றும் ஊழியர்களுக்காக அவர்களின் எதிர்கால சுற்றுலாக் கைத்தொழிலை பாதுகாப்பதற்கான விசேட சமூக பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று.
-  கல்வி, தொழில்சார் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் அனைத்த மாணவர்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் சுற்றுலாத் தொழிற்றுறையின் செயன்முறை ஆராய்ச்சிகளில் ஈடுபடத்தக்கவகையிலான தனியார் - அரச பங்காண்மை (PPP) என்றவகையிலான தேசிய சுற்றுலாத்துறை நிலையமொன்றை நிறுவுதல்.

## புத்தாக்க சுற்றுலாத்துறை உற்பத்தி அபிவிருத்தியும் தரப்படுத்தலும்

-  நாட்டைச் சுற்றி பயணமுடிவிடங்களில் தற்போது நிலவுகின்ற சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு வசதிகளும் நவீனமயமாக்கவேண்டிய துறைகளை இனங்காண்பதற்கான மதிப்பாய்வும்.
-  சுற்றுலா உற்பத்தி அபிவிருத்திக்கான பிரிவொன்றை தாபித்தல்.
-  குறைந்த வருகை நிலவுகின்ற பருவங்களில் (மே மாதம் தொட்டு ஒக்டோபர் மாதம் வரை) அந்த இடைவெளியை நிரப்புவதற்காக தனித:தவமான மேம்பாட்டு நிக்ழச்சிகள் தெரிவுசெய்த இடங்களில் அமுலாக்கப்படும்.
-  இலங்கை MICE (Meetings, Incentives, Conferences & Exhibitions) மற்றும் விளையாட்டுத்துறை சுற்றுலா பயணமுடிவிடமாக மேம்படுத்த விசேட கவனம் செலுத்தப்படும்.
-  ஊசரளைந ளாநி வுழரசளைஅ என்பதை கவர்ந்திழுப்பதற்காகவும் அவற்றுக்கான வசதிகளை வழங்கவும் அரச மற்றும் தனியார்துறை பங்கேற்புடனான வேலைத்திட்டமும் அவசியமான வசதிகள்.
-  வலது குறைந்த சுற்றுலாப்பயணிகளை இலங்கைக்கு கவர்திழுப்பதற்காக அவசியமான மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கான தனித்துவமான வேலைத்திட்டமொன்று.

## மூலோபாய பயணமுடிவிட சந்தைப்படுத்தல்

-  தற்போது நிலவுகின்ற பயணமுடிவிட சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை மீளாய்வு செய்து அவற்றை மீண்டும் திட்டமிட்டு முறைப்படுத்த அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
-  வெளியுறவு அமைச்சு, தேசிய விமானச் சேவை மற்றும் சுற்றுலாத்துறை அரச நிறுவனங்களை இணைத்துக்கொண்டு இலங்கை சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டு அலுவல்களுக்கான நீண்டகால உலகளாவிய சந்தைப்படுத்தல் இயக்கமொன்று ஒழுங்கு செய்தல்.
-  நாட்டுக்கு பிரவேசிக்கின்ற பிரதான நுழைவாயில்களிலும் வெளிநாடுகளின் பிரதான சுற்றுலா சந்தைகளிலும் கவர்ச்சிகரமானதும் கட்புலனாகின்றதுமான

மேம்பாட்டு மாதிரிகள் உருவாக்கப்படுதல்.

- பயண முடிவிடங்களை உள்ளிட்ட சுற்றுலா அலுவல்கள் பற்றிய அனைத்து தகவல்களையும் வசதியாக பெற்றுக்கொள்வதற்கான டிஜிட்டல் அனுகுமுறை.
- சுற்றுலா நேயமுள்ள பசுமை பயண முடிவிடமென்ற வகையில் சுற்றுலா பயணிகளின் புலனுணர்வுகளை திருப்திப்படுத்துவதற்கான வேலைத்திட்டம்.
- சுதந்திரமான சுயாதீனமான சுற்றுலாப்பயணிகளும் (FITs) விமான நிலையத்தின் இடைமாறல் (Transit) பயணிகளுக்காகவும் விசேட வசதிகளைக் கொண்ட சந்தைப்படுத்தல் இயக்கமொன்று.
- அறிவியல் ரீதியான ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்ட வளர்ந்து வருகின்ற மற்றும் புதிய சந்தைகளை மையமாகக் கொண்ட விசேட சந்தைப்படுத்தல் இயக்கங்கள் முன்னெடுக்கப்படும்.
- வெளிநாட்டு சேவைகள் மற்றும் தூதரகங்களில் இலங்கையின் பயண முடிவிடங்கள் பற்றிய சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் விளைபயன்மிக்க வகையிலும் வினைத்திறன் கொண்டதாகவும் ஈடுபடுத்துதல்.



## தொழில் முயற்சியாண்மை மேம்பாடு

# ஜீவதரணீ அணுகல்

கைத்தொழில் அபிவிருத்தி விடயத்துறையில் இலங்கையைவிடக் குறைவான அல்லது சமமமான சாத்தியவளங்கள் நிலவிய நாடுகள் தமது மொத்த உள்நாட்டு உற்பத்திகளை தொடர்ச்சியாக வளர்த்தெடுத்து உலக பண்டங்கள் மற்றும் சேவைகள் சந்தையில் கணிசமான பங்கினை அடைந்துகொள்வதில் வெற்றிபெற்றுள்ளன. எதாரணமாக 2023 இல் பங்களாதேஷில வியட்நாமில் மற்றும் தென் கொரியாவில் மொத்த உள்நாட்டு உற்பத்தி முறையே 460,409 மற்றும் 17000 பில்லியன் டொலர் எனும் உயர் பெறுமானத்தை வகித்தன. எனினும் அந்த வருடத்தில் இலங்கையில் அந்த பெறுமானம் 84 பில்லியன் டொலர் எனும் தாழ்ந்த பெறுமானத்தையே வகித்தது. மேலே குறிப்பிட்ட நாடுகள் முறையே 59, 384 மற்றும் 808 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுகையில் 2023 இல் எமது நாட்டின் பண்ட எற்றுமதி வருமானம் 11.9 பில்லியன் அமெரிக்க டொலராக விளங்கியது. உற்பத்தி இயலுமையை முன்னேற்றிக்கொள்ள முறையான திட்டமின்மையும் உலகில் வேகமாக முன்னேற்றமடைந்த தொழில்நுட்பமும் ஊடாக உற்பத்தித்திறன் வளர்ச்சியை அடையமுடியாமல் போனமையாலும் நிகழ்காலத்தில் இலங்கை பண்டங்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதிலான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கை இன்றளவில் முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்புப்பெற வேண்டுமாயின்உள்நாட்டு உற்பத்தியை பலப்படுத்தி ஏற்றுமதியை முதன்மையாகக்கொண்ட உற்பத்திப் பொருளாதாரமொன்றை நோக்கிச் செல்லவேண்டி உள்ளது. அதன்போது இலங்கையின் இடஅமைவு, மனித வளம் மற்றும் இயற்கை வளங்களை பயன்படுத்திக்கொண்டு நீண்டகால கைத்தொழில் அபிவிருத்தித் திட்டமொன்றும் அதனை அமுலாக்க அர்ப்பணிப்புச்செய்த அரசியல் தலைமைத்துவமும் அத்தியாவசியமானதாகும். சிதைவடைந்துள்ள உள்நாட்டு உற்பத்திக் கைத்தொழில்களுக்கு புத்துயிரளித்தல், ஏற்றுமதிக் கைத்தொழில்களில் போட்டியை உருவாக்குதல், சேவைகள் கைத்தொழிலின் மேம்பாடு, புதிய சாத்தியவளங்கள் ஊடாக உலக சந்தையைக் கைப்பற்றுதல், தேசிய திட்டத்திற்கு அமைவாக நேரடியான வெளிநாட்டு முதலீடுகளுக்கு அழைப்பு விடுத்தல், புதிய முதலீடுகளுக்கு அமைவாக பொருத்தமான சுற்றாடலை உருவாக்குதல், குறைந்த செலவிலான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளீடுகளை வழங்குதல் என்பவை இந்த கொள்கைச் சட்டகத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.



## கோட்பாடுகள்

-  தேசிய கொள்கைச் சட்டகம் மூலமாக கைத்தொழில் அபிவிருத்திக்கு அவசியமான தாபனஞ்சார், மூலதன, தொழில்நுட்ப மற்றும் சந்தைப் பிரவேசம்.
-  புதிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தொழில்முயற்சியாண்மை மேம்பாடு
-  கிரயம் குறைந்த வலுச்சக்தி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, நிதியாக்கம் மற்றும் ஏனை கைத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளை ஆக்குதல்.
-  வழங்கல் வலையமைப்புகளின் சந்தை வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையும்.
-  உள்நாட்டு கைத்தொழில்களை பலப்படுத்தி அந்நிய செலாவணியை நோக்கிய சேவைகள் கைத்தொழில் மேம்பாடு.
-  ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளின் அடிப்படையிலான பண்டங்கள் மற்றும் சேவைகள் மற்றும் பன்வகைமைப்படுத்தல்.
-  நிலைபெறுதகு சுற்றாடல்நேயமுள்ள அணுகுமுறை.

## செயற்பாடுகள்

### தேசிய திட்டமிடல் மற்றும் அரச இடையீடு

-  தேசிய கைத்தொழில் திட்டமிடல் புத்திஜீவிகள் சபையொன்றினை நிறுவுதல் (National Industrial Think Tank) மற்றும் திட்டமிடுதல்.
-  ஒவ்வொரு கைத்தொழிலினதும் தேசிய முக்கியத்துவத்தின்பேரில் அவற்றை முன்னேற்றுவதற்கான நேரடியான இடையீடுசெய்தல், நிலைபெறுதகு தன்மை மற்றும் ஒழுங்குறுத்தலுக்காக வசதிகளை வழங்குதல்.

### வரி, சட்டம் மற்றும் உற்பத்தித்திறன் வளர்ச்சி

-  ஒவ்வொரு பிரிவிற்கும் உரித்தான தனித்துவமான அபாயநேர்வுகள், விரிவான நோக்கங்கள் மற்றும் அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள முன்னரிமை அடிப்படையிலான பல்வேறு கைத்தொழில்களின் வகைப்படுத்தலுக்கான வரிக்கட்டமைப்புகள்.
-  தேசிய அவசியப்பாடுகளுக்காக எடுக்கப்படுகின்ற செயற்பாடுகள் காரணமாக இடம்பெறுகின்ற நட்டங்களை குறைத்துக்கொள்வதற்காக முதலீட்டு பாதுகாப்புச் சட்டங்களை பலப்படுத்துதல்.
-  சந்தை சக்திகளின் முறையற்ற தாக்கங்களிலிருந்து சிறிய அளவிலான உற்பத்தியாளர்களை பாதுகாத்துக்கொள்ள அவசியமான சட்டங்களை ஆக்குதல்.
-  வணிகரீதியான வழக்குகள் மற்றும் நடுத்தீர்ப்பினை துரிதப்படுத்துவதற்காக பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கான சட்டத்தைப் பலப்படுத்துதல்.
-  உற்பத்தித்திறன், தரம் மற்றும் கிரய நோக்கங்களை அடைவதை உறுதிப்படுத்துவதற்காக விரிவான தொழில்நுட்ப ஒத்துழைப்புச் செயற்பாங்கு.

- நிலவுகின்ற சட்டத்தை நியாயமான வகையிலும் வினைத்திறன் கொண்டதாகவும் ஈடேற்றுவதன் ஊடாக தொழில்முயற்சிகளுக்கு பாதுகாப்பையும் தொழில்முயற்சிகளை மேற்கொண்டுவர அவசியமாக சமகளத்தையும் அமைத்துக்கொடுத்தல்.

### சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தையை விரிவாக்குதலும் வினைத்திறனும்

- உள்நாட்டு சந்தை வினைத்திறனையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்துவதற்காக அவசியமாக மாற்றங்களை செய்தல்.
- இராஜதந்திர சேவைகள் ஊடாக சர்வதேச சந்தைகளில் வாய்ப்புகளை விரிவாக்குதல் மற்றும் திட்டவட்டமான அளவுக்கோல்களின் பேரில் சந்தையை கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
- நிலவுகின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை இற்றைப்படுத்துதலும் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் பிரவேசித்தலும்.
- துறைமுக, விமான நிலைய மற்றும் துறைமுக நகர வழங்கல் சங்கிலித்தொடரை கெந்திரநிலையமாக முன்னேற்றி கைத்தொழில்களுக்கு வெளிநாட்டுச் சந்தையில் பிரவேசிப்பதற்கான வசதிகளை வழங்குதல்.
- ஆரம்ப தொழில்முயற்சிகளுக்காக வர்த்தக சான்றிதழ்களை வழங்குகின்ற செயற்பாங்கினை வினைத்திற்ன் கொண்டதாக அமைத்தலும் ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்காக சான்றுப்படுத்துதலுக்கு அவசியமான வசதிகளை விரிவாக்குதல்.
- அவசியமான நிதிச்சேவைகள், கடன் வசதிகள் மற்றும் ஏற்றுமதி ஒருங்கிணைத்தல் (Export Consolidation) சேவைகள் ஊடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு (MSMEs) ஒத்துழைப்பு வழங்குதல்.
- டிஜிட்டல் தொழில்நுட்பத்தையும் e - வணிக மேடையையும் பாவித்து சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுக்கான வசதிகளை வழங்குதல்.

### கைத்தொழில் பேட்டைகளும் உட்கட்டமைப்பு வசதிகளும்

- பயன்படுத்தாத வளங்களை பாவனைக்கு எடுத்து நிலவுகின்ற கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்தல்.
- இனங்கண்ட சாத்தியவளங்களுக்கு அமைவாக புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குவதோடு இந்த வலயங்களில் புத்தாக்கங்களுக்கும் கைத்தொழில் பன்வகைமைப்படுத்தலுக்கும் ஒத்தாசை வழங்குதல்.
- மீன்பிடி, விவசாய மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை அந்தந்த பிரதேசங்களில் முன்னேற்றுதல்.

### நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள்

- தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்காக அமைவான ஒருங்கிணைந்த ஒத்துழைப்பினை வழங்குவதற்காக அர்ப்பணித்த பிரிவொன்றினை நிறுவுதல் மற்றும் தொழில்முயற்சி அவசியப்பாடுகளை வினைத்திறன்மிக்கவகையில் வழங்குவதற்கான ஒற்றைக் கருமபீட ஒத்துழைப்பினை வழங்குதல். (Single Window)

- சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்காக நிதியுதவிகளை வழங்குவதற்காக அபிவிருத்தி வங்கியொன்றின் மூலமாக நிதித்துறை ஊடாக சாத்தியவள மதிப்பீட்டின்பேரில் 10 மில்லியன் ரூபா வரையான பிணையமற்ற கடன் செயற்றிட்டமொன்று ( Based on Feasibility and Credit Score).
- சமுர்த்தி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளையும் உள்ளிட்டதாக கூட்டுறவு வங்கிமயமாக்கத்தை பலப்படுத்தி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதித் தேவைகளை அமைத்துக் கொடுத்தல்.
- ஒத்துழைப்பின் கூட்டுச் சக்தியை முன்னேற்றுதல், பலப்படுத்துவதற்காக புதிய கூட்டுறவு இயக்க மாதிரி மேம்பாடு.
- சந்தையை நெருங்கவதற்கான Start up தெரிவுசெய்து கொள்ள உதவுவதற்கான Startup incubator நிகழ்ச்சித்திட்டதை நிறுவுதல், மேற்படி தொழில்முயற்சிகளுக்கான வரிச் சலுகைகள்.
- இந்த கைத்தொழில்களின் மேம்பாட்டுக்காக தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமுறைமையை பொது நோக்கத்திற்காக வினைத்திறன்மிக்க வகையில் நெறிப்படுத்துதல்.
- பிரதானமாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட கைத்தொழில்கள், கனிமங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், பொதியிடல் கைத்தொழில்கள், மின்சக்தி மற்றும் வலுச்சக்தி, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட உற்பத்திகள், சமுத்திரம்சார் சேவைகள், வானூர்த்திகளை பராமரித்தலும் சேவை வழங்குதலும், தொலைத்தொடர்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், நிர்மாணிப்புக்கள் மற்றும் போக்குவரத்தினை மேம்படுத்துதல்.
- மீன் இன வளர்ப்பு, தொழில்நுட்பத்தினால் வழிப்படுத்தப்படுகின்ற மீன்பிடி, உபகரணங்கள் மற்றும் கலங்களின் உற்பத்தி, உற்பத்திகளை நீண்டகாலம் பாதுகாத்து வைத்தல், பொதியிடல், உள்நாட்டு வெளிநாட்டு சந்தையும் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார சிக்கல்களை கவனத்தில் கொண்டு மீன்பிடி கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான வலையமைப்பு செய்த பொறியமைப்பொன்றினை நிறுவுதல்.
- துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களும் கூட்டாக பால் மற்றும் பால்சார்ந்த உற்பத்திகளால் இலங்கையை தன்னிறைவடையச் செய்வதை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டமொன்றை தயாரித்து அமுலாக்குதல்.
- வளங்கள் தாராளமாக கிடைக்கின்ற தன்மை மற்றும் பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை, சந்தை வாய்ப்பு மற்றும் வளரக்கூடிய இயலுமையின் அடிப்படையில் அந்தந்த மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு / பிரதேசத்திற்கு தனித்துவமான உற்பத்திகளை ஊக்குவித்தல்.
- விவசாய, கைத்தொழில், சேவைகள் உற்பத்தி மற்றும் உள்நாட்டு நுகர்வுக்கான உபகரணங்கள், கருவிகள், இயந்திரசாதங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.
- தற்போது நிலவுகின்ற எண்ணை முனையங்களை மறுசீரமைத்த பின்னர் திருகோணமலையில் சர்வதேச எண்ணை இடமாற்ற மற்றும் பண்டங்களை

களஞ்சியப்படுத்துகின்ற முனையமொன்றை நிர்மாணித்தல்.

-  உள்நாட்டு தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக சபுகஸ்கந்த எண்ணை தூய்மையகத்தை நவீனமயமாக்குதலும் சுத்தரித்த எண்ணை மற்றும் அதனைச்சார்ந்த உற்பத்திகளுக்காக போதியளவிலான வெளிநாட்டு சந்தையின் ஒரு பகுதியை கைப்பற்றிக்கொள்ளல்.
-  குறிப்பாக ஆசிய பிராந்தியத்தின் விமானச் சேவை அவசியப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக விமான சேவைகள் மற்றும் பராமரிப்பு நிலையமொன்றை உறுதி செய்தல்.
-  தச்சுக்கைத்தொழில் உள்ளிட்ட ஏனைய மரபார்ந்த கைத்தொழில்களுக்கு அவசியமான மூலப்பொருட்கள் தாராளமாக கிடைக்கச் செய்வதற்காகவும் தெரிவுசெய்த உள்ளீடுகளை பயிர்செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று.
-  மொறட்டுவ உள்ளிட்ட  அனைத்து தச்சுத் தொழிலாளர்களும் எதிர்நோக்குகின்ற சிக்கல்களை தீர்த்துவைப்பதற்காக அரச நிறுவனங்கள் அரசசார்பற்ற நிறுவனங்கள் அகிய எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்து  தனியார் துறையுடன் முனைப்பான தொழிற்பாட்டுக் குழுவொன்று.
-  பதிவுசெய்த வினைஞர்களுக்கு அவசியமான தொழில்நுட்ப கருவிகளுக்கான வரிச் சலுகை.
-  கூட்டுறவு முறைமையின்கீழ்  உற்பத்தியாளர்களை ஒழுங்கமைத்தலும் பலப்படுத்துதலும்.
-  ஏற்றுமதி செயற்பாங்கின்போது ஏற்படுகின்ற கிரயத்தைக் குறைத்துக்கொள்வதற்காக ஏற்றுமதிகளை ஒருங்கிணைப்பதற்கான வேலைத்திட்டமொன்று.
-  வினைஞர்களையும் நுணுக்கங்களையும்  பாதுகாத்துக்கொள்வதற்காக பாதுகாப்பு வலையொன்றை உள்ளிட்ட தேசிய வேலைத்திட்டமொன்று.

## நிலைபெறுதகு அபிவிருத்திக்கு அவசியமான இடையீடுகள்.

-  நிலைபெறுதகு நிலைமையைநோக்கிய அர்த்தபுஷ்டியுள்ள முன்னேற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவும் உலகளாவிய சந்தையில் விரிவடைகின்ற கேள்வியான நியாய வியாபாரம் (Fair Trade), உழைப்புத் தரங்கள் மற்றும் வெளிப்படைத்தன்மையை (Transparency) அடைவதற்காக கைத்தொழில்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதலும் அது சம்பந்தமான தேசிய வேலைத்திட்டமும்.
-  சுற்றாடல் நிலைபெறுதகுதன்மையை உறுதிப்படுத்துவதும் காலநிலை மாற்றங்கள் மிது கவனஞ்செலுத்துவதும்  கைத்தொழில்துறையின் நீண்டகால சாத்தியவளத்திற்காக அத்தியாவசியமான நோக்கங்களை அடைவதற்கான விரிவான வேலைத்திட்டம்.

## டிஜிட்டல்மயப்படுத்தலும் தொழில்நுட்ப பாவனையும்

-  நான்காவது கைத்தொழில் புரட்சியின் நன்மைகளை வேகமாக அடைந்துகொள்ளவும் ஐந்தாவது கைத்தொழில் புரட்சிக்காக எமது கைத்தொழில்களை தயார்படுத்துவதற்குமான குறிகாட்டி (Industry 4.0/5.0

Maturity Index)


- அதிவேக இணையத்தள தொடர்பு, தரவு மையம் மற்றும் சயிபர் பாதுகாப்பு முறைமையை உள்ளிட்ட பலம்பொருந்திய டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளைக் கட்டியெழுப்புவதற்கான அரச மற்றும் தனியார் முதலீடுகள்.
- உட்கட்டமைப்பு வியூகம் IoT, AI, cloud computing மற்றும் தரவுப் பகுப்பாய்வு போன்ற உயர் தொழில்நுட்பங்களுக்கான அத்திவாரத்தை இடல்.
- இலங்கையின் கைத்தொழில் தொழில்முயற்சிகள் மத்தியில் கைத்தொழில்கள் 4.0 தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதை ஊக்குவித்தலும் ஒத்துழைத்தலும்.
- தொழில்முயற்சிகளுக்கு அவர்களின் தொழிற்பாடுகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைக்க உதவுதலும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதலும்
- உழைப்புப்படையின் டிஜிட்டல் எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்பத் திறமைகளை முன்னேற்றுவதற்கான திறன்கள் மற்றும் மீள் பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முதலீடுகள்.
- கைத்தொழில்கள், கல்விசார், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் தொடங்குபவர்களுக்கும் இடையில் ஒத்துழைப்பிற்காக உதவுகின்ற டிஜிட்டல் புத்தாக்க சுற்றாடல் முறைமை (Start up Eco System)
- அறிவினை பகிர்ந்துகொள்ளல், தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் தொழில்முயற்சியாண்மைக்கான வசதிகளை வழங்குவதற்கான புத்தாக்க நிலையங்கள், தொழில்நுட்ப பூங்காக்கள் மற்றும் இன்கியூபேட்டர்களை நிறுவுதல்.
- புத்தாக்கங்களை ஊக்குவிக்கின்ற , புலமைசார் சொத்துக்களை பாதுகாக்கின்ற மற்றும் தரவுகளின் அந்தரங்கத்தன்மை மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற உதவு ஒழுங்குறுத்தல் சட்டகமொன்று.
- முன்கூட்டியே நிச்சயித்துக்கொண்ட தரநியமங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக, டிஜிட்டல்முனையங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்வதற்கான பொறியமைப்பு.
- வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையுமகொண்ட சேவையுடன் கைத்தொழிலுக்கு உதவிபுரிகின்ற ஒற்றைக் கருமபீடத்தை (Single Window) அரச மேடை E Governance Initiative ஊடாக அமுலாக்குதல்.

### தொழில்முயற்சியை மேற்கொள்வதிலான வசதியை மேம்படுத்துலும் தொழில்முயற்சியாண்மையும்

- புத்தம்புதிய அபிவிருத்தி வங்கிகள், தொழில்முயற்சி மூலதன நிதியங்கள், மற்றும் நுண்நிதி மூலாரம்பங்கள் ஊடாக நிதியாக்கத்தில் பிரவேசிக்க வசதி வழங்குதல். (Venture Capital Investments)
- தொழில்சார் பயிற்சி மற்றும் பாடசாலைக் கல்வித்திட்டம் மூலமாக தொழில்முயற்சிக் கல்வி மற்றும் பயிற்சியை வழங்குதலும் டிஜிட்டல் Freelancing என்பதை அங்கீகரித்த ஒரு தொழில்த்துறையாக நிறுவி அவசியமான வசதிகளை வழங்குதல்.
- டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக முதலீடுசெய்தல்,

தொழில்முயற்சிப் பணிகளில் தொழில்நுட்பம் பாவிக்கப்படுவதை மேம்படுத்ததல்.

-  வர்த்தக உடன்படிக்கைகள், ஏற்றுமதி ஊக்குவிப்புக்கு வழிசமைத்தல் மற்றும் வலையமைப்பாக்கல்  ஊடாக உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் பிரவேசிப்பதற்கான வசதிகள்.
-  இன்கியுபேட்டர், எக்சலரேட்டர், இணை - வேலைகளைப் புரிகின்ற இடப்பரப்புகள்  மற்றும் வலையமைப்பாக்கல் உள்ளிட்ட தொழில்முயற்சியாண்மைக்கான உதவிச் சுற்றாடல் முறைமையொன்று (Incubators, Accelerator Program, Co Working Spaces and Networking).



# நிலைபெறுதகு வளப்பாவனை

## உச்ச அளவிலான நன்மை பிறப்பாக்கம்

நிலப்பரப்பில் 65,610 சதுர கிலோமீற்றர்களைக் கொண்ட இலங்கை, பல்வேறு கனிமவளங்கள் செறிந்தநாடாகும். ஐக்கியநாடுகள் கடற் சட்டசாசனத்திற்கேற்ப, எதிர்காலத்தில் சட்டரீதியாக உரித்தாகவுள்ள கடல் வலயமும் உள்ளிட்ட நிலப்பரப்பைப் போன்றே அண்ணளவாக இருபது மடங்காகக் காணப்படும் தீபகற்பப் படுக்கையும் கடல்க் கனிமவளங்கள் நிறைந்தபகுதியாகும். நிலப்பரப்பில் உருமாற்றப் பாறை உருவாக்கத்தில் பிந்தியகாலரீதியில் பல்வேறு புவியியற் செயற்பாடுகள் காரணமாக உருவான காரீயம், மைக்கா, எப்படைட், சுண்ணாம்புக் கல், மற்றும் டொலமைட், கனியமணல், படிகக் கற்கள் மற்றும் சிலிக்காமணல், ஃபெல்ஸ்பார், சர்பன்டைன், லற்றரைட், பல்வேறு களிமண் வகைகள் என்பவற்றுடன் இரத்தினக் கல் போன்றகனிமவளங்கள் அமையப் பெற்றுள்ளன. 1980ம் தசாப்தங்கள் வரைகனிமவளஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டகனிமவளங்களில் கனிமமணல், சீமெந்து, பொஸ்பேற் (எப்படைட்), செரமிக், கண்ணாடி மற்றும் கூரையோடுகள் போன்ற அரசகைத்தொழில்கள் உருவானபோதும், இன்றளவில் அக்கைத்தொழில்களில் பல மூடப்பட்டுஅல்லதுவிற்கப்பட்டுள்ளன. அப்போதிருந்து பலகனிமங்கள் பெறுமதிசேர்க்கப்படாமல் மூலப்பொருட்களாகவே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**காரீயம், எப்படைட், கல்சியம் காபனேற் அடங்கிய சுண்ணாம்புக் கல், கல்சைட், மற்றும் டொலமைட்டும், கனியமணலுடன் படிகக் கற்களும் சிலிக்கா மணலுடன் தொடர்புடைய, தேசிய பொருளாதாரத்தில் கணிசமான அளவு பங்களிப்பைவழங்கக்கூடிய கைத்தொழில்களை ஆரம்பிக்கும் ஆற்றல் உள்ளது.**

காரீயம், எப்படைட், கல்சியம் காபனேற் அடங்கிய சுண்ணாம்புக் கல், கல்சைட், மற்றும் டொலமைட்டும், கனியமணலுடன் படிகக் கற்களும் சிலிக்கா மணலுடன் தொடர்புடைய, தேசிய பொருளாதாரத்தில் கணிசமான அளவு பங்களிப்பைவழங்கக்கூடிய கைத்தொழில்களை ஆரம்பிக்கும் ஆற்றல் உள்ளது. இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஏனைய சிறிய உலோகரீதியான கனிமவளங்களைப் போன்றே இரும்பு மற்றும் செம்பு அடங்கிய உலோகரீதியான கனிமவளங்களுடன் தொடர்புடைய பெறுமதி சேர்க்கப்படும் உற்பத்திக் கைத்தொழில்களை ஆரம்பிக்கமுடியும். அவ்வாறே நிலப்பரப்பு மற்றும் கடலடித்தளத்தில் முறையான கனிமவள ஆய்வொன்றை நடத்தி அக்கனிமவளங்களையும் அதிலுள்ள பெறுமதிவாய்ந்த அரிதான பூமி மூலக் கூறுகளையும் (REE) அந்நியசெலாவணி ஈட்டலில் ஈடுபடுத்தமுடியும்.



# கோட்பாடுகள்

- அறிவியல் ரீதியாமுற்றாய்வு
- நிலைபேறான அகழ்வுகளும் பயன்பாடும்
- பொருத்தமான பயன்பாடு
- உள்நாட்டுமற்றும் உலகசந்தையில் அதிகபட்ச அனுகூலம்

# செயற்பாடுகள்

கீழ்க்காணும் கனிமங்களை சார்ந்த கைத்தொழில் உற்பத்திகளுக்கான ஆற்றல் மற்றும் சந்தைகளை எதிர்வுகூறல் போன்றவை பற்றிய முறையான சாத்தியவளக் கற்கையினை மேற்கொள்வதன் மூலமாக கீழே குறிப்பிட்ட கைத்தொழில்களை படிப்படியாக ஆரம்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப விதிமுறைகளைப் பயன்படுத்தி, நாட்டிலும் கடலடித் தளத்திலும் உள்ள கனிமவளங்களையும் அரிதான மூலக்கூறுகளையும் முற்றாய்வு செய்தல்
- கனிமங்களுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் பற்றிய ஆய்வுகளை நடத்தி பரிந்துரைகளை முன்வைத்தல், சந்தைஎதிர்வுகூறல் போன்றவற்றுக்கான விசேட பிரிவொன்றைத் தாபித்தல்.
- உள்ளூர் சந்தைத் தேவை மற்றும் சர்வதேச சந்தையை இலக்குவைத்து தரம் வாய்ந்த உப்பு உற்பத்தியை விரிவாக்கல்.
- உப்புப் பகுப்பின் போது உப உற்பத்திக் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
- இலங்கையில் உள்ளசர்பன்டைன் வளத்தைப் பயன்படுத்தி நிக்கல் சல்பேட் மற்றும் மக்னீசியத்துடன் தொடர்புடைய உற்பத்திகளை உருவாக்குதல்.
- விவசாயக் கைத்தொழிலில் குறுகியகாலப் பயிர்களுக்கு மேலும் பொருத்தமான சிங்கிள் சுப்பர் பொஸ்பேட் (SSP) உருவாக்கத்திற்கும் இடைக்காலப் பயிர்களுக்கான பொஸ்பேட் பசளை உற்பத்திக்குமானகைத்தொழில்களைஆரம்பித்தல்.
- விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் டொலமைட் பசளையை தரநிலைகளுடன் உற்பத்திசெய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைஎடுத்தல்.
- தேசிய சந்தையை இலக்குவைத்து சுண்ணாம்புப் படிவுகள் உள்ள பொருத்தமான பிரதேசங்களின் அடிப்படையில் புதிய சீமெந்து உற்பத்தியாலைகளைக் நிர்மாணித்தல்
- மருந்து, காகிதம், துணிவகைகள் உள்ளிட்ட ஏனைய கைத்தொழில்களுக்குத் தேவையான தரம்வாய்ந்த நீர்த்தகல்சியம் காபனேற் உற்பத்தி.
- கனிமமணல், சுத்திகரிப்பில் மேலும் சுத்தமான இல்மனைட், ரூடைல், சர்கோன்

போன்றவற்றின் பகுப்பிற்குத் தேவையான நவீனதொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல்.

-  இல்மனைட் மற்றும் ரூடைல் என்பவற்றை மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக டைடனியம் ஒக்சைட்டை (Tio2) உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகளைத் தாபித்தல்
-  போசிலேன் பொருட்களை மெருகூட்டுவதற்குத் தேவையானவாறு, கனியமணல் பகுப்பின் போதுகிடைக்கும் சர்கோனை சுத்திகரிக்கும் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்.
-  சர்வதேச சட்டங்களுக்கு ஏற்பவும் குறித்த நிறுவனங்களின் ஆதரவுடனும் மொசைட் மணலிலிருந்து தொரியம், லந்தனம் மற்றும் சிரியம் என்பவற்றைபகுக்கும் தொழிற்சாலைகளைஉருவாக்குதல்.
-  கார்னட் மணல் தொடர்பில் பெறுமதிசேர்க்கும் கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
-  படிகக் கற்கள் மற்றும் சிலிக்கா மணலின் குறைந்தபயன்பாட்டைக் குறைத்து அதனுடன் தொடர்புடைய புதிய கைத்தொழில்களை ஆரம்பித்தல்.
-  காரீயத்தில் காபன் சதவீதத்தை 99.9% வரை உயர்த்துவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அதனோடு தொடர்புடைய கைத்தொழில்களை ஏற்படுத்துதல்.
-  காரீயத்தைக்கொண்டு முடிவுப் பொருள் உற்பத்தியை ஊக்குவித்தல்.
-  அதிசெயற்றிறன் வாய்ந்த பற்றரி, இரும்பு, சீமெந்து ரயர், போன்ற உற்பத்திகளின் தரத்தை அதிகரிப்பதற்காக கிறஃபீனைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்.
-  உள்நாட்டு மூலப் பொருட்களைப் பயன்படுத்தி அதிதொழில்நுட்ப உபகரணங்களுக்குத் தேவையான செரமிக் மற்றும் போசிலேன் உதிரிப்பாகங்களைத் தயாரிக்கும் உற்பத்திகளை ஊக்குவித்தல்.
-  மைக்கா பெல்ஸ்பா போன்ற கனிமவளங்களுடன் தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேம்படுத்தல்.
-  சிறிய, நடுத்தர மற்றும் பாரியஅளவிலான அகழ்வுகளுக்கான அரசுரிமைக் கட்டணம் அறவிடப்படும் நிரல் விதிமுறைக்குப் பதிலாக உலக சந்தையில் கனிமங்களின் விலைகள், அகழப்படும் அளவு மற்றும் அதற்கான செலவுகளைக் கருத்திற் கொண்டு அரசுரிமைக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் விதிமுறையை அறிமுகப்படுத்தல்.
-  கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்படுகின்ற சல்பியுரிக் அமில உற்பத்தியை தொடங்குதல்

### இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள்

-  இரத்தினக் கல் படிவுகளை அடையாளம் காண்பதற்காக நவீனதொழில்நுட்பம்
-  இரத்தினக் கல்லில் பெறுமதி சேர்ப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
-  சர்வதேச இரத்தினக் கல் மற்றும் தங்கஆபரணச் சந்தையொன்றை நாட்டில் தாபித்தல்.
-  இரத்தினபுரி நகரத்தைச் சார்ந்தாக சர்வதேச இரத்தினக்கல் மத்திய

நிலையமொன்று.

- சுரங்கக் கைத்தொழில் மற்றும் இரத்தினக்கல் தொழிலின் நிலைபெறுதகு அபிவிருத்தியை இலக்காகக்கொண்டு இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபை சட்டத்திற்கு அத்தியாவசியமான இற்றைப்படுத்திய திருத்தங்கள்.
- சர்வதேச மட்டத்திலான இரத்தினக்கல் ஆராய்ச்சி ஆய்வுகூடம்.
- இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்களையும் முறைப்படி பதிவுசெய்தலும் இற்றைப்படுத்தப்பட்ட தரவு முறைமையயும்.
- இரத்தினக்கல் சுரங்க ஊழியர்களின் பாதுகாப்பிற்கான தரநியமங்கள்
- சர்வதேச இரத்தினக்கல் விலைகள் மற்றும் தரநியமங்கள் பற்றிய தகவல்களை உள்நாட்டு சுரங்கமறுப்பவர்களுக்கு வழங்குவதற்கான முறையியலொன்று.
- இரத்தினக்கல் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள உழைப்பாளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான இரத்தினக்கல் கைத்தொழில் ஊழியர்களின் பாதுகாப்பு அதிகாரசபையை நிறுவுதல்.
- இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் கைத்தொழிலுடன் தொடர்புடைய அனைத்து அரச நிறுவனங்களையம் ஒன்றுடனொன்று சட்டரீதியாகவும் டிஜிட்டல்ரீதியாகவும் இணைப்பாக்கம்செய்தல்.
- இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடபட்டுள்ள உழைப்பாளிகள் எதிர்நோக்குகின்னற சுரங்க விபத்துகள் காரணமாக இடம்பெறுகின்ற முழுமையான ஏலாமைநிலையின்போதும் இறப்பின்போதும் நியாயமான இழப்பபிட்டினை வழங்குகின்ற திட்டமொன்று.
- இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் கைத்தொழிலுடன் தொடர்புடைய துறைகள் சம்பந்தமான கல்வி மற்றும் தொழில்சார் பாடநெறிகளை அறிமுகஞ்செய்தலும் மேற்படி பாடநெறிகளை பயில்வதற்கான வசதிகளும்.
- மரபுரீதியான இரத்தினக்கல் சுரங்கக் கைத்தொழிலை பாதுகாப்பானதாக்கி இரத்தினக்கல் கைத்தொழிலை பொறிமுறைப்படுத்துதல்.
- தற்போது நிலவுகின்ற வரிக்கட்டமைப்பு கைத்தொழிலின் விருத்திக்கு தடையாக அமைவதால் அதனை மீளாய்வுசெய்து கைத்தொழிலின் வளர்ச்சிக்கு சாதகமான வரித்திட்டமொன்றை அறிமுகஞ்செய்தல்.



## பாதுகாப்பான வலுச்சக்தி கேந்திரம்

# நிலைபெறுதகு செலாவணி தோற்றுவாய்

உலக வலுசக்தித் துறையானது, அடிக்கடி மாற்றமடையும் நுகர்வோரின் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பிற்குள் மாற்றமடைகின்ற நிலைபெறுதகுநிலை மற்றும் புத்தாக்கத்தினை முதன்மையாகக் கொண்ட மாற்றமடையும் ஒரு யுகத்தினை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றது. பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தினை குறைக்கின்ற உலகளாவிய இலக்குகள், மக்களது செலவினைக் குறைக்கும் தேவைப்பாடுகள் காரணமாக சூரிய வலு, காற்றாலை வலு, சக்தி களஞ்சியப்படுத்தல் கட்டமைப்பு போன்ற நவீன வலுசக்தி ஆகிய உபாய முறைகள் துரித வளர்ச்சியை கையகப்படுத்திக் கொண்டிருக்கின்றன. மேலும் பசுமை ஐதரசன் மற்றும் சிறிய அளவிலான அணுமின்னுற்பத்தி நிலையங்கள் போன்ற பாதிப்பான வெளியேற்றங்களின் ஆகக் குறைந்த தொழில்நுட்பங்களும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மின்கலங்களின் (battery) உற்பத்திச் செலவுகள் துரிதமாக குறைவடைந்தமையின் காரணமாக உலகளவில் போக்குவரத்துத் துறையானது துரித மின்மயமாக்கலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. வலுசக்தி நுகர்வினை ஒட்டுமொத்த மின்மயமாக்குதல் பூச்சிய வாயு வெளியேற்றத்தினை அடையும் உபாயமார்க்கமாகும்.

**எதிர்கால சந்ததியினருக்காக எமது சுற்றாடலைப் பாதுகாப்பதோடு இலங்கையானது உலக சந்தையில் குறிப்பிடும் அளவிலான பங்குகளை கையகப்படுத்தும்செயற்பாட்டுக்காக, வலுசக்தியை வழங்கும் பங்காளராக மாற்றுவதும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாகும்.**

உலக வலுச்சக்தி கேள்வியை நிவர்த்திசெய்வதற்காக உயர்ச்சுவட்டு எரிபொருள் தொடர்ந்தும் கணிசமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருவதோடு மேற்படி எரிபொருள் பாவனையில் சுற்றாடலுக்கு ஏற்படுகின்ற பாதிப்பினை குறைப்பதை நிரப்பந்திக்கின்ற உலகளாவிய உரையாடல் தோன்றியுள்ளது. புவி அரசியல் முரண்பாடுகள் மற்றும் கருத்துபேதங்களுக்கு மத்தியில் வலுச்சக்தி பாதுகாப்புநிலைக்காக மூலோபாய வலுச்சக்திக் கலவையை பேணிவருவதும் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இதன்போது புதுப்பிக்கத்தக்க வலுச்சக்திக்கு இடம்பெயர்கின்ற இடைநிலை தோற்றுவாய் என்றவகையில் இயற்கை வாயு பற்றிய உயர்வான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. திரவப் பெற்றோலிய வாயுவிற்கான (டுபே) உட்கட்டமைப்பு வசதிகளைப்போன்றே புதிய இயற்கை வாயு வளங்களின் முற்றாய்வும் உற்பத்திச் செயற்பாடுகளை விரிவாக்குவதற்கான சர்வதேச முதலீடுகளும் விரிவடைந்து வருகின்றது.

உலகளாவிய போக்குகள் இவ்விதமாக இருக்கையில் பிராந்தியத்தில் மின்கட்டணம் அதிகமான நாடுகளுக்கிடையில் இலங்கை முன்னிலையில் உள்ளது. பல தசாப்த காலமாக இடம்பெற்ற தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாக நாடு வீழ்ந்துள்ள பொருளாதார படுகுழியிலிருந்து மீட்டெடுப்பதற்கான உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதில் பெரும் தடையாக இருப்பது இந்த தாங்கிக்கொள்ள முடியாத வலுசக்தி செலவாகும். மின்கட்டணம் அதிகமாக காணப்படுவதற்கான காரணியாக இருப்பது அதிகமாகபெற்றோலியம் பயன்படுத்தப்படுவதால் உற்பத்திச் செலவு அதிகமாக காணப்படுவதாகும். கடந்த காலத்தில் ஆட்சி செய்த சகல அரசுகளும் குறைந்த செலவிலான மின்னுற்பத்தி நிலையங்களுக்கு உரிய காலப்பகுதிகளில் முதலீடுகளை செய்வதற்குப் பதிலாக தற்காலிகத் தீர்வுகளாக அதிக விலைகொண்ட டீசல் மின்னுற்பத்தி நிலையங்களை அமைத்தமையே இதற்கான காரணமாகும்.

வலுசக்தி உற்பத்திக் கலவையை உபாயமார்க்க முறையில் படிப்படியாக பெற்றோலியம் மீது தங்கியிருப்பதிலிருந்து குறைத்து, மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்களாக பசுமை பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவது மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைப்பதோடு, இந்நாட்டின் வலுசக்தி கட்டமைப்பினை போட்டிமிக்க, வெளிப்படையான, நுகர்வோரை வலுப்படுத்தும், நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட துறையாக மாற்றியமைப்பது தேசிய மக்கள் சக்தியின் குறிக்கோளாகும். எதிர்கால சந்ததியினருக்காக எமது சுற்றாடலைப் பாதுகாப்பதோடு இலங்கையானது உலக சந்தையில் குறிப்பிடும் அளவிலான பங்குகளை கையகப்படுத்தும்செயற்பாட்டுக்காக, வலுசக்தியை வழங்கும் பங்காளராக மாற்றுவதும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாகும்.



# கோட்பாடுகள்

- வலுசக்தி வழங்கல் அத்தியாவசிய தேசிய சேவை
- நிலைபேறான மற்றும் பாதுகாப்பான வலுசக்தி வழங்கல் மற்றும் நுகர்வு
- வலுசக்தி பொருளாதாரத்தினூடாக அந்நியச் செலாவணி

# செயற்பாடுகள்

**மின் சக்தி**

- இலங்கையை பிராந்தியத்தில் ஆகக் குறைந்த மின்கட்டணத்தைக் கொண்ட நாடாக மாற்றுவதற்கு போட்டித்தன்மை மிக்க பெறுகை மற்றும் விலைமனுக் கோரல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியை விலை குறைந்த சூரியஒளி மற்றும் காற்றலை மீதான மீள்புதுப்பிக்கத்தக்க மூலங்கள் ஊடாக மேற்கொள்ளல்.
- மின் கட்டண அறவீடு, பெற்றோலியம் மற்றும் எரிபொருளுக்கான விலைச் சூத்திரம் மற்றும் விலைத் திருத்தச் செயற்பாட்டினை நியாயமானதாகவும் வெளிப்படைத்தன்மை மிக்கதுமான முறையில் இற்றைப்படுத்தல்.
- வலுசக்தித் துறையில் உள்ள சிக்கலான மற்றும் இடைப்பட்ட வரிகள் பலவற்றுக்குப் பதிலாக மிகச் சரளமான வரி முறைமையை அறிமுகம் செய்தல்.
- எதிர்காலத்தில் எழக்கூடிய மின்சார நெருக்கடியை தவிர்ப்பதற்காக மேலதிகமாக சூரிய மின்னுற்பத்தியினூடாக இரண்டாயிரம் மெகாவொட் (2,000 MW) மின்சாரத்தினை தேசிய கட்டமைப்பில் இணைத்தல்.
- புதிய வியாபார மாதிரிகள், அறவீட்டு முறைகள் மற்றும் போட்டித்தன்மையூடாக கூரைகள் மீது பொருத்தும் சூரிய வலுசக்தி கட்டமைப்பு மற்றும் நுகர்வோருக்கு உரித்தான வீடுகளில் வலுசக்தி சேமிப்புக் கட்டமைப்பை பிரபல்யப்படுத்தல்.
- கூட்டுறவுக் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த சமுதாய வலுசக்தி அலகுகளாக வலையமைக்கப்பட்ட நுண்கட்டமைப்புகளை (microgrids) தாபித்தல்.
- திறன் வலையமைப்பினூடாக (smart grid) நிலைபெறுதகு வலுசக்தியை மின்சக்தி கட்டமைப்புடன் இணைத்தல் மற்றும் திறன் வலையமைப்பினூடாக (smart grid) கட்டமைப்பு நிர்வாகத்திற்கான சந்தர்ப்பங்களை (demand response) நுகர்வோருக்கும் பெற்றுக்கொடுத்தல்.
- காற்றலை மின்னுற்பத்தியின் பொருட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வலுசக்தி சந்தைக்கு முறையான போட்டித்தன்மை மிக்க முதலீடுகளை கொண்டுவரல்.
- பசுமை ஐதரசனை பொருளாதாரத்துடன் இணைத்துக் கொள்வதற்கு உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கைத்தொழிற்றுறையிலுள்ள வல்லுநர்களை உள்ளடக்கிய அரச முகவராண்மை நிலையமொன்றினை தாபித்தல் மற்றும் தற்பொழுது உலகில் பசுமை ஐதரசன் தொழில்நுட்பத்தில் முன்னனியிலுள்ள நிறுவனங்களுடன் இணைந்து முன்னோடிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.
- சூரிய சக்தியினூடாக நீரை இறைத்து களஞ்சியப்படுத்தும் நிலையங்கள் மற்றும்

மின்கலக் கட்டமைப்பு மற்றும் கலப்பினக் கட்டமைப்புக்களை (hybrid systems) அமைப்பதற்குரிய சாத்தியவள ஆய்வுகளை துரிதப்படுத்தல் மற்றும் முறையான முதலீடுகளை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான வியாபார மாதிரிகளை அறிமுகம் செய்தல்.

-  தற்பொழுது காணப்படுகின்ற மற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயிரத்து ஐநூறு மெகாவொட் (1,500 MW) அனல் மின்னுற்பத்தி நிலையங்களைதிரவ இயற்கை வாயு உற்பத்தி நிலையங்களாக மாற்றியமைத்தல்.
-  பயனாற்றல் வலுசக்தித் துறையில் மீள முதலீடு செய்வதனை ஊக்குவிக்கும் வகையில் மற்றும் மின்சார நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறிய நீர்மின்னுற்பத்தி ஒப்பந்தங்களை புதுப்பித்தல்.
-  நீர் மின்னுற்பத்தி நிலையங்களை அண்டிய நீரேந்துப் பிரதேசங்களின் வன அடர்த்தியை அதிகரித்தல்.
-  முன்னேற்றமடைந்து வரும் சிறு அணுமின்னுற்பத்தி தொழில்நுட்பத்தினை (SMR Technology) இலங்கைக்கு அறிமுகம் செய்தல் மற்றும் உரிய மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அத்தொழில்நுட்பத்தில் முன்னணியிலுள்ள நாடுகள் மற்றும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல்.
-  சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினை நவீனமயப்படுத்தல் அல்லது புதிய சுத்திகரிப்பு நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான சாத்தியவள ஆய்வு நடவடிக்கையை துரிதப்படுத்தல்.
-  சுத்திகரிப்பில் எஞ்சுபவற்றை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி வேறு கைத்தொழில்கள் மற்றும் இரசாயன உற்பத்திகளுக்கு ஈடுபடுத்துதல் மற்றும் உயர் திறன்களைக் கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களுக்காக மனித வள பயிற்சி நிலையமொன்றினை உருவாக்குவதற்கு சுத்திகரிப்பினை பயன்படுத்துதல்.
-  திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பில் இதுவரையில் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை மீள ஆய்வு செய்வதோடு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குரிய இருபத்திநான்கு (24) குதங்கள் மற்றும் கம்பனிக்குரிய அறுபத்தொறு (61) குதங்கள் தொடர்பில் தேசிய பொருளாதாரத்திற்கான சாதகமான வியாபார மாதிரியொன்றாகத் தயாரித்தல்.
-  தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துகின்ற வகையில் எரிபொருளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தலுக்கான புகையிரதக் கட்டமைப்பினை நவீனமயப்படுத்தல்.
-  இன்றளவில் பழுதடைந்துள்ள கொழும்புத் துறைமுகம் மற்றும் கொலொன்னாவை முனையங்களுக்கிடையிலான குழாய்க் கட்டமைப்பை பெற்றோலிய உற்பத்திகளை வெவ்வேறாக தரையிறக்குவதற்காகவும் ஏற்றுவதற்கும் இயலுமான வகையில் பெற்றொலிய களஞ்சிய முனையக் கம்பனிக்கான (சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல் லிமிட்டெட்) (CPSTL) முதலீடாக நவீனமயப்படுத்தல்.
-  மன்னார் மற்றும் காவேரிஆற்றுப்படுகையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள இயற்கை வாயு உள்ளிட்ட பெற்றோலிய வளத்தைப் பெறுவதற்கான அகழ்வு நடவடிக்கைகள் மற்றும் புதிய ஆராய்ச்சி ஒப்பந்தங்களில் துரிதமாக

கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

-  எரிபொருள் கையிருப்பு மற்றும் நீர்த்தேக்கங்களில் நீரின் மட்டங்கள் தொடர்பிலானஎதிர்வுகூறல் மற்றும் அவதான முகாமைத்துவத்தின் பொருட்டு நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி பெறப்படும் தகவல்களைக் கொண்டு வலுசக்தி வழங்கலை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.
-  2050ஆம் ஆண்டளவில் பூச்சிய வாயு வெளியேற்ற இலக்கினை அடைவதற்கான காலநிலை மாற்றங்கள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்கு இலங்கையின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தி இன்றளவில் கைச்சாத்திட்டுள்ள குறைபாடுகளையுடைய குறுகியகால சுற்றாடல் இலக்குகள் பற்றிய வாசகங்களை இற்றைப்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
-  மின்சக்தி மற்றும் வலுசக்தித் துறையில் அவசியம் இடம்பெற வேண்டிய மறுசீரமைப்பினை மேற்கொள்ளல்,அதனை உரிய பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களை அறிவதனூடாக மற்றும் விசேட நிபுனர்களின் விதப்புரைகளின் மீது மேற்கொள்ளல்.
-  நீண்டகால வலுசக்தி விநியோகத்தின் பொருட்டு திட்டமிடப்பட்ட உற்பத்தி மற்றும் விநியோக கருத்திட்டங்களுக்காக அரச, தனியார் மற்றும் உலகளாவிய முதலீடுகளை வரவழைத்தல்.
-  மின்சாரக் கட்டமைப்பில் இடம்பெறுகின்ற தொழில்நுட்ப பாதிப்புகள் மற்றும் நிறுவன முகாமைத்துவ மட்டத்தில் இடம்பெறுகின்ற நட்டங்களைக் குறைப்பதற்காக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினூடாக அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
-  மாதாந்த மின்சாரப் பாவனை 60 அலகுகளை விடக் குறைவான வீடுகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கு புதிய மின் இணைப்புகளைப் பெறுவதற்கோ அல்லது துண்டிக்கப்பட்ட இணைப்புகளை மீளப் பெறுவதற்கோ ஆகும் செலவினை ஒரே தடவையில் செலுத்துவதற்கு பதிலாக தவணை முறையில் செலுத்தக்கூடியதாக மாதாந்த மின்சாரப் பட்டியலில் சேர்த்தல்.
-  அரசாங்கப் பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் மதவழிபாட்டுத் தலங்களுக்கு சூரியசக்தி கட்டமைப்பைக் கொண்டதாக வலுசக்திப் பாதுகாப்பினை ஊக்குவிக்கும் முறைமையினை உரிய அமைச்சுக்களின் தலையீட்டின் மீது நடைமுறைப்படுத்துதல்.
-  எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்ற போக்குவரத்துக் கட்டமைப்பை தூய்மையான மற்றும் பசுமை வலுசக்தியின்பால் படிப்படியாக மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
-  இலத்திரனியல் வாகனங்களின் பயன்பாட்டிற்காக நாடு முழுவதும் மின்கலங்களை மின்னேற்றும் நிலையங்களின் வலையமைப்பொன்றினைத் தாபித்தல்.
-  உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் சந்தைத் தரவுகளின் மீதமைந்த வலுசக்திக்குரியதான முதலீடுகள், விற்பனை, எதிர்கால போக்குகள் மற்றும் திசையமைவு பற்றிய ஆலோசனைகளை வழங்குவதற்கான பணியகமொன்றினைத் தாபித்தல்.

- எரிபொருள் சார்ந்த உற்பத்திகள் மற்றும் வலுசக்தியை சர்வதேசத்திற்கு விற்பனை செய்யும் பிரதான நிலையமொன்றினை (Energy Trading Hub) இலங்கையில் தாபிப்பதற்கான உபாயமார்க்கத் திட்டமொன்றினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- வலுசக்தி பெறுகையின் வெளிப்படையான மற்றும் போட்டிமிக்க விலைமனுக் கோரலுக்காக மேற்கொள்வதற்கு நவீன டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கொண்ட செயற்றிறன்மிக்க பெறுகை முறைமையொன்றினைத் தாபித்தல்.
- எரிபொருள் இறக்குமதி, மின்னுற்பத்தி, உற்பத்தி நிலையங்கள் உள்ளிட்ட வழங்குநர்களுக்கு தாமதமின்றி கொடுப்பனவுகளைச் செலுத்துதல், சமூக பாதுகாப்பு நிகழ்ச்சிகளுக்கமைவாக மானியங்களை நுகர்வோருக்கு நேரடியாக வழங்குதல், ஊக்குவிப்பு செயற்பாடுகளின் அனுகூலங்களை நுகர்வோருக்கு பெற்றுக்கொடுத்தல் ஆகிய வலுசக்தி துறையின் சகல கொடுக்கல் வாங்கல்களையும் வங்கிக் கட்டமைப்புடன் தொடர்புபடுத்திய டிஜிட்டல் தளத்தினூடாக மேற்கொள்ளல்.
- தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் வலுசக்தியை பாதுகாத்து தேசிய பொருளாதாரத்திற்கு சாதகமான வகையில் வழங்கும் பங்களிப்பினை வலுபபடுத்துதல்.
- பாரிய அளவில் வலுசக்தியைப் பயன்படுத்தம் கைத்தொழில் மற்றும் வணிக நுகர்வோரின் வலுசக்தி கண்காய்வை கட்டாயமாக்குதல் மற்றும் கைத்தொழில் உபகரணங்களினதும் புதிய கட்டிடங்களினதும் வலுசக்தி பாதுகாப்பு விவரக்குறிப்புகளை விதப்புரை செய்தல்.
- ஆகக் குறைந்த பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்துடன் ஏற்றுமதிக்கான உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டுக் கைத்தொழில்களுக்காக மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி சான்றிதழை வழங்குதல்.
- மின்சார சபை மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு தொடர்பான பயிற்சியளிக்கும் பிரிவு,பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுடன் ஒன்றிணைத்த வலுசக்தித் துறையில் அதிக வருமானத்தினைப் பெறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சிகளை ஆரம்பித்தல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் உயர் கல்வி நிறுவனங்கள், வலுசக்தித் துறையிலுள்ள தொழிற்சாலைகள் மற்றும் பயன்பாட்டு நிறுவனங்களுக்கிடையிலான உற்பத்தித்திறன் ஒத்தழைப்புக்களைக் கட்டியெழுப்பவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- புதிப்பிக்கத்தக்க வலுச்சக்தி கருத்திட்டங்களுக்கான முதலீடுகளுக்கு அழைப்பு விடுக்கையில் உள்நாட்டு கம்பெனிகளுக்கும் வாய்ப்பு வழங்குதல்.
- உள்நாட்டுக் கம்பனிகள் சர்வதேச பங்காளர்களுடன் ஒன்றிணைந்து துறையில் அவசியமான மூலதன மற்றும் தொழில்நுட்ப ஈர்ப்பினை பெறுவதற்காக ஊக்குவித்தல்.
- உள்நாட்டுக் கம்பனிகள் சர்வதேச சந்தையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான இராஜதந்திர ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுத்தல்.



## பொதுப்போக்குவரத்துச் சேவை

# வினைத்திறன்மிக்க பயண முடிவிடம்

முறைசாராததும் வினைத்திறனற்றதுமான போக்குவரத்து நாட்டின் பெரும்பான்மை மக்களின் வாழ்நாளில் குறிப்பிடத்தக்க அளவை விரயமாக்கியுள்ளது. அதிகநெரிசல், அதிகமான நேரத்தை வீதிகளில் செலவழித்தல், இரவுநேரத்தில் சேவைகள் செயற்படாமை, வீதிவிபத்துகள் என்பவற்றுடன் பொதுச் சேவைகளில் பெண்களும் சிறுவர்களும் முகங்கொடுக்கும் பாலியல் மற்றும் ஏனைய துன்புறுத்தல்கள் என்பவை பயணிகள் போக்குவரத்தில் பொதுவாகக் காணக்கூடிய சம்பவங்களாகவுள்ளன. வருடாந்தம் சுமார் 30,000 வீதிவிபத்துகள் அறிக்கையிடப்படுதல், போக்குவரத்துத் துறையின் பாதுகாப்பற்றதன்மையையும் அதன் தீவிரத்தையும் எடுத்துக் காட்டுகின்றன. போக்குவரத்துத் துறையில் புகையிரதச் சேவையினது பங்களிப்பு 05% அளவிலான மிகக் குறைந்த பெறுமானத்தால் வீழ்ச்சியடைந்துள்ளமை சுட்டிக் காட்டப்படுகின்றது. பஸ் பயணிகள் சேவையில் இலங்கை போக்குவரத்து சபையின் பங்களிப்பு 14% ஆல் குறைந்துள்ளது. பொதுப் போக்குவரத்து வீழ்ச்சியடைந்துள்ள காரணத்தால், மக்களில் சுமார் 55% தனியார் பஸ் போக்குவரத்து மூலம் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் ஈடுபட்டுள்ளதுடன், அவர்களுக்கு தமது வருமானத்தில் பெரும்பகுதியைப் போக்குவரத்துக்காகச் செலவிட நேர்ந்துள்ளது. அதனூடாக அதிகளவில் வீதிகளில் நெரிசலும் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஒட்டுமொத்த வீதிவலையமைப்பான 119,382 கிலோமீற்றர்களில், 88,200 கிலோமீற்றர்களுமே உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தாவதுடன், பெரும்பாலானவை கிராமிய மற்றும் அரைநகர்ப்புறப் பிரதேசங்களிலுள்ள தெருக்கள், உரிய பராமரிப்பின்மையால் சிதைந்துபோயுள்ளன. எரிபொருள் இறக்குமதிக்காக வருடாந்தம் பெருந்தொகைப் பணம் வெளியே இழுத்துச் செல்லப்படுவதுடன், நாட்டில் தகனிக்கப்படும் எரிபொருளில் 65% அளவில் போக்குவரத்துத் துறைக்கே பயன்படுத்தப்படுகின்றது. அதனூடாகஒட்டுமொத்த வளி மாசடைவில் அரைவாசிப் பங்களிப்பைஅதுஅளிக்கின்றது. அவ்வாறே பாதுகாப்பற்ற போக்குவரத்தின்போது மரக்கறிகளும் பழவகைகளும் சுமார் 30% விரயமாகிப் போகின்றன.

இந்தநிலைமைக்குத் தீர்வாக சுற்றாடலுக்குச் சாதகமான போக்குவரத்துக் கட்டமைப்பொன்றை நோக்கி மாற்றமடையும் நோக்குடன்கூடிய, நம்பிக்கையான, பாதுகாப்பான மற்றும் கௌரவமான மக்களுக்குச் சார்பானபோக்குவரத்துச் சேவைகளில் 70% ஐ ஐந்து வருடங்களுக்குள் பொதுப் போக்குவரத்துச் சேவையின் மூலம் வழங்குவதே இலக்கு.



## கோட்பாடுகள்

- போக்குவரத்து ஒருபொதுச் சேவை
- சுற்றாடலுக்குச் சாதகமானதும் நிலைபேறானதுமான போக்குவரத்துச் சேவை
- பாதுகாப்பானதும் வினைத்திறன் மிக்கதுமானசே சவை
- பயணிகள் தொகுப்பில் பன்முகத்தன்மை
- போக்குவரத்து ஊடகங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பு

## செயற்பாடுகள்

### புகையிரதச் சேவை

- சிதைவடைந்த நிலையிலுள்ள புகையிரதப் பாதைகளை நவீனமயப்படுத்தி முறையான பராமரிப்பு வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி, நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய தன்னியக்க சமிக்ஞைக் கட்டமைப்புகளின் தாபித்தல்.
- தேவைகளின் அடிப்படையில் படிப்படியாக பிரதான புகையிரதப் பாதைகள், இரட்டைப் புகையிரதப் பாதைகளாகவும், பிரதான நகரங்களை அண்மித்து முப்புகையிரதப் பாதைகளாகவும் மேம்படுத்தப்படும்.
- முன்னுரிமை அடிப்படையில் படிப்படியாக இப்போது புகையிரதப் பாதை வலையமைப்பின் ஊடாக உள்வாங்கப்படாத பிரதேசங்கள்வரை புகையிரதப் பாதைகளை நீடித்து ஒவ்வொரு பிரதான நகரத்திற்கும் புகையிரதச் சேவைகளை வழங்குதல்.
- அதிக புகையிரதப் பெட்டிகளை ஈடுபடுத்தியதும் புகையிரதம் பயணிக்கும் தடவைகளை அதிகரித்ததும், காலை முதல் நள்ளிரவு வரையான செயற்றிறன்மிக்கதுமான புகையிரதச் சேவை.
- படிப்படியாக புகையிரதக் கட்டமைப்பை மின்சக்தியால் இயங்கும் புகையிரதங்கள் வரை மேம்படுத்தல்.
- உற்பத்தி மூலப்பொருட்கள், நுகர்வோர் பொருட்கள் போன்றே விவசாய மற்றும் மீன்பிடி உற்பத்திகளையும் பாதுகாப்பாக கொண்டுசெல்வதில் புகையிரத சேவையை வினைத்திறனாகப் பயன்படுத்துதல்.
- பயணிகள் பாவிக்கின்ற தனிப்பட்ட வாகனங்களைத் தரித்துவைப்பதற்காக புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் அமைக்கப்பட்ட தரிப்பிட வசதிகள்.
- நெரிசல்மிக்க இடங்களில் பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்துவதற்காக ஆழமெசயடை மற்றும் Light Railway Transport போன்ற விதிமுறைகள் மற்றும் பஸ் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்தும் முன்மொழிவுகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அவை படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

### பஸ் பயணிகள் சேவை

- பயணிகள் போக்குவரத்திற்காகவே தயாரிக்கப்பட்டதும் வசதிகள் அடங்கியதுமான பஸ் வண்டிகளை அறிமுகப்படுத்தல். அந்த பஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்வதற்கான இலகுநிதித் திட்டம்.
- பிரதான வீதிகளிலும் தற்போது பஸ் போக்குவரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள

அரைநகர்ப்புற மற்றும் கிராமிய வீதிகளைப் போன்றே இரவுநேரப் போக்குவரத்தும் ஒழுங்குபடுத்தப்பட்ட வலுவான பஸ் பயணிகள் சேவை

-  நவீன டிஜிட்டல் தொழில்நுட்பப் பாவனையில் பஸ் வண்டிகளிலிருந்து கிடைக்கும் அனைத்து வருமானங்களும் நியாயமானமுறையில் பஸ்களுக்கிடையில் பகிர்ந்துசெல்லும் வகையில் நிர்ணயிக்கப்படும் பொதுப் போக்குவரத்து வலயங்களுக்கு படிப்படியாக அரச மற்றும் தனியார் பஸ் சேவைகளை ஒருங்கிணைத்துத் தாபிக்கப்படும் கொத்தணி பஸ் கம்பனிகள்.
-  அனைத்து பஸ் வண்டிகளிலும் டிஜிட்டல் தளமொன்றின் வாயிலாக முற்கொடுப்பனவு அட்டையொன்றின் மூலம் கொடுப்பனவுசெய்யும் பொஸ் (POS) பற்றுச் சீட்டு இயந்திரங்கள்.
-  நெரிசல்மிக்கப் பிரதேசங்களில் பஸ் வண்டிகளுக்கெனப் பாதைகளை வகுத்தல் மற்றும் படிப்படியாக பயணிகள் போக்குவரத்துக்கு முன்னுரிமைவழங்கும் Bus Rapid Transit (BRT) முறைகள்.
-  படிப்படியாகபொதுப் போக்குவரத்தில் மின்சக்தியால் இயக்கப்படும் பஸ்வண்டிகளைப் பயன்படுத்தல்.
-  பயணிகள் கௌரவத்துடன் எந்தவொரு துன்புறுத்தலும் இன்றி பஸ் வண்டியில் பயணிக்கக் கூடிய சூழலொன்றை உருவாக்கத் தேவையான மனப்பாங்கு ரீதியான மாற்றத்திற்காக, பயணிகளுக்கும் ஊழியர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும் பயிற்சியளித்தலும்.
-  பயணிக்கும் மக்கள் பயன்படுத்தும் தனிப்பட்ட வாகனங்களை தரித்துவைப்பதற்காக பஸ் தரிப்புநிலையங்களுக்கு அண்மையில் வாகனத் தரிப்பிடவசதிகள்.

### முறையானதும் கட்டாயமானதுமான நேர அட்டவணைமுறை

-  புகையிரத சேவையைப் போன்றே பயணிகள் பஸ் போக்குவரத்து சேவையிலும் கட்டாயமான நேர அட்டவணை முறை
-  காலை முதல் நள்ளிரவு வரையிலுமான நேர அட்டவணையொன்றுக்கு ஏற்ப, செயற்படும் கட்டாயமான பொதுப் போக்குவரத்துச் சேவை.
-  டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட நேர அட்டவணைகள் இணையத் தளத்தில் நிறுவப்படுவதுடன், புகையிரதங்கள் மற்றும் பஸ்வண்டிகளில் பயண நேர அட்டவணைகள் காட்சிப்படுத்தப்பட்டு அந்த நேர அட்டவணைகளுக்கு ஏற்றவாறே பயணித்தல்.
-  பயணிக்கும் மக்கள் நிகழ்நிலைமுறையில் தொலைதூரப் பயணச் சேவைகளில் முன்கூட்டியே இருக்கைகளைப் பதிவுசெய்து கொள்வதற்கான வாய்ப்புகள்.

### பயணிகள் இடமாறல் நகரங்கள் (Transit Cities)

-  அண்மித்த பிரதேசங்களில் தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் பயணிகளுக்கு பஸ் தரிப்பிடமும் புகையிரத நிலையங்களும் ஒரே இடத்தில் அமைந்துள்ளபயணிகள் இடைமாறல் நகரங்கள் (Transit Cities)
-  போக்குவரத்து நகரங்களிலிருந்து பிரதான நகரம் வரையான வினைத்திறன்மிக்க பொதுப் போக்குவரத்துச் சேவை.
-  இடமாறல் நகரங்களில் பாதுகாப்பாக மோட்டார் வாகனத் தரிப்பிடம் மற்றும் ஏனைய பொதுவசதிகள்.

### கிராமியப் போக்குவரத்து

- பொதுப் போக்குவரத்துச் சேவைகள் இல்லாத கிராமியப் பிரதேசங்களுக்குப் பொதுப் போக்குவரத்து சேவை
- கிராமிய வீதிகளில் பஸ் சேவையைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்வதற்கு, அவசியமான சந்தர்ப்பங்களில் விசேட ஊக்குவிப்புகள்.
- கிராமிய மக்களின் உற்பத்திகளைப் பாதுகாப்பாகக் கொண்டுசெல்வதற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்துடன் பொருட்களை கொண்டுசெல்லும் சேவைகள்.

### வீதிகள்

- துரிதமாக மறுசீரமைக்கப்படவேண்டிய கிராமிய மற்றும் தோட்டங்களை அண்மித்த வீதிகளை அடையாளங்கண்டு. முன்னுரிமைப் பட்டியலொன்றைத் தயாரித்து அம்முன்னுரிமைப் பட்டியலுக்கு ஏற்றவாறு வீதிகளை மறுசீரமைத்து பேண்தகுரீதியில் பராமரித்தல்.
- மத்திய அரசின் அபிவிருத்த அதிகாரசபையின்கீழ், பராமரிக்கப்படும் அதிவேக வீதிகள் (E) பெருந்தெருக்கள் (A,B) மற்றும் மாகாண வீதிகள், (C,D) அனைத்தும் குறிப்பிட்டகால இடைவெளிகளில் (Periodically) உரியமுறையில் பராமரிக்கப்பட்டு பேணப்படுதல்.
- ஏற்கனவே நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள மத்திய அதிவேக வீதியின் கடவத்தையில் இருந்து மீரிகம வரையான எஞ்சியுள்ள பகுதியில் தோன்றியுள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு பணிகள் பூர்த்திசெய்யப்படும்.

### துவிச் சக்கரவண்டிப் பாவனையை ஊக்குவித்தல்

- வீதிகளில் நெரிசல் காணப்படும் பிரதான நகரங்களிலும் பிரதான நகரங்களை அண்மித்துள்ள பிரதேசங்களிலும் அப்பிரதான நகரங்கள்வரை பாதுகாப்பான துவிச்சக்கரவண்டிப் பாதைகள் அமைக்கப்படும்.
- புதிதாக அமைக்கப்படும் வீதிகளில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் துவிச் சக்கரவண்டிப் பாவனைக்குச் சாதகமான உட்கட்டமைப்பு வசதிகள்
- பிரதான புகையிரத நிலையங்கள், பஸ் தரிப்புநிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் துவிச் சக்கரவண்டிதரிப்பு வசதிகள்.

### பாதசாரிகள் நடைபாதை

- பிரதான நகரவீதிகளின் இருபுறமும் பாதசாரிகள் நடைபாதை அமைத்து, வீதிகளின் இருபுறமும் பாதசாரிகளுக்கு நிழல் தரக்கூடிய மரங்களை வளர்த்தல்.
- நடைபாதைகள் வேறு நடவடிக்கைகளுக்காகப் பாவிக்கப்படுவதைத் தடுத்தல்.

### பொருட்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்துக்கான நீர்வழிப் பாதைகளைப் பயன்படுத்துதல்

- நீர்வழிப் போக்குவரத்து ஆராய்ச்சிக்கும் மேம்படுத்தலுக்குமான

தொழில்நுட்பப் பிரிவு

- சாத்தியக்கூற்று ஆய்வுகளால் இனங்காணப்படும் நீர்வழிப் பாதைகளில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து சேவைகள்.

### மகளிர், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பும் உட்கட்டமைப்பு வசதிகளும்

- பெண்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான குறிப்பிட்ட விசேட போக்குவரத்துத் தேவைகள் தொடர்பில் சமூகத்தில் மனப்பாங்குரீதியான வளர்ச்சி
- போக்குவரத்துச் சேவைகளின்போது, பெண்கள் முகங்கொடுக்கும் துன்புறுத்தல்களையும் பிரச்சனைகளையும் உடனடியாக அறிவிக்கவல்ல மென்பொருள் மற்றும் அதற்கெனச் செயற்படும் விசேடபிரிவு
- புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகளில் மாற்றுத் திறனாளிகளும் முதியவர்களும் அணுகக்கூடிய விசேட வசதிகள்
- புகையிரத நிலையங்களிலும் பஸ் தரிப்புநிலையங்களிலும் மாற்றுத் திறனாளிகளுக்கும் முதியவர்களுக்கும் முன்னுரிமைஅளிக்கும் இருக்கைகள வகுக்கப்படுவதை கட்டாயமாக்குதல்.

### வீதி விபத்துகளைக் குறைத்தல்

- வீதி விபத்துகள்மீது தாக்கம் செலுத்தும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அனைத்து சாரதிகளும் சவாரிசெய்பவர்களும் (னுசளைநசள ரூ சுனைநசள) ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப வாகனம் செலுத்துவதில் ஈடுபடுத்தப்பட்டு வீதிஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படுவதை கட்டாயமாக்குதல்.
- சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்கும் விதிமுறை ஒழுங்குபடுத்தப்படும்.

### பகிரப்பட்ட பொதுப் போக்குவரத்து நடவடிக்கை (Para-transit operation)

- முச்சக்கரவண்டிச் சேவைகள் மற்றும் பணிக்குழுக்கள், பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோரின் போக்குவரத்தும் உட்பட ஏனைய வாடகை வண்டிச் சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு தரம் வாய்ந்ததும் வினைத்திறன்மிக்கதுமான சேவையாக மாற்றப்படும்.
- பகிரப்பட்ட பொதுப்போக்குவரத்துச் சேவைக்காக டிஜிட்டல் கையடக்கத் தொலைபேசி செயலி.

### பயணிகள் மற்றும் பயனாளிகள் அமைப்பு

- அரசினால் பயணிகள் அமைப்புகள் குறித்ததுறைசார்ந்த பயணிகள் பிரநிதிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் தீர்மானமெடுக்கும் தரப்பினராகக் கலந்துகொள்ளச் செய்யப்படுவர்.
- போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் (வீதிகள்,பாலங்கள் போன்றவை) அமைக்கப்படும் போதும் பராமரிப்புச் செயற்பாடுகளின் போதும், குறித்த பிரதேசத்தின் மக்கள் அச் செயற்பாடுகளை மதிப்பிடுதல் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்தும் பங்குபற்றச் செய்யப்படுவர்.



## நிலைபெறுதகு கடல் வளம்

# உலகலாவிய கடல் தொழிற்றுறையிலான பங்கு

இலங்கை உலகின் கிழக்கையும் மேற்கையும் இணைக்கின்ற பிரதான கப்பற்பாதை சந்திக்கின்ற மூலோபய ரீதியான நடுநிலையத்தில் இடஅமைவு பெற்றுள்ளமை காரணமாக உலகளாவிய கப்பற் போக்குவரத்துறையில் பாரிய வகிபாகத்தை சித்தரித்து வருகிறது. எமது நாட்டுக்கு அருகில் பயணிக்கின்ற கப்பல்கள் மூலமாக இலட்சக்கணக்கான தொன் வருடம்தோறும் போக்குவரத்து செய்யப்படுகின்றது கொழும்பு துறைமுகம் இந்த கப்பற் போக்குவரத்தினை நெறிப்படுத்துவதற்கான மிகவும் பொருத்தமான இடத்தில் அமைந்துள்ளதோடு தெற்கில் அமைந்துள்ள ஆழமான துறைமுகமான அம்பாந்தோட்டை துறைமுகமானது அதன் கொள்திறனைவிட குறைவான மட்டத்திலேயே இயங்கி வருகிறது. இதன்படி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக முதலீடு செய்தல் மற்றும் போட்டியடிப்படையில் சேவைகளை வழங்குவதன் மூலமாக இலங்கைக்கு உலகலாவிய கடல்சார் தொழில்துறையில் கணிசமான பங்கினை கவர்ந்திழுத்து கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டையை உலகின் மிகப்பெரிய கப்பல் மையங்களாக அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு வளம் நிலவுகின்றது. கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை போன்ற பிரதான துறைமுகங்கள் நாட்டின் வர்த்தக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பினை செய்து வருவதோடு நாட்டின் சந்தையில் மிகப்பெரிய இடப்பரப்பு மீது தாக்கமேற்படுத்தியும் வருகின்றது.

இலங்கை மாலுமிகள் அவர்களின் உன்னத நிலை, திறமை மற்றும் செயலாற்றுகை தொடர்பில் உலகில் பிரசித்தி பெற்றுள்ளதோடு அவர்கள் எமது கப்பற்துறையின் முதன்மையான சொத்துக்களாவர். இலங்கையின் தொழில்சார் மாலுமிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, அந்நிய செலாவணி ஈட்டல்களை அதிகரிப்பதை போன்றே நாட்டின் இளைஞர்களுக்கு உயர்மட்ட நன்மைகளை கொண்ட தொழில்வாய்ப்பினை உருவாக்குவதற்கான கணிசமான சாத்தியவளம் நிலவுகின்றது. நாங்கள் முன்வைக்கின்ற இந்த கொள்கைச் சட்டகம் உலகளாவிய கப்பற் பயணத்துறையின் முதன்மைத்தானத்திற்கு இலங்கையை கொண்டுவருவதற்கான துறைமுகங்கள், கப்பல் கம்பெனிகள் மற்றும் சிறப்பறிஞர்களை உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களின் பங்களிப்பு, கைத்தொழிலின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான சமநிலைவாய்ந்த அணுகுமுறையை உறுதி செய்கின்றது. அதன்படி மூலோபாய ரீதியாக எமது நாடு இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளமை, வழங்கல் வினைத்திறனை முன்னேற்றுதல் மற்றும் உலகத்தரத்திலான கடலக உழைப்புப் படையினரை கட்டியெழுப்புவதனூடாக இலங்கையை உலகின் பிரதான கப்பற்துறை நடுநிலையமாக மாற்றுவது எமது நோக்கமாகும்.



# கோட்பாடுகள்

- கடல் வளங்களை நிலைபெறுதகு வகையில் பாவிப்பதற்கான ஒருங்கிணைந்த கடல் கட்டுப்பாடு.
- கடல்சார் சுற்றாடல் மற்றும் வளங்களின் பாதுகாப்பும் பொறுப்புக்கூறலும்.
- பொதுவான கடல்சார் வளங்களில் பிரவேசித்தல் அல்லது அவற்றை தனிப்பட்ட இலாபத்திற்காக பாவிப்பது பாவனையாளர்களின் கொடுப்பனவின் பேரிலாகும்.
- கடல்சார் கட்டுப்பாட்டினையும் நிர்வாகத்தையும் பற்றிய தீர்மானங்களை மேற்கொள்கையில் முற்பாதுகாப்பான அணுகுமுறை.
- கடல் மற்றும் கடற்கரை பிரதேசங்கள் அத்துடன் அவற்றின் வளங்களை திட்டமிடல், பாவனை மற்றும் பேணுகைக்கான சமுதாய பங்கேற்பு.
- கடல்சார் வளங்களின் நன்மைகள் நியாயமான வகையில் மக்களிடையே பகிர்ந்து செல்லல்.

# செயற்பாடுகள்

## மாலுமிகளுக்கு பயிற்சி அளித்தல்

- ஆரம்ப மற்றும் தொழில்சார் மாலுமி கல்வியை முன்னேற்றுவதற்கான அரச இடையீட்டினை விரிவாக்குதல்.
- தொழில்சார் திறன்களை முன்னேற்றவும் சம்பந்தப்பட்ட சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளவும் வசதியளித்தல்.
- சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) அவசியப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான பாடநெறிகளை மீளாய்வு செய்தல் மற்றும் திருத்துவதற்கான கட்டமைப்புசார்ந்த செயற்பாங்கு.
- அமைச்சுசார் பரீட்சைப் பிரிவு தரமுகாமைத்துவ முறைமைக்கு (QMS) அமைவாக செயலாற்றுவதை உறுதிப்படுத்துவதற்கான மூன்றாம் தரப்பு மதிப்பீட்டு குழுவினை நியமித்தல்.
- கைத்தொழில் பயிற்சி வசதிகளை முன்னேற்றுதல்.
- சர்வதேச சந்தையில் புதிய தொழில்வாய்ப்புக்களுக்கான அணுகலை விரிவாக்குதல்.
- கப்பற்துறை நலலோம்பல் மற்றும் ஒழுக்கநெறிகளை பாதுகாத்தலும் முன்னேற்றுதலும்.

## துறைமுக உட்கட்டமைப்பு வசதிகளும் ஏனைய சேவைகளும்

- துறைமுக விரிவாக்கம், பராமரிப்பு, தரவுக்களஞ்சியம், உற்பத்தி செயற்பாங்குகள், தேசிய கப்பல்கள், உட்கட்டமைப்பு வசதிகள், தடாகங்கள் மற்றும் செயற்பாடுகளை விரிவாக்குதல்.
- கப்பற்தொழிற்துறை சேவைகளும் பராமரிப்பும், தொழிற்பாடுகள், முகவர்கள், வழங்கல் வலையமைப்பு, விசேட தொழில்நுட்ப சேவைகள், வங்கிகள், கப்பல் மீள்சூழற்சியாக்கம் மற்றும் கப்பலுக்கான சேவைகளை வழங்குதல் முதலியவற்றை முன்னேற்றுதல்.
- சுற்றுலாத்துறையுடன் கப்பற்துறையை ஒருங்கிணைத்தல்.

**கப்பற் சட்டங்கள், சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிர்வாகம்**

- கப்பல் பதிவு செய்தல் சம்பந்தமாக நிலவுகின்ற சட்டங்களை மீளாய்வு செய்தலும் திருத்துதலும்.
- விளைதிறனும் பாதுகாப்பும் மிக்க துறைமுக கட்டுப்பாட்டு முறைமை. (PSC)
- இலக்கினை அடிப்படையாகக் கொண்ட வெளிப்படைத்தன்மைகொண்ட PSC சேவையொன்று.
- கடல் மாசுப்பாட்டினை தடுப்பதற்கான சர்வதேச சமவாயம் (MARPOL) மற்றும் ஏனைய சுற்றாடல் பாதுகாப்பு சட்டங்களை அமுலாக்குதல்.
- இலங்கையில் கப்பற்துறை பாதுகாப்பு பற்றிய சட்டங்களை அமுலாக்குதல்.



பாதுகாப்பான தரவு முறைமை

# தகவல் தொழில்நுட்ப புரட்சி

உலகளாவிய தொலைத்தொடர்பு துறை புதிய தொழில்நுட்பத்துடனும் தொழில்முயற்சி மாதிரிகளுடனும் பாரிய மாற்றத்திற்கு இலக்காகிக் கொண்டிருக்கிறது. ஐந்தாவது பரம்பரையின் (5G) கம்பியில்லா தொடர்பாடல், முகில் கணனிமயமாக்கம், பண்முகப்படுத்தப்பட்ட ரெலிகொம் வலையமைப்பு, உண்மையற்ற வலையமைப்புச் சேவைகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) வாடிக்கையாளர்களுக்கான புத்தம் புதிய சேவைகளை வழங்கி வருகின்றது. உலகளாவிய பாங்குகள் அவ்வாறு இருக்கையில் அந்த வேகமான தொலைத்தொடர்பு துறையில் புத்தம் புதிய தொழில்நுட்பத்தை அடைந்துகொள்வதில் இலங்கை தவறியுள்ளது. அத்துடன் தொலைத்தொடர்பு சேவைகளின் மிகையான விலை மனைசார் வாடிக்கையாளர்களைப் போன்றே அந்த சேவைகளை உள்ளீடுகளாக பாவிக்கின்ற கைத்தொழில்களிலும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த கொள்கைச் சட்டகத்தில் வடமமைத்தல் தொடர்பாடல் கைத்தொழில், வடமற்ற தொடர்பாடல் கைத்தொழில், ஒளிபரப்பு கைத்தொழில், சினிமா மற்றும் பொழுதுபோக்கு ஆகிய தொடர்பாடல் துறையின் அனைத்து இடப்பரப்புகளையும் உள்ளடக்கத்தக்க தேசிய மக்கள் சக்தியின் தொலைதொடர்பு கொள்கைச் சட்டகம் நவீன தொழில்நுட்பத்தை சீக்கிரமாக கையகப்படுத்துகின்ற, பாதுகாப்பான, கையாள்வதில் நட்புமிக்க மற்றும் நியாயமான விலையை கொண்ட நிலைபெறுதல் தொலைத்தொடர்பு துறையொன்றினை முன்மொழிகின்றது.



## கோட்பாடுகள்

- அனைத்து பிரஜைகளுக்குமான தொடர்பாடல் தொடர்புகள்.
- தகவல்கள் மற்றும் தரவுகளுக்கான வசதியான அணுகல்.
- நியாயமான விலை.
- தேசிய மற்றும் பிரத்தியேக தரவு பாதுகாப்பு.
- சயிபர் பாதுகாப்பும் தரவு அந்தரங்க தன்மையும்.
- பசுமை உட்கட்டமைப்பு வசதிகள்.

## செயற்பாடுகள்

### வடமமைத்த தொடர்பாடல்

- உட்டகட்டமைப்பு வசதிகள் மற்றும் தொலைபேசி அழைப்பாளர் இலக்கம், சேவை வழங்குகின்ற நிறுவனங்களுக்கிடையில் பரிமாற்றிக் கொள்ளக்கூடியவாறான தேசிய மூலோபாயத்திட்டத்திற்கு அமைவான தேசிய தொடர்பாடல் வலையமைப்பினை கட்டியெழுப்புதலும் உள்ளீர்த்தலும்.
- சேவை வழங்குனர் தொட்டு அழைப்பாளர் வரையான யஉஉநளள நெவறழசம இன் அனைத்து பொறுப்புக்களையும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளையும் பிராந்திய நிர்வாக கூறுகளிடமிருந்து.
- பொது மக்களுக்கு இணையத்தளத்தை அனுகக்கூடிய பொது அனுகல் புள்ளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- மின்சார சபையின் மின்மாற்ற வலையமைப்புடன் கூட்டாக மையப்படுத்தப்பட்ட முதுகெழும்பு வலையமைப்பொன்றை (Centralized backbone network) நிர்மாணித்தலும் கிராமிய பிரதேசங்களுக்கான தொடர்பாடல் வசதிகளை விஸ்தரித்தலும்.
- பொதுமக்கள் தரவு முறைமையுடன் (CIVIC registration.) தொலைபேசி தம்பதிகளின் அழைப்பாளர் தரவு முறைமையை ஒருங்கிணைத்தல்.
- E- Government முறைமைக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதலும் அனைத்தையும் ஒருமுகப்படுத்திய முறைமையில் தொகுத்தலும். (Centralized the, Centralized Database Cloud solution, CIVIC registration, for E-Government system).

### வடமற்ற தொடர்பாடல்

- 5G, LTE போன்ற அதிவெண் பரப்பின் வினைத்திறன் கொண்ட தொழில்நுட்பங்களுக்கான முன்னுரிமை.

3G மற்றும் CDMA போன்ற தொழில்நுட்பங்களின் பாவனையிலிருந்து படிப்படியாக விலகி 2G சேவையை அவசர சேவைகளுக்காக பாவித்தல்.

**பாதுகாப்பு அதிர்வெண் பரப்புகள் (GUARD-BANDS)**

- சேவை வழங்குகின்ற கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிர்வெண் இடப்பரப்புகளை மீளவும் திருத்துதல் மற்றும் தொடர்ச்சியான அதிர்வெண் இடப்பரப்புகளை வழங்குதல் போன்றே அதிர்வெண் பரப்புகளின் காவலர் பட்டைகளை (GUARD-BANDS) குறைத்தல்.

**Public Wi-Fi மற்றும் வடமமைத்த தொடர்புகளின் மேம்பாடு**

- பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூல்நிலையங்கள், கல்வி நிறுவனங்கள், பூங்காக்கங்கள், அரச அலுவலகங்களை உள்ளிட்ட பொதுமக்கள் நடமாடுகின்ற இடங்களில் Public Wi-Fi நிறுவப்படுவதோடு நியாயமான விலைக்கு இணையத்தளத்தில் பிரவேசித்தலும் அனைத்துவிதமான அத்தியாவசிய சேவைகளையும் கொண்ட IOT செயலிக்கான இலவசமான அணுகலும்.

**இலத்திரனியல் தொடர்பாடல் கைத்தொழிலுக்கான பொதுவான செயற்பாடுகள்**

- இலத்திரனியல் தொடர்பாடல் சேவை வழங்குனர்களுக்கு தமது இலத்திரனியல் தொடர்பாடல் வலையமைப்பிற்கு பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான இயலுமையை உறுதி செய்யவேண்டிய இலக்குகள்.
- அவசர சேவைகள், அரசாங்க சேவைகள், பொதுமக்கள் பாதுகாப்பு சேவைகளுக்கான இலவசமான அணுகல்.
- கிராமிய பிரதேசங்கள், மட்டுப்படுத்தப்பட்ட உள்ளடக்கத்தைக் கொண்ட பிரதேசங்கள் மற்றும் பொது இடங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதல்.
- கல்வி நிகழ்ச்சி திட்டங்களை கொண்ட IOT செயலிகள், நிகழ்நிலை கல்வி நிகழ்ச்சிகள் மற்றும் பிற கல்விச் சாதனங்களுக்கான (Documents, E-library) வாய்ப்பினை ஒவ்வொரு பிரஜைக்கும் இலவசமாக வழங்குதல்.
- ஒவ்வொரு துறைக்குமான IOT செயலிகளை மேம்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள்.
- உட்கட்டமைப்பு வசதிகள் கம்பெனிகளுக்கிடையிலான பரிமாற்றங்களும், தொடர்பாடல் தரங்களும் தொடர்பாடல் கட்டணங்களை நிர்ணயிப்பதற்குமான ஒழுங்கமைத்தல் பொறியமைப்பொன்று.

**ஒளிபரப்பு கைத்தொழில்**

- ஒளிபரப்பு வலையமைப்புகளை டிஜிட்டல்மயப்படுத்துவதற்காக (converted into digital) அதற்கான புதிய தொழில்நுட்பங்களை உறிஞ்சியெடுத்தல், அதனோடு தொடர்புபட்டு நிலவுகின்ற ஏனைய சேவைகளையும் மக்களுக்கு வழங்குதல்.
- தொடர்பாடல் ஆணைக்குழுவின் கீழ் (CRC-SL) ஒளிபரப்பு கைத்தொழிலுக்கான ஒழுங்குறுத்தல் நிறுவனமொன்று.
- ஒரு நிறுவனத்தின் / கம்பெனியின் இணைக்கம்பெனிகள் மாதிரியின் கீழ் அந்தந்த அலைவரிசைகளின் அடையாளங்கள் பாதுகாக்கப்படத்தக்க வகையிலான அரசாங்கத்திற்கு சொந்தமான வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.

-  SLRC இல் (CH-01) தேசிய அலைவரிசை, நேத்ரா (CH-02) அலைவரிசை சேவையை பொதுமக்கள் ஒளிபரப்பாக (Public Services Broadcast (PSB) Domain) அமுலாக்குதலும் Channel EYE (CH-03) வணிகப் பிரிவாக இயக்குதலும்.
-  SLBC இன் சுதேச சேவையையும் தமிழ்ச் சேவையையும் பொதுமக்கள் ஒளிபரப்பாக (Public Services Broadcast (PSB) Domain) இயக்கி வருவதோடு ஏனைய அலைவரிசைகளை வணிக அலைவரிசைகளாக பேணி வருதல்.
- வருடாந்த வரவு செலவு மூலமாக ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்படுகின்ற ஊடகப் பாதீட்டினை பொதுமக்கள் சேவைகள் ஒளிபரப்பாக (Public Services Broadcast (PSB) ) இயங்குகின்ற நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- தகவல் இரசனையையும் கல்விசார் உள்ளடக்க நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதும் மேம்படுத்துதலும்.
- கல்விச் சேவைக்காக வினைத்திறன் மிக்க ஊடகமாக டெரஸ்ரியல் தொலைக்காட்சி அலைவரிசையாக (Terrestrial TV Network) இனங்காணுதலும் அதனை நிறைவு செய்வதற்கான அவசியமான தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுதலும்.

**சினிமா மற்றும் பொழுதுபோக்கு கைத்தொழில்**

- டிஜிட்டல் சினிமான ஒளித்தெறிப்பு குறைந்தபட்ச தரநியமம் 2% என்ற வகையில் அமுலாக்கப்படும்.
- சினிமா, பொழுதுபோக்கு மற்றும் புதிய ஊடகம் (Cinema ,Entertainment Digital and New media) ஆகிய கைத்தொழில்களுடன் தொடர்புடைய ஒழுங்குறுத்தல் நிறுவனமொன்று.
- நவீன தொழில்நுட்பம் நிறைந்த கலையகம், தயாரிப்புக்கு பிற்பட்ட நிறுவனங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய தொழில்நுட்ப பிரிவுகளையும் புதிய உபகரணங்களையும் இறக்குமதி செய்வதற்காக முதலீடு செய்வதற்காக தனியார் துறையை ஊக்குவித்தலும் வரி சலுகைகளையும் ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.
- வெளிநாட்டு திரைப்பட உற்பத்திகளுக்கான சேவைகள் வசதி கைத்தொழிலுக்கான புதிய ஒழுங்குறுத்தல்களைப்போன்றே பதிவிலிருந்து ஏனைய கருமங்களின் இணைப்பாக்கம் மற்றும் ஊடகவியலாக்கத்திற்கான பணியகமொன்று.
-  OTT, மற்றும் VOD சேவைகள் போன்ற IOT உள்ளீடுகளையும் பொழுதுபோக்கு கைத்தொழில் மற்றும் புதிய ஊடகங்களுக்கான (Digital and New media) முதலீடுகளை ஊக்குவித்தல்.



## விளைதிறன்மிக்க முகாமைத்துவம்

# ஒருங்கிணைந்த கையாளல் திட்டம்

காணி ஆணையாளர் திணைக்களத்தின் தரவுகளுக்கிணங்க இலங்கையின் ஒட்டுமொத்த நிலப்பரப்பான 6.6 மில்லியன் ஹெக்டெயரில் 82% அதாவது 5.4 மில்லியன் ஹெக்டெயர் அரசாங்கத்திற்கு சொந்தமானதாக அமைவதோடு எஞ்சிய 18% அதாவது 1.2 மில்லியன் ஹெக்டெயர் பிரத்தியேக காணிகளாக நிலவுகின்றன. அரசாங்கத்தின் காணிகளாக நிலவுகின்ற 5.4 மில்லியன் ஹெக்டெயரில் 32% அதாவது 1.7 மில்லியன் ஹெக்டெயர் காடுகளாக காணப்படுகின்றன. நிர்வாகத்தினதும் முகாமைத்துவத்தினதும் வசதி கருதி காணிகளை பயன்படுத்துகின்ற விதத்திற்கிணங்க அவை விவசாய, வணிக மற்றும் வதிவிட காணிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

காணி வளங்களை நிர்வகிப்பதற்காக குடியேற்ற ஆட்சிக்காலத்தில் விதித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் மூலமாக இலங்கையின் காணி முகாமைத்துவ முறைமையில் தனித்துவமான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திரத்திற்கு பின்னர் நிலவிய அரசாங்கங்களால் நாட்டினதும் மக்களினதும் மேம்பாட்டுக்காக இந்த சட்டங்களை அறிவியல் ரீதியான திருத்தத்திற்கு இலக்காக்குவதற்காக விசேட முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு குறுகிய நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு சில காணி மறுசீரமைப்புக்களும் காணிபங்கீட்டுக் கொள்கைகளும் சமூக ரீதியான மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை வளர்தெடுக்க வழிசமைத்துள்ளன. காணிகளின் உரிமை பற்றி நிலவுகின்ற சிக்கல்கள் நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ளதோடு அது பல்வேறு சமூக சிக்கல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது.

**காணி மறுசீரமைப்புக்களும் காணிபங்கீட்டுக் கொள்கைகளும் சமூக ரீதியான மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை வளர்தெடுக்க வழிசமைத்துள்ளன. காணிகளின் உரிமை பற்றி நிலவுகின்ற சிக்கல்கள் நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ளதோடு அது பல்வேறு சமூக சிக்கல்களுக்கும் காரணமாக அமைந்துள்ளது. கையகப்படுத்தும்செயற்பாட்டுக்காக, வலுசக்தியை வழங்கும் பங்காளராக மாற்றுவதும் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பாகும்.**

# கோட்பாடுகள்

- உன்னதமான காணிப் பயன்பாடு
- கூருணர்வுமிக்க பிரதேசங்களின் பாதுகாப்பு
- வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட காணி நிர்வாகமும் முகாமைத்துவமும்

# செயற்பாடுகள்

### காணிப் பயன்பாடு

- விளைதிறன் நிர்வாகத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் வழிசமைக்கின்ற காணிப் பற்றிய புதிய சட்டக்கட்டமைப்பும் புதிய காணிச்சட்டமொன்றும்.
- தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டம்
- காணி முகாமைத்துவ இணைப்பாக்கத்திற்கும் நிர்வாகத்திற்குமான தேசிய காணிப் பேரவை (National Land Council).
- இற்றைப்படுத்திய அரச காணிப் பதிவேடு (Inventory).
- இலத்திரனியல் காணிப் பதிவு செய்தல் முறைமையும் காணி அறிக்கைகளின் டிஜிட்டல் மயமாக்கலும்.
- காணி மதிப்பீட்டு முறையியலை ஒழுங்குப்படுத்தி வினைத்திறன் கொண்டதாக அமைத்தல்.
- காணி தொடர்பான சிக்கல்களை துரிதமாகவும் நியாயமாகவும் தீர்த்துவைப்பதற்கான பகுதியளவிலான நியாயாதிக்க நீதிமன்ற (Quasi-Judicial) நிறுவன முறைமை.
- அறிவியல் ரீதியான மற்றும் தொழில்நுட்ப முறையியல்கள் ஊடாக காணி பயன்பாடு மற்றும் அபிவிருத்தியை அங்கீகரித்தல் எளிமையாக்கப்பட்டு வினைத்திறன் கொண்டதாக மாற்றப்படும்.

### கூருணர்வுக்கொண்ட பிரதேசங்களின் பாதுகாப்பு

- சுற்றாடல்சார் மற்றும் வரலாற்று ரீதியான கூருணர்வுமிக்க பிரதேசங்களை பேணுவதற்கும் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள்.

### காணிப் பதிவு

- நீண்ட காலமாக குடியமர்ந்துள்ள மக்களுக்கு மேற்படி காணிகளின் சட்டபூர்வமான உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற காணி உறுதிகள்.
- அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களையும் காணி முகாமைத்துவ நிறுவனங்களையும் இணைத்து ஒருங்கிணைந்த காணி மற்றும் உட்கட்டமைப்பு வசதி தகவல் முறைமையொன்று (ILII).
- வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையும் கொண்ட பொறுப்புக்கூறலுடனான காணி தொடர்பான வினைத்திறன் மிக்க பொதுச் சேவைகள்.

**காணி பாவனை முகாமைத்துவம்**

- ஒருங்கிணைந்த காணிப் பயன்பாட்டு தேசப்படம்
- காணி பயன்பாட்டை திட்டமிடுவதன் ஊடாக அனர்த்தங்களை குறைத்தல், காலநிலைக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய ஆற்றல் மற்றும் மாற்றியமைத்துக் கொள்வதற்கான பொறிமுறை.
- தேசிய காணிப் பயன்பாட்டுத்திட்ட கொள்கைக்கு அமைவான பிரதேச அபிவிருத்தித்திட்டங்கள்.
- இடப்பரப்புசார்ந்த தரவு பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட காணிப் பொருத்தப்பாடு
- (land suitability) பற்றிய தேசப்படமொன்று.

**நில அளவையும் தேசப்படமாக்கலும் (Surveying and Mapping)**

- நில அளவை மற்றும் தேசப்படமாக்கல் நிர்வாக வலையமைப்பை விரிவாக்கி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி காணிகளை அளவீடு செய்கின்ற வினைத்திறனை மேம்படுத்துதல்.
- முழு நாட்டையும் உள்ளடக்கத்தக்கதாக LiDAR அளவைசெய்தல அல்லது பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அத்தியாவசியமான திட்பநுட்பமான குத்துயர (elevation) தரவுகளை பெற்றுக்கொள்ளல்.
- அனைத்து காணிகளினதும் நில அளவையை தேசிய வலமைப்பிற்கு இணைப்பதன் ஊடாக காணி நில அளவையின் தடையற்ற (Seamless integration) ஒருங்கிணைப்பினையும் தொடர்பினையும் ஏற்படுத்துதல்.
- புதிய நிலஅளவை பட்டதாரிகளின் உச்ச சேவையை பெற்றுக்கொள்வதற்கான பொறியமைப்பு.
- அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு அவசியமான திட்பநுட்மானதும் நடப்பு இடப்பரப்பு சார்ந்த நிலஅளவை தரவுகளை முன்னுரிமை அடிப்படையில் சேகரித்தலும் களஞ்சியப்படுத்துதலும்.
- புவித்தகவல் உற்பத்திக்கு அவசியமான இடப்பரப்பு சார்ந்த தரவுகளை இற்றைப்படுத்துவதற்கான நவீன தொழில்நுட்பத்தை பாவித்து நம்பகத்தன்மையும் திட்பநுட்பத்தன்மையும் வாய்ந்த தரவு மூலங்களை வழங்குதல்.
- விரிவான தரவு முகாமைத்துவத்திற்கு வசதியளிப்பதற்கான தேசிய இடப்பரப்புசார்ந்த தரவு ஒருங்கிணைப்பு சாசனமொன்று. (National Spatial Data Integration).



## விஞ்ஞான ரீதியான நிர்மாணத்துறை

# தரமான சேவை ஈடுபாடு

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை பிரதிபலிக்கும் நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்தி மற்றும் அதன் இருப்பு என்பன அரச மற்றும் தனியார் நிறுவனங்களால் அந்தத் துறையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கருத்திட்டங்களுக்காக செய்யப்படும் முதலீடுகளின் மீது தங்கியுள்ளது. 2022 இல் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுக்கு முன்னர், நிர்மாண கைத்தொழில் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 7% பங்களிப்பினை நிர்மாணக் கைத்தொழிற்றுறை பெற்றுக்கொடுத்திருந்த அதேவேளை ஒரு மில்லியனுக்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகளையும் வழங்கியிருந்தது. எனினும் பொருளாதாரம் சுருங்கியதாலும் கண்டதாலும் கைத்தொழிலுக்கான முதலீடு இல்லாத காரணத்தாலும் இக்கைத்தொழிலானது தற்போது நெருக்கடி நிலையில் உள்ளது.

தற்பொழுது இக்கைத்தொழில் துறையிலுள்ள பெரும்பான்மையான நிர்மாணக் கைத்தொழிற்றுறையினர் மற்றும் ஆலோசகர்கள் தனியார் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை அரசுக்கு சொந்தமான கட்டுமான நிறுவனங்கள் அரசியல் தலையீடுகள் மற்றும் செயற்றிறனற்ற நிர்வாகத்தின் கீழ் குறைவான செயலாற்றுகையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

**தற்பொழுது இக்கைத்தொழில் துறையிலுள்ள பெரும்பான்மையான நிர்மாணக் கைத்தொழிற்றுறையினர் மற்றும் ஆலோசகர்கள் தனியார் துறையினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அதேவேளை அரசுக்கு சொந்தமான கட்டுமான நிறுவனங்கள் அரசியல் தலையீடுகள் மற்றும் செயற்றிறனற்ற நிர்வாகத்தின் கீழ் குறைவான செயலாற்றுகையை வெளிப்படுத்தி நிற்கின்றன.**

கொள்முதல் செயற்பாட்டில் நிலவும் குறைபாடுகள், செயற்றிறனின்மை, மோசமான கருத்திட்டமுகாமைத்துவக் கையாளுகைகள், அரசியல் தலையீடுகள், ஊழல் மற்றும் முறையான நிதிஒதுக்கீடுகளின்றி ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் என்பன கைத்தொழிற்றுறையின் ஸ்தீரத்தன்மைக்கு அதிகளவான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. இப்பிரச்சினைகள் நிர்மாணக் கருத்திட்டங்களின் செயலாற்றுகையை பின்னடையச் செய்கின்ற அதேவேளை, காலதாமதங்கள், செலவுகள் அதிகரித்துச் செல்லல் மற்றும் தரமற்ற கட்டுமானங்கள் என்பன அதன் இறுதி விளைவுகளாக அமையப் பெற்றுள்ளன. மேலும் காலம் கடந்த வடிவமைப்பு முறைகள் மற்றும் தரங்கள், நவீன கருத்திட்ட முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்தாமை மற்றும் பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறை ஆகியன தொழிற்றுறையின் மீது பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திவிடுகின்றன. இத்துறையில் தொழில் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் நலனோம்புகை என்பன திருப்திகரமான நிலைமையில் இருப்பதாகவும் காண்பதற்கில்லை.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடுகள் குறைவடைந்தமை மற்றும் புதிய இலாபகரமான மூலப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் புதியகண்டுபிடிப்புகள் இடம்பெறாத காரணத்தினால், இத்துறையானது சர்வதேச அரங்கில் மிகச் சிறியஅளவிலான பங்களிப்பினையே பெற்றுக்கொடுக்கின்றது. மேலும் புத்திஜீவிகளின் வெளியேற்றமானது பயிற்றப்பட்ட ஊழியர்களின் பற்றாக்குறைக்கான காரணமாக அமைந்துள்ளதோடு, அதுதுறையின் அன்றாட செயற்பாடுகளுக்கும் வளர்ச்சிக்கும் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தகால அரசாங்கங்கள் நிர்மாணக் கருத்திட்டங்களுக்காக உள்ர் வங்கிகளில் இருந்துபெற்றுக்கொண்ட இருதரப்பு மற்றும் பல்தரப்புக் கடன்களையே முதலீடுகளாக ஈடுபடுத்தியிருந்த அதேவேளை அக்கருத்திட்டங்க்டாக எதிர்பார்க்கப்பட்ட வெற்றிகள் கிடைக்கப்பெறாமை நாட்டின் கடன் நெருக்கடிக்கு பிரதான காரணியாக அமைந்துள்ளது.

## கோட்பாடுகள்

- ஆக்கப்பூர்வமான நிர்மாணக் கைத்தொழிற்றுறை
- வெளிப்படைத்தன்மையுடன்கூடிய நியாயமான கொள்முதல் செயற்பாடு.
- கட்டுமானத் துறையின் மேற்பார்வை, ஒத்துழைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்.
- தொழில்முயற்சியாளர்களுக்கிடையில் நியாயமான போட்டித்தன்மை மற்றும் சமமான அணுகலுக்கான வாய்ப்புக்கள்.
- நவீன கட்டிடக்கலை அறிவினை அடிப்படையாகக்கொண்ட தொழில் பாதுகாப்பு, நியாயமான சம்பளம், திறன் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களுடன்கூடிய தரமான சேவையில் ஈடுபடுத்தல்.

## செயற்பாடுகள்

- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை மீளாய்வுசெய்து அவசியமான திருத்தங்களை உட்படுத்துதல்.
- நிர்மாணத் துறையிலுள்ள சகல பங்குதாரர்களுக்கும் விரிவான நெறிமுறைக் கோவையொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- நாட்டிலுள்ள சகல நிர்மாணப் பயிற்சி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு மற்றும் நிர்மாணத் தொழில்நுட்பக் கல்வியை ஒழுங்குபடுத்துதல்.
- நிர்மான பிணைகள் நிதியம் (Construction Guarantee Fund – CGF) மூலமாக சர்வதேச நிர்மாண அபிவிருத்தி நிறுவனம் (CIDA) ஏற்றுக்கொள்கின்ற கம்பனிகளுக்கு நிதிசார் முறிகள்
- நிர்மாணப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை துரிதப்படுத்துவதற்காக தீர்ப்பாய நிலையம் ஒன்றினையும் நடுவர் குழாம் ஒன்றினையும் நிறுவுதல்.
- தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இசைவானதாக பிரதான நிர்மாணத் திட்டங்களுக்கான முன்னுரிமையைவிதப்புரைசெய்தல்
- உள்ளூர் ஏலம் பெறுபவர்களின் பங்கேற்பினை அதிகரிப்பதற்காக கொள்முதல் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்தல்.
- கைத்தொழிற்றுறையில் இலத்திரனியல் ஏலவிற்பனை முறையை கட்டம் கட்டமாக முறையாக நடைமுறைப்படுத்துதல்.
- குறித்துரைத்த நிபந்தனைகளின் கீழ் நிர்மாணத் துறையில் சர்வதேச நிறுவனங்களின் பங்கேற்பினை பெற்றுக்கொள்வதில் உள்ர் கைத்தொழிற்றுறையினரைப் பாதுகாத்தல்.
- அரச நிறுவனங்களில் ஒரேவிதமான கொள்முதல் நடைமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்தல்
- மதிப்பீடு மற்றும் கொள்முதல் செயல்முறைகள் தொடர்பில் அரசமற்றும் தனியார் துறையின் தொழில்நுட்ப பணியாட்டொகுதியினருக்கு பயிற்சி அளித்தல்.
- நிர்மாண வினைஞர் சமுதாயத்தின் சமூக அங்கீகாரம் மற்றும் வினைஞர் தேர்ச்சியை நிர்மாணித்து சான்றுப்படுத்துகின்ற அடையாள அட்டையொன்று ஒவ்வொரு நிர்மாண

உழைப்பு வினைஞருக்கும்.

- பதிவுசெய்த நிர்மாண உழைப்பு வினைஞர்களுக்காக நீண்டகால காப்புறுதித் திட்டமொன்றும் இளைப்பாறுகை நன்மைகளும்.
- நவீன கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பில் துறைசார்ந்த நிபுணத்துவத்தை மேம்படுத்துதல்.
- தேசிய அனர்த்தநிலைமைகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் ஊழியப் படைக்கு பயிற்சிஅளிப்பதில் அரசதுறை நிர்மாண நிறுவனங்களின் பங்களிப்பை உறுதிசெய்தல்.
- நவீனமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் மிகச்சிறந்த மூலப்பொருட்களை அறிமுகப்படுத்துவதற்காக நிர்மாணக் கைத்தொழிற்றுறையில் விசேட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவொன்றினைத் தாபித்தல்.
- உலகளாவிய அபிவிருத்திகள் மற்றும் சர்வதேச தரங்களுக்கு அமைவாக கைத்தொழிற்றுறையை நவீனமயப்படுத்துவதற்கு வடிவமைப்பு வழிகாட்டுதல்கள் மற்றும் விவரக்குறிப்புகளைத் தயாரித்து இற்றைப்படுத்துதல்.
- சர்வதேச நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு உள்நாட்டு கைத்தொழிலாளர்கள் பிரவேசிப்பதற்கான அரச அனுசரணை.
- சுற்றுச்சூழல் தாக்கங்கள் தொடர்பில் ஆழமான மதிப்பீட்டுடன் சகல நிர்மாணத் திட்டங்களிலும் சுற்றுச்சூழல் பற்றிய பொறுப்புக்கூறலை கட்டாயமானதாக்குதல்.

# 4

# அபிமானமிக்க வாழ்க்கை
# நிலைதளராத நாடு





# புதிய அரசியலமைப்பு

# இலங்கை தேசிய ஆக்கக்கூறுகள்

புதிய அரசியலமைப்பொன்றுக்கான வரைவு தயாரிக்கப்படுவதோடு, அது பொதுமக்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு உரையாடலுக்கு இலக்காக்கப்பட்ட பின்னர் அவசியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு, மக்கள் கருத்துக் கணிப்பில் அங்கீகரித்துக் கொள்ளப்படும்.

- சமூக மற்றும் பொருளாதார உரிமைகளை பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சாசனத்திற்கு அமைவான உரிமைகள் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வழுவுக்கு கொண்டுவருதல்
- சிறுவர், பெண்கள் மற்றும் வலது குறைந்த சமுதாயத்தினரின் உரிமைகள் பற்றி அரசியலமைப்பு சட்டம் சர்வதேச சமவாயங்களுக்கு அமைவாக விரிவாக்கப்படும்.
- தொழிலுக்காக நாட்டுக்குள்ளேயும் நாட்டுக்கு வெளியிலும் புலம்பெயர்ந்துள்ள ஆட்களின் வாக்களிக்கின்ற உரிமையை உறுதி செய்தல்.
- தேசியத்துவங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையையும் மத ரீதியான குரோதத்தையும் ஏற்படுத்தாத ஆண் - பெண் பால்நிலை அல்லது வேறு விடயங்களின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படாமை ஆகிய நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாக மொழிச்சுதந்திரத்தை உறுதி செய்தல்.
- நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பினை ஒழித்துக் கட்டி பாராளுமன்ற ஆளுகையை நிலைநாட்டுதலும் நிறைவேற்று அதிகாரமற்ற ஜனாதிபதியொருவரை நியமித்தலும்
- புதிய பாராளுமன்ற தேர்தல் முறையொன்றினை அறிமுகம் செய்தல்
- ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கையை ஒன்றுக்கு மட்டுப்படுத்துதல்.
- ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கும் அவர்களின் வாழ்க்கைத்துணைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதியம், விசேட கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை இல்லாதொழித்தல்.
- விஞ்ஞான ரீதியாக ஒதுக்கப்பட்ட 25 அமைச்சுக்களுக்கு 25 அமைச்சர்களையும் 25 நேரொத்த பிரதியமைச்சர்களையும் நியமித்தலும் இராஜங்க அமைச்சர் பதவிகளை இல்லாதொழித்தலும்.
- ஒவ்வொரு அமைச்சுக்கும் விடையத்துறை பற்றிய சிறப்பறிஞர்களைக் கொண்ட மதியுரை சபையினை நிறுவுதல்.
- தமது பொறுப்புக்களை ஈடேற்றாவிட்டால் அத்துடன் ஊழலில் ஈடுபடுவாராயின் அவர்களை திருப்பியழைப்பதற்கான அதிகாரம் வாக்காளர்களுக்கு கிடைக்கின்ற ஏற்பாடுகள்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதியேக பணியாட்தொகுதிக்காக குடும்ப உறவினர்களை சேர்த்துக்கொள்ளாமை போன்ற விதிமுறைகளை உள்ளடக்கிய ஒழுக்கநெறிக்கோவையொன்றை அறிமுகஞ் செய்தல்
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட்டத்தொடரில் பற்கேற்பதற்காக செலுத்துகின்ற கொடுப்பனவினை இல்லாதொழித்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 05 வருடங்களுக்கு பின்னர் செலுத்தப்படுகின்ற ஓய்வூதியத்தை இல்லாதொழித்தல்.
- பாராளுமன்ற உறுப்பினர்களின் சுங்கதீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திர திட்டம் நீக்கப்படும்.
- பாராளுமன்ற உறுப்பினரின் பதவிக்காலத்தில் ஒரு வாகனத்தை மாத்திரம் வழங்குதல்.



## வினைத்திறன் மிக்க அரச சேவை

# திறமைகளை மையமாகக் கொண்ட தொழில்வாண்மை

இலங்கையின் அரச சேவை அரச கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் இடையீடு செய்கின்ற பிரதான கருவியாகும். ஏறக்குறைய 1.4 மில்லியனாக அமைகின்ற படையணியைக்கொண்டதாக அமைச்சு செயலாளர் பதவியிலிருந்து அலுவலக உதவியாளர் பதவிவரை வியாபித்துள்ள பல்வேறு தொழில்வாண்மையாளர்களையும் உத்தியோகத்தர்களையும் கொண்டதாக அமைவதோடு அதனை பராமரிப்பதற்காக அரச வருமானத்திலிருந்து கணிசமான தொகை செலவாகின்றது. அரசசேவை பல்வேறு கல்வி, தொழில்சார் மற்றும் வேறு திறன்கள் நிறைந்த உத்தியோகத்தர்களை அடக்கியபோதிலும் நிகழ்காலத்தில் அது பொதுமக்களின் அபிலாஷைகளை ஈடேற்ற தவறிய மக்களின் நம்பிக்கை சிதைவடைந்த வினைத்திறனற்ற சேவையாக மாறியுள்ளது.

**அரசசேவை பல்வேறு கல்வி, தொழில்சார் மற்றும் வேறு திறன்கள் நிறைந்த உத்தியோகத்தர்களை அடக்கியபோதிலும் நிகழ்காலத்தில் அது பொதுமக்களின் அபிலாஷை களை ஈடேற்ற தவறிய மக்களின் நம்பிக்கை சிதைவடைந்த வினைத்திறனற்ற சேவையாக மாறியுள்ளது.**

அரச சேவையின் வினைத்திறனின்மையும் அதோடு பின்னிப்பிணைந்த இலஞ்சம், ஊழல், மோசடி மற்றும் அரச சொத்துக்களின் முறைகேடான பாவனையில் ஆளும் வர்க்கத்தினரும் ஆட்சி முறையினதும் கட்டாயமான பெறுபேறேயன்றி அரச ஊழியர்களால் தமது அபிலாஷையின் பேரில் பெற்றுக்கொடுத்த அழிவல்ல. அரசியல் தேவையின் பேரில் புரியப்படுகின்ற நியமனங்கள், அழிவுமிக்க அரசியல் தீர்மானங்களை எடுப்பதற்காக அரச ஊழியர்களை நெறிப்படுத்துதல், ஆட்சியாளர்களின் பாரியளவிலான மோசடிகள் மற்றும் ஊழல்களுக்கு உத்தியோகத்தர்களை பயன்படுத்திக் கொள்ளல் போன்ற இடையீடுகள் காரணமாக அரச சேவையை பாரிய சீரழிவுக்கு இலக்காகியுள்ளதோடு இதன் ஊடாக பொது மக்கள் மத்தியில் அரசசேவை பற்றிய நம்பிக்கை சிதைவடைவதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது.

இந்த நிலைமையிலிருந்து அரச சேவையை மீட்டெடுத்து பொதுமக்களின் நம்பிக்கை உறுதி செய்யப்பட்ட ஊழலற்ற சேவையாக மாற்றி மக்களின் அபிலாஷைகள் ஈடேறுகின்ற மனநிறைவு கொண்ட அரச சேவையொன்று வரை கொண்டு செல்வது எமது நோக்கமாகும்.

## கோட்பாடுகள்


- வெளிப்படை தன்மையும் பொறுப்புக்கூறலும்.
- திறமைகளின் அடிப்படையிலான நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள்.
- வினைத்திறனும் முறைசார்ந்த செயற்பாங்குகளும்
- நெறிமுறைசார்ந்த நடத்தைகளும் இடையறா நிலைமையும்
- தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தல்
- விளைபயன்மிக்க கொள்கை உருவாக்கம்
- ஒத்துழைப்பு
- மக்கள் பங்கேற்பு, விழிப்புணர்வூட்டுதல் மற்றும் திறன்கள்.
- எவரையும் கைவிட்டுவிடாமை.
- பாரபட்சம் காட்டாமை.

## செயற்பாடுகள்

- சேவை பிரமாண குறிப்பில் உள்ள சிக்கல்களை தீர்த்துவைத்து அவற்றை திருத்தியமைத்தல்.
- அடிமட்டத்திலிருந்து இனங்கண்ட சமூக மற்றும் பொருளாதார சிக்கல்கள் மற்றும் அவசியப்பாடுகளை தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்த்து வைப்பதற்கு அவசியமான பொறியமைப்பினை வகுத்தல்.
- அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் விடயப்பரப்புகளை முறைப்படி இனங்கண்டு தர்க்க ரீதியான அடிப்படையில் அவற்றை புதிய அமைச்சுக்களுடன் இணைத்து சமூக பொருளாதார இலக்குகளை அடைவதற்கான உயர் வினைத்திறனை பேணிவருவதற்காக மேற்படி நிறுவனங்களுக்கிடையில் குத்தான மற்றும் கிடையான உறவுகளை கட்டியெழுப்புதல்.
- அவசியப்பாட்டுக்கிணங்க புதிய நிறுவனங்களை உருவாக்குதலும் சமமான விடயப்பரப்புகள் மற்றும் செயற்பாடுகள் உள்ள நிறுவனங்களை முறைப்படி ஒருங்கிணைத்தலும் அனாவசியமான நிறுவனங்களை இல்லாதொழித்தலும்.
- டிஜிடல் மயமாக்கல், செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பிரஜைகள் ஈடுபாடு ஆகிய எண்ணக்கருக்களை கருத்தில் கொண்டு நிகழ்கால அரச முகாமைத்துவத்தை புதிய அரச முகாமைத்துவ முறைவரை மாற்றியமைத்தல்.
- அரச சேவையின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக பிரபல்யமாக பாவிக்கப்பட்டு வருகின்ற ஊழியர் எண்ணிக்கை குறைப்பிற்கு பதிலாக புதிய சமூக பொருளாதார இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு ஊழியர்களை மீள் இடஅமைவு செய்தலுக்காக அவர்களின் ஆற்றல்களையும் தகைமைகளையும் உள்ளிட்ட ஏனைய தகவல்களை இனங்காண்பதற்கான துரித தொகை மதிப்பீடு ஒன்றினை நடாத்துதல்.
- திணைக்களங்களும் அவர்களின் ஊழியர்களும் வழங்கப்பட்டுள்ள இலக்குகளை

அடைவதை உறுதி செய்யும் நோக்கத்துடன் செயலாற்றுகை முகாமைத்துவ முறையியலை அறிமுகஞ் செய்தல்.

- மக்களுக்கு வழங்கப்படவேண்டிய இனங்கண்ட சேவைகளை “ஒரே கூரையின் கீழ்” எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் டிஜிடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ஈடேற்றிக் கொடுப்பதை இயலச் செய்விக்கக்கூடிய வகையில் அனைத்து பிரதேச செயலகங்களிலும் வசதிகளை ஏற்படுத்துதல்.
- தீர்மானம் மேற்கொள்கின்ற செயற்பாட்டில் முனைப்பான மற்றும் செயலற்ற முறைகள் ஆகிய இரண்டிலும் இடம்பெறுகின்ற பொதுப்பண விரயத்தை ஒழித்துக்கட்டி அரச சேவையை வினைத்திறன் கொண்ட, ஒழுக்கமுள்ள மற்றும் ஊழல்கள் அற்ற வழங்கல்கள் தொடர்பில் உத்தியோகத்தர்களை பாராட்டுக்கு இலக்காக்குவதற்கான பொதுமக்களின் பிரதிபலிப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான முறையியல்கள்.
- அரச சொத்துக்களை முறையாகவும் வினைத்திறனுடனும் முகாமைத்துவம் செய்வதற்கான அரச சொத்துக்கள் பதிவேட்டினை (asset registry) பேணி வருதல்.
- அரச வளங்களின் பாவனையின்போது இடம்பெறுகின்ற விரயத்தை இல்லாதொழிப்பதற்கேதுவாக அரச நிறுவனங்களை ஊக்குவித்து அவற்றை அளப்பதற்கான அளவைச் சுட்டிகளை அறிமுகம் செய்தல்.
- பெறுகை (கொள்முதல்), நிதிசார், கணக்காய்வு, கொள்கை வகுத்தல், நிர்வாகத்தை உள்ளிட்ட அரச சேவையின் உள்ளக நடவடிக்கைகளை வினைத்திறன் கொண்டதாக மாற்றுவதற்கான டிஜிட்டல் சாதனங்கள்.
- அரச சேவையின் அனைத்து சேவை தொகுதிகளுக்கும் பல்வேறு சேவைகளுக்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் பதவியுயர்வு வழங்குதலை திட்டவட்டமான காலச்சட்டகத்திற்கு அமைவாக மேற்கொள்ள அவசியமான ஏற்பாடுகள்.
- அரச கொள்கை வகுத்தலில் உதவி புரியவும் அமுலாக்கவும் உத்தியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டிய ஆற்றல்களை விருத்தி செய்வதற்காகவும் அரச கொள்கைகள் பற்றிய ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்வதற்காகவும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் (SLIDA) சாத்திய வளத்தை மேம்படுத்தி மறுசீரமைத்தல்.



## சட்டத்தின் அடிப்படையிலான ஆட்சி

# சம அணுகல் நீதிமன்ற முறைமை

நீதிமன்றத்தின் வாயிலாக சுயாதீனமாகவும் வினைத்திறனுடனும் நீதி நிலைநாட்டப்படுவதைப் போன்றே, மக்களுக்கு அச்செயற்பாடு தொடர்பில் உள்ள நம்பிக்கையும் சட்டத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதில், மிகவும் முக்கியமானது. எனினும் இன்று இலங்கையில் இச்செயற்பாடு, மிகவிலையுயர்ந்ததாகவும் மக்களிடமிருந்து விலகியதாகவும் மற்றும் மக்களின் நம்பிக்கை பழுதடைந்துள்ளதுமான ஒரு செயற்பாடாக உள்ளது. சுயாதீனமான, வினைத்திறன்மிக்க, வெளிப்படைத்தன்மையுடன் கூடிய மற்றும் மக்களால் தாங்கிக் கொள்ளக் கூடிய நீதிமன்றக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்தி அது தொடர்பில் சிதைந்து போயுள்ள மக்கள் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்ப தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கின்றது.

## கோட்பாடுகள்

- சட்டத்தின் பாதுகாப்பு நியாயமானதும் சமத்துவமானதும்
- வெளிப்படைத் தன்மையும் வினைத்திறனும்
- சுயாதீனத் தன்மையும் மக்கள் நம்பிக்கையும்

**நிதிசார் முறைகேடுகள், இலஞ்சம், கொமிஸ் பெறல் போன்ற ஊழல்மிக்க செயற்பாடுகளைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு சட்டங்களை ஆக்குவதை முதன்மைப் பணியாக கருதி செயலாற்றுதல்.**

## செயற்பாடுகள்

### நீதித்துறை

- சட்டவல்லுனர்களின் குழுவொன்றினால், காணப்படும் சட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டு தேவையான சட்டங்களை இற்றைப்படுத்தல்
- நீதிமன்ற செயற்பாட்டுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தலும் நீதிபதிகளுக்கும் பணிக்குழுவினருக்கும் அதுதொடர்பில் உரிய பயிற்சியை வழங்குதலும் போன்றவற்றின் ஊடாக நீதிமன்ற செயற்பாட்டை மேலும் எளிதாக்கி வினைத்திறனாக்கல்.
- ஸ்மார்ட் நீதிமன்ற வளாகங்களை (Smart Court House) உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் நீதிமன்ற அறிக்கைகளின் மென் பிரதிகளை (Soft copies) பேணுதலும்.
- மேல் மற்றும் கீழ் நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்கு உதவியளிப்பதற்கு ஆய்வு உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- தெற்காசிய வலய சர்வதேச வணிகரீதியான கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுகின்ற சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் சமரசம் செய்வதற்குமான சர்வதேச

தீர்ப்பாயம் மற்றும் மத்தியஸ்த நிலையமொன்றை இலங்கையில் தாபித்தல்.

- குற்றவியல் சட்டத்துடன் இணைந்த வழக்குப் பொருட்களைப் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்திவைப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை வளர்த்தல்.
- நீண்டகாலமாக தேக்கிவைக்கப்பட்டிருக்கும் குற்றவியல் சட்டத்துடன் தொடர்புடைய வழக்குப் பொருட்கள் அவற்றின் பெறுமதி தேய்வடைவதற்கு முன்னர் பொருத்தமான பிணைகளின் அடிப்படையில் ஏற்புடைய தரப்பினரிடம் விடுவிக்கப்படுதல் அல்லது அரசுடைமையாக்கப்படுவதற்கான செயற்பாட்டை ஒழுங்குபடுத்தல்.
- பிணைச் சட்டத்திலும் பிணைவழங்கும் செயற்பாட்டில் உள்ள சிக்கல்களையும் ஆராய்ந்து சட்டத்தை இற்றைப்படுத்தல்.
- அரச பகுப்பாய்வாளர் திணைக்களக் கிளைகளை மாகாணரீதியில் நிறுவுதல்.

**இலஞ்சமும் ஊழலும்**

- திருடப்பட்ட சொத்துக்களை மீண்டும் அறவிடுவதற்கு குறித்த திருடப்பட்ட சொத்துக்களை மாற்றீடுசெய்தலுடன் (STAR) போதைப்பொருள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான ஐக்கியநாடுகள் அலுவலகம் (UNODC) போன்ற சர்வதேச நிறுவனங்களின் தொழில்நுட்ப மற்றும் ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரச சொத்துக்களை மாற்றீடு செய்வதற்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்.
- 2023ம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 34 வது வாசகத்திற்கு ஏற்ப ,திருடிய சொத்துக்களை மீண்டும் அறவிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஊழலைத் தடுத்தல் தொடர்பில் சர்வதேச தரங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரியான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திடம் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தேவையான வசதிகளையும் வழங்குதல்.
- நிதிக் குற்றங்கள், இலஞ்சம் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டு வழக்குகளை வினைத்திறனுடன் செயற்படுத்துவதற்காக நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிக் குழுவொன்றை நியமித்தல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவின் அலுவலகமொன்றை நிறுவுதல்.
- ஊழலுக்கெதிரான ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற முறைப்பாடுகளை ஆறு மாதங்களுக்குள் புலனாய்வு செய்தல் அல்லது அவ்வாறு செய்யாத முறைப்பாடுகள் சம்பந்தமாக அறிக்கையை ஒவ்வோரு ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- அரச நிதிசார் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு பாதுகாப்பு வழங்குபவர்களையும் சம்பந்தப்பட்ட தவறுடன் தொடர்புடையவராகக் கருதி சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு அவசியமான சட்டங்களைக் கொண்டுவருதல்.
- நிதிசார் முறைகேடுகள், இலஞ்சம், கொமிஸ்பெறல் போன்ற ஊழல்மிக்க செயற்பாடுகளைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு சட்டங்களை ஆக்குவதை முதன்மைப் பணியாக கருதி செயலாற்றுதல்.
- ஊழல், மோசடிகள், இலஞ்சம் போன்றவை பற்றி பொதுமக்களுக்கு

விழிப்புணர்வூட்டுவதற்காகவும் அவற்றுக்கெதிராக பொதுமக்களை வலுவூட்டுவதற்குமான இயக்கமொன்றை அரச அனுசரணையுடன் நிறுவுதல்.

- இலஞ்ச ஆணைக்குழு மற்றும் சட்டத்துறை தலைமை அதிபதி ஊடாக வாபஸ் பெறப்பட்ட வழக்குகளை மீளாய்வுக்கு இலக்காக்கி பொருத்தமான வழக்குகளை மீண்டும் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

### சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களம்

- அரசுசார்பில் வழக்குநடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு வெளியே மாகாணரீதியாக அரசின் பிரதான வழக்குரைஞர் காரியாலயங்களை நிறுவுதல் (Directorate of Prosecution)
- வழக்குத் தாக்கல் செய்வதில் சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் பின்பற்றப்படவேண்டிய வழக்குவிசாரணை செயல்முறைகளை (Procecution guidelines) ஆவணப்படுத்தல்.
- விசாரணைச் செயற்பாட்டின் பின்னர், சட்டமாஅதிபர் திணைக்களத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அதற்கான காரணங்களால் பாதிக்கப்பட்ட தரப்பிற்கு அறிவித்தல்.
- சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் பாதிப்பிற்குள்ளான தரப்பினருக்கு தமது துன்பதுயரங்களை முன்வைப்பதற்கு விசேட பாராளுமன்ற குறைகேள் அதிகாரியொருவரை நியமித்தல்.
- சிரேட்ட மேலதிக சொலிசிஸ்டர் ஒருவரின் கீழ் சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்தின் மாகாண அலுவலகங்களை தாபித்தல்.



நட்புமிக்க பொலிஸ் சேவை

# மனநிறைவு கொண்ட தொழில்வாண்மை

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிவருகையில் பொதுமக்களுடன் மிகவும் நெருக்கமான நிறுவனமென்றவகையில் பொலிஸ் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றி வருகிறது. சட்டத்தின் ஆட்சி அமுலாகின்ற விதம் பிரதிபலிக்கப்படுகின்ற முக்கியமான காரணியாக அமைவது பொலிஸின் சுயாதீனமான மற்றும் வினைதிறன் கொண்ட செயற்பாடாகும். எனினும் நிகழ்காலத்தில் இலங்கை பொலிஸ் பற்றிய மக்களின் அபிப்பிராயமாக அமைவது அரசியல் அல்லது வேறு சமூக தொடர்புகளோ நிதி ரீதியான கொடையளிப்புகளோ இல்லாமல் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிறுவனம் என்பதாகும். மறுபுறத்தில் ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகளுக்கு இரையாகியுள்ளமை மற்றும் முறையான பாராட்டுக்கு இலக்காகாமை காரணமாக அடிக்கடி பாதிப்புகளுக்கு இரையாக்கின்றன. பொலிஸ் சேவையை சுயாதீனமான, வினைதிறன் கொண்ட, நட்புமிக்க மற்றும் பொதுமக்களுக்கு நெருக்கமான சேவையாக மாற்றுவது தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்பாகும்.

**ஒரு சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகளுக்கு இரையாகியுள்ளமை மற்றும் முறையான பாராட்டுக்கு இலக்காகாமை காரணமாக அடிக்கடி பாதிப்புகளுக்கு இரையாக்கின்றன. பொலிஸ் சேவையை சுயாதீனமான, வினைதிறன் கொண்ட, நட்புமிக்க மற்றும் பொதுமக்களுக்கு நெருக்கமான சேவையாக மாற்றுவது தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்பாகும்.**

## கோட்பாடுகள்

- சுயாதீனத்தன்மை
- வினைத்திறனும் நட்புமிக்க சேவையும்
- தொழில்சார் திறன்

## செயற்பாடுகள்

- பொலீஸார் பொதுமக்களுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்கமைந்த "பொலீஸ் - பொதுமக்கள் உறவுக் குழுக்கள்."
- சந்தேகநபரொருவர் பொலீஸ் கைதியாகி 24 மணி நேரத்திற்குள் அது பற்றி சந்தேகநபரின் பாதுகாவலர்களுக்கு அல்லது கிட்டிய உறவினர்களுக்கு அறிவித்தல்.
- பொலீஸ் நிலையத்திலிருந்து குற்றச்செயல் புரிந்த ஒருவரை ஏதேனும் விடயத்திற்காக வெளியில் கொண்ட செல்வதாயின் அது சந்தேகநபரின் உயிரைப் பாதுகாக்கின்றவகையில் முறைசார்ந்த நடவடிக்கைமுறையினை கடைப்பிடித்தலும் அது சம்பந்தமாக நீதவானுக்கு அறிவித்தலும்.
- அனைத்து முறைப்பாடுகளையும் கணினிமயப்படுத்துதலும் பொலீஸ் அறிக்கைகளை மின்னஞ்சல் மூலமாக அனுப்பிவைப்பதற்கும் அவசியமான உட்டகட்டமைப்பு வசதிகள்.
- பொலீஸிற்கு கிடைக்கின்ற அனைத்து முறைப்பாடுகளையும் சீக்கிரமான விசாரணைசெய்து நிறைவுசெய்தல் மற்றும் அவ்வாறு செய்யமுடியாத கோப்புகள் பற்றி பொலீஸ் ஆணைக்குழுவிற்கு அறிக்கைசெய்தல்.
- குற்றப் புலனாய்வுக்காக விஞ்ஞானரீதியான பயிற்சி, புதிய தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்திக்கொள்ளல்.
- பொலீஸ் சேவையின் அனைத்து நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றங்களை அரசியல் அழுத்தங்களின்றி மேற்கொள்வதற்காக பொலீஸ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம்.
- பொலீஸ் கான்ஸ்டபிள் தொடக்கம் பிரதான பொலீஸ் பரிசோதகர் வரையான பதவியுயர்வுகள் சம்பந்தமான முறைசார்ந்த பதவியுயர்வு நடைமுறை.
- பொலீஸ் சார்ஜன்ட் தொடக்கம் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வரை செய்யப்படகின்ற பதவியுயர்வுகள் அரசியல்கலப்பற்றதாக திறமை மற்றும் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டதாக மாத்திரம் அமையும்.

-  பொலீஸ் சேவையை தொழில்சார் பொலீஸ் சேவையாக மாற்றுவதற்காகஅவசியமான அறிவு மற்றும் பயிற்சியை வழங்குதல், குற்றவியல் விஞ்ஞானம் மற்றும் குற்றவியல் நீதி, பொலீஸ் மக்கள் உறவுகள், மதியுரைகள், உளவியல் போன்ற துறைகள் பற்றிய பட்டப் பயிற்சி பாடநெறிகளைப் பயில்வதற்கான வாய்ப்புகளை வழங்குதல்.
-  திறமையான பொலீஸ் உத்தியோகத்தர்களை பாராட்டுக்கு இலக்காக்கி வெகுமதிகளையும் சான்றிதழ்களையும் வழங்குதலும் அவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களும்.
-  வீடொன்றுக்கான சொத்துவமற்ற பொலீஸ் உத்தியோகத்தர்ளுக்கு வீடுகளை வழங்குவதற்கான நிகழ்ச்சித்திட்டம்.
-  பொலீஸ் சேவையின சம்பளம் மற்றும் படிகளை ஏனைய அரச ஊழியர்களுக்கு இணையனதாக அதிகரித்தல்.
-  இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடிகளற்ற பொலீஸ் சேவைக்கான விசேட புலனாய்வக் கூறினை பலப்படுத்துதல்.
-  நீதியை நிலைநாட்டுதல்
-  2024-04-17 ஆந் திகதி தேசிய மக்கள் சக்தியால் வெளியிடப்பட்ட உறுதியுரைக்கிணங்க உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பாதிக்கப்பட்டவர்களால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தீர்ப்புகளில் தவறாளிகளாக்கப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் எதிராக குற்றவியல் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடுத்தல்.
-  2019-04-21 ஆந் திகதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான சனாதிபதி ஆணைக்குழு விதப்புரைகளுக்கு அமைவாக அரசியல்வாதிகளுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக துரத சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
-  நீண்டகாலமாக தீர்க்கப்பட்டிராத ஊடகவியலாளர்களின், விளையாட்டு வீரர்களின் அரசியல் படுகொலைகள் மற்றும் ஆட்கடத்தல்கள் என்பவற்றுக்கான புலன்விசாரணைகளை துரிதமாக நிறைவுசெய்து குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை அமுலாக்குதல்.
-  அரசியல் அழுத்தத்தின் பேரில் அச்சுறுத்தலுக்கு இலக்காகியுள்ள நாட்டைவிட்டுச் சென்றுள்ள ஊடகவியலாளர்கள், பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்களை உள்ளிட்ட ஏனைய அட்களுக்கு நீதியை நிலைநாட்டுதல்



## மனிதத்துவ அடிப்படையிலான சிறைச்சாலை

# நீதியான தடுப்பு வாழ்க்கை

புனர்வாழ்வினூடாக சிறைக்கைதிகளை சாதகமான பிரஜைகளாக சமூகமயப்படுத்துதலே இலங்கையின் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் தோலைநோக்காக அமைகின்றது. எனினும் கடந்த காலத்தில் பல சிறைச்சாலைகளில் சிறைக்கைதிகள் படுகொலை செய்யப்பட்டமையும் மனிதாபிமானமற்ற துன்புறுத்தல்களுக்கு இலக்காக்கப்பட்டமையும் பதிவாகியதன் மூலமாக சிறைப்படுத்தப்படுகின்ற ஆட்கள் பலவிதமான இம்சைகளை எதிர்நோக்குவது புலனாகியது. அத்துடன் அரசியல் தொடர்புகள் நிலவுகின்ற பல்வேறு ஆட்கள் சிறைவைக்கப்பட்டாலும் அவர்கள் தனித்துவமான சிறப்புரிமைகளை அனுபவித்து வருவதாகவும் அபிபிராயம் நிலவுகின்றது. "சிறைக்கைதிகளும் மனிதர்களே" என்பது நிகழ்காலத்தில் வெறுமனே தொனிப்பாருள் வாசகமாக மாத்திரமே காணப்படுவதோடு நெரிசல் மற்றும் சிறைக்கைதிகளுக்கு அவசியமான அடிப்படை வசதிகளின்மை சிறைச்சாலைகள் எதிர்நோக்குகின்ற பாரதூரமான பிரச்சினைகளாகும். சிறைச்சாலை சிறைக்கைதிகளை திருத்தியமைக்கின்ற ஒரு இடமாக அமைவதற்குப் பதிலாக அவர்களுக்கு தண்டனை வழங்குவதை நோக்கமாகக்கொண்ட இடமாக மாறியுள்ளது. சிறைச்சாலைகளுக்குள் இடம்பெறுகின்ற போதைப்பொருள் தீத்தொழிலும் பாதாள உலக செயற்பாடுகளும் காரணமாக இன்றளவில் இவை குற்றச்செயல்களை பயில்கின்ற இடங்களாக மாறி சிறந்த ஒழுக்கமுடையவர்களாக சிறைவாழ்க்கையைக் கழிக்கின்றவர்களுக்கு தடையேற்படுத்துவதாக அமைந்துள்ளது.

சட்ட அலுவல்கள் நிறைவுபெற நீண்காலம் எடுப்பதால் விளங்கமறியலில் வைக்கப்படுகின்ற கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் சிறைச்சாலைகளின் இடநெரிசலுக்கு பிரதான காரணமாகின்றது. 2022 ஆம் ஆண்டில் 108,250 நிமான்ட் கைதிகள், தவறாளியாக்கப்பட்ட 30,331 என்ற வகையில் ஒட்டுமெர்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 138,581 பேர் ஆகும். பெண்களைவிட ஆண்கள் சிறைவைக்கப்படுகின்ற போக்கு உயர்வானதாக அமைவதோடு 2022 ஆம் அண்டில் ஒட்டுமொத்த சிறைக்கைதிகள் மத்தியில் பெண்களின் வதவீதம் 3.23% ஆகும். தவறாளியாக்கப்பட்ட 19,094 சிறைக்கைதிகளில் 62.95% போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுக்கு தவறாளியானவர்களே. அத்துடன் தவறாளிகளாகக்பப்பட்ட சிறைக்கைதிகளில் 92% க.பொ.த. சாதாரணதரம் அல்லது அதற்குக் குறைவான கல்வியைப் பெற்றவர்களாக அமைவதோடு 62% வயது 40 வருடங்களுக்கு குறைந்தவர்களாவக விளங்கினர். ஆட்களை தவறுபுரியத் தூண்டாத சமூகச் சுற்றாடலை உருவாக்குவது தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாக அமைந்தபோதிலும் ஏதோவொரு காரணத்தினால் சிறைத்தண்டனை அனுபவிக்கின்ற ஆட்களின் நலனோம்பலை அரசாங்கத்தின் பொறுப்பாக நாங்கள் கருதுகிறோம்.

**ஆட்களை தவறுபுரியத் தூண்டாத சமூகச் சுற்றாடலை உருவாக்குவது தேசிய மக்கள் சக்தியின் நோக்கமாக அமைந்தபோதிலும் ஏதோவொரு காரணத்தினால் சிறைத்தண்டனை அனுபவிக்கின்ற ஆட்களின் நலனோம்பலை அரசாங்கத்தின் பொறுப்பாக நாங்கள் கருதுகிறோம்.**

# கோட்பாடுகள்

- பொறுப்புவகித்தலும் பாதுகாப்பும்
- புனர்வாழ்வும் சமூகமயப்படுத்துதலும்

# செயற்பாடுகள்

- சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற அனைத்துவிதமான துன்புறுத்தல்களையும் தடுத்தல்.
- சிறைக்கைதிகளின் இயல்பு, உளநிலை மட்டங்கள் போன்றவை பற்றிய முழுமையான பகுப்பாய்வினை மேற்கொண்டு அதற்கிணங்க கைதிகளை வகைப்படுத்தி தடுத்துவைத்தல்.
- சர்வதேச தரநியமங்களுக்கு அமைவாக சிறைச்சாலைகளில் இடவசதிகளை உள்ளிட்ட ஏனை வசதிகளை வரிவாக்குதல்.
- சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவுகளின் தரத்தை உறுதிசெய்தல்.
- சிறிய தவறுகளுக்காக தண்டனை வழங்குகின்ற ஆட்களை சிறைப்படுத்தாமல் சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்துதல்.
- சிறைக்கைதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான தொழில்சார் மதியுரை சேவை.
- சிறைக்கைதிகளின் உடல்ரீதியான சுகாதாரத்தை பேணிவருவதற்கான முறைசார்ந்த அப்பியாச வேலைத்திட்டங்கள்.
- நீண்டகாலமாக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்ற சிறைக்கைதிகனை பல்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளில் ஈடுபடுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- நல்லொழுக்கம்கொண்ட சிறைக்கைதிகளை திறந்தவெளி சிறைச்சாலைகளில் தடுத்துவைத்தலும் அனுமதிப்பத்திரங்களின்கீழ் வீடுகளுக்குச் செல்வதற்கான முறையியலை ஒழுங்குமுறைப்படுத்துதலும்.
- ஒவ்வொரு சிறையிலும் கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சிப் பாடநெறிகள்.
- றிமான்ட் சிறைக்கைதிகளாக நீண்டகாலம் தடுத்துவைக்கப்படுவதை தடுக்கக்கூடியவகையில் குற்றவியல் நீதி முறைமையுடன் தொடர்புடைய நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துதல்.
- பெண் சிறைக்கைதிகளின் நலனோம்பல் மீது விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு சிறைச்சாலைகளில் இடம்பெறுகின்ற துன்புறுத்தல்களை தடுத்தல்.
- பெண் சிறைக்கைதிகளுடன் சிறைச்சாலைகளில் இருக்கின்ற அவர்களின் பிள்ளைகளுக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் ஏனைய சேவைகளை விரிவாக்குதல்.



## போதையற்ற நாடு

# ஆரோக்கியமான பிரஜைகள் வாழ்க்கை


நிகழ்காலத்தில் போதைப்பொருள் பாவனை துரிதமாக அதிகரித்தள்ளதால் அது ஒரு சமூகப்பெரழிவாக மாறியுள்ளது. குடும்பத்தில்போன்றே சமூகத்திலும் பல பாரதூரமான சிக்கல்கள் உருவாக போதைப்பொருள் காரணமாக அமைந்துள்ளது. பாடசாலைப் பிள்ளைகளை போதைப்பொருளுக்கு அடிமையாக்கிக் கொள்வதற்கான முயற்சிகள் அதிகரித்துள்ளன.

போதைப்பொருட்களை நாட்டுக்குள் கொண்டுவருதலைப்போன்றே விநியோகிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக நடப்பு ஆட்சிமுறை தவறியுள்ளதோடு போதைப்பொருள் பாவிப்பவர்களை சிறைப்படுத்துவதன் மூலமாக மாத்திரம் இந்த தொல்லையை ஒழிக்கட்டிவிட இயலாது. நிகழ்காலத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சமூகப் பேரிடரை உருவாக்க ஏதுவாக அமைந்துள்ளதோடு 2022 ஆம் ஆண்டில் 152,979 பேர் போதைப்பொருள் தவறுகள் காரணமாக கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். எனினும் இவை மத்தியில் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 1930 பேர் மாத்திரமே ஆற்றுப்படுத்தப்பட்டிருந்தார்கள். சிறைச்சாலையில் அனுமதிக்கப்படுகின்ற தவறாளிகள் மத்தியில் ஏறக்குறைய 60% போதைப்பொருள் சார்ந்த தவறுகள் காரணமாகவே சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஈன்றளவில் அரசியல் மற்றும் வேறு சக்திகளின் பாதுகாப்பின்கீழ் இலங்கை பிராந்தியத்தில் போதைப்பொருள் பரிமாற்ற நிலையமாக மாறியுள்ளதோடு அது ஒழுங்கமைந்த குற்றச்செயல்கள் அதிகரிப்பதில் தாக்கமேற்படுத்தி உள்ளது. அதனால் தேசிய மக்கள் சக்தி போதைப்பொருட்களை தடுப்பதற்காக முன்னுரிமை வழங்கும்.



# செயற்பாடுகள்

- நாட்டில் போதைப்பொருட்களையும்  பாதாள உலகத்தையும் ஒழித்துக்கட்டுவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கை
- போதைப்பொருள்களை ஒழித்துக்கட்டுவதற்காக தனிவேறான பணியகமொன்று நிறுவப்படும்.
- போதைப்பொருட்கள் நாட்டுக்குள் வருவதை தடுப்பதற்காக கடல், வான் வழிகளை சோதனையிடுவதற்கான வசதிகளை அதிகரித்தல், நவீன உபகரணங்களை வழங்குதல் மற்றும் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.
- போதைப்பொருள்களுக்க அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை முறைப்படுத்தி போதைப்பொருள் பாவனையிலிருந்து அவர்களை மீட்டெடுத்தல்.
- போதைப்பொருள்சாரந்த தவறுகளுக்கான தண்டனைகளை கடுமையாக்குதல், வழக்குகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பாடசாலைப் பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கான  இடையறாத நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
- அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பணிகளை விரிவாக்கி மக்களை போதைப்பொருள் கட்டுப்பாட்டுடன் இணைத்துக்கொள்வதற்கான கண்காணிப்புக் குழுக்களை தாபித்தல்.
- போதைப்பொருள்களை பாவிப்பதன் பாதகமான பெறுபேறுகள் பற்றி சமுதாயத்திற்கு விழிப்புணர்வூட்டுதல்.



## உன்னதமான ராஜதந்திர நிலை

# தன்னாதிக்கமுள்ள நாடு

இந்து சமுத்திரத்தின் வங்காள விரிகுடாவின் மத்தியில் இலங்கையின் மூலோபாயமிக்க அமைவிடத்தின் முக்கியத்துவம் தொடர்பாக வரலாற்றுரீதியான சான்றுகள் பல உள்ளன. இலங்கை வங்காள விரிகுடா ஊடாக மற்றும் தென்கிழக்காசியாவுடன் வலுவான வர்த்தகத் தொடர்புகளை பேணிவந்துள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு தொல்லியல் ரீதியாக போதுமான சாட்சிகள் உள்ளன. உலகின் கிழக்குப் பகுதியையும் மேற்குப் பகுதியையும் இணைக்கும் இந்துசமுத்திரத்தில் சுறுசுறுப்பாக இயங்கும் கடற்பாதையொன்றுக்குஅ ண்மையில் இலங்கையினுடைய புவிசார் மூலோபாய அமைவிடமானது பெரும் ஆசிர்வாதமாகும்.

அபிவிருத்தியடைந்துவரும் ஆசியக் கண்டம் எதிர்காலத்தில் சனத்தொகை அடிப்படையில் உலகின் விசாலமான பிராந்தியமாக விளங்கும். உலகின் மொத்த உற்பத்தியில் இப்பிராந்தியத்தின் பங்களிப்பு 30.5மூவரை அதிகரிப்பதுடன் 2025 ஆண்டளவில் ஆசியா நடுத்தர வருமானத்தைப் பெறும் பிராந்தியமாக விளங்கும். பிராந்தியத்தின் ஏனைய நாடுகளுடன் பரஸ்பரத் தொடர்புகளை மேம்படுத்துவதனைப் போன்றே தேசிய பாதுகாப்புக்கு வெளியுறவுக் கொள்கையானது தீர்மானகரமான பங்களிப்பினை ஆற்றுகின்றது. பூகோளஅமைவிடம், சனத்தொகை, வரலாறு, பொருளாதாரவளங்கள், கருத்தியல்கள், அரசாங்கத்தின் செயற்றிறன், தரமான இராஜதந்திரச் செயற்பாடுகள், நெருக்கடிகள், துரிதச் சம்பவங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, சர்வதேசச் சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றன எந்தவொரு அரசினதும் வெளிநாட்டுக் கொள்கையை தெரிவுசெய்வதில் செல்வாக்கு செலுத்தும்

**பூகோளஅமைவிடம், சனத்தொகை, வரலாறு, பொருளாதாரவளங்கள், கருத்தியல்கள், அரசாங்கத்தின் செயற்றிறன், தரமான இராஜதந்திரச் செயற்பாடுகள், நெருக்கடிகள், துரிதச் சம்பவங்கள், தொழில்நுட்ப வளர்ச்சி, சர்வதேசச் சட்டங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றன எந்தவொரு அரசினதும் வெளிநாட்டுக் கொள்கையை தெரிவுசெய்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளாகும்.**

காரணிகளாகும்.

எவ்வாறெனினும் அண்மைக் காலத்தில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கைகளில் செல்வாக்கு செலுத்தியிருப்பது இலங்கையர்களின் நன்மையைவிட ஆளும் தரப்பினரின் இருப்பும், வெளித் தரப்பினரின் அழுத்தமும் எனலாம்.

இலங்கையின் பூகோளஅமைவிடம் போன்று நீண்டகாலமாக நாங்கள் முதலீடுசெய்துள்ள இராஜதந்திர மற்றும் கலாசார சொத்துக்கள் எமது வெற்றியின் அடித்தளமாக அமையும். இலங்கை ஏனைய தெற்காசிய நாடுகளைவிடவும் கல்விமட்டத்தில், சுகாதாரத்தில், பெண்கள் கல்வி போன்ற மனித அபிவிருத்தி சுட்டிகளில் ஒப்பீட்டளவில் உயர்பெறுமதியினைக் கொண்டிருப்பதுடன் மக்களின் ஒப்பீட்டுரீதியான நேர்மறை கலாசார அபிவிருத்தியானது பொருளாதார மற்றும் வெளியுறவுக் கொள்கை இலக்குகளை அடைவதற்கு சார்பான காரணியாக அமையும்.

கடந்தகாலத்தில் சில புத்திசாதுரியமிக்க, சரியான செயற்பாடுகள் காரணமாக இலங்கை இராஜதந்திர ரீதியான வரவேற்பினை பெற்றுள்ளது. உதாரணமாக இலங்கை உலகின் ஒடுக்கப்பட்ட மற்றும் காலணித்துவ ஆட்சிக்குட்பட்ட இனங்களின் பராம்பரியமிக்க நட்புநாடாக விளங்குவதுடன் இலங்கை எப்போதும் அவர்களின் சுதந்திரத்திற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

அந்நாடுகளில் பெரும்பாலானவை தற்போது சுயாதீனமானவை மாத்திரமின்றி பிராந்தியத்தின் பலம்பொருந்திய நாடுகளாகவும் விளங்குகின்றன. இலங்கை வரலாற்றின் பல்வேறு சந்தர்ப்பங்களில் சர்வதேசப் பிரச்சினைகளில் சமாதானம், இனங்களின் இறைமை உறுதிப்படுத்தும் வகையில் சரியான வெளியுறவுக் கொள்கையினை கடைப்பிடித்துள்ளது. இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் எந்தவொரு சர்வதேச யுத்தத்திற்கும் ஆதரவு வழங்கவில்லை. இலங்கையின் அவ்வாறான நிலைப்பாடு காரணமாக சர்வதேசத்தில் நற்பெயரினைப் பெற்றுள்ளது. நாட்டின் புதிய சவால்களை வெற்றிகொள்வதற்கு இப்பெறுமதிமிக்க இராஜதந்திர சொத்தினைப் பயன்படுத்தவேண்டும். “சர்வதேச உடன்பாடுகளை கட்டியெழுப்பும் நாடாக” இலங்கைக்கு கடந்தகாலத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது. 1970களில் அணிசேரா நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்பு (NAM), 1980களில் கடல் சார் சட்டங்கள் மற்றும் 1995 அணுவாயுதங்களை கட்டுப்படுத்துவதற்கான உடன்பாடுகள் (NPT) என்பன அதற்கான உதாரணங்களாகும். இலங்கையிடமிருந்து கைநழுவிச் சென்ற “சர்வதேச உடன்பாடுகளை கட்டியெழுப்பும் நாடு” என்ற பெறுமதியை மீண்டும் கைப்பற்றுவதற்காக எமது வெளியுறவுக் கொள்கையை பயன்படுத்தவேண்டும்.

## கோட்பாடுகள்

- ஐக்கியநாடுகளின் சமவாயத்திற்கும், அதன் பிரதான உடன்பாடுகளுக்கும் மற்றும் ஐக்கியநாடுகள் அமைப்புக்கும் இணங்கசெயற்படல்
- சர்வதேச மற்றும் பிராந்திய சமாதானம் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தல்
- இறைமை மற்றும் ஆட்புல எல்லை தொடர்பாக பரஸ்பர கௌரவம், ஆக்கிரமிப்பற்றநிலை, அரசுகளின் சமத்துவம், பரஸ்பரவளர்ச்சி, பரஸ்பர கௌரவம் மற்றும் ஒவ்வொருவரினதும் உள்ளக விடயங்களில் தலையிடாமையின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் அமைதியான சகவாழ்வு
- பூகோள சிக்கல்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அவற்றைத் தீர்க்கும் உயர் இராஜதந்திரம்
- அரசிடமிருந்து அரசிற்கு மற்றும் மக்களிடமிருந்து மக்களுக்கு இராஜதந்திர உறவுகள் ஊடாக பிராந்திய மற்றும் பூகோள ஒருங்கிணைப்பை மேம்படுத்தல்

## செயற்பாடுகள்

### வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பொறுப்பு மற்றும் பணிகள்

- மூலோபாய முன்னுரிமை இலக்குகள் மற்றும் வெளிநாடுகளில் இலங்கைப் பிரதிநிதிகளின் உத்தேச நடத்தைகளை விபரிக்கின்ற மற்றும் தெளிவான வழிகாட்டுதல்களுடனான விரிவான வெளிநாட்டு கொள்கைகளைக் கொண்ட ஆவணமொன்றைத் தயாரித்தல்.
- விரிவான பகுப்பாய்வின் பின்னர் புதிய வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் உள்ளக உத்தமப்படுத்தலை மேற்கொள்ளல்.
- கவனஞ் செலுத்தல் மற்றும் சிறந்தஒருங்கிணைத்தல் ஊடாக இலங்கை வெளியுறவுச் சேவைக்கு (SLFS) வழிகாட்டல்.
- இலங்கை தனது தூதுவர் சேவையை ஆரம்பிப்பதற்காக பொருளாதாரரீதியில் வளர்ச்சி கண்டுவருகின்ற மற்றும் எழுச்சிபெற்று வருகின்ற நாடுகளைக் கொண்ட பிராந்தியங்களை மதிப்பிடல்.

### தூதுவர் சேவை

- இலங்கை வெளிநாட்டு தூதுவர் சேவை மற்றும் சரியான அலுவலர்களின் எண்ணிக்கை தொடர்பாக மீளாய்வு செய்தல்.
- வர்த்தகத்தை மேம்படுத்தல், சுற்றுலாத் துறைமேம்படுத்தல், தொழில்வாண்மை, தொழில்வாண்மை பயிற்சி மற்றும் தொழில்வாய்ப்புக்கள் போன்றுவற்றுடன் இணங்குகிற ஒவ்வொரு தூதுவராலயங்களுக்கான செயலாற்றுகை சுட்டிகளை அறிமுகஞ் செய்தல்.

- வெளிநாட்டுச் சேவைக்காக சிறப்பான தொழில்வாண்மை, பண்பான நடத்தை உயர் நியமங்கள் மற்றும் இராஜதந்திர விவேகமிக்க, தகைமையுடைய அலுவலர்களை நியமித்தல்.
- இலங்கை தூதுக் குழுவின் பிரதானிகளாக சிறப்பான சதனைகளைக் கொண்ட தொழில்வாண்மைமிக்க இராஜதந்திரிகளை நியமித்தல்.

**நிறுவனரீதியான மறுசீரமைப்புக்கள் மற்றும் மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு**

- இலங்கையின் ஒட்டுமொத்த வெளிநாட்டு கொள்கைச் சட்டகத்திற்கு அமைவாக தலைமைத்துவம் வகிப்பதற்கு தூதுவராலயங்களை வலுவூட்டல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்பின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்.
- உயர் செயலாற்றுகையினை ஏற்படுத்துவதற்கு மற்றும் பிரசைகளின் மற்றும் அரசின் தேவைகளுக்கு பதிலளிப்பதற்கு இராஜதந்திர செயன்முறைகளை எளிமைப்படுத்தல் மற்றும் முறைப்படுத்தல்.
- மனிதவளங்கள் மற்றும் பௌதீகவளங்கள் தொடர்பான தரவுக் கட்டமைப்பினை ஏற்படுத்தல்.
- இராஜதந்திரரீதியான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேசத் தொடர்புகள் மற்றும் மூலோபாயமிக்க கல்வி நிறுவனங்களை (LKI) மறுசீரமைத்தல் மற்றும் வலுவூட்டல்.
- தேசிய கொள்கைகள், வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் நோக்கங்களுடன் இராஜதந்திர அலுவலர்களின் செயற்பாடுகளை வரிசைப்படுத்தல், மதிப்பிடலுக்காக தொடர்ச்சியான மீளாய்வுகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு அவர்களுடைய செயற்பாடுகள், சவால்கள் மற்றும் வெற்றிகள் தொடர்பாக தினந்தோறும் இற்றைப்படுத்துவதற்கு தூதுக் குழுக்களுக்கு தேவையான உரிய நியமங்களுக்குரிய அறிக்கையிடல் நடைமுறைகளை செயற்படுத்தல்.

**இராஜதந்திரப் பயிற்சிமற்றும் திறன் விருத்தி**

- கலந்துரையாடல் மற்றும் பேரம் பேசல் (Negotiations) திறன்கள், கலாசார இராஜதந்திரம், பொருளாதார இராஜதந்திரம் மற்றும் சர்வதேசச் சட்டம் தொடர்பாக கவனம் செலுத்தி இராஜதந்திரிகளுக்கு விரிவான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தல்.
- பல்வேறு பிராந்தியங்களில் தூதுக்குழுக்கள் முகங்கொடுக்கின்ற விசேட சவால்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தல்.
- இராஜதந்திரிகளுக்கான தொடர்ச்சியான கற்பித்தல் மற்றும் தொழில்வாண்மை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தல்.

**இராஜதந்திர வரைமுறைகள் மற்றும் ஒழுக்கவியலில் திருத்தம் செய்தல்**

- நேர்மை, தொழில்வாண்மை மற்றும் பொறுப்புக் கூறலை சுட்டிக்காட்டி இராஜதந்திரிகளுக்கான தெளிவான ஒழுக்கவியல் கட்டமைப்பொன்றினை அறிமுகஞ் செய்தல்.

**இலங்கை தூதுவர் சேவையின் செயற்றிறன்**

-  சேவைகளின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக இலங்கை தூதுக்குழு ஊடாக வழங்கப்படும் ந - சேவைகளை அதிகரித்தல்.
-  மக்கள் நேயமிக்க மனப்பாங்குடன் இலங்கை புலம்பெயர்ந்தோருக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தைதே மம்படுத்தல்.
-  தேசிய பாதுகாப்புத்துறை தொடர்பாக கருத்திற் கொண்டு வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வருவதனை ஊக்குவிப்பதற்காக, அவர்களுக்கு வினைத்திறன்மிக்க சேவைகளை வழங்குவதற்கு மற்றும் அதற்காக இலங்கை தூதுக்குழுவுக்கு தேவையான நிதி,தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்கல்.

**அரசியல் இரராஜதந்திரம்**

-  G20 நாடுகள், BRICS நாடுகள், ASEAN நாடுகள், தெற்காசிய, மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்க கண்டத்துடன் இரராஜதந்திர, பொருளாதார மற்றும் கலாசாரத் தொடர்புகளை மேம்படுத்தல் மற்றும் வலுவூட்டுவதற்கு முன்னுரிமை வழங்கல்.
-  சகல அரசுகளுக்கும், அவர்களுடைய அளவு மற்றும் அபிவிருத்தி நிலையை கருத்திற் கொள்ளாமல் சர்வதேச தீர்மானமெடுத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதற்குள்ள உரிமையை ஏற்றுக்கொள்ளல்.
-  தெற்காசியாவில் மற்றும் அதனைச்சூழ பாதுகாப்பான மற்றும் அமைதியான சூழலை பேணிச் செல்லவதை உறுதிசெய்தல்.
-  பிராந்திய பொருளாதார ஆணைக்குழு உட்பட ஐக்கியநாடுகள் அமைப்பின் மற்றும் அதனோடு இணைந்த நிறுவனங்கள் ஊடாக பல்லினத் தன்மைக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
-  சுதந்திரம், சனநாயகம், சமூகநீதி, மனிதஉரிமைகள், சட்டவாட்சி மற்றும் காலநிலை நீதி போன்ற ஒழுக்கநெறிகள் ஊடாக இலங்கையின் விம்பத்தை மேம்படுத்தல்.

**பொருளாதார இராஜதந்திரம்**

-  சர்வதேச பொருளாதாரத்துடன் தொடர்புடல் மற்றும் பொருளாதாரச் செல்வம், பாதுகாப்பு வழங்குவதற்காக தேசியப் பொருளாதாரத்தினை நிலைப்படுத்தல்
-  கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான மூலதனம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை மேற்கொள்ளும் நோக்கத்தில் நேரடியான வெளிநாட்டு முதலீடுகளைப் (FDI) பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டுபங்குதாரர்களுடன் ஒன்றிணைந்துசெயற்படல்.
-  இலங்கையை இந்து சமுத்திரத்தின் கேந்திரநிலையமாக மாற்றுவதற்காக வர்த்தக, சுற்றுலா, முதலீட்டுதுறைகளை ஊக்குவிக்கும் பொருட்டு சர்வதேச பங்காளர்கள் மற்றும் நண்பர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படல்.
-  தேசிய பொருளாதார சட்டகத்திற்குள் நேர்மறையான பொருளாதார முகாமைத்துவத்தினை பின்பற்றி ஏனைய நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பினை விரிவுபடுத்துவதற்காக தேசிய சந்தையை திறந்துவிடல்.
-  வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தனியார் துறையினரின் வியாபாரச் சூழலை மேம்படுத்துவதற்காக வியாபார நடைமுறைகளை முறைப்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளுக்காக முதலிடல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாண்மைகளுக்கான நிதி அணுகலை அதிகரிப்பது மற்றும்

மனிதத் திறன்களை மேம்படுத்தல் உட்பட நவீன மற்றும் விரிவான முதலீட்டுச் சட்டமொன்றினையும் வகுத்தல்.

- ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கத்தில் பூகோள உற்பத்தி வலையமைப்பில் இலங்கையை இணைப்பதற்கு புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் மற்றும் ஏனைய சந்தைகளுக்கான அணுகலை மேம்படுத்தல்.
- நிலைபேறான வலுசக்தி கருத்திட்டங்களுக்கு சர்வதேச பங்குபற்றல் மற்றும் முதலீட்டு மேம்படுத்தல் ஊடாக இலங்கையை மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியின் முதன்மை நாடாக நிலைநிறுத்தல்.

## தேசிய பாதுகாப்பு

- ஒவ்வொரு சம்பவங்களுக்கு அமைவாக சர்வதேச சிக்கல்களுக்கு அமைவாக சுயாதீன நிலைப்பாட்டினை பேணிச்செல்லல் மற்றும் எவ்வித இராணுவ கூட்டமைப்புடனும் இணைந்துகொள்ளாமை அல்லது அழுத்தத்திற்கு உட்படாமை.
- இலங்கைக்குள் எவ்வித உள்ளக செயற்பாடுகளுக்காகவும் வெளிநாட்டு இராணுவத்தினருக்கு அனுமதி வழங்காமை.
- தீவிரவாதம், பிரிவினைவாதம், இனவாதம், கடற்கொள்ளை மற்றும் வேறு பாரம்பரியமற்ற பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக போராடுவதற்காக தென்கிழக்காசிய மற்றும் ஆசிய அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதை வலுவூட்டல்.
- இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு மற்றும் பொருளாதார தேவைகளுக்கு தடையின்றி வெளிநாட்டு முதலீடுகளை கவரலும், முகாமைத்துவம் செய்தலும்.
- தேசிய பாதுகாப்புக் கொள்கைக்கு ஏற்ப செயற்படுவதுடன், சைபர் பாதுகாப்பு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாயங்களை மேம்படுத்துவதற்காக சர்வதேச ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளல்.

## சமுத்திர இராஜதந்திரம்

- சர்வதேச சட்டங்களுக்கு ஏற்ப சகல நாடுகளும் கடல் மற்றும் ஆகாய மார்க்கங்களை உடமையாகக் கொள்ளக்கூடிய உலகமொன்றினை பாதுகாப்பதற்காக செயற்படல்.
- ஐக்கியநாடுகளின் கடல் சட்டத்திற்கு அமைவாக பாதுகாப்பான, நிலையான சமுத்திரப் பரப்பொன்றினையும், சுதந்திரமான மற்றும் திறந்த கடல் மார்க்கங்களைப் பாதுகாத்தல்
- கடற்கொள்ளைகளை தடுக்கும் ரோந்து நடவடிக்கைகள், சூழல் மாசடைவதை கட்டுப்படுத்தல், கடல்சார் சூழல் கட்டமைப்பு மற்றும் உயிரியல் பல்வகைமை பாதுகாப்பு, சமுத்திர ஆராய்ச்சி, சமுத்திரப் பாதுகாப்பு மற்றும் பொருத்தமான மற்றும் நம்பகரமான வழங்கல் தொடர்பாக பாதுகாப்பு வழங்குநர் மற்றும் இந்து சமுத்திரத்தின் சமுத்திர எல்லைகளை பிரிக்கின்ற நாடுகளுடன் நெருக்கமாக செயற்படும் முதலாவது பதிலளிப்பவராக செயற்படல்.

### கலாசார இராஜதந்திரம்

- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இலங்கையின் கலாசாரத் தொடர்புகள் பற்றிய கலாசார பணியகமொன்றினை அமைத்தல்.
- கலாசாரக் கொடுக்கல் வாங்கல்களை மேம்படுத்தல், வெளிநாடுகளில் இலங்கை கலாசாரத்தை மேம்படுத்தல், கலாசார மத்திய நிலையங்களை அமைத்தல், சர்வதேசத்திற்குள் இலங்கை கலைஞர்களுக்கு ஆதரவுவழங்கல் மற்றும் சர்வதேச கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றல் ஊடாக மென் சக்தியை கட்டியெழுப்பல் மற்றும் பரஸ்பரபுரிந்துணர்வை அதிகரித்தல்.
- ஏனைய நாடுகளுடன் வலுவான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான அடிப்படையாக விளையாட்டுத் துறைசார்ந்த கொடுக்கல் வாங்கல்கள் போன்ற விளையாட்டு இராஜதந்திரத்தைப் பயன்படுத்தல்.
- இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தோர் அதிகளவில் வாழ்கின்ற நாடுகள் மற்றும் எமது நாட்டுக்கு கணிசமான சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நாடுகளுடன் குறித்துரைத்த கலாசார மேம்படுத்தல் வாரத்தை / மாதத்தைஆரம்பித்தல்.
- நாட்டின் விம்பத்தை மேம்படுத்துவதற்கும், மனிதர்களுக்கிடையில் நட்புறவினைக் கட்டியெழுப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல், ஈர்ப்பு மற்றும் கலாசார கொடுக்கல் வாங்கலுக்காக சமய இராஜதந்திரத்தை மேம்படுத்தல்.

### விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி இராஜதந்திரம்

- இலங்கையில் ஆய்வு கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்களை அமைப்பதற்கு இலங்கையின் முன்னணி விஞ்ஞானிகளின் நேரடி தலையீட்டுடன் சர்வதேச விஞ்ஞானத் துறைசார் பிரசைகளை கவரல்.
- இலங்கையை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறையின் மிகமுக்கியமான பிராந்திய நிலையமாக மேம்படுத்துவதற்கு விஞ்ஞானிகள் மற்றும் சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு குடியுரிமையைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பாக கவனம் செலுத்தல்.
- விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கலை மற்றும் கணிதம் போன்றவற்றின் சேர்க்கையான STEAM முறையை மேம்படுத்தல்.
- ஆசியாவின் டிஜிட்டல் நுழைவாக இலங்கையில் முதலீடு செய்வதற்கு சர்வதேச தகவல் தொழில்நுட்பக் கம்பெனிகளை ஊக்குவித்தல்.
- UNESCAP போன்ற பல்லின முகவராண்மைக்கென தனியான பிரதிநிதிகளை நியமித்தல்.

### பாராளுமன்ற இராஜதந்திரம்

- பாராளுமன்ற நட்புறவுச் சங்கம், சபாநாயகர் உட்பட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனான ஒன்றிணைந்த நிகழ்சித்திட்டத்திற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஒத்துழைப்பு வழங்கல்.
- வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் பிராந்திய மற்றும் சர்வதேச பாராளுமன் சங்கங்களைப் பயன்படுத்தி நாட்டுக்கு உச்சப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கைப் பாராளுமன்றத்திற்கு தேவையான சகல வசதிகளையும் வழங்கல்.

### மனிதாபிமான இராஜதந்திரம்

- சர்வதேச உதவிநிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அனர்த்த நிவாரண பணிகளில் பங்குபற்றி சர்வதேச மனிதாபிமான செயற்பாடுகளின் போது இலங்கையின் பணிப் பொறுப்பினை அதிகரித்தல்.
- தேசிய மற்றும் சர்வதேசரீதியில் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு துரிதபதிலளிப்பதற்காக இலங்கையின் கொள்திறனை அதிகரித்தல்.
- ஏனைய இனத்தவருடைய துயரங்களின் போது உதவிபுரிவதற்காக முப்படையினருக்கு மற்றும் காவல் துறையினருக்கு ஐக்கியநாடுகளின் சமாதானப் படையில் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் அங்கம் வகிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல்.

### சட்ட மறுசீரமைப்பு

- வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களிடமிருந்து பொருளாதாரப் பங்களிப்பினை பெற்றுக் கொள்வதனை இலகுபடுத்தும் வகையில் இரட்டை பிரசாவுரிமைச் சட்டம் மற்றும் குடிவரவுச் சட்டத்தை மறுசீரமைத்தல்.
- சமுத்திரச் சட்டம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் சமவாயத்தின் கீழ் (UNCLOS) வழக்குத் தாக்கல் செய்வதுடன் தொடர்புடைய சட்டங்களை அறிமுகஞ் செய்தல்.
- இருதரப்பு மற்றும் பிராந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் (FTAS) ஊடாக வெளிநாட்டுச் சந்தையில் எங்களுடைய வர்த்தகத் தேவைகளை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்காக வர்த்தகச் சட்டங்களை வலுவூட்டல்.
- பிராந்திய நீடிக்கப்பட்ட பொருளாதார பங்குடைமைகளை (RCEP) இருதரப்பு அல்லது பல்தரப்புரீதியில் தாபித்தல்.
- நிலையானதன்மைக்கும் சுபீட்சத்திற்கும் ஒத்தாசை புரிகின்ற சர்வதேச சட்டங்களை மேம்படுத்துதல்.

### புலம்பெயர்ந்தோரின் தலையீடு

- வெளிநாடுகளில் உள்ள இலங்கை பணியாளர்களின் நலனுக்காக தற்போது உள்ள மனித மற்றும் நிதிவளங்களை மிகச் சிறந்தமுறையில் ஒருங்கிணைத்து வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு இணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கை பிரசைகளுக்கு தாம் வசிக்கும் நாட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தேசிய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு இலங்கை புலம்பெயர்ந்தோரை தொடர்புபடுத்திக் கொள்வதற்காக கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகஞ் செய்தல்.
- கணிசமான இலங்கையர்கள் வாழும் சகல நாடுகளிலும், இலங்கை புலம்பெயர்ந்தோருடன் செயற்படுவதற்கு ஏற்றவகையில் தூதுவர் அலுவலகங்களுடன் இணைந்த ஆலோசனைச் குழுக்களை அமைத்தல்.
- வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் தேவைகள் தொடர்பாக தேடிப்பார்ப்பதற்காக கௌரவ கொன்சியுலர்களாக சேஞுடு நியமித்தல்.
- அந்தந்த நாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கைப் பிரசைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் உட்பட வேறுசான்றிதழ்கள் மற்றும் வெளிநாட்டு கடவுச் சீட்டுக்களை

வழங்கல் மற்றும் புதுப்பித்தல் செயற்பாடுகளை வினைத்திறனாக்கல்.

- வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களின் இரட்டை பிரசாவுரிமையைப் பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக இரட்டைபிரசாவுரிமை கட்டணத்தில் திருத்தம் செய்தல்.
- இலங்கை கணக்குகளுக்கு வெளிநாட்டுப் பணத்தை அனுப்பும்போது அறவிடப்படும் உயர் சேவைக் கட்டணம் போன்ற சிக்கல்களுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

## தற்போதைய வெளிநாட்டுக் கொள்கை நிலைப்பாடுகள்

- இந்தியா உட்பட பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது ஆபத்து ஏற்படும் வகையில் இலங்கையின் நிலப்பகுதி, கடற்பரப்பு மற்றும் வான் பரப்பை பயன்படுத்துவதற்குள ந்தவொரு நாட்டுக்கும் அல்லது நிறுவனத்திற்கும் இடமளிக்காமை.
- சுதந்திரமான, இறைமையுள்ள பாலஸ்தீன அரசொன்றை அமைப்பதற்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட இருதரப்பு ஒப்பந்தத்திற்கு ஆதரவுவழங்கல்.
- இலங்கை, இந்து சமுத்திரத்தில் வெளிநாட்டு இராணுவ முகாம்கள் மற்றும் அதற்கு இணையான இராணுவ ஒப்பந்தங்கள் மூலம் இராணுவமயமாக்கல் முயற்சிகளுக்கு எதிரான நிலையான கொள்கையை கொண்டிருத்தல்.



உயர்வான தேசிய பாதுகாப்பு

# பாதுகாக்கப்பட்ட தேசம்

தேசிய பாதுகாப்பு என்பது, பிரஜைகளினது பாதுகாப்பு, தேசத்தின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமை ஆகியவற்றுக்கு வெளிவாரியாகவும் உள்ளக ரீதியாகவும், இயற்கையாகவும் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாகவும் ஏற்படக்கூடிய எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுத்து நாட்டின் பாதுகாப்பினை இராணுவத்தினரால் வழங்கப்படும் பாதுகாப்பு கட்டளைகள் தொடக்கம் புவியியல்சார் அரசியல் மற்றும் புவியியல்சார் உபாயமார்க்கங்களினூடாக அச்சவால்களை முகாமைத்துவம் செய்து வெற்றிகொள்ளும் பொறிமுறையாகும். இந்த தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அணிசேரா மற்றும் சமநிலையான இராஜதந்திர உறவுகள், மனித உரிமைகளை மதிக்கின்ற ஜனநாயக ஆளுகை, பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்கின்ற சமத்துவம் மற்றும் சகவாழ்விற்கும் அத்துடன் பிரஜையினதும் அரசினதும் பாதுகாப்பிற்கும் அர்ப்பணிப்புச் செய்கின்ற தொழிற்றுறைசார்ந்த இராணுவம் என்பது மிகவும் அவசியமான காரணியாகும்.

அரசினது உள்ளக பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் முப்படையினர், பொலிஸ், கரையோரப் பாதுகாப்பு, மதுவரித் திணைக்களம், சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் சுங்கம் போன்ற சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்களும் புலனாய்வுச் சேவை மற்றும் சிவில் பாதுகாப்புச் சேவை என்பனவும் மிக முக்கியமான பணியினை ஆற்றுகின்றன. மேற்படி பாதுகாப்புப் பிரிவுகளின் வலிமை மற்றும் வெளிப்படைத்தன்மை என்பன, அதன் இருப்பினையும் தேசிய தேவைப்பாட்டினையும் மேம்படுத்தும் மற்றும் தேசிய சக்தியை அதாவது தேசிய அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய இயலுமையைக் கொண்ட, அதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற, வெளிப்படைத்தன்மைமிக்க ஜனநாயக ஆளுகையினூடாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. தேசிய சக்தியின் ஆக்கக்கூறுகளாக அரசியல் தலைமைத்துவம், பொருளாதாரம், புவியியல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்திருப்பு, மக்களது கருத்துக்கள் மற்றும் இராணுவப் பாதுகாப்பு ஆகியவற்றைக் குறிப்பிட முடியும். அணிசேரா மற்றும் சமநிலையான இராஜதந்திர உறவுக் கொள்கைகள், உலகளாவிய மற்றும் பிராந்திய பூகோள அரசியல் பாதுகாப்பின் சமநிலைத்தன்மை என்பன பற்றிய புரிதலின் மீது கட்டியெழுப்பப்படும் உபாயமார்க்க ரீதியான வெளிநாட்டுக் கொள்கைகள் அத்துடன் பொருளாதார சுயாதீனத்தன்மை என்பன பூகோள மற்றும் பிராந்திய ரீதியாக தேசிய பாதுகாப்பின் மீது ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல்களைக் குறைப்பதில் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும்.

**அணிசேரா மற்றும் சமநிலையான இராஜதந்திர உறவுக் கொள்கைகள், உலகளாவிய மற்றும் பிராந்திய பூகோள அரசியல் பாதுகாப்பின் சமநிலைத்தன்மை என்பன பற்றிய புரிதலின் மீது கட்டியெழுப்பப்படும் உபாயமார்க்க ரீதியான வெளிநாட்டுக் கொள்கைகள் அத்துடன் பொருளாதார சுயாதீனத்தன்மை என்பன பூகோள மற்றும் பிராந்திய ரீதியாக தேசிய பாதுகாப்பின் மீது ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல்களைக் குறைப்பதில் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும்.**

## கோட்பாடுகள்

- பிரஜைகளின் பாதுகாப்பு
- இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு
- உள்ளக பாதுகாப்பு மற்றும் தேசிய நல்லிணக்கம்
- கடல்சார் எல்லைகள் மற்றும் வான்வெளிப் பரப்பின் பாதுகாப்பு
- தேசிய பாதுகாப்பு பற்றிய பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல்
- தேசிய வளங்களின் பாதுகாப்பு
- வலுசக்தி பாதுகாப்பு
- தேசிய பாதுகாப்பிற்கான அரச புலனாய்வுச் சேவையின் பங்களிப்பு
- முறையான பாதுகாப்பு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி

## செயற்பாடுகள்

- சட்ட ஆளுகையின் மீதான ஜனநாயக குடியுரிமைகள் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்து இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை பேணிச் செல்லக்கூடியதான சிறந்த ஆளுகைக் கோட்பாடுகள் மீதான அரசாளுகையை மேற்கொள்ளல்.
- பிராந்தியத்தின் பாதுகாப்பினையும் அமைதியான சகவாழ்வினையும் உறுதிப்படுத்துதல், பாதுகாப்பான சர்வதேச உறவுகளினூடாக தேசிய பாதுகாப்பினை வலுவாக கட்டியெழுப்புதல்.
- நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையை நிபந்தனைகள் இன்றி உறுதிப்படுத்துதல்.
- தேசிய பாதுகாப்பிற்கான பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி தேசிய பாதுகாப்புப் பேரவையை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- தேசிய பாதுகாப்பு தொடர்பில் உரிய துறைசார் வல்லுநர்களைக் கொண்ட தேசிய பாதுகாப்புச் சபையொன்றினை நிறுவுதல்.
- இலங்கை பாதுகாப்புப் படை, அதனை வழிநடாத்தக்கூடிய முறையான தலைமைத்துவத்தின் கீழ் தேசிய பாதுகாப்பிற்குரியதான முன்னேற்றகரமான மற்றும் தொழில்நுட்ப அறிவினையும் பாதுகாப்புச் சூழல் பற்றிய முறையான பயிற்சியும் அறிவும் இயலுமையும் கொண்ட தொழிற்றுறைசார்ந்த இராணுவமாக மறுசீரமைப்பு செய்தல்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட இராணுவ முறைமைகளுக்கு இசைவானதாக மற்றும் இயலுமைகள், தொழிற்றுறைசார்ந்த திறமைகள், தூய்மையான தொழிற்றுறை வரலாற்றுப் பின்னணிகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு உயர்

பதவிகளுக்கு நியமித்தல், பதவியுயர்களை வழங்குதல் மற்றும் இராணுவத்தினருக்குரிய விசேட மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு தெரிவு செய்வதற்காக பின்பற்றப்படும் முறைமைகளை முறைப்படுத்துதல்.

- சிக்கலான மற்றும் துரிதமாக மாற்றமடையும் சவால்களுக்கு முகம்கொடுக்கக் கூடியதாக நவீன, தொழில்நுட்ப அறிவு மற்றும் அபிவிருத்தியுடன் கூடியதாக பாதுகாப்பு பிரிவுகளை காலத்திற்கேற்ற விதமாக மாற்றியமைப்பதற்குத் தேவையான பாதுகாப்பு ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திக் கட்டமைப்பினை முறைமைப்படுத்துதல்.
- அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றுடன் தேசிய பாதுகாப்பு பற்றிய அறிவினை ஒன்றிணைப்பதன் மூலம் பாதுகாப்புப் பிரிவின் மேன்மையை உயர்த்துதல்.
- முப்படையினரின் கௌரவம் மற்றும் பெருமிதம் என்பன பாதுகாக்கப்படும் வகையில் மற்றும் அவசர தேசிய தேவைப்பாடுகளின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமைகளுக்கு இசைவாகத் தவிர இராணுவத்திற்கு உரித்தல்லாத எந்தவொரு சிவில் நடவடிக்கைக்கும் அவர்களை ஈடுபடுத்தாதிருத்தல்.
- தேசிய பாதுகாப்பு குறிக்கோள்கள் மற்றும் நல்லாட்சியை அடைந்து கொள்ளும் பொருட்டு நாட்டின் எதிர்கால செழிப்பு, முன்னேற்றம், சமூக பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பிற்கான பணிகளை நிறைவேற்றுகின்றபோது பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் உரிய முறைமையினூடாக நம்பிக்கை மற்றும் செயற்றிறன்மிக்க ஒன்றிணைந்த புலனாய்வுப் பொறிமுறையொன்றைத் தாபித்தல்.
- தேசிய தகவல் கட்டமைப்புக்களில் நிலவும் பாதுகாப்புக் கொள்கையினை செயற்றிறன் மிக்கதாகவும் பயனுள்ள வகையிலும் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்படி பொறுப்புக்கூறவேண்டிய நிறுவனங்களை வலுவூட்டுதல். இதன்போது பயனுள்ள வகையிலான தகவல் கட்டமைப்பொன்றிற்காக சைபர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை அடையாளம்கண்டு அதற்கென வலுவான, வலிமைமிக்க, மிகச் சிறந்த வகையில் வலையமைக்கப்பட்ட பாதுகாப்புத் தகவல் கட்டமைப்பொன்றினைச் செயற்படுத்துதல்.
- சட்டத்தை நடைமுறைப்படுத்தம் நிறுவனங்களின் (பொலிஸ், சுங்கம், சிறைச்சாலை) முழுமையான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி அரச புலனாய்வுச் சேவையை பயன்மிக்கதாக ஒன்றிணைப்புச் செய்து மேற்பார்வைக் கட்டமைப்பினை மறுசீரமைத்து ஒழுங்குபடுத்துதல்.
- பொருளாதார உறுதிநிலைக்காக மூலோபாய பாதுகாப்பு சுற்றுச்சூழலையும் எறுதியான அத்திவாரத்தையும் நிர்மாணித்தல்.
- ஊழல் மற்றும் நிதிசார் குற்றச்செயல்களை தடுப்பதற்கான சட்டங்களையும்ட ஏனைய கட்டமைப்புகளையும் பலப்படுத்துதலும் ஒழுங்கமைத்தலும்.
- தேசிய பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு மூலோபாய மற்றும் தேசிய வளங்களின் பயன்பாடு, பாதுகாப்பினை மேற்கொள்வதற்கு பொறுப்புடைய மற்றும் பொறுப்புக்கூறுகின்ற பொறிமுறையொன்றினைத் தாபித்தல்.
- இலங்கைக்கே தனித்துவமான பொருளாதார வலயத்தின் (EEZ)பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தக் கூடியதாக இலங்கையின் கடற்படை மற்றும் கரையோரப் பாதுகாப்பு படைகளை தொழில்நுட்ப ரீதியாக மறுசீரமைத்து உரிய சட்டங்க்டாக வலுப்படுத்துதல்.

- கடற்பிரதேசத்தின் நிலையான சூழலைப் பாதுகாத்தல் மற்றும் பேணுதல், சர்வதேச குற்றங்கள், கடற்சார் கைத்தொழிலின் முன்னேற்றம், அபிவிருத்தி மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக கடல்சார் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்பான கடல்சார் அதிகார எல்லையை உறுதிப்படுத்ததுதல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் கடல் சட்ட சமவாயத்தின் கீழ் சர்வதேச கடல் எல்லைகளை பயனுள்ள வகையில் கட்டுப்படுத்தும் பொருட்டு பிராந்திய ரீதியான ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்த முகாமைத்துவ பொறிமுறையை அறிமுகம் செய்தல்.
- சுகாதார மற்றும் போருளாதார அழுத்தங்களைக் குறைத்தல், கைத்தொழில் மற்றும் சுற்றாடல்சார் மாசுபாட்டுக் காரணிகள், இயற்கை அனரத்தங்கள், தீப்பற்றுதல் மற்றும் வறட்சி ஆகியவற்றினால் இடம்பெறுகின்ற தாக்கங்களை இனங்கண்டு பிரதிபலிப்புச் செய்வதன் மூலமாக பிரஜைகளின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கான அனர்த்த முகாமைத்துவக் கட்டமைப்பினை ஒழுற்முறைப்படுத்துதல்.
- பிராந்தியத்தின் ஒத்துழைப்புடன் வான்பரப்பு, கடல்சார் மற்றும் நிலப்பிரதேசத்தின் சுதந்திரம் தொடர்பிலான முழுமையான ஆளுகையை உறுதிப்படுத்தி கடல்சார் பிரதேசம் தொடர்பில் தெளிவூட்டும் பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தல்.
- கடல்சார் பிரதேசத்தின் வான்பரப்பு பிராந்தியத்தினைப் பாதுகாப்பதற்காக இலங்கை விமானப் படையின் விமானத் தகவல் வலயம் மற்றும் தேடல் மற்றும் மீட்டல் வலயங்களை ஒன்றிணைத்து முறைமைப்படுத்துதல்..
- தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக விமானப் படையின் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் கடற்படை மற்றும் விமானப் படைச் சேவைகளை விவேகத்துடன் / உலகியலறிவுடன் ஒன்றிணைத்தல் மற்றும் பிராந்தியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைத்தல்.
- தமது தாய்நாட்டுக்காக பல்வேறு அர்ப்பணிப்புகளைச்செய்த இளைப்பாறிய முப்படை அங்கத்தவர்கள், இறந்த, காணாமல்போன, ஊனமுற்ற மற்றும் சேவையாற்றி வருகின்ற போர்வீரர்கள் கௌரவத்துடனும் அபிமானத்துடனும் வாழ்க்கையைக் கழிப்பதை உறுதிசெய்தல்.
- முப்படை சேவையிலிருந்து கைவிட்டுச்சென்ற சிப்பாய்களின் நியாயமான மற்றும் மனிதாபிமான விடயங்களை பரிசீலனைசெய்து விடுதலைவழங்கி கௌரமான பயனுள்ள பிரஜைகளாக வாழ்வதற்காக அவர்களுக்கு வலுவளித்தல்.
- இளைப்பாறிய முப்படை மற்றும் பொலீஸ் அங்கத்தவர்களின் பெரும்பான்மையினர் பிரத்தியேக பாதுகாப்புச் சேவையில் சேவையாற்றி வருவதால் பிரத்தியேக பாதுகாப்புச் சேவைகளை தொழில்சார்தன்மையையும் தொழில்பாதுகாப்பையும் உறுதிசெய்வதற்காக தொழில்த்துறையை ஒழுங்குறுத்துதல்.



## இலங்கை தேசம்

# உலகளாவிய பிரஜை

இலங்கை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் ஆகிய பல்வேறு இனத்தவர்களும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், கத்தோலிக்கம் ஆகிய பல்வேறு சமயத்தவர்களும் வாழ்கின்ற நாடாகும். இந்த பன்மைத்துவத்தின் காரணமாக இயல்பாகவே நிலவுகின்ற பல் கலாசாரத்தினுள் ஒவ்வொருவருடைய இருப்பினை ஏற்றுக்கொள்கின்ற மற்றும் அவற்றுக்கு மதிப்பளித்து வாழ்வது நாட்டின் நலனுக்கும் சமூக ஒற்றுமைக்கும் அத்தியாவசியமானதாகும். எனினும் வரலாற்றில் அதற்காக எமக்கு கிடைத்த பலவேறான அரிய பலசந்தர்ப்பங்களை வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கை தேசத்தைக் கட்டியெழுப்புவதில் நாம் தோல்விகண்டுள்ளோம். அதிகாரத்தைக் கைப்பற்றும் மற்றும் அதனை தக்கவைத்துக்கொள்ளும் குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்கங்களின் காரணமாக இனத்துவ மற்றும் சமயரீதியாக மக்களுக்கிடையில் பரஸ்பர சந்தேகம் மற்றும் நம்பிக்கையின்மை, ஒற்றுமையின்மையை ஏற்படுத்தியதன் விளைவாக 30 வருடகால கொடூரயுத்தித்திற்கு நாம் முகம்கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். அந்த யுத்தத்தின் வடுக்களும் வேதனைமிகுந்த விளைவுகளும் தற்பொழுதும் இலங்கைச் சமூகத்தினுள் எச்சங்களாக மிஞ்சியிருக்கின்றன. எனவே, இனம், மொழி, சமயம், சாதி, பால்நிலை என்பவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டாத மேற்குறித்த பன்மைத்துவ அடையாளங்களை மதிக்கின்ற மற்றும் அவற்றின் இருப்பினையும் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்துகின்ற இலங்கை எனும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய ஒற்றுமையை உருவாக்கும் பணியில் தேசிய மக்கள் சக்தி அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது.



## கோட்பாடுகள்

- சகல இனத்தவர்களினதும் அரசியல் பங்கேற்பு
- இனம், மொழி, மதம், சாதி அல்லது பால்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு பிரஜையும் / மக்கட் சமூகமும் அவமதிப்பிற்கோ, துன்புறுத்தலுக்கோ, அழுத்தத்திற்கோ அல்லது அநீதிக்கோ ஆளாகாதிருத்தல்.
- சகல இனத்தவர்களினதும் மற்றும் சமயக் குழுக்களினதும் பாதுகாப்பு மற்றும் பரஸ்ப புரிதல், நம்பிக்கை மற்றும் உரிமைகள்.
- இனவாத, சாதிஅடிப்படையில் மற்றும் மதவாதக் கருத்துக்களின் அடிப்படையில் பிரிக்கப்படாத சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்துடன் இணைந்த இலங்கை தேசத்தவர்.

## செயற்பாடுகள்

- 2015-2019 புதிய அரசிலமைப்பொன்றினை தயாரிப்பதற்காக கடைப்பிடித்த செயற்பாங்கினை துரிதமாக நிறைவு செய்து சமத்தவம் மற்றும் சனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரே நாட்டிற்குள் அனைத்து மக்களும் ஆட்சியில் தொடர்பு கொள்ளக்கூடியவாறு ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் ரீதியானதும் நிர்வாக ரீதியானதுமான அதிகாரத்தை பகிர்ந்தளிக்கின்ற அரசாளுகைக்கான அனைத்து இனத்தவர்களினதும் அரசியல் பங்காண்மையை உறுதி செய்கின்ற புதிய அரசியலமைப் பொன்றினை தயாரித்தல்.
- ஒரே நாட்டுக்குள் அனைத்து மக்களையும் ஆட்சியில் தொடர்புபடுத்தக்கூடியவாறு ஒவ்வொர் உள்ளூராட்சி நிறுவனத்திற்கும் மாவட்டத்திற்கும் மற்றும் மாகாணத்திற்கும் அரசியல் மற்றும் நிருவாக அதிகாரங்களை உறுதிசெய்தல்.
- தற்போது காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்று உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை ஒரு வருடத்திற்குள் நடாத்தி மக்கள் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குதல்.
- சட்டரீதியான அதிகாரங்களைக் கொண்ட பாரபட்சத்திற்கு எதிரான ஆணைக்குழு ஒன்றினைத் (Commission Against Discrimination) தாபித்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற மெசியல் படுகொலைகள், காணாமல்போகச் செய்வித்தல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றி புலன்விசாரணை மேற்கொண்டு நீதியை நிலைநாட்டுதல்.
- இனவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம்பெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களை புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீளிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டினை விரிவாக்குதல்.
- மதங்களுக்கிடையிலான மோதல்களை தீர்த்துவைப்பதற்கான அனைத்து மதத் தலைவர்களையும் மதம்சார்ந்த கல்விமான்களினதும் உள்ளடக்கத்துடனான சர்வ மதப் பேரவை ஒன்றைத் தாபித்தல்.
- உலக மதங்கள் பற்றிய சமநிலை வாய்ந்த கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குதல்.
- தேசிய மற்றும் மத ஐக்கியத்திற்கான கலாச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை தேசிய, மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் ஏற்பாடு செய்தல்.
- அரசியல் கைதிகளை விடுதலை செய்தலும் அவர்கள் சுதந்திரமாக சமூகமயமாதலை உறுதிப்படுத்துதல்

- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை உள்ளிட்ட அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களையும் இல்லாதொழித்து அனைத்த மக்களினதும் சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல பிரதேசங்களிலும் மக்களது சிவில் உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையிலான சிவில் நிர்வாகத்தினை முறைமைப்படுத்துதல்.
- கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்கள் அரசியல் அழுத்தங்களின்றி சகல இனத்தவர்களுக்கும் நியாயமானவகையில் கிடைக்கக் கூடியதாக தகைமைகளின் அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதனை உறுதிசெய்தல்.
- மானிய உதவிகள் மற்றும் பாதுகாப்பு அவசியமாகும் யுத்த-விதவைகள், அனாதைகள் மற்றும் மனஅழுத்தங்களுக்கு ஆளானவர்களுக்கான மானிய உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- காணிகள் மற்றும் வாழ்விடங்கள் பற்றிய தேசிய ஆணைக்குழு ஒன்றினூடாக நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்.
- இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படும் மக்கள் குடியேற்றங்களை நிறுத்துதல்.
- அரசியலமைப்பின் 16ஆவது திருத்தத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய மொழிக் கொள்கையை அவசியமான வளங்கள் மற்றும் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்துதல்.
- அனைத்துப் பிரஜைகளும் தமது மொழியில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையிலான தேசிய மொழிக் கொள்கையொன்றை அமுலாக்குதல்.
- தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கூடுதலாக வாழ்கின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், அரசஅலுவலகம் போன்ற சிவில் சேவைகள் நிலவும் இடங்களில் தமிழ் மொழியில் பணிகளை ஆற்றக்கூடியதாக உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை நியமித்தல்.
- 2023. 10. 15 ஆந் திகதி கொண்டதாக தேசிய மக்கள் சக்தி வெளியிட்ட ஹற்றன் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு மலையகத் தமிழ் மக்களின் அடையாளத்தையும் உரிமைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களின் காணி, வீடமைப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மலையக தமிழ் சமுதாயத்தின் சம்பளத்தை வாழ்க்கைச் செலவுக்கு ஏற்று வகையில் அதிகரித்தல். மக்கள் கௌரவமான வருமானத்தினைப் பெறுவதற்குள்ள உரிமையை உறுதிப்படுத்துதல்.
- வடக்கு கிழக்கு உள்ளிட்ட ஏனைய பிரதேசங்களின் கடற்றொழில் நடவடிக்கைகளில் வெளிநாட்டு மீனவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ள சவால்களை இராஜதந்திர ரீதியாக தீர்த்து, அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளையும் விற்பனை வசதிகளுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்குதல்.

**இந்த கொள்கை வெளியீட்டின் சிங்கள - தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் முரண்பாடு தோன்றின் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்.**

# நாடு அநுரவோடு

“எம்மை சுதந்திரத்திற்கு பின்னர் இலங்கை தேசத்தவராக ஒரே கொடியின் கீழ் கொண்டுவர இதுவரை நாட்டை ஆட்சி செய்த பிரபுக்கள் குழுவினருக்கு முடியாமல் போய்விட்டது. அதற்காக அவர்கள் செய்ததோ தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக அந்தந்த இனத்துவங்கள் பிளவுபட்ட குழுக்களாக அவர்களுக்கிடையில் முரண்பாடுகளை தீவிரப்படுத்தி பேணிவருவதாகும். எமது கொள்கைகள் இதற்காக மேற்கொள்ள வேண்டிய எண்ணக்கரு சார்ந்த, பொருண்மையான, கட்டமைப்புச் சார்ந்த மற்றும் முனைப்பான பல இடையீடுகளை இனங்கண்டுள்ளது. அனைத்து இனங்களுக்கும் இலங்கையர் என்ற பொதுவான எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கின்ற இடவசதி எம்மால் அமைத்துக் கொடுக்கப்படும். உற்பத்தி பொருளாதாரமொன்றை திட்டமிடுவதிலிருந்து நன்மைகள் பகிர்ந்து செல்லும் வரையான செயற்பாங்கில் அனைத்து இனத்தவர்களையும் அதன் பங்காளிகளாக மாற்றிக் கொள்வது எமது திடசங்கற்பமாகும்.”




464/20, பன்னிப்பிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுல்ல.
தொலைபேசி: 0112785612 பக்ஸ்: 0112786050
www.akd.lk